அமெரிக்கா வெள்ளைமாளிகை கயின்முற்று மோர்ஊழல்

# உலக உலா

ஏப்ரல் 1994




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். குடாநாட்டிலே!
பிரபல்யம் வாய்ந்த வைத்திய
ஆலோசனைகளையும்,
சிகிச்சைகளையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய தனிப்பெரும்
நிறுவனம்!

◎

வைத்திய நிபுணத்துவ
நிலையம்

ஆஸ்துமாவினால் சுவாசிக்க
முடியாதுள்ளதா?
தோல் வியாதிகளா? நீரிழிவா?
குழந்தைகளுக்கான சிகிச்சைகளா?

எதுவானாலும் உடனே விரையுங்கள்; நீங்களும் சுகதேகியாகலாம்.

# வைத்திய நிபுணத்துவ நிலையம்

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

## உலக விவகாரங்கள்


### ஆசியா

இந்திய பர்மிய உறவுநிலை 07
பிரித்தாளும் தந்திரம் 10
கம்போடியா – தாய்லாந்து உறவுகள் 11
சட்டமும் ஒழுங்குமற்றதொரு நாடு 12
ஹொங்கொங்கின் எதிர்காலம் 13
தளம் அமைத்தல் 15
மசூதியில் நடந்த படுகொலைகள் 16
குடியேற்றவாசிகளின் எதிர்ப்பு 20
வித்தியாசமான கண்ணோட்டம் 22
இரண்டாவது கொரிய யுத்தம் 24

### அமெரிக்கா

தனித்து இயங்கும் கியூபா 26
வைற் வோட்டர் ஊழல் 29
மெக்சிக்கோ சபதிஸ்த இளைஞர்களின் எழுச்சி 31

### ஐரோப்பா

பிசாசு எரிவாயுவின் அம்பலம் 35
பொல்லாத கரடி துயிலெழுந்து விட்டது 37
சேர்பியரின் சுழற்சி விளையாட்டு 39

### ஆபிரிக்கா

சூடானில் மக்கள் படுகொலை 41
வெள்ளை இனவாதத்தின் இறுதிநாள் 43
தென்னாபிரிக்காவின் அமைதிப்படை 45

### குற்றவியல்

இரட்டை முகவர் 46

### சமூகவியல்

குடும்பக்கட்டுப்பாடும் மதமும் 50
பெண்கள் மீதான சித்திரவதை 53
இஸ்லாமிய மறுமலர்ச்சி 54

### முகாமைத்துவம்

அனுபவம் பற்றாக்குறையாகும் போது 57

### விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

சாதாரண ஏவுகணைகளும் இரசாயன அணுவாயுதங்களும் 61
எனது ஆய்வுகூடத்துள் அத்துமீறவேண்டாம் 68
விரிவடைந்து வரும் கதிரியக்க வீழ்ச்சி 70

### உளவியல்

மனச்சோர்வும், போக்கும் வழிகளும் 72

### சுற்றுச் சூழல்

பனிக்காலம் அண்மிக்கிறதா?

### மனிதனின் வரலாறு

மனிதனின் பரிணாம வளர்ச்சி 79
நெயண்டர் பள்ளத்தாக்கு மனிதன் 84

### பல்திணைப் பகுதி

செய்திச் சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06


பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-4-5-1994
யாழ்ப்பாணம்

உலக உலா

விலை: ரூ. 100/-

பல்துறைசார்
மாத இதழ்

உலா; 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திமோர் தவிப்புக்கள்

பிரித்தானிய மத்திய டெலிவிஷனும், பிரச்சினைக்கு உரிய பத்திரிகையாளரான ஜோன் பில்கரும், கிழக்கு திமோர் பற்றிய விவரணச் சித்திரம் ஒன்றைத் தயாரித்து இருப்பது, இந்தோனேசிய வெளிநாட்டு அமைச்சுக்கு, கவலையை ஏற்படுத்தியுள்ளது. திமோரில் டிலி படுகொலைகளைப் படம் பிடித்த அதே படப்பிடிப்பாளரிடம் இருந்து, தனது விவரணச் சித்திரத்திற்கான காட்சிச் சுருள்களை பில்கர் வாங்கியுள்ளார். பிரித்தானியாவின் மத்திய தொலைக் காட்சி நிறுவனம், அந்தச் சித்திரத்தை பி. பி. சி. உலக சேவை மூலம் ஒலிபரப்பும் போது செய்மதித் தொடர்பு மூலம் இந்தோனேசியாவிலும் அதைக் காணக்கூடியதாக இருப்பதே, இந்தோனேசிய அரசுக்குக் கவலையைக் கொடுத்துள்ளது.

## லண்டன் பல்கலைக்கழகம் மலேசியாவுக்கு வருகிறது

லண்டன் பல்கலைக் கழகம், தனது முழு அதிகாரங் கொண்ட பட்டங்கள் வழங்கக் கூடிய வளாகம் ஒன்றை மலேசியாவில் திறக்கத் திட்டமிட்டுள்ளது. இருந்தும் அந்த வளாகம் கட்டுப்படுவதற்கு முன்பு, மலேசியப் பல்கலைக்கழகங்கள் சட்டம் திருத்தப்பட வேண்டும்; அப்பொழுது தான், தேசியப் பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க இயலும். மலேசியா பட்டப்பின் படிப்புத் துறையில் தனது நாடு, ஒரு பிராந்திய மையமாக வேண்டுமென்று முயலுகின்றது,

## வியட்நாம் கொம்யூனிஸ்ற் கட்சியின் போக்கு என்ன?

சென்ற ஜனவரி 25 ஆம் திகதி, வியட்நாம் கொம்யூனிஸ்ற் கட்சியின் சிறப்பு இடைக்கால மகாநாடு ஒன்று நடந்த பொழுது, அதற்கு வந்த பேராளர்கள், தமக்கு வாசித்துப் பார்க்கத் தரப்பட்ட நான்கு நூல்களிற் கூறப்பட்டிருக்கும் எச்சரிக்கையைக் கண்டு ஆச்சரியப்பட்டனர், ஆளும் கட்சியை வீழ்த்த, ''சமாதானப் பரிணாமத்தால்'' செயல் புரிவதற்கு மேற்கு உலகம் முயல்கின்றது என்று அந்த நூல் ஒன்றில் கூறப்பட்டிருந்ததுடன், இன்னுமொரு நூலில், 1989 இல் பீகிங்கில் குடிமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை இராணுவத்தைக் கொண்டு நசுக்கிய முறை சரியானதே என்று, நீதிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் ''சமாதானப் பரிணாமத்தால்'' சீன அரசாங்கம் வீழ்ச்யுறாமல் தப்பவழி செய்தது என்று கூறப்பட்டிருந்தது. சீனாவினதும், வியட்நாமினதும் கொம்யூனிஸ்றகட்சிகள் இரண்டுக்கும் இடையில் 1960 களில் உறவில் விரிசல் ஏற்பட்டதன் பின்பு, முதன் முறையாக இப்பொழுது தான் சீன ஆவணம் ஒன்று, வியட்நாமியக் கொம்யூனிஸ்ற் கட்சியின் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## தென் கொரியா

### ஆளை ஒப்படைக்கும்படி, அமெரிக்காவைக் கேட்கிறது.

தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த கிம் சொங் வீ, சென்ற வருடம் புதிய அரசாங்கம் ஒன்று அங்கு பதவி ஏற்ற பின்பு, அமெரிக்காவிற்குச் சென்று அங்கு வாழ்கிறார். தென்கொரியாவின் விமானப்படைக்கு எஃப்-16 போர் விமானங்களைத் தெரிவு செய்து, ஊழல் நடத்தியதாக அவரைச் சாடும் அரசாங்கம், ஆளைத் தம்மிடம் கையளிக்கும்படி ஜனாதிபதி கிளின்ரனின் நிர்வாகத்திடம் கேட்டுள்ளது.

### மீண்டும் மே தினம்

முன்பு, இராணுவ அனுசரணையுடன் இயங்கிய அரசாங்கங்களால், தென்கொரியாவில் மே தினம் கொண்டாடுவது பல ஆண்டுகளாகத் தடை செய்யப்பட்டிருந்தது. அந்தக் கொண்டாட்டம், இடது சாரித் தொழிலாளர் நலன்களுடன் தொடர்பு பட்டதென்று, நினைந்து தடைசெய்யப்பட்டிருந்தது. தற்போதைய ஜனாதிபதி கிம் யாங் சாம், மீண்டும் மே தினத்தைக் கொண்டாட அனுமதித்துள்ளார்.

## இராஜதந்திரம்

### யுத்த நட்டம்

ஹனோய் அரசு, 1975இல் தென்வியட்நாமை வென்றதைத் தொடர்ந்து, எழுந்த நிதிக்கோரிக்கைகள் பற்றிய பேச்சுக்களை வியட்நாமும், அமெரிக்காவும் ஆரம்பிச்சு உள்ளன என்று, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சென்ற 20. 1. 94 இல் அறிக்கை வெளியிட்டுள்ளது. முந்திய சைகோன் அரசுக்குச் சொந்தமான 300 மில்லியன் டொலர் அளவு சொத்துக்களை அமெரிக்கா முடக்கி வைத்திருப்பதால், அதனைத் திருப்பித் தரும்படி வியட்நாம் கோரியுள்ளது. அமெரிக்கா ஹனோய் அரசு சைகோனைக் கைப்பற்றிய பொழுது தம்வசப் படுத்திய, அமெரிக்க அரசுக்கும், தனியாருக்கும் சொந்தமான 200 மில்லியன் டொலர் அளவு பெறுமதியான சொத்துக்கு நட்ட ஈடு கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியன அறிமுகம்

## வீட்டுக்குள்ளே படப்பிடிப்பகம்

கலிபோர்னியாவின், ''வீடியோனிக்ஸ் கம்பெல்'' நிறுவனம், தங்கள் வீட்டிற்குள் இருந்து, வீடியோப் படங்களை வேறு ஒரு மட்டத்தில் தயாரிக்கக் கூடிய சாதனமான ''டிஜிரல் வீடியோ மிற்ஸரைச்'' சந்தைக்குக் கொணர்ந்துள்ளது. அந்தச் சாதனம் மூலம், வீடியோப் படக் காட்சிகளைக் கலக்கவும், சிறப்பு முறைக் காட்சிகளை ஆக்கவும், பின்னணிகளை மாற்றவும் முடியும். முதலில், போட்டுப்



பார்த்து இயக்க வைக்கும் கருவியொன்றை இயக்குபவர், நான்கு வரையான வெவ்வேறு வீடியோப் படங்களை ஒரே வேளையிற் போட்டுப் பார்த்து, அவற்றில் இருந்து தெரிவு செய்யும் காட்சிகளை ஒரு வீடியோ நாடாவிற் பதிவு செய்ய முடியும். அந்த மிக்ஸர் சாதனம், 200 இற்கு மேற்பட்ட காட்சிக் கோலங்களை ஆக்க வல்லது என்பதுடன், விரும்பும் எந்தக் காட்சியையும் அளவிற் பெருப்பிக்கவோ, சுருங்க வைக்கவோ, அல்லது அசைவற்று நிற்க வைக்கவோ, வசதி செய்வதாக உள்ளது. அழுத்திகளை விரலால் தொட்டு, இத்தனையும் செய்யலாம். விலை — 1,200 டொலர்.

## மலிவு விலையில் சக்தி வாய்ந்த கணனி

93 இற் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பொருள்களுள், ''கொம்பாக்'' நிறுவனத்தின்



''பிறெஸ்சாரியோ 425'' (Fresario 425) கணனியும் ஒன்று. இக்கணனி ''இன்ரெல் 486 ஷிப்'' (Intel 486 Chip) இனால் இயககப்படுவதுடன், பல சாதனங்களில் வேலைகளைச் செய்யக்கூடியது. இதன் விலை 1,300 டொலர் மட்டுமே. இதனால் தான், முன்னெப்போதும் அறிந்திராத அளவாக 100,000 கணனிகள் ஆகஸ்டில் இக்கணனி அறிமுகப்படுத்தப்பட்டு 60 நாள்களுக்குள் - விற்பனையாகின. இது 14 அங்குல கலர் மொனிற்றர் (Colour Monitor) ஐக் கொண்டிருப்பதுடன், தொலைபேசி பதிவிறுக்கும் இயந்திரம் (Answering Machine), ஃபாக்ஸ் இயந்திரம் போன்றுவையாகவும் தொழிற்படக்கூடியது. சாளரம் 3.1 (Window 3.1) இதில் சேமிக்கப்பட்டுள்ளது. இச்சாளரம் மூலமே, கணனியின் கட்டளை நிரல்கள் இயக்கப்படுகின்றன.

## மொழி பெயர்த்து ஆவணங்களைப் பிரதி பண்ணும் சாதனம்

ஆவணங்களைப் படம் பிடிக்கும் கருவிகள் (Photo Copiers) இன்று உலகெல்லாம் பரந்து கிடக்கின்றன. எத்தனை பிரதிகள் வேண்டுமோ அத்தனையையும் உடனடியாகத் தரவல்ல இந்த இயந்திரங்கள் பெரும்பாலும் ஜப்பானிலேயே தயாராகின்றன. இப்போதே பிரதி செய்வதற்காகக் கொடுக்கப்படும் ஆவணத்தை மொழிபெயர்த்துக் கொடுக்கும் இயந்திர சாதனத்தையும் ஜப்பானின் ''றிக்ஹோ'' ஸ்தாபனம் விற்பனைக்கு விட்டுள்ளது. இது தற்சமயம் ஆங்கிலத்திலிருந்து ஜப்பானிய மொழிக்கு மாற்றஞ் செய்வதற்கு மாத்திரம் பயன்படுகின்றது. ஆகவே இது இன்னும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு வரவில்லை. இதன் கணனியில் 37,000 மொழிபெயர்ப்பு இலக்கணப் பதங்கள் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கருவி இன்னும் சில மேலதிகக் கடமைகளைச் செய்கின்றது, ஃபாக்ஸ் (FAX) முறையில் ஆவணத்தை நெடுந்தூரம் அனுப்



பவும், சாதாரணப் பிரதிகள் தயாரிக்கவும், கணனி முறையில் அச்சு வேலை செய்யவும் இதனால் முடியும். சாதாரண சராசரிக் கடிதமொன்றை மொழிபெயர்த்துத்தர இது கிட்டத்தட்ட இரண்டு நிமிடங்கள் எடுக்கின்றது. ஜப்பானில் இதன் விலை 11,200 அமெரிக்க டொலர். ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் சாதனம் விரைவில் வராதோ என்று உலக உலா ஆசிரியர் அங்கலாய்ப்பது உங்கள் காதில் விழவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையில் எடுத்துச் செல்லும் மேசை

எழுத்தாளர்கள், நிருபர்கள், விற்பனையாளர்கள் போன்றோரிற்கு உதவுவதற்காகவே இதோ கையோடு கொண்டு திரியும் மேசை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உங்களுக்கு உகந்த சூழ்நிலையில் இதனை மேசையாக்கிவிட்டு எழுத ஆரம்பிப்பதுதான் பாக்கி. ஏழு இறாத்தல் நிறையுள்ள, 15 அங்குலம் அகலம், 28 அங்குலம் நீளம். 4 அங்குலம் உயரம் கொண்ட பத்திரிகையாளர்கள் போன்றோர் பயணிக்கும் போது எடுத்துச் செல்லும் அடுக்கு அறைகள் கொண்ட, கையிற்காவும் சூட்கேஸ் (Suit Case) அமைப்பில் நாலு கால்கள் பொருத்தப்பட்டுள்ளன. தேவையான போது, இதை ஒரு மேசையாகப் பாவிக்கலாம். இது அலுமினியத்தாற் செய்யப்பட்டிருப்பதால், நிறைகுறைவும், அதே சமயத்திற் பலமுள்ளதாகவும் இருக்கிறது. எழுது கருவிகள், காகிதாதிகள், சிறியதோர் கணனி ஆகியவை இதன் உள்ளடக்கம். எதிர்வரும் காலத்தில், இந்த அமைப்பில் ஒரு நாற்காலியும் இணைக்கப்படுமென்று, இதன் தயாரிப்பாளர் தெரிவித்துள்ளார்.



## கண்பார்வை குறைந்தோருக்குரிய தட்டச்சு




பார்வை குறைந்தோரின் வசதிக்காக, சாதாரணத் தட்டச்சு இயந்திரத்திலும், கணனியின் தட்டச்சிலும் பொருத்தக்கூடிய உதிரிப் பாகம் விற்பனையாகத் தொடங்கியுள்ளது. இந்த உதிரிப் பாகம் பிறெயிலி எனப்படும் (Braille) பார்வையற்றோரின் எழுத்துமுறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை தட்டச்சின் (Key Board) ஒவ்வொரு தனிப்பாகத்தின் மேல் ஒட்டினால், பார்வையற்றோர், அல்லது பார்வை குறைந்தோர் பயன்படுத்தும் வகையில் அமையும். ஒட்டும் பசை, ஒவ்வொரு தனிப்பாகத்திலும் தரப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சம். மிகக் குறைந்த விலையில் டொலர் இருபத்திரண்டிற்கு இத்தொகுதியொன்று விற்கப்படுகின்றது.

## தானியங்கிப் புல்வெட்டி



உங்கள் வீட்டு முன்புறத்தில் உள்ள புல்வெளியைச் சீராக்க, ''றோபோ'' முறையில் அமைந்த புல்லை நறுக்கிச் சமனாக்கும் தானியங்கிக் கருவி, பிரான்ஸ் நாட்டுத் தயாரிப்பாகும். சூரிய வெளிச்சத்திற் புத்துயிர் பெறும் மின்கலம் (Battery) இதிற் பொருத்தப்பட்டுள்ளது. முற்றத்தில் உள்ள கடினமான பொருள்களுடன் மோதுவதைத் தடுக்க இதனகத்தே ஒளிப் பாதுகாப்பு உண்டு. (Sensor) இதனுடைய வேகம், நிமிடத்திற்கு இருபத்தியொரு அடியாகும். தனது சொந்தக்காரனின் நில எல்லைக் கப்பாற் போகாமல், உள்நின்று வேலை செய்யும் இதன் தொழில் நுட்பமும் போற்றுதற்குரியது. என்ன இருந்தாலும் பக்கத்துக் காணிக்கும் போய் மேயுமாயின் அதன் நிகரே நிகர்தான் என்கிறார் இங்குள்ள ஒருவர்.

## இரவிற் பார்க்க உதவும் கண்ணாடி

தூரப்பார்க்கும் தேவைக்கான இராணுவத்தினருக் குரிய இரவு நேரக் கண்ணாடிகள் நெடுங்காலமாகத் தயாரிப்பில் உள்ளன. இந்த விஞ்ஞானத்தைப் பயன்படுத்திப் பொதுமக்கள் தேவைக்கும், தூரப் பார்க்கும் கண்ணாடிகள் அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளன. இது இரண்டு கண்களிலும் பொருத்திப் பார்க்கும் இருவிழிகாட்டி (Binoculars) ரகத்திற் கிடைக்கின்றது. சொற்ப அளவிலுள்ள இரவு வெளிச்சத்தை 2,000 மடங்கு பெருக்குகின்றது. இதனுடைய நிறை $1\frac{1}{2}$ இறாத்தல். இதனுடைய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

# புதியன அறிமுகம

கண்ணாடி எஃப் 1.17 கனமுள்ளது. பார்வை அளவு 40 பாகைக் கோணம். விலையைக் கேட்டு மிரளாதீர்கள்:- 2,395 டொலர். யாழ்ப்பாண றோட்டால் இரவில் நடப்பதென்றால் கட்டாயம் இது தேவை.

## இசைப்பிரியர்களுக்கோர் அடுக்கு அறை

ஃபிஷர் (Fisher) என்ற அமெரிக்க நிறுவனம், ஒலி, ஒளி உலகில் முன்னணி வகிக்கின்றது. இது தயாரிக்கும் பொருள்கள், உயர்ந்த தரத்திற்கும், கூடிய தொழில் நுட்பத்திற்கும் பிரபலமானவை. இப்போது ஒலி, ஒளி நாடாக்கள் யுகம் முடியத் தொடங்கி, தட்டுக்களிற் ( Disc )



பதிவு செய்யும் காலந் தொடங்கி விட்டது. இந்தக் கைக்கடக்கமான தட்டுக்களை அடுக்காகக் (Compact Discs) களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வசதியாக, இந்த நிறுவனம் ஓர் உயர்ந்த ரக ஏற்பாட்டைச் செய்துள்ளது. முதலாவதாக, சீ.டீ. (C.D) என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்த தட்டுக்கள் யாவும் இனவாரியாகப் பிரிக்கப்பட்டு, ஃபிஷர் செய்துள்ள அடுக்கு அறைகளில் வைக்கப்படுகின்றன. ஒவ்வோர் அறையிலும் 24 தட்டுக்களை அடுக்கி வைக்கலாம். ஓர் அறையிலுள்ள சீடியைத் தெரிவு செய்து இயக்கத் தொடங்கினால், நீங்கள் நிறுத்தும் வரை, மிகுதி 23 தட்டுக்களையும் இந்தக் கருவி தொடர்ந்து இயக்கிக் கொண்டேயிருக்கும். இந்தக் கருவியின் உயரம் 16.7 அங்குலம். அகலம் 14.2 அங்குலம், இதன் விலை:- ஆயிரம் அமெரிக்க டொலர்.

## கம்பியில்லாத் தொலைத் தொடர்பு



விண்வெளியில் உலாவும் செய்மதியின் உதவியுடன், சாதாரணப் பொது மக்களும் கம்பியில்லாத் தொலைபேசி மூலம், உலகின் எந்தப் பாகத்துடனும் தொடர்பு கொள்ளலாம். இதற்குரிய சாதனம் ஒரு சிறிய கைப்பெட்டியின் பருமனில் எம் லிங்க் (M Link) 5,000 என்ற வியாபாரப் பெயருடன், டொலர் 24.000-க்கு அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளது. இதை வீட்டுக்கு உள்ளும் வெளியிலும் பாவிக்கலாம். மின்கலம் (Battery) பொருத்தப்பட்டுள்ளது. இதன் தொழில் நுட்பம், யாரும் எளிதில் இயக்கக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், உள்வரும் தொலைபேசித் தொடர்புகளையும் கம்பியுள்ள தொலைபேசி போற் பெற்றுக்கொள்ளலாம்.

## கணனியின் மேற்பார்வையில் குளியல்

குளியலறையில் நீரின் வேகத்தையும், வெப்பத்தையும் பிசகற்ற விதத்திற் கட்டுப்படுத்தக் கணனியொன்று வந்துவிட்டது. குளிர் நீரும் சுடுநீரும், ஒரே சீராகக் கலக்கப்பட்டு உங்கள் குளியலை இதமாக்க இது உதவுகின்றது. கவலை மாறாமல் ஒரேசீராக இயங்க இந்தக் கருவி நொடிப் பொழுதொன்றுக்கு 60 தடவை நீரைச் சோதனையிடுகின்றதாகத் தயாரிப்பாளர்கள் தகவல் தருகின்றனர். இதைப் பொருத்துவதற்கு நிபுணர்களின் உதவி தேவையென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் விலை உச்சம். டொலர் 1,200.

## தொல்லைதரும் சத்தங்களைத் தள்ளிவைக்கும் கருவி

நீங்கள் ஒலிபெருக்கி மூலம் இசை கேட்பதை வெறுப்பவரா? ஒலிபெருக்கி மூலம் பரப்பப்படும் இசை சிலருக்குத் தொல்லை கொடுக்கின்றது; இது தவிர்க்க முடியாத குற்றச்சாட்டு; அத்துடன் ஒலி மூலம் சூழல் மாசுபடுவதாகவும் சொல்லப்படுகின்றது. நீங்கள்



இசையின்பத்தை அனுபவிக்க பிரத்தியேகமானதோர் தலையில் அணியும் ஒலிவாங்கியைப் பாவித்தல் நன்று. ஹெட்-செற் ( Head -Set எனப்படும் இக்கருவி எமக்கு பரிச்சயமானதோர் விஷயம். காதுகளில் பொருத்தி அயலவருக்குத் தொல்லை தராமல் சங்கீதமோ, பெரியோரின் பேச்சையோ கேட்க இது உதவுகின்றது. ஆனால் வீட்டில் ஒலிக்கும் சாதாரண ஒலிகள் காதில் விழுவதை இதனால் தடுக்க முடியவில்லை. கேட்க விரும்பும் விஷயங்களை விட மற்றெல்லாவற்றையும் தடைசெய்யும் இலத்திரனியல் சாதனம் பொருத்தப்பட்ட ஒலிவாங்கி அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளது. எமது நாட்டுக்கும் இது விரைவில் வந்துவிடலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதில் விழுந்தவை



★ சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டிருந்த திருமதி ஹிலாறி றோதாம் கிளின்ரன் மீது வைற் வோட்டர் விவகாரங்களில் ஊழல் நடந்ததாக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் போது, ''ஏனைய பிற அமெரிக்கர்களிலும் பார்க்க எனது மனைவியை எனக்கு நன்கு தெரியும்'' என்று பில் கிளின்ரன் கூறினார்.

★ முன்னைநாள் அமெரிக்க அதிபர் றிச்சாட் நிக்சன் ருஷ்யாவிற்கு வருகை தந்து பொறிஸ் யெல்சினின் எதிரிகள் இருவரைச் சந்தித்த போது,

''விருந்திற்கு வரும் ஒருவர் அங்கேயுள்ள விருந்தாளிகளுடன் கதைக்காமல் நேரடியாக மலசல கூடத்திற்குச் செல்வது போன்றதே இச்சம்பவம்'' என்று ருஷ்ய வெளிவிவகார அமைச்சர் ''அன்ட்றேய் கொசிறேவ்'' வசை பாடினார்.

★ எலெக்ரோனிக் பொருள்கள் மீதான சுங்கவரித் தீர்வையை அதிகரிக்கப் போவதாக வோசிங்ரன் அச்சுறுத்தியதைத் தொடர்ந்து, ''அமெரிக்கா சட்டத்தை மீறினால் நாங்களும் சட்ட மீறல் செய்வோம் என்றும், அமெரிக்காவின் இப்போக்கு டிசம்பரில் எழுதப்பட்ட காற் (Gatt) உடன்படிக்கையை மீறும் ஒரு செயல்'' என்றும் ஜப்பானிய வர்த்தக ஆலோசகர் 'நொபட்டோசி அக்கோ' தெரிவித்தார்.




★ ''வீரதீரச் செயல்களை நாடிச் செல்லும் மண்குதிரைகள் என நினைத்து உணர்ச்சி மிக்க யூதர்கள் உங்களை உமிழ்ந்து துப்பி விட்டனர்.''

ஹெப்றானில் அராபியர்களுக்கு நடந்த படுகொலை பற்றி, கண்டனக் குரல் எழுப்பிய பாலஸ்தீன தீவிரவாதிகள் மத்தியில் இஸ்ரேலியப் பிரதமர் 'யிற்சாக் றாபின்' இவ்வாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - பர்மிய உறவில், நடைமுறைச் சாத்தியமான

## இருதரப்பு நன்மைகள் தரும், புதிய கொள்கை.

1992ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பர்மிய ஸ்தானிகராக இந்தியாவிற்குச் சென்ற வின்லூவின், தனது நியமனப் பத்திரங்களைக் கையளிக்க ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற பொழுது, வழமைக்கு மாறாக, முகத்தில் ஓங்கி அறைந்தது போன்ற வரவேற்புக் கிடைத்தது. இரு நாடுகளின் உறவைப் பற்றிய மகிழ்ச்சியான உரையாடலுக்குப் பதிலாக, அப்போதைய இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், லூவின் றங்கூனின் இராணுவ ஆட்சியாளரினால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஜனநாயகத் தலைவர் ஆங்சான் சூகீயை உடனடியாக விடுதலை செய்து, 1990-ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றியீட்டிய அவரது கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மேலும், வெங்கட்ராமனின் இந்தப் புத்தீமதி, (வற்புறுத்தல்) பர்மாவிலுள்ள இந்தியத் தூதரகத்தின் வாயிலின் இருமருங்கும் தாராளமாக ஒட்டப்பட்டது. பதவியேற்ற முதற் சில மாதங்களுக்கு லூவின் புறக்கணிக்கப் பட்டார். அதே காலத்தில் 1992ஆகஸ்ட் மாதத்தில் ஜகார்த்தாவில் நடக்கவிருந்த அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாட்டிற் பங்குபற்ற, பர்மிய அரசு எடுத்த சகல முயற்சிகளையும் இந்தியா இரத்துச்செய்து, (தடுத்து) பர்மிய இராணுவ அரசைத் தனிமைப்படுத்தும் முயற்சிகளை ஆதரித்தது. அடுத்து, இந்தியப் பத்திரிகைகள் அனைத்தும் சீனாவின் உபகோளாக பர்மா உருவாகி வருகிறது எனக் கதையாய் எழுதி வந்தன,




ஆனால் தற்பொழுது தூதுவர் லூவினது நிலையில் நல்ல மாற்றங்கள் தென்படத் தொடங்கியுள்ளன. ஜனவரிக் கடைசியில், டெல்கியில். பர்மியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் கியுன் சவேற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. இதில் விசேஷம் என்ன வென்றால், 1988 ஆம் ஆண்டு பர்மிய கிளர்ச்சிக்குப் பின் நிகழ்ந்த இந்திய – பர்மிய உயர்மட்டானத் தொடர்பு இதுவேயாகும். அப்பொழுது ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டது. ஜனநாயகக் குழுக்கள், பர்மிய இராணுவ அரசுக்கு எதிரான தமது நடவடிக்கைகளுக்கு, இந்தியாவை ஓர் உந்து பலகையாக உபயோகிக்கலாம் என்ற நம்பிக்கைக்குத் திடமான முற்றுப் புள்ளியிட்டது.

நியுன்ற்சுவேயின் இந்திய விஜயம், ஜனவரி 20ஆந் திகதியிலிருந்து 6 நாள்களுக்கு நீடித்தது. இந்நாள்களில் அவர் இந்திய வர்த்தக மந்திரி பிரணாப் முக்கர்ஜியுடன், வடகீழ் எல்லைப்புற மாநிலங்களாகிய மணிப்பூர், வர்த்தகத்தை வளர்க்கும் மிசோறாம் ஆகியவற்றுடன் ஆன வர்த்தகத்தை வளர்க்கும் பொருட்டும், அதை முறைப்படுத்துவதற்காகவும், முறையே மொஜேதாமு, கம்பாய் கிரி ஆகிய இடங்களில் சுங்கச் சாவடிகளை அமைக்க ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டது.

என்னும், அதே நாளில் தூதுவர் லூவின், இந்திய உள்நாட்டமைச்சர் என். என். வோறாவுடன் கைச்சாத்திட்ட இன்னோர் உடன்படிக்கை, மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதன்படி, எல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைப் புறத்தில் நடைபெற்றுவந்த சட்டவிரோதமான, பாதகமான எல்லைப்புற நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதில், சிவில் அதிகாரிகளுக்கிடையில் ஒத்துழைப்புக்கும், காலத்துக்குக்காலம் கலந்தாலோசித்தலுக்கும், உளவுத் தகவல்களைப் பரிமாறுவதற்கும் இடமளிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கைகளால், எல்லைகளைக் கடக்கும் புரட்சிக்காரரையும், குற்றவாளிகளையும் நாளடைவிற் படையினர் துரத்திப் பிடிப்பதற்குச் சாதகமான ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது என இராஜதந்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தியா, தனது 1643 கி. மீற்றர் நீளமான வடகீழ் எல்லைப்புறப் பாதைகளுடாக, பர்மிய கெறொயின் போதைவஸ்தைக் கடத்துவதையும், அசாம், நாகலாந்து, மணிப்பூர் ஆகிய மாநிலங்களின் புரட்சிக்காரர் பர்மாவில் அடைக்கலந் தேடுவதைக் கட்டுப்படுத்துவதையும், தனது இலக்குகளாகக் கொண்டுள்ளது, பர்மாவிலிருந்து 1989ஆம் ஆண்டின் பின், பாதுகாப்புத் தேடி இந்தியாவிற்குச் சென்றுள்ள பல நூற்றுக்கணக்கான மாணவர்களையும். அரசியல்வாதிகளையும் இந்தியா கட்டுப்படுத்த வேண்டும் என்பதாகும்.

வடகிழக்குப் பகுதிகளில் தோன்றியுள்ள சகல கிளர்ச்சிகளும், இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்தவையாகும். இவற்றுள், அசாமிய ஐக்கிய விடுதலை முன்னணி, மணிப்பூரின் மக்கள் விடுதலை இராணுவம், நாகலாந்தின் தேசிய சோஷலிசச் சபை போன்றவை சுதந்திர நாடுகளை அமைக்கப் போரிடுகின்றன. மற்றவை அனைத்தும் இந்திய அளவுகோளின்படி, ஏற்கனவே சிறியவை எனக் கணிக்கப்படும் மாநிலங்களிலிருந்து தமக்கென ஒரு பகுதியை, சுயநிர்ணய உரிமையுடைய தாய்நாடாகக் கட்டியெழுப்ப எத்தனிக்கின்றன. கற்ற இளைஞர்களைப் புறக்கணித்ததிலிருந்தே, இவ்வியக்கங்களிற் பல வளர்ச்சியடைந்துள்ளன. இயக்கங்களிற் பங்குபற்றாத வாலிபரிற் பலர், பர்மிய எல்லைப்புறத்தில் இலகுவாகக் கிடைக்கக்கூடிய கெறொயின் போதை வஸ்துக்கு அடிமையாகியுள்ளனர். இதுவரையும், இவ்வினவாதிகளை மாநில அரசியலிற் பங்குகொள்ளத் தூண்டும் முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியளிக்கவில்லை. இதுவுமல்லாமல் இப்பிரதேசங்களிற் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கென, மத்திய அரசாற் கொடுக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்தை மாநிலங்கள் வீணே விரயம் செய்துள்ளன.

1992ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே, புதுடெல்கியின் பர்மியக் கொள்கையிற் புதிய திருப்பம் ஏற்பட்டது. அதாவது, ஆகஸ்ற் மாதத்தில் பர்மாவின் வெளிநாட்டமைச்சின் காரியாலயத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சராகிய யூ ஆய் என்பவரது டெல்கி வருகை, இம் மாற்றத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. தொடர்ந்து, இந்திய வெளிவிவகாரக் காரியதரிசி ஜே. என். டிக்சிற் றங்கூனுக்கு வீஜயம் செய்தார். அதிகம் பிரசித்தம் கொடுக்கப்படாத இந்தப் பயணத்தின் போது, பர்மியப் பிரதம உளவுத்துறை அதிகாரியுடனும், ஏனைய அரச அதிகாரிகளுடனும் அவர் கருத்துப் பரிமாறினார். பின், டிக்சிற் வர்த்தகத்துறையிலும், எல்லைப்புற இராணுவ நடவடிக்கைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை அறிவித்தார். இவையனைத்தும் டெல்கியின் கொள்கை மாற்றங்களை ஊர்ஜிதம் செய்தன.

இந்தியாவின் முன்னைய போக்கு, பர்மாவுடனான இயல்பான வர்த்தகத்திலிருந்து, தன்னைத்தானே அப்புறப்படுத்திக் கொள்வதாகும், இச்சந்தர்ப்பத்தைச்சீனர்களும், தென்கிழக்காசியாக்காரரும் தமது வியாபாரத் தொடர்புகளை நன்கு விருத்தி செய்யப் பயன்படுத்திக் கொண்டனர். ஆங்கிலக் குடியேற்ற நாட்டுக் காலத்தில், இந்தியாவின் ஒரு பகுதியாகவே பர்மா அபிவிருத்தியடைந்து வந்தது. 1962ஆம் ஆண்டு ஜெனரல் நிவின் ஆட்சிப் பொறுப்பேற்ற பொழுது, பெருமளவில் இந்திய வம்சாவழியினர் வெளியேறிய பின்பும், ஏறத்தாழ 420,000 இந்தியர் பர்மாவிற் தங்கியிருந்தனர். ஆனால் 1992, 93ஆம் நிதி ஆண்டில் இந்தியா, 7 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களையே பர்மாவுக்கு ஏற்றுமதி செய்தது. இப்பொருள்களிற் பெரும்பகுதி துவிச்சக்கர வண்டிகளும், அவற்றின் உதிரிப் பாகங்களுமாகும். பதிலாக, 110 அமெ. டொலர் பெறுமதியான மரங்களைப் பர்மாவிடமிருந்து பெற்றது.

இந்தியா, தற்போது பர்மாவில் தனது செல்வாக்கை, சீனாவின் செல்வாக்குடன் சமன் செய்ய முனைந்துள்ளது. பர்மாவூடாக, இந்துசமுத்திரத்தினுள் சீனாவின் கேந்திர முக்கியமான ஊடுருவல் பற்றித் தாம் பெற்றுள்ள பெய்ஜிங்கின் அறிக்கைகள் தெரிவித்திருப்பதை, இந்தியப் புலனாய்வாளர்கள் பெரிதும் காலங்கடத்தப்பட்ட அறிக்கையாகக் கருதுகின்றனர். ஹயிங்கியி (Hainggyi) யிலும், மற்றைய இடங்களிலும் சீனா கட்டியுள்ளதாகக் கூறப்படும் வசதிகள், கரையோரக் கடற் போக்குவரத்திற்கே உகந்தன என அறியக்கிடக்கிறது. அல்லாமலும், அந்தமான் தீவுகளுக்கு வடக்கேயுள்ள, பர்மாவுக்குரிய கொக்கோத் தீவில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் இலத்திரனியற் கட்டுப்பாட்டு நிலையம், அங்கு இருப்பதற்குரிய அறிகுறிகள் எதுவும் இல்லை எனத்தெரிகிறது.

மேலும், சென்ற வருடம் இந்தியாவின் வட கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சீர்குலைந்திருந்த காரணத்தினால், பர்மிய இராணுவத்தினரின் ஒத்துழைப்பை நாடவேண்டியுள்ளது. தேயிலை, எண்ணெய் ஆகிய பொருள்கள் நிறையக் கிடைக்கும் அசாம் மாநிலத்தில், இந்தியப் படையினர் கிளர்ச்சியாளருக்கு எதிராக, இடையிடையே யுத்தம் செய்து வருகிறார்கள். டிசெம்பர் 31ஆம் திகதி பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை நீக்கி, மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சியை நிலைநாட்டியது டெல்கி. இம்மாநிலத்தில் பிரிவினைவாதிகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்குமிடையில் நிகழ்ந்த மோதல்களிலும், நாகர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும், குக்கி இனத்தவர்களுக்கு மிடையில் ஏற்பட்ட கலவரங்களி லும், 800 பேர் வரை இறந்துள் ளனர்.

பிரதமர் பி. வி. நரசிம்மராவி னதும், வெளிவிவகாரக் காரியதரிசி டிக்சிற்றினதும் புதிய இந்தியக் கொள்கை, செயல்முறைச் சாத்தி யக் கூறுடைய அணுகுமுறைக்கு இயைவானது. இதன்படி, இந்தியா தனது நீண்டகால மனஸ்தாபங்க ளைக் கைவிட்டு, சீனா, ஈரான் போன்ற நாடுகளுடன் கூட்டு வியா பாரத் தொடர்புகளை விருத்தி செய்ய முற்பட்டுள்ளது. சீனாவுட னான தொடர்பைப் பொறுத்தமட் டில், எல்லைப்புறச் சமாதானத்தை நிலைநாட்டுதல் ஒரு முக்கிய இலக் காகும். காரணம், இச்சுமுகநிலை, மத்திய அரசின் பாரிய நிதிப் பளு வைக் குறைக்க வல்லது. ஆனால் பர்மாவுடனான தொடர்பில், இப் பொழுதுதான் பர்மிய மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை ஆதரிப் பதாகக் கூறிக் கொள்கிறது. அதே நேரத்தில், பிறநாடுகளின் உள்விவ காரங்களிற் தலையிடாக் கொள் கையைக் கவனமாகப் பின்பற்றுவ தாகவும் கூறுகிறது.

நடைமுறையில் இக்கொள்கை யின்படி, பர்மிய இராணுவ ஆட் சியை எதிர்த்து, இந்தியாவில் தஞ்ச மடைந்த பர்மியர்கள் இப்பொழுது புறக்கணிப்பை உணருகிறார்கள். இந்திய அரசாங்கக் கட்டுப்பாட்டி லுள்ள பர்மிய மொழி வானொலி நிகழ்ச்சிகளில் அரசியல் விமர்சனங் கள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. மேலும், புதுடெல்கியிலிருந்து தங்க ளது வாயை இலகுவாக மூடக் கூடிய வடகீழ் மாகாணங்களுக்குத் தங்களை அனுப்ப, தந்திரமான முயற்சிகள்மேற்கொள்ளப்படுவதாக இந்தியாவிலுள்ள பர்மிய மாணவர் கள் முறையிடுகிறார்கள். அவர்கள், இந்தியா தங்களை இரகசியமாக றங்கூனிடம் கையளிக்கக் கூடு மென அஞ்சுகின்றனர்.

(1) வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ. பெப்ரவரி 3, 1994

# போரா! என்ன போர்?

அனைத்துலகச் செய்தித் தொடர்புச் சாத னங்கள், வட கொரியாவின் அணு ஆயுத உற் பத்தி பற்றிப் ''பெரும் பரபரப்பான'' செய்தி கள் வெளியிடுகின்றன என, தென்கொரியாவின் வர்த்தக மற்றும் வெளிநாட்டு வர்த்தக ஆலோ சகர்கள், முறையிடுகின்றனர். தற்சமயம் தென் கொரியாவில் பெரும் முதலீடுகள் பலவற்றைச் செய்ய எண்ணியுள்ள பல மேற்கத்தைய நிறுவனங் கள், இந்தப் பெரும் பரபரப்பினால், அந்த முத லீடுகளை இரண்டு கொரியாக்களும், அமெரிக் காவும் தங்களுக்குள் பிணக்கைத் தீர்த்துக் கொள்ளும் வரை பின் போடத் தீர்மானித்துள் ளன. போயங்யாங், ''அணுக்குண்டு செய்கிறது'' என்பதே அந்தப் பிணக்காகும். அப்படியான பிணக்கோ, முறுகல் நிலை அச்சுறுத்தலோ வெறும் கற்பனையென்று வர்த்தக வட்டாரங்கள் கருதுகின்றன. அண்மையில் சீ. என். என் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில், ''யுத்தத் தால் அலைக்கழியும்'' தென்கொரியா என்று வர்ணிக்கப்பட்டதை அவர்கள் கண்டித்துள்ளனர். ''கொரியத் தீபகற்பத்தில் சென்ற 40 ஆண்டுக ளாக எவ்விதப் போருமே நடக்கவில்லை'' என்று அவர்கள் கூறுகின்றனர். பல அனைத்துலகச் செய்தி நிறுவனங்கள், தென் கொரியாவிற்கு ''போர் நிகழ்வுகளை அறிவிக்கும் செய்தியாளர் களை'' அனுப்பியுள்ளதாகச் செய்தி வெளிவந்த திலிருந்து, பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்நாட்டு முதலீட்டாளர்களுடன் பங்கு சேர்ந்து உற்பத்தித் தொழில்களில் முதலீடு செய்து வந்ததை இடைநிறுத்தியுள்ளனர் என்று உள்நாட்டு முதலீட்டாளர்கள் கூறுகின்றனர். பீ. பீ. சீ யும், அமெரிக்கத் தொலைக்காட்சியும் தென்கொரியத் தலைநகரிற் போர் நடந்தால், செய்தி சேகரிக்க வெனச் செய்தியாளர் குழுக்களை அனுப்பின. ஆனாலும், அவை யாவும் மீண்டும் திரும்பிச் சென்று உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தாளும் தந்திரம்

பர்மாவில், பல தசாப்தங்களாக மத்திய அரசுக்கும், பல்வேறு சிறுபான்மை இனங்களுக்குமிடையில் உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடக்கின்றது. மத்தியில் உள்ள இராணுவ ஆட்சி, போரை நடத்துவதோடு, பர்மாவில் மீண்டும் ஜனநாயகத்தை நிறுவவேண்டுமென்று கிளர்ச்சி செய்வோரையும் அடக்கவேண்டியுள்ளது. இது, சர்வதேச ரீதியில் பர்மாவின் இராணுவ ஆட்சியாளருக்குக் கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுத்துள்ளது.

அண்மைக்காலத்தில், போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவும், ஜனநாயகக் கிளர்ச்சியாளர்களை ஓரங்கட்டவும், பர்மிய அரசு வெற்றிகரமான யுக்தியைக் கையாளுகின்றது. சென்ற ஒக்ரோபர் மாதம், பர்மாவின் மிகப்பெரிய சிறுபான்மை இனமாகிய கட்சின் (Kachin) பிரிவினருடன், பர்மிய அரசு உடன் படிக்கைக்கு வந்துள்ளது. போராடிக் கொண்டிருக்கும் கரன்ஸ் (Karens), மொன்ஸ் (mons), கரனிஸ் (Karannis) ஆகிய இனங்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்துமுகமாகப் பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன. ஒவ்வோர் இனத்துடனும் தனித்தனியாகச் செய்யப்படும் உடன்படிக்கை, பர்மிய இராணுவ அரசுக்குக் கிடைத்த பெரும் இராஜதந்திர வெற்றி எனலாம். இது ஒரு பிரித்தாளும் தந்திரம். இது, நல்ல பலன் தரும் என்பதில் ஐயமில்லை. கச்சின் இனத்தவர்களுடன் பேச்சுக்கள் நடந்தபோது, கச்சின் பிரதேசத்திற் புகலிடம் அடைந்துள்ள ஜனநாயக வாதிகளின் பிரதிநிதிகளும், மாணவர் அவைப் பிரதிநிதிகளும், அரச எதிர்ப்புப் புத்த மதக் குருமார்களும் பிரசன்னமாயிருக்க அரசு அனுமதி அளிக்கவில்லை. இது, அரசுக்குக் கிடைத்த ஒரு முன்னடைவு என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வோர் இனத்துடனும் பேச்சுக்கள் நடக்கும் போதும், இவர்களுக்கு இடங் கிடைக்கப் போவதில்லை. இனங்கள் ஒவ்வொன்றும், தனது சுய நன்மையிலேயே கவனமாயிருக்கின்றன. இதனால், அரசின் பலம் கூடிக் கொண்டே போகும்.



கரன்ஸ் இனத்தவர்கள், நெடுங்காலமாக ஜனநாயகச் சார்புக் கிளர்ச்சியாளர்களுக்கும், அரசு எதிர்ப்பு மாணவர் இயக்கத்துக்கும், இராணுவத்தால் தேடப்பட்ட போராளிகளுக்கும் புகலிடம் அளித்துள்ளனர். அரசுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படும் பட்சத்தில், இது தொடரும் என்று சொல்வதற்கில்லை. இனங்களுக்கிடையிற் கருத்துப்பரிமாறல் ஒன்றும் கிடையாது. நாடளாவிய கொள்கையொன்றும் கிடையாது என்று, நிலைமையைச் சுருக்கமாகக் கூறலாம். இத்துடன், இனங்களுக்கு இதுவரைகாலமும் மறைமுக உதவி வழங்கி வந்த தாய்லாந்து, மத்திய அரசுடன் உடன்படிக்கை செய்யும்படி நிர்ப்பந்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இப்போது சிறுபான்மை இனங்கள், மட்டுப்படுத்தப்பட்ட உள்ளூராட்சியே போதும் என்றளவுக்கு வந்துள்ளன. ஆகவே, இனி அரசு எதிர்ப்புக் குழுக்களுக்கு உதவும் நடவடிக்கையை நிறுத்திக் கொள்வர் என்பது திண்ணம்.

கைச்சாத்திடப்படும் உடன்படிக்கை இதை உறுதிப்படுத்தும். இனங்களுக்கிடையில் ஒன்றுபட்ட கொள்கையில்லாதபடியால், அவர்கள் பேரம் பேசும் பலத்தை இழந்துவிட்டனர். சிறுபான்மையினங்களை மட்டந்தட்டுவதிலும், ஜனநாயகம் வேண்டுமென்போரை ஓரங்கட்டுவதிலும், பர்மிய இராணுவ அரசு குறிப்பிடத்தக்க இராஜதந்திர வெற்றியை அடைந்துள்ளது.

Fவார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ
ஜனவரி 27, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியா - தாய்லாந்து

கம்போடியாவுக்கும், தாய்லாந்துக்குமிடையில் அண்மைக்காலம் வரை மிகவும் மோசமான அரசியல் உறவுகள் நிலவியுள்ளன. 1989 ஆண்டு கம்போடியாவில் வியட்நாமியரின் ஆட்சி முடிவுக்கு வரும் வரை, கம்போடியப் போராளிகள் வியட்நாம் இராணுவத்தைத் தாக்குவதற்குத் தாய்லாந்தைத் தமது புகலிடமாகப் பாவித்துள்ளனர். இத்துடன் கமறூச் போன்ற போராளிக் குழுக்களுக்குத் தாய்லாந்து ஹுவத்தின் ஆயுதக் கிடங்குகளிலிருந்தும் கம்போடியாவுக்குப் படைக்கலங்கள் போவதைத் தடுக்கத் தாய்லாந்து அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளது. தாய்லாந்தின் தளபதி ஜெனரல் விமோல் வொங்வானிச் இரு தரப்பு உறவுகளையும் சீர் கெடுக்கும் ஆயுத விநியோகத்தைத் தடுக்க உறுதிபூண்டுள்ளார். ஆனால் கீழ்மட்ட அதிகாரிகள் தொடர்ந்தும் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகக் கம்போடியா குற்றஞ்சாட்டி வருகின் சுரண்டுவதிற் குறியாகவுள்ளனர். கம்போடிய மக்களின் நலனில் சிறிதளவேனும் அக்கறையில்லாமல் இந்த முதலீட்டாளர்கள் தமது நாட்டின் பெயரைக் கெடுப்பதில் முனைப்பாக இருக்கின்றனர். இதுபோன்ற பொது விஷயங்களைக் கவனிக்க இரு நாடுகளும் ஓர் ஆணைக்குழுவை நியமிப்பதற்குக் கொள்கை அளவில் இணக்கங் கண்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட யாவற்றையும் மனதிற் கொண்டு தாய்லாந்தின்

# இரு தரப்பு உறவுகள்

இராணுவமும், தாய்லாந்து நாட்டு ஆயுத முகவர்களும் பெருந்தொகையான படைக் கலங்களை விற்றுக் கொள்ளை இலாபம் பெற்றுள்ளனர். கம்போடிய அரசுக்கும், கமறூச் குழுவுக்குமிடையில் நடக்கும் உள்நாட்டுப் போரில் தாய்லாந்து நாட்டு இராணுவமும், ஆயுத முகவர்களும் நடுநிலை வகிக்காது கமறூச் பக்கம் சார்ந்துள்ளனர், கமறூச் போராளிகளுக்கு ஆயுத விற்பனை செய்து தொடர்ந்தும் இலாபம் தேடுவது தான் இவர்களின் குறிக்கோள்.

அமெரிக்கா போன்ற நாடுகளின் நெருக்குதல்களால் தாய்லாந்து இந்த நிலையை மாற்றத் துணிந்துள்ளது. தாய்லாந்தின் ஆயுதச் சந்தையிலிருந்தும், இராறது. இதில் உண்மை இருப்பின் இராணுவத்தின் மேல்மட்ட உத்தரவுகள் மதிக்கப்படுவதில்லையென்றும், இராணுவக் கட்டமைப்பு மோசமடைந்துள்ளது என்றும் அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம். அரசு அதிகாரிகள் சிலரும் இவ் வியாபாரத்தில் ஈடுபடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் சர்வதேச அரங்கில் தாய்லாந்து அரசு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இருதரப்பு உறவுகளும் சீர் கெடுவதற்குக் கம்போடியாவில் முதலீடு செய்துள்ள தாய்லாந்துத் தொழிலதிபர்களும் இன்னுமொரு காரணம் எனலாம். இவர்கள் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து நாட்டின் செல்வத்தைச்

பிரதமர் சுவான் லீக்பை, சென்ற ஜனவரி மாத நடுப்பகுதியில் கம்போடியாவுக்கு உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். தனது நாட்டு இராணுவப் பொறியியலாளர்கள் கம்போடியாவுக்குக் கட்டிக்கொடுத்த நெடுஞ்சாலையைத் திறப்பதே இவருடைய வருகைக்குக் காரணமென்றாலும் ஆயுத விநியோகத்தையும், முதலீட்டாளர்களின் சுயநலத்தையும் தடுக்கும் பேச்சுக்களைக் கம்போடிய அரசுடன் நடத்துவதுதான் இவரின் உண்மையான நோக்கம்.

(F) *வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ, ஜனவரி 27, 1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்போடியா

# சட்டமும், ஒழுங்குமற்றதொரு நாடு.



கமறூச் போராளி ஒருவர்

## பாதுகாப்புப் படையினர் செய்யும் அட்டூழியங்கள் கூடுகின்றன.

கம்போடிய மக்களுக்கு உதவுவதற்கென வந்திருக்கும் வெளிநாட்டவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் உள்ள பெறுமதிமிக்க பொருள்கள் பறிக்கப்பட்டுள்ளன. இதைச்செய்தவர்கள், பெரும்பாலும் கம்போடியாவின் பாதுகாப்புப் படையினரே. பாதிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோர், நொம்பென் தலைநகரில் ஆர்ப்பாட்டஞ் செய்துள்ளனர். பேரணி நடந்த ஜனவரி 12 ஆம் திகதி அன்றே, தலைநகருக்கண்மையில் ஐ. நாவின் வாகனங்களைத் திருட, ஆயுதந் தரித்த கும்பலொன்று ஐ. நா வளாகத்தினுள் நுழைந்துள்ளது. பொலிசார் வரவழைக்கப்பட்டனர். நடந்த துப்பாக்கிச் சமரில், மூன்று திருடர்கள் கொல்லப்பட்டனர். இந்த மூவரில் இருவர், பொலிஸ்படையைச் சேர்ந்தவர்களென்றும், மூன்றாமவர், பலம் வாய்ந்த மக்கள் கட்சியின் தலைவர் சியாசிம் அவர்களின் மெய்க்காப்பாளன் என்றும் அடையாளங் காணப்பட்டுள்ளனர். சியாசிம் கம்போடியத் தேசியப் பேரவையின் தலைவர் என்பது குறிப்பிடத் தக்கது.

கம்போடிய இராணுவத்தின் மூத்த தளபதிகளின் ஆசியுடன், 300 இற்கு மேற்பட்ட ஐ. நா வாகனங்களும், பெறுமதிமிக்க பொருள்களும், அண்மையில் வெற்றிகரமாகத் திருடப்பட்டுள்ளன. அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் படுந் தொல்லையை, சொல்லில் வடிக்க முடியாது. திருடப்பட்ட வாகனங்கள், இராணுவ அதிகாரிகளாற் பகிரங்கமாகப் பாவிக்கப்படுவது, கம்போடியாவில் மிகவும் சகஜம். இது மாத்திரமல்ல, திருடப்பட்ட ஒரு வாகனத்தைத் திருப்பிக் கொடுப்பதாயின், 3,000 அமெரிக்க டொலர் தரும்படி, பொலிஸ் அத்தியட்சகரே கேட்டுள்ளார். அண்மையில், பிரிட்டிஷ் தொண்டர் நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் ஆயுதப்படையினராற் சுட்டுக் காயப்படுத்தப்பட்டபின், அவரிடமிருந்து பணமும், பொருளும் அபகரிக்கப்பட்டுள்ளன. இது ஒரு தனிப்பட்ட சம்பவமல்ல; கம்போடியாவிலிருக்கும் வெளிநாட்டவரெல்லோரும் முகங் கொடுக்கவேண்டிய பாரதூரமான பொதுப்பிரச்சனை எனலாம்.

கம்போடியப் பொதுமக்களின் கதியும் இவ்வாறானதே. கம்போடியாவுக்கு அமைதி திரும்பிவிட்டது என்று உலகச் செய்தித்துறை கூறினாலும், நாட்டுமக்கள் படும் அவஸ்தையை இக்கட்டுரை வாயிலாக நாம் அறியலாம். வடக்கிலும், மேற்கிலும் எல்லைப் புறங்களில் வாழும் மக்கள், அரச படைகளுக்கும், கமறூச் படையினருக்குமிடையிற் சிக்கித் தவிக்கின்றனர். அரச படைகள், பொதுமக்களிடமிருந்து வரி வசூலிப்பது நாடறிந்த விஷயம். இதை நியாயப்படுத்த, இப்பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கூறும் காரணம் பின்வருமாறு:– ''மாதாந்த ஊதியம் சரிவரக் கொடுபடுவதில்லை. உணவும் ஆயுதங்களைப் பேணும் உபகரணங்களும், ரவைகளும் தரப்படுவதில்லை. ஆகவே, வேலி பயிரை மேய்கின்றது''.

எல்லைக் காவல் அணியைச் சேர்ந்த ஜெனரல் எம். சாறே, என்பவர்: ''அரசு, எமக்கு அரிசி மாத்திரம் தருகின்றது. இதைவிட, எமக்கு வேறு உணவில்லை. சென்ற நவம்பர் மாதம் தொடக்கம், ஊதியம் தரப்படவில்லை. காயமடைந்தவர்களைக் கவனிக்க, எம்மிடம் மருந்துகள் இல்லை. அநேகமானோர், மலேரியா நோயாற் பீடிக்கப்பட்டுள்ளனர்'' என்றெல்லாம் முறைப்பாடு செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியம் றீப் பகுதியில் மூன்று மாத இடைவெளிக்குப்பின், துருப்புக்களுக்கு 50 றியல் (கம்போடியப் பணம்) நோட்டுக்களில் ஊதியம் எண்ணிக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், 50 றியல் நோட்டுக்கள் நாட்டிற் செல்லுபடியாகா. அரசு வங்கிகள் கூட, இவற்றை ஏற்பதில்லை. கோபா வேசங் கொண்ட இராணுவத்தினர், உல்லாசப் பிரயாணிகளையும், அவர்களுக்கென நிறுவப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களையும் சூறையாடியுள்ளனர். இராணுவத்தினருக்குக் கையூட்டுக் கொடுக்க, நாம் பெறுமதிமிக்க பணத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்கிறார் ஒரு வர்த்தகர். பொதுச் சந்தையில் வியாபாரஞ் செய்வோரும் இராணுவத்தினருக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டும். வடக்குக் கம்போடியாவின் மிகப்பெரிய நெடுஞ்சாலையிலுள்ள தடைமுகாம்களிலெல்லாம், இராணுவத்தினருக்குச் சேர வேண்டிய கொடுப்பனவுகளைச் செலுத்தாமல் ஒருவரும் நகர முடியாது. ஜனவரி 6 ஆம் திகதி ஒரு பத்திரிகையாளரிடமிருந்து விலையுயர்ந்த புகைப்படக் கருவிகளும், பணமும் துவக்கு முனையிற் பறிமுதல் செய்யப்பட்டன. இவர் சர்வதேசப் புகழ்பெற்ற செய்தி நிறுவனத்தின் முகவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசுக்கும், கமறூச் இயக்கத்திற்கும் பேச்சு வார்த்தை முயற்சிகள் நடைபெறும் வேளையில், சிறு மோதல்களும், பெரும் போருக்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. மழைக்காலம் முடிவுக்கு வர, வரட்சிக் காலச்சமர் ஆரம்பிப்பது நிச்சயம். இருபகுதியினரும், இதை மனதிற் கொண்டு செயற்படுகின்றனர். அன்லொங்வெங் எனப்படும் தாய்லாந்து எல்லையோர நகரத்தில், கமறூச் இயக்கத்தின் கட்டளைத்தலைமைப் பீடம் இருக்கின்றது. அதேபோல், மேற்கெல்லையோரத்தில் இவர்களின் அதிகாரபூர்வச் செயலகம் பாய்லின் நகரில் இருக்கின்றது. முறையான பேச்சுக்கள் ஆரம்பிக்கு முன்பே, இரண்டையும் கைப்பற்றுவது கம்போடிய இராணுவத்தின் குறி. "பேச்சுக்கள் இரண்டாம் பட்சம். யுத்தமுனையிற் பெறுவதே யதார்த்தம்" என்கிறார், கமறூச் தளபதி ஒருவர். அதே சமயத்தில், அவர் சொல்கிறார்:- "அதிக பட்ச பலம், அரசபடைகளிடம் தான் உண்டு. நாம், வானிலையைச் சாதகமாக்கிப் போராடுகிறோம். வரட்சிக் காலத்தில் அவர்களும், மழைக்காலத்தில் நாமும் வெற்றியைப் பெறுவோம்" என்பதாக.

அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க, மூன்று முன் நிபந்தனைகளை அரசு விதித்துள்ளது. அவையாவன:- உடனடி யுத்த நிறுத்தம், கமறூச் படைக் கலைப்பு, கைப்பற்றிய நிலப்பரப்பை அரசிடம் ஒப்படைத்தல். பேச்சுக்களுக்கு என்ன நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதாக விருந்தாலும், முதற் கட்டமாக யுத்த நிறுத்தம் அவசியம் என்பது அரசின் நிலைப்பாடு. ஆனால், கமறூச் இதை நிராகரித்துள்ளது. யுத்தமும், பேச்சுக்களும் சமகாலத்தில் நடக்க வேண்டுமென்பது, இவ்வியக்கத்தின் கொள்கை. இதிலிருந்து இறங்கிவர, அவர்கள் தயாரில்லை.

*(F) வார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ, ஜனவரி 27, 1994*

# 1997 இல் சீனாவின் கைக்கு மாறும் ஹொங்கொங் தீவுகளின் எதிர்காலம்

கடந்த வருடத்தின் இறுதி மாதம், இத்தீவுகளின் எதிர் காலத்தை நிர்ணயம் செய்யும் வகையில் அமைந்துள்ளது. இத்தீவுகளின் பிரிட்டிஷ் ஆளுநர் கிறிஸ் ரோபர் பேற்றன், சீனாவுடன் முரண்பாடான சில அரசியல் மாற்றங்களைச் செய்யப்போவதாக, தனது திட்டத்தை வெளிப்படுத்தினார். சீனாவின் எதிர்ப்பையும், இராஜதந்திரப் பேச்சுக்களையும் அவர் பொருட்படுத்தவில்லை தனது போக்கில் மாற்றமில்லை என்பது அவரது செயற்பாட்டின் சாரம். மறுபுறத்தில் டிசெம்பர் 9 ஆம் திகதி சீனா ஹொங்கொங் தீவுகள் சம்பந்தமான. தனது நிலைப்பாட்டைப் பின்வருமாறு பிரகடனஞ் செய்தது. 1997 ஆம் ஆண்டிற்குப் பின் இத் தீவுகளின் நிர்வாகம், அரசியல் அமைப்பு ஒழுங்குகள் சம்பந்தமாக ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட சீனாவின் ஆரம்பச் செயற்குழு தனது வேலையைத் துரிதப்படுத்தும் China Preliminary Working Committee). இப் பிரகடனம் திரு. பேற்றன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிக்கை எனக் கொள்ளலாம். சீனாவின் இந்தப் பிரகடனம் இன்னுமொரு கருத்தையும்வெளிப்படுத்துகின்றது. பிரிட்டனுடன் தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபடாமல் சீனா ஒரு பட்சமாக இத் தீவுகளைக் கைப்பற்றத் துணிந்துள்ளது என்பதே அந்தஅர்த்தம். திரு. பேற்றன் எந்த அரசியலமைப்பு மாற்றங்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புகுத்தினாலும் அவை யாவும் 1997 ஆம் ஆண்டிற்குப் பின் மறு பரிசீலனை செய்யப்படும் என்ற அர்த்தமும் நிச்சயம் உண்டு.

இத்துடன் மோதல் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. சீனா தனது மேன்மையான இராஜதந்திரத் தால் பிரிட்டிஷ் பிரதிநிதியை மட் டந்தட்டியுள்ளதை நாம் நன்றாக நம்பலாம். எப்பக்கம் காற்று வீசு கின்றதென்பதை இத் தீவின் வர்த் தகப் பெருமக்களும், தொழிலதி பர்களும், முதலீட்டாளர்களும் நன்றாக உணர்ந்துள்ளனர். சீனா வின் பிரகடனத்தை அடுத்துத் தீவின் பங்குச்சந்தை முன்னெப் போதும் இல்லாதவாறு 5 சதவீதம் உயர்ந்தது. தடுமாற்றத்திற்குப் பதில் தன்னம்பிக்கையே நிலவி யுள்ளது. அடுத்த வாரம் திரு. பேற்ரன் தனது அரசியல் அமைப்பு மாற்றப் பிரேரணையை முன் வைத்தபோது பங்குச் சந்தை இன்னுமோர் 6 சதவீதம் ஏறி அவ ருக்கு அதிர்ச்சி வைத்தியம் செய் துள்ளது. இதற்கு இதுகாறும் சீனா பாவித்த ஆவேசப் பேச்சில் ஏற்பட்ட கணிச மாற்றமும் ஒரு காரணம் எனலாம். அண்மையில் சீன அதிகாரிகளின் பேச்சிலும், செயலிலும் ஒருவித மென்மை புகுந்துள்ளது கண்கூடு.

மேற்கூறிய ஆரம்பச் செயற் குழுவின் முதற்கட்ட அறிக்கை இவ்வருட நடுப்பகுதியில் வெளி வரும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது. இதன்பின் செயற்குழு அறிக்கையை எவ்வாறு நடை முறைப்படுத்தலாம் என்பதே பிர தான விடயமாயிருக்கும். திரு. பேற்ரனும், அவரை வழி நடத் தும் பிரிட்டிஷ் அரசும் ஒருபுறம் தள்ளப்படுவது தவிர்க்க முடியாத தொன்றாகும். 1997 ஆம் ஆண்டு சீன அதிகாரிகள் புதிய தேர்தல் களை நடத்தத் துணிந்தால் அதற் கிடையில் திரு. பேற்ரன் நடத்த விருக்கும் தேர்தல்கள் பயனற்ற தாகிவிடும். அத்துடன் இத் தீவின் வர்த்தகப் பெருமக்களுட னும், அரசியல்வாதிகளுடனும் சீனா நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டால் திரு. பேற்ரனும், பிரிட்டிஷ் அரசும் தனிமைப்படுத்தப்பட்டு விடுவது திண்ணம்.

தீவுகளின் எதிர்காலமும், திரு. பேற்ரனின் கைகளிலோ, பிரிட்டிஷ் அரசின் அதிகாரத் திலோ தங்கியிருக்கவில்லை. சீன அரசு நியமித்துள்ள ஆரம்பச் செயற்குழுவின் தீர்மானங்கள் தான் தீவுகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும் தன்மை வாய்ந்தவை. இதை உணர்ந்த இத்தீவின் தலை வர்கள் மேற்குறித்த செயற்குழு வுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தத் துணிந்துள்ளனர். சீனாவை எதிரியாகக் கணிப்பது ஆபத்தானது; சமயோசிதமற் றது என்பதை அவர்கள் சந்தேக மற அறிந்துள்ளனர். அதே சம யத்தில் பிரிட்டனும், அதன் பிரதி நிதியும் ஆரம்பச் செயற்குழுவை இகழத் தொடங்கியமை இத்தீவு மக்களைச் சீனாவுடன் நெருங்கி வர வைத்துள்ளது. இன்னும் மூன்று வருடங்களில் வெளியே றும் மண்குதிரையைத் தீவு மக் கள் உதாசீனஞ் செய்வதில் அதி சயமொன்றும் இல்லை. சீனாவும் தனது பங்கிற்கு இறங்கி வந்து தனது ஆரம்பச் செயற்குழுவில் தீவு மக்களுக்கும் இடங்கொடுத்து அவர்களின் ஆதரவைப் பூரணமா கப் பெற்றால் 1997 ஆம் ஆண் டிற்கு முன்பாகவே மண்குதிரை கரைந்துவிடும்.

*ஏசியா வீக் ஜனவரி–05, 1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHUNDIKULI BRANCH LIBRARY



# "தளம் அமைத்தல்"

## என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டு- பிரித்தானியாவின் உதவி, படை இணைப்புக்கே என்ற குற்றச்சாட்டு மறுக்கப் படுகிறது.

கோலாலம்பூரிலிருந்து
— மைக்கேல் வற்றிக்கியோரிஸ் —

1997இல் ஹொங்கொங் சீனாவின் ஆட்சிக்கு வந்த பின்னரும், மலேசியாவில் பிரித்தானியப் படைகள் நிலைகொண்டிருக்க முடியுமா? பிரித்தானியப் பத்திரிகையாளர் சிலர், இவ்வாறு நினைப்பதாகத் தோன்றுகிறது.

பிரித்தானியா, 327.6 மில்லியன் டொலர் (பிரித்தானிய மதிப்பீட்டில் 234 பவுண்) நிதியுதவியை, 1கோடி பவுண் பெறுமதியான ஆயுதக்கொள்வனவுக்கெனஇனிப்பூட்டும் இலஞ்சமாக மலேசியாவிற்கு வழங்கியுள்ளது என்று''The Independent''என்ற பத்திரிகை ஜனவரி மாதப் பிற் பகுதியில், ஆதாரமற்ற வகையிற் குற்றஞ் சாட்டியுள்ளது. லண்டனும், கோலாலம்பூரும் பாதுகாப்பு அடிப்படையில் ஒத்துழைப்பதென, 1988இல் வெளியிட்ட நினைவூட்டு அறிக்கையை ஆதாரமாகக் காட்டி, ஹொங்கொங்கிலிருந்து பிரித்தானியா வெளியேறிய பின்பும், அதன் சிறப்புப் படைகள் நிலைகொண்டிருக்கத் தளம் அமைப்பது பற்றிய உடன்பாடு இருப்பதாக, மேலும் அந்தப் பத்திரிகை கூறுகிறது.

குடியேற்ற நாடுகளின் விடுதலைக்குப் பின்னரும், பிரித்தானியாவின் இறுதிக் காவற்படை தனது கொடியைக் கோலாலம்பூரில் நாட்டும் என்பது, மலேசியா மக்களால் நம்பிக்கையின்மையோடு தான் வரவேற்கப்படுகிறது. முத்த இராஜ தந்திரி ஒருவர், மலேசியாவின் சட்ட யாப்பு, வெளிநாட்டுப் படை தனது நாட்டிலே நிலை கொள்வதைத் தடைசெய்கிறது என்று சுட்டிக் காட்டியுள்ளார். ''நிரந்தரமாகவே பிரித்தானியக் காவற்படை ஒன்று எம் நாட்டில் நிலைகொள்வது என்பது, நடக்கக் கூடிய ஒன்றன்று; மலேசியரால், முற்றாக ஏற்க முடியாத நிலைப்பாடு அது'' என்றார் அவர்.

பிரித்தானியாவின் நிதியுதவிக்கும், தளம் அமைப்பிற்கும் சம்பந்தமே இல்லை என்று, உத்தியோக ரீதியில் மலேசியப் பாதுகாப்பு அமைச்சர் டாடுக் செரி நஜீப் வன்மையாக மறுப்புத் தெரிவித்துள்ளார். தெற்கு மாகாணமான ஜோகூரின் கிழக்குத் துறை முகத்தில் தளம் அமைக்கப்படுவது உண்மை. ''அந்தப் படைத்தளம், எமது சிறப்புப் படைகளுக்கென்று அமைக்கப்பட்டுள்ள தளங்களைப் போன்ற ஒன்று மட்டுமே'' என்று, நஜீப் குறிப்பிடுகின்றார். இத்தள அமைப்பில், பிரித்தானியச் சிறப்புப் படைகள் ஈடுபட்டுள்ளன என்பதையும் அவர் மறுக்கவில்லை. இதனையே The Independent பத்திரிகை தவறாக விளங்கிக் கொண்டிருக்கலாம்.

பிரித்தானியப் படை அதிகாரிகள் பிரிட்டிஷ் சிறப்புப் படையின் இயக்கம் பற்றி எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. பிரித்தானியப் பாதுகாப்புக் கொள்கை பற்றித் தெரிந்து வைத்திருக்கும் மலேசிய மூலகங்கள் ஆசியாவில் லண்டன் தனக்கென ஒரு படைத்தளம் அமைப்பதென்பது அதன் நிதிவளத்தைப் பொறுத்தவரையில் முடியாத ஒன்று என்றே கருதுகின்றன. புருனேயின் சுல்தான், கூர்க்கா சிறப்புப் படை ஒன்றையாவது தமது நாட்டில் நிறுத்தி வைக்கும்படி லண்டனை மிகவும் பாடுபட்டு வற்புறுத்தியதை ஓர் அவதானி எடுத்துக்காட்டியுள்ளார். சுல்தானின் கோரிக்கை நிறைவேற்றப்படாதமை இங்கு கவனிக்கத்தக்கது.

எவ்வாறெனினும் தற்காலிகமாகப் பிரித்தானியப் படைகள் சுற்று வட்டமுறையில் தம் நாட்டுக்கு வந்து போவதை மலேசியர் முற்றாக மறுக்கவும் இல்லை. மலேசியா ஐந்து நாடுகளின் பாதுகாப்புக் கூட்டில் ஓர் உறுப்பினராய் உள்ளது. பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், நியூசிலாந்து என்பன மற்றைய அங்கத்துவ நாடுகளாகும்.

(F) வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ, பெப்ரவரி 17, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசூதியில் நடந்த படுகொலை

## பி. எல். ஓ. இஸ்ரேல் பேச்சுக்கள் தடைப்படுமா?

ஏற்றமும், இறக்கமும் நிறைந்த பி. எல். ஓ இஸ்ரேலிய பேச்சுக்களிற் பங்குபற்றிய இரு பகுதியினரும், நடந்துவிடுமோ என்று பயந்த சம்பவம் நடந்தே விட்டது. றம்ஸான் நோன்புக் காலத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை, இப்றகிம் மசூதியில் தொழுகைக்காகக் கூடியிருந்த மக்கள் மீது, யூதத் தீவிரவாதி ஒருவன் நடத்திய தாக்குதலில் ஐம்பதிற்கு மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இரு பகுதிகளிலும் தீவிரவாதிகள் இருக்கின்றனர். இவர்களிலொருவன் வன்முறையில் இறங்கினால், பேச்சுக்கு ஆபத்து என்று அமெரிக்கா உட்பட இரு பகுதிகளும் உணர்ந்திருந்தன. மேற்குக்கரை நகரமான ஹிப்றொன் (Hebron) நகரில் 700-க்கு மேற்பட்ட ஆண், பெண், சிறுவர் சனக் கூட்டத்தின் மீது, மருத்துவத் தொழில் புரியும் டொக்ரர் பாறுக் கோல்ட்ஸ்ரைன் (Dr Baruch Goldstein), இத்தாக்குதலை நடத்தியுள்ளான்.

நியூயோர்க் நகரில், 1990 இல் அரபு எதிர்ப்புக் கொள்கையுடைய யூத மதகுரு மையர் ககானே கொல்லப்பட்டபின்பு, அமெரிக்காவிலும், இஸ்ரேலிலும் இவர் பெயரில் ஒரு தீவிரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கொள்கை, பாலஸ்தீனியர்களைக் கொல்லுவதும், அவர்களுடைய உரிமைகளை மறுப்பதுமாகும். அரேபியர்கள் மத்தியில் தோன்றிய ஹமாஸ் இயக்கம், யூதர்களை அழிக்கவேண்டும் என்றும், இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும் இருமுனைக் கொள்கைகளுடன் செயற்பட்டு வருகின்றது. இந்த இரண்டும், பேச்சுக்களுக்கு முரணாக இயங்குகின்றன. மேற்கூறிய பாறுக் கோல்ட்ஸ்ரைன், ககானே இயக்கத்தைச் சேர்ந்தவன். அமெரிக்காவிற் பிறந்து, பட்டம் பெற்ற பின், இஸ்ரேல் குடிமகன் ஆனவன். பேச்சுக்களை நிறுத்த வேண்டும்; கூடுமானவரை, அநேகம் அரேபியர்களைக் கொன்று ககானே கொலைக்குப் பதிலடி கொடுக்க

**" அயலவரின் நிலத்திற் பேராசை கொள்ளாமலும், கொலைக் குற்றத்திற்கு ஆளாகாமலும் மக்களின் நல்வாழ்வை விரும்புவோர் யாராவது உண்டா ...?"**

*இஸ்ரேலின் மேற்குக் கரையில் அமைந்துள்ள ஹிப்றோன் நகரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றிற் படுகொலைகள் நிகழ்த்திய வைத்தியர் பாறுக் கோல்ட் ஸ்ரைன் தனது சிறிய வயதில் எழுதிய வசனங்கள்.*



எமக்கிடையில் ஜென்ம விரோதம்:

*அரபு இளைஞர்களை விரட்டும் இஸ்ரேலியப் படையினர்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பது இவனுடைய நெடுங்காலத் திட்டம். சென்ற வருடம் யூத வணக்கத் தலமொன்றில் நின்றவாறு, ''ஒரு யூதன் எழுந்து நின்று, மையா ககானேயின் கொலைக்காகப் பல அரேபியர்களைக் கொல்லும் நாள் விரைவில் வரும்'' என்று கூறியுள்ளான். இவன், இஸ்ரேலிய இராணுவத்திற் பகுதிநேரத் தொழிலின் போது இராணுவத் துப்பாக்கியைப் பாவித்துள்ளதுடன், அச்சமயத்தில் இராணுவச் சீருடையும் அணிந்திருந்தான் என்பது குறிப்பிடத் தக்கது.

மசூதியின் காவலர்கள் தடுத்த போது, தான் இராணுவப் பொறுப்பாளன்; தனக்கு உட்புக உரிமையுண்டு என்று கூறியவாறு, இவன் காவலாளி ஒருவனைத் தாக்கியுள்ளான். பின்பு மண்டியிட்டு வணங்கியவாறு இருந்தவர்கள் மீது சரமாரியாகச் சுட்டுக் கொண்டேயிருந்தான். சுமார் பத்து நிமிடங்கள் கொலை நிகழ்ச்சிகள் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தப்பியோடும் முயற்சியின் போது ஏற்பட்ட நெரிசலிலும் சிலர் இறந்திருக்கக் கூடும்.

அத்துடன், பாலஸ்தீனியர்கள் கோல்ட்ஸ்ரைனைத் தாக்கிக் கொண்டிருக்கும்போது, இவனுடைய இராணுவச் சீருடையைக் கவனித்த வேறு இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டதிலும் பலர் இறந்துள்ளனர். காவலாளி ஒருவன், மூன்று இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் மக்கள் அல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும் போது, மசூதிக்குள் புகுந்து மக்கள் மீது சுட்டதாக வாக்குமூலம் கொடுத்துள்ளான். பி. எல். ஓ. வின் பிரதம பேச்சாளர் நபில் சாத், ஓடும் மக்களை நோக்கி, வெளியில் நின்ற இராணுவமும் சுட்டதாகக் கூறியுள்ளார்.

பி. எல். ஓ. த் தலைவர் யஸீர் அரபாத், இது பலர் சம்பந்தப்பட்ட ஒரு சதி என்று கூறியுள்ளார். ஆனால், இதற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு சகா தாக்கப்படுவதைப் பொறுக்காத இராணுவத்தினர் தான், அச்சமயம்




கொலை வெறியில் மக்களை நோக்கிச் சுட்டுள்ளனர் என்று பரவலாக நம்பப்படுகின்றது. இராணுவத்தின் அறிக்கையில், கோல்ட்ஸ்ரைன் தனித்தே இயங்கியுள்ளாரென்றும், இவன் நூறு ரவைகள் வரை சுட்டிருக்கலாமென்றும், என்ன நடந்ததென்று அறியாமல், கூட்டத்தைக் கலைக்க இராணுவம் ஆகாயத்திற் சுட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலஸ்தீனியர்களின் அறிக்கைப்படி 52 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்; 70 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இத்துடன், ஆத்திரமடைந்த மக்களின் கைகளால் அடித்துக் கொல்லப்பட்ட கோல்ட்ஸ்ரைனையும் கூட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தனக்கு நடக்கப் போவது என்னவென்று, இவனுக்கு முன்கூட்டியே தெரியும். தான் பணிசெய்யும் மருத்துவ மனைக்கு 'இறுதிக் கடிதம்' அனுப்பிய பின்பே, கொலைக் களத்துக்கு இவன் புறப்பட்டுள்ளான்.

மேற்குக் கரையில் மாத்திரம், 170 யூதக் குடியேற்றங்கள் இருக்கின்றன. பாலஸ்தீனியர்களின் நிலங்களில், இவர்கள் அரச மேற்பார்வையிற் குடியமர்த்தப் பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும், நவீன ஆயுதங்களும் இஸ்ரேலிய இராணுவத்தாற் கொடுக்கப்பட்டுள்ளது. காசாவிலும், இங்கும் குடியேற்றவாசிகளின் பாதுகாப்பே, பேச்சுக்களைக் கெடுக்கும் பிரச்சனையாக இருக்கின்றது. குடியேற்றவாசிகளுக்குக் கூடுதற் பாதுகாப்புக் கொடுக்கும் அரசு, அவர்களை அப்புறப்படுத்துவதைச் சிந்திக்கவும் மறுத்துள்ளது. அத்துடன், மட்டுப் படுத்தப்பட்ட சுயாட்சியைப் பற்றிப் பேசும் இஸ்ரேலிய அரசு அதற்குரிய அம்சங்களை வழங்க மறுத்துவருகிறது. எவ்வளவு காலம் பேச்சுக்கள் முடிவின்றி இழுபடுகின்றதோ, அத்தனை நன்மை இஸ்ரேலுக்கு உண்டு என்று இந்த அரசு நம்புகின்றது. ஏனென்றால், இந்தப் படுகொலைகள் நடக்குமுன்பே, அரபாத் மீது அரபு மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கியுள்ளனர். இந்தப் படுகொலைக்குப் பின், அரபாத் மிகவும் இக்கட்டான நிலையிலுள்ளார். அரபாத் தூக்கியெறியப் பட்டால், இஸ்ரேலுடன் பேச யாருமில்லை; இஸ்ரேல், தான் நினைத்தவாறு நடக்கலாம்.

''அரபாத் ஒரு துரோகி; அரபாத் ஒரு யூதன்'' என்ற கோஷத்தை, ஹமாஸ் வெற்றிகரமாகக் கிளப்பியுள்ளது. இளைஞர்கள் மத்தியில், பழிவாங்கும் வெறிமுற்றிய இந்த நேரத்தில் ஹமாஸ் பேராதரவு பெறுவதில் வியப்பில்லை. அரபாத்தின் சரணாகதிக் கொள்கையை நிறுத்தும்படி, ஹமாஸ் தனது அறிக்கை மூலம் அரபாத்தைக் கேட்டுள்ளது. இஸ்ரேலியர்களின் உண்மையான உருவத்தைப் புரிந்து கொண்டவர்கள் ஹமாஸ் மாத்திரமே என்று, பலரும் நம்புகின்றனர். ஹமாஸ் இயக்கத்தின் கையோங்கினால், இஸ்ரேலுக்கும் ஆபத்து என்பதை றாபின் அரசு நன்கு அறியும். ஆகையால், இவர்கள் பேச்சுக்களை மீண்டும் தொடங்கி, முன்பு ஒத்துக்கொண்டதிலும் பார்க்கக் கூடுதலான சலுகைகளை, அரபாத் தலைமை தாங்கும் இயக்கத்திற்கு வழங்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகையினால், பேச்சுக்களை நிறுத்துவதற்காகச் செய்யப்பட்ட படுகொலைகள், பேச்சுக்களைத் தீவிரமாக நடத்தவும், கூடுதலான சலுகைகளைப் பரிமாறிக் கொள்ளவும் வழிவகுக்கும் என்று துணிந்து கூறலாம். பகிரங்கமாக, அரபாத் பேச்சுக்களை முறித்துக் கொள்வதாகக் கூறினாலும், அவர் பேச்சுக்களைத் தொடர்வார் என்பது உறுதி. ஆனால், பாலஸ்தீனியப் பொது மக்களின் பாதுகாப்பை அவர் கவனிக்க வேண்டியுள்ளது. ஐ நா போன்ற நிறுவனத்தின் பிரசன்னத்தை அவர் நாடுவார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.



யூதக் குடியேற்றவாசிகளுக்கு, இராணுவம் எங்கேயென்று தெரியும். ஆயுதபாணிகளாகத் திரியும் இவர்கள், இராணுவத்துடன் நெருங்கிய உறவு உள்ளவர்கள்.

அமைதிப் பேச்சுக்களுக்கு, யூதக் குடியேற்றங்களே பெரும் முட்டுக்கட்டைகளாக உள்ளன.

''எமது நிலத்தை அபகரித்து விட்டு, எம்மைக் கொன்று குவிக்கவும் துணிந்து விட்டார்கள்.'' இப்படி, இளம் அரபுக்கள் குமுறுகின்றனர். இஸ்ரேலிய இராணுவம், குறித்த காலக் கெடுவுக்குள் காசா, மேற்குக் கரை ஆகிய அரபுப் பிரதேசங்களிலிருந்து வெளியேறாதது, குடியேற்றவாசிகளின் பாதுகாப்பு என்ற காரணத்தினாலேயே.

ஆனால், படுகொலைகளின் பின் யூதக் குடியேற்றவாசிகளின் விருப்புக்குமாறாக, இஸ்ரேலிய அரசுடன் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அரபுக்களின் நிலத்தை உள்ளடக்கிய பரந்த இஸ்ரேல் கொள்கையை, இஸ்ரேல் கைவிடுதலின் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. இதற்காகப் பிரதமர் றாபினுக்கு, யூதக் குடியேற்றவாசிகளும், ஆக்கிரமிப்பில் நம்பிக்கையுள்ளோர்களும் துரோகிப்பட்டஞ்சூட்டியுள்ளனர். இன்று மத இன வேறுபாடின்றி, இஸ்ரேல் மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைக் குறைக்கும் நோக்குடன், '' இது ஒரு வெறுக்கத் தக்க, கீழ்த் தரமான படுகொலை. இது இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்ததற்காக, யூதன் என்ற முறையில் நான் வெட்கப்படுகிறேன்'' என்று, அரச அவையில் றாபின் கூறியுள்ளார்.

காசா மேற்குக் கரைச் சரித்திரத்தில், முதன் முறையாக, யூதக் குடியேற்றவாசிகளுக்கு எதிராக ஊர் அடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக, இது அரபுக்களுக்கெதிரான நடவடிக்கை. ககானேயின் இயக்கத்தைத் தடை செய்வது பற்றியும், இவர்களிடமிருக்கும் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வது பற்றியும், ஆயுதபாணிகளான யூதத் தீவிரவாதிகளை நாடுகடத்துவது பற்றியும் உயர்மட்டத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தற்பாதுகாப்புக்கு மாத்திரம், ஆயுதம் வைத்திருக்கலாம் என்ற அரசின் பேச்சை, பி. எல். ஓ கண்டித்துள்ளது.

எல்லாக் குடியேற்றவாசிகளும் நிராயுதபாணிகளாக்கப்படல் வேண்டுமென்பதே, பி. எல். ஓ நிலைப்பாடு. எப்படியென்றாலும், றாபின் அரசு யூதக் குடியேற்றவாசிகளின் பிரச்சனையை இனி மேலும் தட்டிக்கழிக்க முடியாது. ஆனால், பேச்சுக்களைத் துரிதப்படுத்தும் நோக்கத்தில், அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இப்பிரச்சனையைப் பிற்போடும்படி கூறியுள்ளார். உண்மையில் குடியேற்றவாசிகளின் பிரச்சனை தான் மிகவும் முக்கியமானது. இது தீர்க்கப்பட்டால், வேறு பிரச்சனைகள் தாமாகவே நீங்கிவிடும். கொலைகாரன் கோல்ட்ஸ்ரைனும், ஒரு குடியேற்றவாசி என்பதை மறுப்பதில் அர்த்தமில்லை. இந்த மசூதிப் படுகொலை, ஒரு திருப்பு முனை – எவ்வாறெனில், பேச்சுக்கள் துரித கதியில் நடந்து, அமைதி ஏற்படும்; அல்லது, குழப்பத்தில் முடியும்; தீவிரவாதிகளின் கையோங்கும்.

றாபின் அரசின் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் பாலஸ்தீனியர்களைத் திருப்திப்படுத்தப்போதாது. படுகொலைக்குப் பின் நடந்த ஆர்ப்பாட்டங்களின் போது, இராணுவமும், காவல்துறையும் சுட்டதில் 30- க்குக் கூடுதலான அரபுக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதை, எந்தக் கணக்கில் சேர்ப்பது? யூதர்



களின் மனம் மாறவில்லை என்பதையே இது காட்டுகின்றது. 1000-த்திற்கு மேற்பட்ட அரபுச் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டும், அரபுக்களின் மனக் குமுறல் அடங்கவில்லை. யூத அரசின் மன மாற்றம் நன்றாகத் தெரிகின்றது. ஆனால், ஆத்திரமடைந்துள்ள அரபுக்கள் இதை ஏற்கவில்லை என்கிறார், அமைதித் தரகர் கிளின்ரன். பி. எல். ஓ, கண்மூடியாக இருந்தாலும், இளம் அரபுக்கள் பதில் தாக்குதலுக்குத் திட்டமிடாமல் இருப்பார்களா? ஒவ்வோர் இஸ்ரேலிய நகரத்திலும், கண்ணீரும், அழுகை ஒலியும் விரைவிற் கேட்கும் என்று, மசூதியிலிருந்து தப்பிய 24 வயது இளைஞன் இமாத் ஜபாரி கூறியுள்ளான்.

ஆயுதபாணிகளான யூதத் தீவிரவாதிகளைக் கட்டுப்பாட்டிற்குள்ளே கொண்டுவருவதில், அரசு அரைமனதுடன் செயற்பட்டு வருகின்றது. ஆறு அதி தீவிரவாதிகள் இனங்காணப்பட்டுள்ளனர். ஆனால், இருவர் மாத்திரம் கைதாகியுள்ளனர். மிகுதி நால்வரும் தெருவிற் பகிரங்கமாகவே திரிந்தாலும், இன்னும் அவர்களைத் தேடுவதாகவே இராணுவம் சொல்லுகின்றது. ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்கும்படி, 18 குடியேற்றவாசிகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒருவரும் இதுவரை அப்படிச் செய்யவில்லை. யூதப் பேராசிரியர் எகுத் சிபின்சாக் சொல்கிறார்:– குடியேற்றவாசிகளைக் கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டுவர, இராணுவத்தால் ஒருபோதும் முடியாது என.'' காரணம், பெரும்பாலானோர் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ இராணுவ சேவை ஆற்றுகின்றனர்.

மேலும், உலகளாவிய மனிதநேய அமைப்புக்களின் கணிப்பில், அரபுக்களைத் தாக்குவது, காசாவிலும், மேற்குக் கரையிலும் பெருங்குற்றமல்ல. குடியேற்றக்காரர்கள், அரபுக்களின் பெறுமதி வாய்ந்த பொருள்களையும், வாகனங்களையும் நாசம் செய்தால் என்ன? ஏன், அவர்களைக் கொலை செய்தாலென்ன? அது தற்காப்பு நடவடிக்கை என்றே, சட்டம் ஏற்றுக்கொள்கின்றது.

குற்றஞ் செய்யும் பாலஸ்தீனியர்கள், இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறார்கள். ஆனால், யூதர்கள் விசாரிக்கப்படும் பட்சத்தில், சிவில் மன்றங்களுக்கே கூட்டிச் செல்லப் படுகிறார்கள். யூத மதகுரு லெவிங்கர், பட்டப்பகலில் ஒன்றுமறியாத ஓர் அப்பாவிப் பாலஸ்தீனியனைச் சுட்டுக் கொன்றதற்கு மூன்று மாதச் சிறைத்தண்டனையே கொடுக்கப்பட்டுள்ளது. 1988-க்கும் 92-க்குமிடையில், 48 பாலஸ்தீனியர்கள் குடியேற்றக்காரர்களாற் கொல்லப்பட்டுள்ளனர். கொலையாளிகளிலே பதினொருவர் மாத்திரம், நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஒருவருக்காவது மரணதண்டனை கொடுக்கப்படவில்லை. இந்த இலட்சணத்தில், மசூதிக் கொலைகளுக்குப் பின்பு, அரபாத் அவர்களின் பின்வரும் அலறல் கேட்கின்றது. ''எனது மக்கள் மீது, நிறுத்தப்படாது தொடரும் கொலைகளும், குற்றச் செயல்களும் இருக்கையில், உங்களுக்கு என்ன விதமான அமைதி வேண்டும்?'' பரிதாபகரமாயிருக்கின்றது. அமெரிக்காவின் அழுத்தத்தினால் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கினாலும், அரபு இளைஞர்கள் பதிலடி கொடுக்கும் போது, இப்பேச்சுக்கள் முறியும் வாய்ப்புக்கள் கூடுதலாக உள்ளன,

''ரைம்,'' மார்ச் 7, 1994
எழுதியவர்:- ஜோர்ஜ் ஜெ. சேர்ச்
''நியூஸ்வீக்,'' மார்ச் 14, 1994
எழுதியவர்கள்:-
றொம் மாஸ்லான்ட்,
ஜெஃப்றிபாத்தொலெற்,
மெலின்டா லியு,
கறென் ப்றைஸ்லாஉ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலான் குன்றின் மேல் குடியிருக்கும் யூதக் குடியேற்றவாசிகள், சமாதான உடன்படிக்கை வேண்டாமென்கிறார்கள்

1967 ஆம் ஆண்டு நடந்த ஆறு நாள் யுத்தத்திற் கைப்பற்றப்பட்ட சிரியாவுக்குச் சொந்தமான கோலான் குன்றின் (Golan Heights) நிலப்பரப்பில், பல யூத இனக் குடியேற்றவாசிகள் மிகவும் இலாபகரமான பழத்தோட்டங்களை நடாத்துகின்றனர். இப் பிரதேசத்தின் சீதோஷன நிலை, திராட்சை பயிரிட மிகவும் உகந்ததெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோலான் குன்றிற் குடியேறிய யூதர்கள், திராட்சைப் பயிர்ச் செய்கையில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இன்றைய நிலையில் வைன் மதுப்பிரியர்கள் கோலான் குன்றுத் தயாரிப்பையும், பிரான்சின் போகண்டி, சம்பேன், மற்றும் கலிபோர்னியா ஆகிய இடங்களில் தயாராகும் வைனின் சுவைக்கு நிகராக மதிக்கின்றனர்.

இஸ்ரேல், பி. எல். ஓ. பேச்சுக்களைப் பின்பற்றி, சிரியாவின் தலைவர் கபேஸ் அசாத்தும், இஸ்ரேலுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள விரும்புகிறார். மத்திய கிழக்கு விவகாரங்களில், இஸ்ரேலின் பழைய எதிரிகள் இஸ்ரேலுடன் சமாதானத்தை விரும்புவது, ஒரு புது அரசியல் திருப்புமுனை. மத்திய கிழச்கு நாடுகள் பலவற்றிலும், இஸ்ரேலிலும் பார்க்கப் பலமான, அடக்க முடியாத இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற மூர்க்கமான எதிரி கிளம்பியுள்ளதே, இதன் முக்கிய காரணம். இஸ்ரேலுடன் சமாதானம் செய்துகொண்டால், இழந்த நிலமும் திருப்பிக் கிடைக்கும். அதே சமயத்தில் புதிய எதிரியைக் கவனிக்க, அவகாசமும் கிடைக்கும். அசாத், ஜனவரி 94 இல் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனைச் சந்தித்து, தனது உள்ளக் கிடக்கையை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார். கோலான் குன்று, சிரியாவின் ஆட்சிக்குத் திரும்ப வேண்டுமென்பது இவரின் கோரிக்கைகளில் ஒன்று.

கோலான் வாசிகளோ, காசாவில் உள்ளவர்களோடு ஒப்பு நோக்கும் போது மிகவும் சாதுவான போக்கும், போராட்டத்தில் வெறுப்பும் உள்ளவர்களாகத் தெரிகின்றார்கள். இவர்களுடைய இந்தச் சிறப்பான மென்குணத்திற்கு, இஸ்ரேலிலும், பிறநாடுகளிலும் நல்ல வரவேற்பு உண்டு. கோலான் குன்று கைமாறினால், நாங்களும் இடம்மாறுவோம் என்னும் இவர்கள் பண்பு, சமாதான விரும்பிகளைக் கவர்ந்துள்ளது.

மேற்குக் கரையிலும், காசாவிலும் வெளியேற ஒத்துக் கொண்டதுபோல், இஸ்ரேலியப் பிரதமர் இற்சாக் றாபின் அவர்களால் கோலான் குன்றையும் விட்டு விலகுவதற்கு ஒத்துக் கொள்ள எளிதில் முடியாது. ஏனென்றால், இஸ்ரேலியப் பாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக்குக் கோலான் குன்று மிகவும் அத்தியாவசியம். அத்துடன், இது இஸ்ரேலியப் பொது மக்கள் அனைவரினதும் மனதில் முன்னிடம் பெற்ற பிரச்சனையாகும். அவர்களின் பாதுகாப்புக்கு முதலிடம் கொடுக்காமல், கோலான் வாழ் யூத மக்களின், அவ்விடத்தில் வாழும் உரிமையைப் பெரிதாக எண்ணுகின்றனர். ஆகையால், இற்சாக றாபின் பின்வருமாறு சொல்லவேண்டியுள்ளது:- '' பூதாகரமான நாட்டுப் பிரச்சனைகள், மக்கள் கருத்துக் கணிப்பின் தீர்ப்புப்படியே தீர்க்கப்படல் வேண்டும். இங்கு, அமைதியா? போரா? என்றளவு பெரியதொரு கருத்து மோதல் உண்டு '' இதைக் கேள்வியுற்ற கோலான் மக்கள் ஆதரவாளரொருவர், '' றாபினுக்கு, கோலான் குன்றைச் சிரியாவுக்குக் கொடுக்க மனமில்லை; எங்களுக்கும் அப்படியே. நாம் வெல்லுவோம் என்ற நம்பிக்கை, எமக்கு உண்டு '' என்று கூறியுள்ளார்.

'' சிரியாவின் தலை நகரிலிருந்து, நாம் இப்போது 65 கிலோ மீற்றர் தூரத்தில் நிற்கிறோம். சிரியாவுடன் சமாதானஞ் செய்வதை, நாம் இன்னும் இரண்டு தலைமுறைக்குத் தள்ளிப் போடலாம் '' என்று அவிக்டோர் கஹலானி என்ற பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறினார்.

அதே சமயத்தில், கோலான் குன்றுச் சம வெளியில் யூத முதலீடுகள் குவிந்த வண்ணம் இருக்கின்றன. சென்ற வருட நவம்பர் மாதமளவில், மதுத் தொழிற்சாலை ஒன்று, ஐந்து மில்லியன் டொலர் பெறுமதியான, நாலு வருட விரிவாக்கல் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதில் அரசின் பங்களிப்புத் தொகை, இரண்டு மில்லியன் டொலர் இத் திட்டம், கோலான் கைமாறுவதைத் தடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள், குன்றில் பனிச் சறுக்கு விளையாட்டு நிலையங்களை நிறுவ முற்பட்டுள்ளனர். ஹேர்மொன் பிரதேசத்தில், மூன்று மில்லியன் டொலர் பெறுமதியான வேலைகள் 1993 ஆம் ஆண்டு பூர்த்தியாகியுள்ளன. இவ்வருடமளவில், இன்னும் பல முதலீடுகளைச் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

காசாப் பிரதேசம், மேற்குக் கரைப் பிரச்சனைகள் இன்னும் தீருவதைக் காணோம். அதற்கிடையில் கோலான் குன்றுச் சமவெளியையும் பேச்சு மேசைக்கு இழுப்பான் ஏன்? என்று, இஸ்ரேலிய அதிகாரிகள் எண்ணுகின்றனர். சிரியத் தலைவர் கபேஸ் அஸாத்திற்கு மிகவும் நெருங்கிய பிரிட்டிஷ் எழுத்தாளர் பற்றி, புதியதொரு கருத்தை வெளியிடுகின்றார். அண்மையில் இஸ்ரேல், சமாதானத்தைத் தனக்குச் சாதகமானதொரு கருவியாகவே கையாளத் தொடங்கியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுககு இஸ்ரேலை ஒரு வர்த்தக மையமாக்குந் திட்டம், இஸ்ரேலிடம் உண்டு. இது சாத்தியப்பட வேண்டுமாயின், அயல் நாடுகளுடன் அமைதி அவசியம். ஆகவே, இஸ்ரேலியருடன், தான் சமாதான ஒப்பந்தமொன்று செய்துகொள்வதால், அவர்களுடைய நீண்ட காலத் திட்டத்திற்குத் துணைபோவதாக முடியும் என்பதாக, அசாத் அஞ்சுகிறாராம். மேலும் பற்றிக் சில் சொல்லுகிறார்:– அசாத், அமைதிப் பேச்சுக்கள் முறிவதையே இதய பூர்வமாக விரும்புகிறார். இது உண்மையெனின், பழமரச் செய்கையிலும், மதுத் தயாரிப்பிலும், உல்லாசத்துறை ஒழுங்குகளிலும் ஈடுபடும் கோலான் குன்று வாழ் யூதர்கள், இன்னும் பல தலைமுறைகளுக்கு நிம்மதியாக வாழலாம்.

நியூஸ்வீக் ஜனவரி, 31 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடகொரியா:

# ஒரு வித்தியாசமான கண்ணோட்டம்

எழுதியவர்
— ரோனி கிலிஃப்ரன் —

இந்த நாட்டின் தலைவர் 81 வயதினரான கிம் இல் சுங் உயிருடன் அதிகாரப் பீடத்தில் இருக்கையிலேயே ஆயிரத்திற்கு மேற்பட்ட அவருடைய வெண்கலச் சிலைகள் நாடு முழுவதும் நாட்டப்பட்டுள்ளன. சகல நகரங்களிலும் காவல் தெய்வம் போல் இச் சிலை நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இவர் நாட்டின் ஸ்தாபகர், தந்தை, காவலர் என்றெல்லாம் இச் சிலைகள் போற்றுகின்றன. ஆனால் ஒன்றாவது இராணுவச் சீருடையிலோ, கோபங் கொண்ட முகத்துடனோ காணப்படவில்லை. சாந்தமும், பரிவும், தன் நாட்டு மக்கள்மீது சொரியும் அன்பும் இந்தச் சிலைகளின் முகத்தில் பிரதிபலிக்கின்றன.

மேற்கு நாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு நுழைவு அநுமதி கிடைப்பது அரிது. உல்லாசப் பயணிகள் என்ற போர்வையில் இவர்கள் உட்புக முடியும். ஆனால் இவர்கள் சிறைச்சாலைகள், அணு உலைகள், இராணுவ நிலைகள் போன்றவற்றைப் பார்வையிட அநுமதிக்கப்படமாட்டார்கள். இந்த நாட்டைச் சுற்றிப் பார்க்கும்போது ஒரு வித்தியாசமான எண்ணம் தோன்றத்தான் செய்கிறது. நாட்டிற் பெரும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பஞ்சம், பிறநாட்டவர்களுடன் பேச மக்கள் அஞ்சுகின்றனர். வடகொரியர்கள் சிரிப்பதையே மறந்து விட்டார்கள். உலக அமைதிக்கு மிகவும் அபாயகரமான நாடு இதுதான். இவையாவும் இந்த நாட்டைப்பற்றியும், அதன் பிரஜைகளைப் பற்றியும் உலக வலம் வரும் செய்திகள். இவை யாவும் அரை உண்மையாக இருக்கலாம். ஆனால் முழு உண்மையென்று சொல்வதற்கில்லை.



வடகொரியத் தலைநகர் பியொங்யாங்.
கிம் இல் சுங் அவர்களுடைய இராட்சத வெண்கலச் சிலை, நகரைப் பார்த்தபடி நிற்கிறது.

கட்டுமானப் பணிகள் பல ஸ்தம்பித நிலையிலும் தொழிற்சாலைகள் இயங்காமலும் இருக்கின்றன. இரவில் தெரு விளக்குகள் எரிவதில்லை. பொதுப் போக்குவரத்துச் சாதனங்களின் ஓட்டம் நின்றுவிட்டது. கால்நடையாகச் செல்வோர்கள் மிகவும் கூடுதலாகக் காணப்படுகின்றனர். இதன் அடிப்படைக் காரணம்:-எரிபொருள் பற்றாக்குறை, உதிரிப்பாகத் தட்டுப்பாடு எனக் கூறலாம். வடகொரியா இவ்விரண்டையும் பொதுவுடைமை நாடுகளிடமிருந்தே கொள்முதல் செய்துள்ளது. இப்போது அந்த நாடுகள் பண்டமாற்றில் நம்பிக்கையிழந்து டொலராகத் தரும்படி கேட்கத் தொடங்கிவிட்டன. வடகொரியாவின் சீர்கேட்டின் சின்னமாகத் தலைநகர் பியோங்யாங் (PyongYang) மத்தியில் உள்ள 105 மாடிகள் கொண்ட முக்கோண வடிவுள்ள ''வில்லோ ஹொட்டேல்'' எனப்படும் பயணிகள் உல்லாச விடுதியைச் சொல்லலாம். ஆசியாவின் மிக உயரமான கட்டடமாக இது திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ளது. ஆனால் இதன் முக்கோண வடிவம் மின் சாரத்தில் இயங்கும் மேலும் கீழும் செல்லும் படிகளை (Lifts) அமைக்கத் தடையாகவுள்ளது. அத்துடன் 3000- த்திலிருந்து 8000 அறைகள் கொண்ட இந்த விடுதிக்கு மின்சார ஒழுங்குகள் செய்வதானால் செலவு கட்டுக்கடங்காமற் போய்விடும். ஆகையால் இன்றுவரை இக்கட்டடம் பாவிக்கப் படாமல் வானுயர்ந்து நிற்கின்றது.

என்றாலும் 25 மில்லியன் நாட்டு மக்களுக்கு உணவும், உடுப்பும் ஆட்சியாளர்களால் திருப்தியாகத் தரப்படுகின்றன. கிராமப்புற ருஷ்யாவிலும், சீனாவிலும் மக்களின் ஏழ்மை நன்றாகத் தெரிகின்றது. வடகொரியாவில் அப்படியொன்றும் வெளிப்பார்வைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிம் இல் சுங் அவர்களின் படத்திற்கு முன்பாக, ஒரு தாயும், அவர் சுமக்கும் பிள்ளையும்.

ஏழ்மை தெரியவில்லை. தாம் வயிறார உண்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வீடுகளிற் பன்றிகளும், வாத்துக்களும், ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கின்றன. கடைகளின் முன் நீண்ட மக்கள் வரிசைகள் காணப்படவில்லை. வாழ்க்கை சிக்கனமாகவும், பஞ்சமின்றிச் செல்வதையும் அவதானிக்கலாம். சிறுவர்களும், இளவயதினர்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். பனி பெய்யும் காலத்திற் சறுக்கி விளையாடுவது இவர்களின் போஷாக்கையும், சூடான உடைகளையும் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு நாட்டின் பஞ்சத்தை இளஞ் சந்ததியினரின் முகத்திற் காணலாம். இங்கு முகத்தில் தெரிவது திருப்தியே. இவர்கள் சிரிக்கின்றார்கள்; இளைஞர்களுக்குரிய அர்த்தமற்ற பேச்சுக்களில் ஈடுபடுகின்றார்கள்; கேளிக்கைகளிற் கலந்து கொள்கின்றார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின் பிற்பகுதியில் உதயமாகிய நாடுகளில் வடகொரியாவுமொன்று. இந்த நாட்டு மக்கள் அன்றும் இன்றும் அறிந்த தலைவர் கிம் இல் சுங் ஒருவர்தான். உலகின் பல சர்வாதிகாரிகள் மறைந்துவிட்டனர்; அல்லது மறையுந் தறுவாயில் இருக்கின்றனர். ஆனால் காயகல்பம் உடையவர் போல் இப் பதவியில் இருக்கிறார். மதிநுட்பமும், பதவியைப் பிடித்திருக்கும் ஆற்றலுங்கொண்ட தலைவர், ஏன் அணுஆயுத உற்பத்தித் திட்டத்தால் தனது நாட்டை அழிவுக்குச் செலுத்துகிறார்? என்ற கேள்வி எழுகின்றது. சர்வதேச வர்த்தகமும், முதலீடும் வடகொரியாவுக்கு இன்று அத்தியாவசியம். அப்படியிருக்கையில் ஏன் இந்த உலகநாடுகளைப் பகைக்கும் நடவடிக்கை? என்று கேட்க இடமுண்டு.

எரிபொருள் பற்றாக்குறையும், உதிரிப்பாகத் தட்டுப்பாடும் வடகொரிய இராணுவத்தையும் பாதித்துள்ளது. இவர்களுடைய கனரக வாகனங்களிற் பெரும் பகுதியை ருஷ்யத் தயாரிப்பான T 62 தாங்கிகள் நிரப்புகின்றன. இவை வளைகுடா யுத்தத்தில் தமது இயலாமையை நிரூபித்துள்ளன. சாதாரண இராணுவ வாகனங்கள்கூடத் தமது நாளந்த ஓட்டத்திற்குத் தேவையான எரிபொருள் இல்லாமையால் தவிக்கின்றன. வடகொரியாவில் இராணுவத்திற்கு முதலுரிமை உண்டு என்றாலும் தென்கொரிய ஆக்கிரமிப்புப் போன்றவற்றில் இறங்குவதென்றால் அளவிடமுடியாத எரிபொருள் தேவை உண்டாகும். ஆகவே ஏவுகணைகளும், இறுதி ஆயுதமாகிய அணுக்குண்டும் இதற்கு ஈடு செய்யும். வடகொரிய மேலிடச் சிந்தனை இவ்வாறு இருக்கும் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் அணுஆயுதத் திட்டத்திற்குப் பெருந்தொகைப் பணம் தேவை. இதை கிம் எங்கிருந்து பெறுகிறாரென்று சொல்லத் தெரியவில்லை. சக்தி வாய்ந்த நாடுகளுடன் மோதும் அளவுக்குச் செல்லும் தனிவழியில் கிம் நடக்கின்றார்.

கொரிய மக்கள் மிகவும் பொறுமைசாலிகள், எதையும் தாங்கும் இதயமுள்ளவர்கள். அவர்களுடைய அமெரிக்க வெறுப்புக்கூட மிகவும் அடக்கமாகவும், நாகரிகமாகவும் தெரிவிக்கப்படுகிறது. யுத்தம் அவர்களின் நாளந்தச் சிந்தனையில் முன்னணி வகிக்கவில்லையென்பது நன்றாகத் தெரிகின்றது. என்றாலும் கிம் இல் சுங் மிகவும் ஆபத்தான விளையாட்டொன்றில் ஈடுபட்டிருக்கின்றார். அதே சமயத்தில் மேற்குலக முதலீட்டை இருகரம் நீட்டி வரவேற்காவிட்டாலும் பிரசித்தி பெற்ற ஐரோப்பியப் பொருளாதார நிபுணர்களையும், நியூஸிலாந்து நாட்டு உல்லாசத்துறை விற்பன்னர்களையும் தமது நாட்டுக்கு வருகை தரும்படி அண்மையிற் கேட்டுள்ளார். வடகொரியா உருப்பெற்று அரை நூற்றாண்டை நெருங்கி விட்டது. என்றாலும் சி. ஐ. ஏ. போன்ற உளவு நிறுவனங்களுக்குக்கூட வடகொரியா ஒரு புரியாத புதிராகவே இருக்கின்றது.

''நியூஸ்வீக்'' பெப்ரவரி 14, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது கொரிய யுத்தம்

சரித்திரப் பிரசித்திபெற்ற முதலாவது கொரிய யுத்தம், ஜூன் 1950 இல் தொடங்கி ஜூலை 1953 இல் முடிவுற்றது. இதன் தாக்கங்கள், இன்றும் உணரப்படுகின்றன. அன்று பதவியிலிருந்த கிம் இல் சுங், (Kim Il Sung) இன்றும் ஆட்சிப் பீடத்தில் இருக்கிறார். வடகொரியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் வலு, 81 வயதினரான இவருக்கு இன்றுவரை நிலைத்திருப்பது, சமகால அரசியல் அதிசயங்களில் ஒன்று எனலாம்.

இரண்டாம் கொரிய யுத்தம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆனால் எந்நேரமும் தொடங்கக் கூடிய வாய்ப்புக்கள் நிறைய இருப்பதால், அப்படியானதொரு யுத்தம் எவ்வாறு நிகழும் என்று நாம் நோக்கலாம். கொரியத் தீபகற்பத்தின் சரித்திரம், பன்னெடுங்காலமாக சுற்றியிருக்கும் பெரும் நிலப்பரப்பைக் கொண்டுள்ள நாடுகளுடன் இணைந்ததாகும். பல் நூற்றாண்டுகளாகச் சீனாவின் பிடியிலிருந்த கொரியா, மெதுவாகத் தன்னை விடுதலை செய்வதற்குள், 1895 இல் ஜப்பான் அதைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்துள்ளது. 1905 ஆம் ஆண்டு நடந்த ஜப்பான் – ருஷ்யா போரில் ருஷ்யா தோல்வியுற, கொரியா ஜப்பானுக்கே என்று பல நாடுகள் ஏற்றுள்ளன. இரண்டாம் உலக யுத்தத்துடன், கொரியாவில் ஜப்பானிய ஆதிக்கம் முடிவுற்றது. ஆனால் கொரியாவுக்குப் புதியதோர் எதிர்காலம் ஆரம்பமாகியது. 38 ஆவது அட்சரேகையை எல்லையாக வைத்து, ருஷ்யா வடகொரியாவையும், அமெரிக்கா தென் கொரியாவையும், தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தன. அறுபதுகளில் ருஷ்யாவுக்கும், சீனாவுக்கும் நடந்த கருத்து மோதல்களில், வட கொரியா ருஷ்யாவைப் புறக்கணித்துச் சீனாவுடன் அணி சேர்ந்துள்ளது, தென் கொரியாவோ, அமெரிக்காவை மலைபோல் நம்பி, இன்றும் அதன்பக்கம் நிற்கின்றது. 1950 இல் தொடங்கிய யுத்தத்தின் காரணமாக, இரு பகுதியினரின் எல்லை சிறிது மாற்றம் அடைந்தாலும், 38 ஆவது அட்சரேகையை நாம் நம்பகமான எல்லைக் கோடாக ஏற்கலாம்.



இன்று, வடகொரியாவின் சனத்தொகை 25 மில்லியன். இவர்களின் இராணுவத்தில் 1.1 மில்லியன் துருப்புக்கள் இருக்கின்றன. பன்னிரண்டு மணித்தியாலங்களில், தமது துருப்புக்களின் தொகையை 1.6 மில்லியன் ஆக்கக் கூடிய வலு அவர்களிடம் உண்டு. வடகொரியாவின் தாக்குதற் படைகள், ஐந்து காலாட்படை அணிகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவ்வணிகள் யாவற்றிடமும் இரசாயன ஆயுதங்களும், நடுத்தரத் தூரம் பாயும் ஏவுகணைகளும் உள்ளன. அமெரிக்கப் புலனாய்வு நிறுவன அறிக்கைப்படி, வடகொரியாவிடம் தயார் நிலையில் அணுக் குண்டுகளும் உண்டு.

தென் கொரியாவின் சனத்தொகை 50 மில்லியன். இவர்களின் ஆயுதப்படையில் 750, 000 ஆண்களும், பெண்களும் உள்ளனர். பயிற்சி பெற்ற 4.5 மில்லியன் பொது மக்கள், இராணுவ அழைப்புக்கிணங்கி வரக்கூடிய நிலையில் உள்ளனர். தென்கொரிய இராணுவத்தில் எட்டு அணிகள் உள்ளன. அண்மையில், வளைகுடா யுத்தத்தில் உந்தமாகச் செயலாற்றிய அமெரிக்க இராணுவ உபகரணங்கள் தென் கொரியாவிடம் இருக்கின்றன. உதாரணம்:- ஏபிராம்ஸ் ரக ராங்கிகள் 'பிராட்லி' காலாட் படைக் கனரக வாகனங்கள்.

38 ஆவது அட்சரேகையில் அமைந்துள்ள பொது எல்லைக்கு இரு பக்கங்களிலும், டி. எம். சற். (D. M. Z) எனப்படும் இராணுவப் பிரசன்னமற்ற சூன்யப்பிரதேசம் Demilitarised Zone) இருக்கின்றது, மேற்குறித்த எல்லைப் பகுதியிலுள்ள நிலப்பரப்பின் கீழ் சுரங்கப் பாதையை அறுத்து, வட - கொரிய இராணுவத்தினர் தென்கொரியாவுக்குள் ஊடுருவ முயன்றமை, நவீனக் கருவிகளின் உதவியுடன் பன்முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சுரங்கப் பாதைகள், தென்கொரியாவின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. தாம் கண்டுபிடிக்காத மேலும் சில பாதைகள் இருக்க வேண்டும் என்ற அச்சம், தென் கொரிய இராணுவத்திற்கு நிரந்தரமாக உண்டு.

இரண்டாவது கொரிய யுத்தம் நடக்குமாயின், அது எவ்வாறு தொடங்கி நடத்தப்பட்டு இறுதியில் முடிவுறும் என்பதை, நாம் இவ்விடத்தில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிபோலப் பார்வையிடலாம்.

(1) வட கொரிய அணு உலைகளை, சர்வதேச விஞ்ஞானிகள் பார்வைக்குத் திறந்துவிடும்படி கோரும் பேச்சுக்கள் தோல்வியுற, அமெரிக்க யுத்த விமானங்களும், கப்பல்களும் வடகொரிய நிலைகள் மீது தாக்குதல்களை ஆரம்பிக்கின்றன. வட கொரியாவின் அணுத் திட்டதை அழிப்பதே, இதன் நோக்கம். ஈராக் மீது தாக்கி, பெருஞ் சேதம் விளைவித்த குறூஸ் (Cruise) ஏவுகணைகள் இங்கும் பாவிக்கப் படுகின்றன. வெற்றிகரமான தாக்குதலை நடத்திவிடடு, அமெரிக்க விமானங்கள் யாவும் தமது இருப்பிடம் திரும்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பதில் நடவடிக்கையாக, தென்கொரியா மீது தாக்குதல் தொடுக்கும்படி கிம் இல் சுங் தனது இராணுவத்திற்கு உத்தரவிடுகின்றார். மூன்று கனரக வாகன அணிகள், எல்லையிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தென்கொரியத் தலைநகர் ஸியோல் (Seoul) பிரதேசத்தைக் கைப்பற்றுகின்றன. கிழக்கிலுள்ள தென்கொரிய நகரம் புசான், (Pussan) வடகொரியாவின் இன்னும் இரண்டு கனரக வாகன அணிகளின் வசமாகின்றது, இதுவரை காலமும் கண்டுபிடிக்கப்படாத இரண்டு சுரங்கப் பாதைகள் மூலம், வடகொரிய அதிரடிப் படையினர், எல்லையைக் கடந்து, தென்கொரிய இராணுவத்தினரை நிலைகுலையச் செய்கின்றனர்

(3) நீரிலும், நிலத்திலும் போரிடும் சிறிய வடகொரிய அணியொன்று, அமெரிக்கக் கப்பல்களின் கண்ணிற் படாமல், புசான் நகருக்கு அண்மையில் இறங்க எத்தனிக்கின்றன. ஆனால் ஜப்பானியக் கப்பற் படையினர் இதை அவதானித்து, தடுப்பு நடவடிக்கை எடுக்கின்றனர். புசான் துறைமுகமும், சுற்றாடலும் காப்பாற்றப்படுகின்றது.

(4) அமெரிக்கக் கடற்பலம், யுத்தத்தின் திருப்பு முனையாக அமைகின்றது. ருஷ்யக் கப்பற்படையொன்றுதான், இப்பிராந்தியத்தில் அமெரிக்காவை அடக்கும் சக்தியுடன் உள்ளது. ஆனால் ருஷ்யா இப்போரில் இறங்காமல் நடுநிலை வகிக்கின்றது. நீரிலும், நிலத்திலும் போரிடும் அமெரிக்க அணிகள், வடகொரிய அணிகளைத் தாக்கி அழிக்கின்றன. அணுஆயுதத் தாக்குதலை கிம் இல் சுங் தொடங்குமுன், அவருக்கு எதிர்ப்பான வடகொரிய இராணுவ அதிருப்தியாளர்கள், அவரைக் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர். இத்துடன், யுத்தம் முடிவுறுகின்றது.

ஆய்வாளர்களின் கணிப்பில், வடகொரியப் படையெடுப்பைத் தடுப்பதும், முறியடிப்பதும் இலேசான காரியமல்ல. தென்கொரியர்களும், அமெரிக்கர்களும் முதல் நாளிலிருந்தே பெருமுயற்சி எடுத்தல் வேண்டுமென்பது தெளிவு. தென்கொரியத் தலைநகரம் ஸியோல், எல்லையிலிருந்து 50 கிலோ மீற்றருக்குள் இருப்பதால், இதைக் கைப்பற்றுவது வடகொரிய இராணுவத்திற்கு எளிதான குறியாகும். தென்கொரியாவின் முழுச்சனத்தொகையில் மூன்றிலொன்று -17 மில்லியன் – ஸியோல் நகரில் வாழ்கிறார்கள். ஸியோல் தான், தென் கொரியாவின் அரசியல், மற்றும் பொருளாதார மையம் என்பது தெரிந்த விடயம். வடகொரிய இராணுவத் திட்டம் பின்வருமாறு இருக்கலாம் :– படைகளிற் பாதி, ஸியோல் நகரைக் கைப்பற்ற, மிகுதிப்பாதி கிழக்குக் கரையோர நகரும், துறைமுகமுமாகிய புசானைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரலாம். புசான், தென்கொரியாவின் இரண்டாவது மிகப் பெரிய நகரம் என்பது குறிப்பிடத்தக்கது. பின்பு, இரு பாதிகளும் மத்தியில் ஜெயிஜோன் (Jaejon) பிரதேசங்களில் ஒன்று சேரும். இவ்வாறு, இராணுவ ஆய்வாளரின் கணிப்புச் செல்கின்றது. என்றாலும், தொடக்கத்தில் வெற்றியீட்டினாலுங் கூட, வடகொரிய இராணுவம் சிலநாள்களின் பின் துரத்தப்படுவது நிச்சயம். வடகொரிய-தென் கொரிய யுத்தத்தில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கப்போவது, அணு ஆயுதங்கள் தான் என்பது வெளிப்படை.

## இரகசியமாக வெளிவரும் சந்தேகம்

1993 மார்ச் மாதத்தில், தான் அணு ஆயுதம் ஆக்காமை ஒப்பந்தத்தில் இருந்து விலகப்போவதாக வடகொரியா அச்சுறுத்தியபோது, தனது அணு நிலையங்களை இரகசியமாகத் திட்டமிட்டு வந்து தாக்கும் ஆபத்திலிருந்து காக்கவும், அது ஒழுங்குகள் செய்தது. புகைப்படங்களையும், இடைமறித்துக் கேட்கப்பட்ட தொலைத் தொடர்புகளையும், சமிக்ஞைகளையும் ஆராய்ந்த அமெரிக்கப் புலனாய்வுத்துறைப் பகுப்பாளர்கள், 1993 ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்ட மர்மமான இராணுவ ஆயத்த நிலை, அதனைக் குறிப்பதாக முடிவு கட்டியுள்ளனர். அந்த இராணுவ ஆயத்த நிலையின் போது, பெரும் படைப் பிரிவு அளவிலான இராணுவ அணிகள் தலைநகர் போயாங்யாங்கிற்கு வடமேற்கில், சுணான் விமான நிலையத்தில் குவிக்கப்பட்டன. இது, யோங்கிபயோனில் உள்ள அணு நிலையங்களைப் பிடிக்க எதிரிப் படைகள் வந்திறங்கினால், தாக்குப்பிடிப்பது என்ற தத்துவார்த்தத்தில் கூறப்படுகிறது. அந்த இராணுவ ஆயத்த நிலையின்போது, தென்கொரிய விமானப் படையின் சிறப்புப் பரசூட் அணி வந்திறங்கித் தரைத் தாக்குதல் நடத்தினால், அதற்கு ஈடு கொடுக்கவே என்று ஆயத்தம் செய்யப்பட்டதாம். அதனால் அந்த விமான நிலையம், அந்தக் காலகட்டத்தினுள் பொதுப் போக்குவரத்திற்கு மூடப்பட்டு இருந்தது. அப்பொழுது, கம்போடிய அரசர் நோறொடோம் ஸிஹானொக்ஸ் வருகை தந்து திரும்பிச் சென்ற விமானம் மட்டுமே, அங்கு தரையிறங்க அநுமதிக்கப்பட்டது. யொங்பியோன் அணு நிலையங்கள் அமைந்திருக்கும் இடத்திலிருந்து, விமான நிலையத்திற்குச் செல்லும் கிறவல் பாதை நெடுகிலும், வடகொரியர் வழித் தடைகள் பலவற்றை அமைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்து இயங்கும் கியூபா நாடு!

தலைநகர் ஹவனாவிலிருந்து
எழுதுபவர்கள்:
ஜொஹானா மக்கியறி
கதி பூத்

பிடல் கஸ்றறோ தலைமையில் கியூபா நாட்டில் அரசியற் புரட்சி நடந்து முப்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டன. இப்புரட்சியின் காரணமாக இந்த நாட்டில் ருஷ்யப் பாணியில் அரசமைப்பும், மேலிருந்து திட்டமிடப்பட்ட பொருளாதார ஒழுங்கும், ருஷ்யத் தேவைக்குதவும் ஏற்றுமதி விவசாயமும் ஏற்படலாயின. வருடாந்தப் பணப் பற்றாக் குறையை ஈடுசெய்ய ருஷ்யா தாராளமாக உதவியும் செய்து வந்துள்ளது. பூகோள ரீதியில் அமெரிக்காவுக்கு அண்மையிற் கியூபாத்தீவு இருந்தாலும் அது துணிச்சலுடன் ருஷ்யச் சார்புக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. ஆனால் ருஷ்யாவின் வீழ்ச்சியுடன் கியூபா தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையையும், உள்நாட்டு அரசமைப்புப் போன்றவற்றையும் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மேற்கு நாடுகளில் நிலவும் தனி மனிதர் சுதந்திரமும், பல அரசியற் கட்சி ஜனநாயகமும் கியூபாவில் வேர் விடுவது இதுவரை சந்தேகமாகவேயுள்ளது. கியூபா பற்றாக்குறை நிறைந்த நாடுகளில் ஒன்றாக இன்று கணிக்கப்பட்டுள்ளது. நாட்டின் தலைமைப் பதவியைத் தன் கையில் வைத்திருக்கும் கஸ்றறோ கடும் போக்குப் பொதுவுடைமை வாதியென்றாலும் இன்று யதார்த்தத்தை உணர்ந்து முதலாளித்துவ நாடுகளுக்குரிய சில பொருளாதார அம்சங்களை அனுமதிக்கவேண்டியுள்ளது. சுருங்கக் கூறினால் கியூபா இன்று இரண்டுங் கெட்டான் நிலையில் உள்ளது எனலாம்.

**தலைவர் :பிடல் கஸ்றறோவின் பொதுவுடைமைக் கனவுகள், நாட்டின் அழிவுக்கு வழிகோலி விட்டன. நிலைமையைச் சீராக்க, இப்போது அடிப்படை மாற்றங்கள் செய்யப் படுகின்றன.**

முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட தனது ஆட்சியில் மக்களுக்கு மிகவும் உன்னதமான நன்மைகளைக் கஸ்றறோ செய்துள்ளார். ''தொட்டிலிலிருந்து இடுகாடு வரை'' இலவச மருத்துவ சேவை, எல்லோருக்கும், எம்மட்டத்திலும் இலவசக் கல்வி, வேலையற்றோருக்குத் தாராளமான கொடுப்பனவு இப்படிப் பல கவர்ச்சியான செயற்பாடுகள். இன்று இவற்றிற்கெல்லாம் பணம் இல்லையென்ற நிலை ஏற்பட்டாலும் கடந்த முப்பது வருட காலத்தில் கியூபாவின் பலகோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கஸ்றறோ உயர்த்தினார் என்ற உண்மையை மறைக்க இயலாது. பொதுமக்களும் சரி, நாட்டின் பொருளாதார நிபுணர்களும் சரி இவை யாவற்றையும் இழக்கத் தயாராக இல்லை என்பது வெளிப்படை. முதலாளித்துவ நாடுகளுக்குரிய தனியார் துறை முதலீடும் இருத்தல் வேண்டும். அத்துடன் பொதுவுடைமை நாடுகளுக்குரிய மேற்கூறிய நன்மைகளும் வேண்டுமென்று இவர்கள் வாதம் புரிகின்றனர். இந்த இரண்டு வித சித்தாந்தங்களின் சிறப்பம்சங்களைக் கியூபா பெறல் வேண்டுமென்பது இவர்களின் பேரவா. சுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்திற் பெறும் இலாபம் யாவும் பொதுவுடைமைச் செலவுக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும் என்பது தான், இவர்களின் எதிர்காலக் கனவு. இதை எப்படி நடைமுறைப்படுத்துவீர்கள்? என்று கேட்டால் திருப்தியான பதில் கொடுக்கும் நிலையில் இவர்கள் இல்லை.

அண்மையில் இக்கட்டுரையின் ஆசிரியர் ஜொஹானா மக் கியறி கியூபாவுக்கு விஜயஞ் செய்துள்ளார். அங்கு பலதரப்பட்டவர்களைச் சந்தித்து உரையாடி, இக் கட்டுரையைத் தொகுத்துள்ளார். அவர் உரையாடியோர் பற்றிய விபரங்களையும், அவர்கள் கூறியவற்றையும் இதிற் காணலாம். கணவனைப் பிரிந்து வாழும் அனா என்ற பெயருடைய பெண் மணியுடன் முதலாவது சந்திப்பு நடந்துள்ளது. இவர் சாலையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



ரத்தில் நின்று பேச மறுத்து விட்டார். காரணம்—அரசச் சார்பு உளவுப்படையினர் ஒட்டுக் கேட்பார்கள் என்ற பயம். தலைநகர் ஹவானா (Havana) வின் மிகவும் பின்தங்கிய மாடித் தொகுதியில் அனாவின் விடுதி காணப்பட்டது. அவருடைய சமையற் கூடத்திலும், படுக்கை, இருக்கை அறைகளிலும் வறுமையும், வசதியின்மையும் காணப்பட்டன. அவர் தனது அயலவர்கள் நம்பிக்கைக்குரியவர்களல்லர் என்று தெரிவித்தார். உளவுத்துறையுடன் தொடர்புடையவர்களென்று எல்லோரையும் சந்தேகிக்க வேண்டியுள்ளது என்று அவர் கூறினார். இவர் உணவுப் பங்கீட்டுக் கடையொன்றிற் கடமையாற்றுகின்றார். இவருக்கும், இவருடைய இரண்டு வயதுப் பிள்ளைக்குமாக மாதமொன்றுக்கு 2½ கிலோ அரிசி கொடுக்கப்படுவதாக இவர் கூறுகின்றார். இக் கொடுப்பனவு மூன்று வாரத்தில் முடிந்து விடுவதாகவும், தான் மிகவும் சிரமத்துடன் காலந்தள்ளுவதாகவும் இவர் தெரிவிக்கின்றார். மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். "இலவசக் கல்வியும், இலவசச் சுகாதார வசதிகளும் இருந்து என்ன பிரயோசனம்? உணவும், சுதந்திரமும் இல்லையே" என்று அனா ஓலமிடுகிறார். நாட்டின் நிலையைத் தெளிவாக்குவதற்கு அனாவின் மனநிலையும், அவருடைய விடுதியின் சிதைவும் நல்லதொரு எடுத்துக்காட்டு என்கிறார் இக்கட்டுரை ஆசிரியர்.

ருஷ்யாவை மலைபோல் நம்பியிருந்தபடியால் கியூபாவின் இன்றைய நலிவு தவிர்க்க முடியாததொன்று. அதுவும் கடந்த நான்கு வருடங்களில் கியூபா அடிமட்டத்தைத் தொட்டு விட்டது. பகிர்ந்தளிக்கப்படும் உணவை விட வேறு உணவு கடைகளில் இல்லை. கள்ளச்சந்தையில் விலைகள் மிகவும் மோசமாகவுள்ளன. தொழிற்சாலைகள் பூட்டப்பட்டுள்ளன. இயந்திரங்களை இயக்குவதற்கு எரிபொருள், அல்லது மின்சாரம் இல்லை. கியூபா இன்று நண்பனில்லாத நாடு. நகரின் தெருக்களில் கார்களோ, பஸ் வண்டிகளோ



ஒருகாலத்தில் மிகவும் உயிர்த்துடிப்புள்ள தலை நகரம் ஹவானா; இப்போது குன்றிப் போயுள்ளது.
"கலவரத்தைக் காத்திருக்கும் வீழ்ச்சி"
கடைகளில் விற்பனைப் பொருள்கள் குறைவு; விவசாயம் படுத்துவிட்டது. அமெரிக்கா மீதும், அங்கு வாழும் கியூபா அகதிகள் மீதும் வெறுப்பு.

மிகவும் குறைவு. மக்கள் சைக்கிள்களிலும், குதிரைகளிலும் நடமாடுகின்றார்கள். மொட்டை லொறிகளில் நின்றபடி பிரயாணஞ் செய்கிறார்கள். குளியற் சவர்க்காரம், ஆடைகள் சலவைச் சவர்க்காரம் இரண்டிற்கும் பெருந் தட்டுப்பாடு. ஹவானா நகரில் இரவில் ஏற்றப்படும் மின்சார விளக்குகளின் ஒளி மிகவும் மங்கலாக உள்ளது. ஆனால் வெளிநாட்டவர்கள் தங்கும் உல்லாச விடுதிகளில் மின்சார வெளிச்சம் மிகவும் பிரகாசமாகவுள்ளது.

கியூபா இன்னுமொரு புரட்சிக்குக் களமாக அமையுமோவென எண்ண வேண்டியுள்ளது. மக்கள் மிகவும் நொந்து போயுள்ளார்கள். வருடமொன்றுக்கு 8 பில்லியன் டொலர் பெறுமதியான சீனி, உருளைக்கிழங்கு போன்ற பொருள்களை இறக்குமதி செய்து வந்த ருஷ்யா இப்போது 1.7 பில்லியன் டொலராகக் குறைத்துள்ளது. இதன் பாதிப்பு நாட்டில் மிகவும் துல்லியமாகத் தெரிகின்றது. நாட்டின் பொருளாதார அமைப்பு மாற்றம் அடையவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. கஸ்றோ அடிப்படை மாற்றங்களைச் செய்வதற்குத் தயாராக இல்லை என்பது வெளிப்படை. நிலைமை கட்டுக்கடங்காமற் போவதைத் தடுக்க அவர் சில மாற்றங்களை அநுமதித்துள்ளார். பொதுவுடைமைத் தத்துவத்தைக் கைவிட்டு முதலாளித்துவ ஏற்பாட்டை அவர் ஏற்கத் தயாரில்லை என்று துணிந்து சொல்லலாம். ஆனால் தலைவரின் தடையையும் மீறி மாற்றங்கள் நடைபெறும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன, இதைக் கஸ்றோ நன்றாக உணர்ந்துள்ளார். சென்ற ஜூலை மாதத்தில், சில புதிய திட்டங்கள் வெளியரங்கப் படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு, நிலத்தில் தாம் விரும்பும் பயிர்களைச் செய்யும் சுதந்திரம், முதலான சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. சிகை அலங்காரத்திலிருந்து, காலணி திருத்துதல் வரையிலான 135 சிறு தொழில்களுக்கு, அரசக் கட்டுப்பாடில்லாமல் இயங்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க டொலரின் பாவிப்பு, கியூபா நாட்டில் முப்பது வருடங்களின் பின், சட்டபூர்வமாக, முதற் றடவையாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. கியூபாவைப் பொறுத்தளவில், இது ஒரு பெரும் மாற்றமே. இவை யாவும், கஸ்றோவின் மனமாற்றத்தின் அறிகுறியல்ல. சில காலமாகக் கியூபா மக்கள் களவாகச் செய்து வந்ததைத் தடுக்க இயலாமையால், சட்டபூர்வமாக்கியதன் வெளிப்பாடே இவை. இன்னும் பல மாற்றங்கள் காத்திருக்கின்றன. உள்நாட்டு வரிகளில் மாற்றம், அரச சேவையில் இருப்போரின் எண்ணிக்கையைக் குறைத்தல், விவசாயத்துறையிற் பாரிய அடிப்படைமாற்றங்கள், நாட்டுக்கு வெளியே பிரயாணஞ் செய்யும் சுதந்திரம் என்பனவே அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 ஆம் ஆண்டிற்கு முன் தாம் நடத்திய சுகவாழ்வை, கியூபா மக்கள் ஏக்கத்துடன் நினைவு கூருகின்றனர். அமெரிக்காவில் உறவினர்கள் உள்ளவர்களின் வாழ்வு, ஓரளவு மேம்பட்டதாக இருக்கின்றது. அவர்கள் மனமிரங்கி அனுப்பும் டொலர்களால் இது சாத்தியமாகின்றது. உல்லாசப் பயணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள "வறடேறோ" (Varadero Beach) கடற்கரையோரச் சொகுசு விடுதிகளில் வேலை செய்வோரின் டொலர் வருமானம், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவிட்டது. அரச சேவையிலுள்ள பொறியியலாளர்கள், வைத்தியர்கள் பெறும் ஊதியம், இதிலும் பார்க்கக் குறைவாகவேயுள்ளது. இதனால், டொலர் வைத்திருப்போர் சமூகத்தில் ஏற்றமுடையோராகவும், பிறரின் பொறாமைக்கு உள்ளாகுபவர்களாகவும் இருக்கின்றனர். உல்லாச விடுதிகளில் வேலை செய்வதற்கு, பெரும் போட்டி நிலவுவது மறுக்க முடியாத உண்மை. "பேசோ" (Peso) எனப்படும் கியூபாவின் நாணயத்திற்குப் போட்டியாக, அமெரிக்க டொலர் உருப்பெற்று விட்டது. டொலரே குறிக்கோளாக, நாட்டில் ஒரு சாரார் இயங்கி வருகின்றனர். இதனால், முப்பது வருடப் பொதுவுடைமைச் சமுதாயத்திற் பெரும் ஏற்றத்தாழ்வும், விரிசலும் ஏற்பட்டுவிட்டது எனலாம்.

கியூபா நாட்டின் விவசாயக் கொள்கையிற் பெரும் மாற்றம் செய்யவேண்டியது அவசியம். ருஷ்யாவின், சீனி, உருளைக்கிழங்கு போன்ற தேவையைப் பூர்த்திசெய்வதற்காக, இத்தனை காலமும் கியூபாவின் நிலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ருஷ்யா தனது இறக்குமதியைக் குறைத்துக் கொண்டவுடன், கியூபாவின் விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படாமற் கிடக்கின்றன. சீனியையும், கிழங்கையும் பெருமளவு பயன்படுத்தும் நாடு அமெரிக்கா. ஆனால், கஸ்ற்றோவின் வெற்றிக்குப் பின், அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடை இன்னும் அமுலில் இருக்கின்றது. இத்துடன், அமெரிக்காவின் நண்பர்களாகிய மேற்குலக நாடுகள் அமெரிக்காவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, கியூபாவுடன் வியாபாரஞ் செய்யவோ, பண உதவி செய்யவோ தயாரில்லை. இக் கட்டுரை ஆசிரியர் கலந்துரையாடிய பலரும் அரசியல் மாற்றத்தில் ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆட்சிப் பீடத்தில் யார் இருந்தாலும் பரவாயில்லை; எங்களுக்குத் தேவை உணவும், சுகவாழ்வுமே என்று, அவர்கள் தெரிவிக்கின்றனர். கஸ்ற்றோ, செல்லாக் காசாகி விட்டார்; அவர் விலகவேண்டிய காலம் நெருங்கி விட்டது என்று, ஒருவராவது வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. கொள்கைகள் மாறினாற் போதும் என்பதே, பெரும்பான்மையானோரின் பல்லவி. அரசுக்கெதிரானவர்களை நசுக்குவதில், கஸ்ற்றோவுக்கு நிகராக இப்பிராந்தியத்தில் யாருமில்லை என்பது வரலாறு. அடிமனத்தில் உள்ளதை வெளியிட, பயமும் காரணமாக இருக்கலாம். ருஷ்யாவில் உளவுத்துறையும், அரசியற் பொலிசாரும் செயலிழந்தாலும், கியூபாவில் இன்னும் அவர்கள் வலிமை குறையாது செயற்படுகின்றார்கள். பெரும் அரசியற் பொருளாதார மாற்றங்களைக் கொண்டுவர, கஸ்ற்றோ தயங்குவதற்குக் காரணமுண்டு. கோபார்ச்சேவின் கதி, சர்வாதிகாரிகளைப் பயமுறுத்திய வண்ணம் இருக்கின்றது.



உஷ்ணவலய நாடுகளுக்குரிய வறுமை. அரசு நடத்தும் உணவுப் பங்கீடு, மூன்று நேரத்திற்கும் போதாது. எரிபொருள், உதிரிப்பாகங்கள் இல்லாமையால், பொதுசனப் போக்குவரத்துச் சாதனங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

ஆனால், 52 வயதினரான மறியோ கபோலெறொ என்பார் என்ன சொல்கின்றாரென்றால் :- "கஸ்ற்றோவிற் குற்றமில்லை. அமெரிக்காவின் அழுத்தம் தான், நாட்டின் நலிவுக்குக் காரணம். கஸ்ற்றோ, ஜோர்ஜ் வோஷிங்ரன், ஆபிரகாம் லிங்கன் போன்று, மக்களின் மனதில் அழியா இடம்பெற்றவர். அரசியலுக்கும், பொதுவுடைமைக் கட்சிக்கும் அப்பாற்பட்டவர்." இவை, அநேகமான கியூபா நாட்டுப் பிரஜைகளின் ஆத்மாவில் எழுதப்பட்ட வாசகங்கள். அதே சமயத்தில், கடந்த பன்னிரண்டு ஆண்டுகளிலே தனது மனந்திறந்த பேச்சுக்களால், எட்டு வருடத்திற்கு மேலாகச் சிறையிலடைபட்ட எலிசார்டோ சான்சேஸ் என்ன சொல்கிறார் என்று கேட்போம்:- "கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பார்க்க, அடக்குமுறை கூடிய நாடு கியூபா. தனிமனிதர் சுதந்திரம் சிறிதளவும் கிடையாது. ஒவ்வொரு பிரஜையைப் பற்றியும், இரகசியக் கோர்வைகள் பேணப்பட்டு வருகின்றன. மக்கள் எல்லோருமே, பரஸ்பரம் வேவு பார்க்கும்படி பணிக்கப்பட்டுள்ளனர். மிகவும் பலம்வாய்ந்த, எண்ணிக்கையிற் கூடிய உள்நாட்டு உளவுத்துறை கியூபாவில் உண்டு. அரசியற் குற்றங்களுக்காக, முழுச் சனத்தொகையில் ஒருசத வீதத்தினர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர், கடந்த சில மாதங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரமான பனை வெல்ல உற்பத்தியும், விற்பனையும்.

## கூட்டுறவு அங்காடி இருபாலைச் சந்தி:-

பாணி, சீனி, வெல்லம், ஜாம், கல்லாக்காரம், ஒடியல், புழுக் கொடியல், பெட்டி, கடகம், பாய், தொப்பி, கூடைமூடிகள், சுவர் மாட்டிகள், மாலை, கைப்பை----



பனைமரத்தில் இருந்து உற்பத்தி
செய்யும் பொருள்களையும்
கயிறு, விளக்குமாறுகள் போன்ற
தென்னை உற்பத்திப்
பொருள்களையும்
ஏனைய உற்பத்திப் பொருள்களையும்

## ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்

## கோப்பாய் பனை தென்னை வள

# அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பருத்தித்துறை வீதி.
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் உடல் நலனைப் பேணுவதே எங்கள் நோக்கம்

# ★ வணிகா மருந்தகம் ★

★ தரமான மருந்துப் பொருள்கள்

★ ஊட்டச் சத்துள்ள பால்மா வகைகள்

★ உற்சாகமூட்டும் விற்றமின் டொனிக்குகள்

★ குதூகலமான உணவுப் பொருள்கள்



எதுவாக இருந்தாலும்
நியாய விலையில் தரமான
பொருள்களை
விநியோகிப்பதே
எங்கள் சேவை!

எப்போதும் நாம் சிறந்தவற்றையே கொள்வனவு
செய்கின்றோம், உங்கள் நலனிற்காக.

**வணிகா மருந்தகம்,**
274/2, மருத்துவமனை வீதி,
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,000 மக்கள், பொருளாதாரம், விவசாயம் சம்பந்தமான அரசின் பணிப்புரையை மீறிய குற்றங்களுக்காகச் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.'' அவருடைய கணிப்பில், மக்கள் புரட்சி வெடிப்பது திண்ணம். இதே சான்சேஸ், அமெரிக்கா மீதும், அங்கு அகதி அந்தஸ்துடன் வாழும் தனது இனத்தவர் மீதும் கோபாவேசங் கொண்டுள்ளார். '' அமெரிக்காவினால், எம்மை அடிபணிய வைக்கமுடியாது'' என்பது, அவரின் திடமான நம்பிக்கை. இங்கேதான், கஸ்ற்றோவின் வெற்றியின் இரகசியமே இருக்கின்றது. பொதுவுடைமைச் சித்தாந்தமும், அவருடைய அரசியற் கனவுகளும் மொத்தமாகத் தோல்வி கண்டாலும், மக்களின் கோபம் அவர் மீது படவில்லை. சான்சேஸ் போன்றவர்கள் கூட, அமெரிக்காவைத் தான் குற்றவாளியாகக் காண்கிறார்கள். தனது பதவிக்கு ஆபத்துவராமல், கியூபா நாட்டில் அரசியல், பொருளாதார, விவசாய மாற்றங்கள் யாவற்றையும் கஸ்ற்றோ காலக்கிரமத்திற் செய்வாரேயானால், என்றுமே அழியாத மிகப்பெரும் இடமொன்று, சரித்திரத்தில் அவருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை! ஏனெனில், '' ஃபிடல் கஸ்ற்றோ '' என்பவரே, ஒரு தனிப் பெரும் வரலாறு தானே!

ரைம், டிசம்பர் 6' 1994

# வைற் வோட்டர் ஊழல்

தொகுப்பு:

— உலக உலா —



அமெரிக்கர் என்ன நினைக்கிறார்கள், விமர்சகர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்ததாலேயே பில் கிளின்ரன் வைற் வோட்டர் விவகாரத்தை மறுப்பதில் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார். வைற்சேமிப்புக் கடனுதவி நிறுவனத்துடன் கிளின்ரனும், அவரது மனைவியான ரோதம் ஹிலாரியும் கொண்டிருந்த நிதித் தொடர்பே இவர்களை இன்று சிக்கலுக்குள் மாட்டியுள்ளது. '' நாங்கள் எதனையும் மூடி மறைக்கவில்லை, மாறாக வெளிப்படுத்துகிறோம் '' என்று பில் கிளின்ரன் உணர்ச்சிமயமாக இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரகடனஞ் செய்தார்.

வைற் வோட்டர் விவகாரத்தில் முழுமையான, நேர்மையான பதில்களை அளிப்பதிலிருந்து கிளின்ரன் நழுவிக் கொண்டார். வெள்ளை மாளிகையைக் கிளின்ரன் பாதுகாப்பதற்கு ஆதரவான செயற்பாடுகளை ஆரம்பித்ததோடு, இந்தக் குற்றச் சாட்டுகளைக் கொண்டுவந்தோர் மீது பிரச்சார ரீதியாக எதிர்த் தாக்குதலையும் தொடங்கியுள்ளார். இது தான் ஜனநாயகக் கட்சிக்காரர்களையும், கிளின்ரனின் விசுவாசிகளையும் நம்ப மறுக்கச் செய்தது. 1972 இல் முன்னாள் ஜனர்திபதியான றிச்சாட் நிக்சனுடைய

**பில் கிளின்ரன் பிழை எதுவும் நடக்கவில்லை என்று மறுத்தாலும், ஒளிவு மறைவான காணி விவகாரம் ஒன்றில் சம்பந்தப் பட்டதாக அவரது வெள்ளை மாளிகை வாசம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகவுள்ளது. ஐ. அமெரிக்காவின் முதற் பெண்மணியின் மீதும் கேள்விகள் எழுந்துள்ளன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியலில் பிரச்சனையை உருவாக்கியுள்ள வெள்ளை நதி சங்கமிக்கும் காணிப் பிரதேசம்.

பதவிக்கு வேட்டு வைத்த வோட்டகேற் ஊழல் போன்று விசுவரூபம் எடுக்குமோ என அஞ்சுகிறார்கள். 1972 இல் நடைபெற்ற தேர்தல் மோசடியில் நிக்சனைத் தொடர்பு படுத்தும் ஆவணங்களை அப்போதைய ஜனாதிபதியின் உதவியாளர்கள் மறைத்து வைத்தமை, வெள்ளை மாளிகையின் மூன்றாந்தர மோசடியாக இருந்தது. அத்துடன் அமெரிக்கா உள்ளக புலனாய்வுத் துறையான எவ். பி. ஐ வெளியுலக புலனாய்வுத் துறையான சி. ஐ. ஏ போன்றவற்றை அரசியல் மயமாக்கும் கொள்கைகளாலும் வோட்டகேற் ஊழல் மோசமடைந்து இதனால் அப்போதைய ஜனாதிபதி றிச்சாட் நிக்சன் தனது பதவியினைத் துறக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இன்று வைற் வோட்டர் விவகாரமும் இந்தளவுக்கு வருமா என்பது தான் இன்றைய வினாவாகும்.

உண்மையில் வைற் வோட்டர் தொடர்பான குழப்பம் தான் என்ன? அமெரிக்காவிலுள்ள பெரும்பாலானவர்களுக்குப் பொருத்தமான நல்ல விடை தர முடியவில்லை. இவ்விடயத்தில் ஆர்வங் காட்டும் வெளிநாட்டுப் பார்வையாளர்களுக்கு மேலும் அதிக சிக்கலை ஏற்படுத்தவுள்ளது. உலகிற்கே, புதிய உலக ஒழுங்குகள் உருவாக்கிச் சர்வாதிகாரப் போக்கில் போகும் அமெரிக்கா அரசின் உட்புறம் பல ஊழல்களும், அதனை மறைக்கும் கபட நாடகங்களும் இடம்பெறுவது தான் வேடிக்கை.

பில் கிளின்ரன், அமெரிக்காவிலுள்ள ஆர்கான்சாஸ் மாநிலத்தின் ஆளுநராகப் பன்னிரண்டு ஆண்டுகள் கடமையாற்றியவர். அப்போது அங்கு உள்ள வைற் வோட்டர் நதிக் கரையருகே கிளின்ரன் வாங்கிய காணியுடன் சம்பந்தப்பட்டதாகவே இந்த ஊழல் எழுந்துள்ளது. ஆளுநராகக் கிளின்ரன் இருந்த வகையில் அவருக்குக் கிடைத்த ஆண்டுச் சம்பளம் 35, 000 மட்டுமே. ஆனால் றோஸ் சட்ட நிறுவனத்தின் பங்காளர் என்ற வகையில் 100, 000 டொலரும் வெவ்வேறான கூட்டுறவுச் சபைகளில் பணிப்பாளராகக் கடமை புரிந்த வகையிலும் 60, 000 டொலரும் திருமதி ஹிலாரிக்கு ஆண்டுதோறுங் கிடைத்தன. கிளின்ரனுடைய குடும்ப நிதி நிலைமை பற்றாக்குறையாக இருந்ததினால் கவலையடைந்த ஹிலாரி குடும்ப நிதி நிலையை, தாமே பொறுப்பேற்று ஒசாக் விடுமுறை இல்லக் காணி (வெள்ளை நதிக்கரையில் இந்தக் காணி அமைந்துள்ளதால் வைற் வோட்டர் என்ற பெயரால் பிரசித்தி பெற்றது.) முதலீட்டிலும் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டார்.

1980 இல் கிளின்ரன் தம்பதியினர் வைற் வோட்டர் தொடர்பாக தமக்குக்கிடைத்த 500 டொலர் கழிவுப் பணம் முறையற்றது என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். வைற் வோட்டர் காணியுடன் தொடர்பான முதலீட்டில் பல வரிச்சலுகைகள் இருந்திருக்கலாம் என்று ரைம் சஞ்சிகை கருத்துத் தெரிவித்துள்ளது. மேலும் " மடிசன் சேமிப்பு உத்தரவாத கடன் நிறுவனத்தின் தொழிற் புரி பங்காளராக திருமதி ரோதம் ஹிலாறி இருந்தபோது அதன் பிரதம பங்காளரான "மக்டுகவின்" மீள் முதலீட்டு முயற்சிகள் சம்பந்தமாக 1980 இல் அரசோடு தொடர்பு கொண்டிருந்தார். இன்று மடிசன் சேமிப்பு உத்தரவாத கடன் நிறுவனத்தின் வீழ்ச்சி நாட்டின் முதற் பெருங் குடும்பத்தினனான முதலீடு பெரியதோ, சிறியதோ வரியிறுப்பாளருக்கு 47 மில்லியன் டொலர் பண இழப்பை ஏற்படுத்தி விடும் என்பது தான் முக்கியமான விடயமாகும்.

1984 இல் கிளின்ரன் தமது ஆளுநர் பதவித்தேர்தலுக்காக இந்த ஒழுக்கக் கேடான வைற் வோட்டர் விவகாரத்தைக் கையாண்டாலும் அமெரிக்காவில் இது ஒன்றும் புதிது அல்ல. அமெரிக்காவில் நீண்டகாலமாக முறைசாராத இச் செயற்பாடுகள் வர்த்தகர்களாலும், அரசியல் வாதிகளாலும் கைக் கொள்ளப்பட்டே வந்திருக்கின்றது.

இது இவ்வாறிருக்க இவ்விவகாரம் கடந்த மாதம் தெளிவற்ற வகையில் வெளிப்பாடாயின. குடியரசுக் கட்சியினர் இந்த விவகாரத்தைக் கொங்கிரசில் விசாரிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்ததினால் உயர்மட்ட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு முன்னிலையில், ஜனாதிபதி சார்பில் அவரின் உதவியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மேற்பார்வை செய்யும் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டுமுறையற்ற முறையில் விளக்கங்கள் கொடுத்தார்கள்.

மேலும் ஆர்க்கான்சாஸ் றோஸ் சட்ட நிறுவனத்தின் பகுதி நேர ஊழியர் இருவர் வெள்ளை மாளிகைத் துணைச் சட்ட ஆலோசகராக இருந்த வின்சன் கோஸ்ரர் அண்மையில் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவர். 1992 இல் கிளின்ரனுடைய காணி விற்பனையைக் கையேற்று நடத்தியவர் கோஸ்ரர் என்பது தான் கவனத்துக்குரிய விடயமாகும்.

எது எப்படியிருப்பினும் ஜனாதிபதி வைற் வோட்டர் விவகாரம் தொடர்பாக ஒளிவு மறைவில்லாமல் செயற்படுவதாகக் கூறினாலும் கிளின்ரனுடைய வெள்ளை மாளிகையும் இதனை மறைப்பதற்குப் பாடுபடுவது தெளிவானது. உலகிற்கே நீதி நியாயங்களைத் தன் னிச்சையாகச் சொல்லி ஆணவமான அரசாக நடந்து கொண்டும் ஐக்கிய அமெரிக்காவின் உட்புறத்து அழுக்குகள் தான் இவை. சொந்த நாட்டிலேயே கறுப்பின மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாயும் நடத்துகின்ற ஊழல் மோசடிகளைக் கொண்டுள்ள அரசு எவ்வாறு உலகிற்கு நியாயம் சொல்ல முற்படலாம் என்பது தான் மூன்றாம் உலக நாடுகளின் கேள்வியாகும்.

*ரைம் மார்ச், 14, 21. 1994,*

# மெக்சிக்கோ முகமூடிகளுக்குப் பின்னால், சீற்றங்கொண்ட இளைஞர்கள்

எழுதியவர்
— மைக்கல் எஸ் செறில் —

அவர்கள் லகண்டன் என்ற காட்டின் நிழலூடாகப் போர்ஊக்கம் மிக்கவர்களாய், மெதுவாகத் தனித் தனிக் குழு நிலையில் நகர்ந்து, 50 கிலோ மீற்றர் கிழக்கில் உள்ள மலைப் பகுதியிலே, தமது எதிராளிகளான மெக்சிக்கோப் படையினரின் நிலைகளைக் கவர்ந்து, நிலை கொள்ள முற்பட்டார்கள். தமது பிரதேசத்துக்கு விஜயம் செய்தவர்களை, வேண்டாத விருந்தாளிகளாகக் கொண்டு, அவர்கள் மீது துப்பாக்கிகளைப் பிரயோகிக்க ஆயத்தமானார்கள். நீலநிற முகமூடி அணிந்து, வாயினாற் பேசாது தலை அசைப்பின் மூலமும், மெதுவான முணுமுணுப்புக்கள் மூலமும் சமிக்ஞைகளைப் பரிமாறிக் கொண்டார்கள். தம்மைப் பயங்கர உருவினராயும், அச்சத்தை ஊட்டுபவராயுங் காட்டுவதற்கு முயன்றாலும், அவற்றில் அவர்கள் வெற்றி பெறவில்லை. தையினால் தைக்கப்பட்ட சீருடைகளும், புராதன ஆயுதங்களும், பதவித் தரத்தினைப் புலப்படுத்தும் பிளாஸ்ரிக் நட்சத்திரச் சின்னங்களும் இவையாவிலும் மேலாக இளைய முகங்களும், அவர்களின் நோக்கத்தை அழித்துவிட்டன. 14, 5, 19 வயதுகளே கொண்ட, பெரும்பாலும் படிப்பறிவற்ற இந்தச் சிறுசுகள், 'சப்ஸ்டிற்றா தேசிய விடுதலைப் படை' என்ற பெயர் கொண்ட கெரில்லாப் போராளிகளாவர். ஜனவரி 1ஆம் திகதியன்று, போரெழுச்சி கொண்டு இவர்கள் எழுப்பிய துப்பாக்கிச் சூடுகளின் ஓசைகள், மெக்சிக்கோவில் இன்றும் எதிரொலித்த வண்ணமே இருக்கின்றன.

மெக்சிக்கோவின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த சியப்பாஸ் மாகாணத்தின் நான்கு நகரங்களில் 2,000 கெரில்லாக்கள் மேற்கொண்ட போரில், இவர்கள் போதிய ஆயுதப் பலமோ, துணைப் பலமோ பெற்றிருக்கவில்லை. இவர்களுக்கு எதிராக, மெக்சிக்கோவின் 15,000 அரசுப்படையினர், டாங்கிகள், வானூர்திகள், உலங்குவானூர்திகள்

**மலைகளை நோக்கிப் பின்வாங்கிய சபதிஸ்தர்கள் பற்றியும், அவர்களைத் தூண்டிய போர்க்காரணிகள் பற்றியும், முன்னரிலும் கூடிய தெளிவான கருத்து வெளித் தோன்றுகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியோபிக்காஸ்— மேயரைப் பதவியில் நின்று நீக்கக் கோரிக் கோஷமிடும் ஆர்ப்பாட்டக்காரர்.

சகிதம் எதிர்த்தாக்குதல் நடத்தி, இவர்களை வெற்றி கொண்டார்கள். ஆனால் இந்த ஆரம்ப வெற்றி, பின்னடைந்து சென்றவர்களின் வழியிலே பல கேள்விகளைக் கிளப்பியுள்ளன. இந்த கெரில்லாக்கள் யார்? மெக்சிக்கோவிலே வறுமையால் வாடுபவர்கள் என்று கணிக்கப்பட்ட 40 மில்லியன், மக்களின் பேச்சாளர்களாகக் கிளம்பிய இவர்களுக்கு, வெளிச் சக்திகள் எவற்றினது உதவியாவது கிடைத்ததா? இவர்கள், ஒழுக்காற்றுடன் கூடிய எதிர்ப்புக்கு, எவ்வாறு தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டார்கள்? அடுத்து இவர்களின் நடவடிக்கை என்ன?

கடைசியாகப் பேச்சுவார்த்தைக்கு இணங்கிய ஏழு கெரில்லாக்கள், தமது நிலையை நேரடியாகவும், எளிமையாகவும் எடுத்துரைத்தார்கள். 25 வயதானவரும், கெரிலலாப் படைக்குத் தலைமை தாங்கியவரும், ஒகொசிங்கோ என்ற இடத்தில் இடம் பெற்ற குருதிப் போர் ஜனவரி 3 இல் முடிவுக்கு வந்தபோது, காட்டினை ஒளிவிடமாகக் கொண்டவருமான கப்டன் கிறிஸ்ரோபர், (இது இவரது புனைபெயர்) பின்வருமாறு தங்கள் நிலைப்பாட்டினை எடுத்துரைத்தார்:- ''நாங்கள் விவசாயிகள். சுரண்டல்கள் காரணமாகக் களைப்பும், கவலையும் அடைந்துள்ளோம். நில உடைமையாளர்களின் கீழ், அடிமைகளாக நாங்கள் வேலை செய்கிறோம். அவர்கள் இறைச்சியை உண்கையில், நாங்களோ அவரையையும், சிறிய சோள ரொட்டியையுமே உணவாகக் கொள்கிறோம். எங்களுக்கு வைத்திய வசதி இல்லை. படிக்கப் பள்ளிகள் இல்லை. நில உடைமையாளர்கள், எங்களிலும் பணம் படைத்தவர்களாக இருப்பது ஏன்?''

தெற்கு மெக்சிக்கோ மக்களிலே பெரும்பான்மையினரைப் பொறுத்த வரையில், இந்த வினா மிகுந்த கவலை தரும் ஒன்றே. இது தோன்றிய காலத்தைக் கணக்கிடுவதானால் அது நூற்றாண்டுகள் அளவிற்குச் செல்லாவிட்டாலும், சில தசாப்தங்களுக்கு முன்பாவது செல்லக்கூடியது என்பதை மறுக்க முடியாது. ''நிலமும் விடுதலையும்'' என்ற குறிக்கோள் வாசகம், 1910 ஆம் ஆண்டிலேயே இடம் பெற்றது. அவ்வாண்டு இடம் பெற்ற புரட்சிக்குத் தலைமை தாங்கியவரும், சபதிஸ்தர்களின் போஷகரும், மிகுந்த வணக்கத்திற்கும், மதிப்பிற்கும் உரியவருமான எமிலியானோ சபட்டாவினால் முன்னெடுக்கப்பட்ட இந்த வாசகம், பின் எக்காலத்திலும் உணரப்பட்டதாகவோ, அதை அடைய முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவோ இருக்கவில்லை. சியப்பசின் நிலவுடைமையாளர்கள், உள்நாட்டு அரசு அதிகாரிகளைப் பங்காளராகக் கொண்டு, சட்டங்களின் ஓட்டைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, தங்கள் சுரண்டல்களை வெற்றிகரமாகத் தொடர்ந்தார்கள். மெக்சிக்கோவின் அரசுத் தலைவர் காளோஸ் சலினாஸ் கோட்டாரி, சுமார் 88 மில்லியன் டொலர்களைச் சமுகநலப் பணித்திட்டத்திற்கென்று சொரிந்ததனால், வாழ்க்கைத் தரம் ஓரளவு திருந்தியது உண்மையே. ஆனால் தேவையின் அளவு மிகப் பெரிதாக இருப்பதால், கல்வி, சுகாதாரம், வருமானம் என்பவற்றில் மற்றைய நாடுகளோடு ஒப்பிடுகையில், மெக்சிக்கோ மிக மிகக் கீழான நிலையிலேயே உள்ளது. ''சமுக நலத் திட்டங்கள் யாவும், வார்த்தையளவில் தான்; கல்லூரிப் பட்டதாரிகள், எங்களுக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையை நாங்கள் இழந்து விட்டோம்'' என்கிறார் கிறிஸ்ரோபர்.

சபதிஸ்தர்களை ஆயுதப் போராட்டத்திற்கு உந்தித் தள்ளக்கூடிய, குறிப்பிடத்தக்க நிகழ்வு எதுவும் அண்மையில் இடம்பெறாவிட்டாலும், அவர்களின் நம்பிக்கை வரட்சி தான் இன்றைய நிலைக்கு அடிப்படைக் காரணம். 15 வயதேயான எல்விறா என்ற சிறுமி கூச்ச சுபாவம் உடையவள். இவளின் குடும்பத்தின் பற்றாக்குறை வருமானமும், வீட்டின் மோசமான நிலையும் இவளுக்கு அதிருப்தி அளித்தன. அங்கு வாழ்வதற்கு, அவளுக்கு எவ்வித காரணமும் இருக்கவில்லை. எனவே, கெரில்லாப் படையில் சேர்ந்து கொண்டாள். வீட்டில் சோள றொட்டியும், உப்புந் தவிர, வேறு உணவையே அவள் சுவைத்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபதிஸ்தருடன் இணைந்த பின்பும், ஓரளவு அதே பரிதாப நிலைதான். ஆனால், ஓர் ஆயுதத்தையாவது பிரயோகிக்கும் முறையை, அவர்களிடமிருந்து அவள் கற்றுக் கொண்டாள். ''வீட்டு வாழ்க்கைக்கும், இன்றுள்ள வாழ்க்கைக்கும் ஒரு வித்தியாசந்தான். இப்பொழுது எனக்கு, பயம் என்ற உணர்வே இல்லை'' என்று, அவள் விளக்கந் தருகிறாள்.

கப்டன் விக்ருக்கு வயது 19. அண்மையிலுள்ள செல்டல் கிராமத்தில். கோப்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவன். அவன் பேசும் பொழுது, கிராமத்துப் பிள்ளைகள், மாற்றக் கூடிய நோய்களாலும், ஒட்டுண்ணிகளாலும் இறந்து கொண்டிருப்பதையிட்டு மிகவும் சீற்றத்தை வெளிப்படுத்தினான். நாளுக்கு, இரு முறையே சிறிய அளவு உணவு உண்டதையும், சப்பாத்து அணியாது வெறுங்கால்களுடன் தான் நடந்து திரிந்ததையும் நினைவு கூர்ந்தான். கோப்பியின் விலை இறக்கம் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவனது கூலி குறைக்கப்பட்டது. ''நாங்கள்,' வறுமையால் துளைக்கப்பட்டோம்'' என்கிறான் அவன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கெரில்லாப்படை திரட்டப்பட்ட பொழுது, அதில் அவனையும் மிக இலகுவாகச் சேர்த்துக் கொள்ளக் கூடியதாயிருந்தமை இயற்கையே. படைப்பயிற்சி முகாம்கள் பலவற்றிலும், எழுத வாசிக்கவும் ஏ. ஆர்-15 ரகத் துப்பாக்கியைக் கையாளவும் அவன் கற்றுக் கொண்டான். ''நான் எனது ஆயுதத்தை ஒரு போதும் கைவிடமாட்டேன். எங்களுக்கென்று திறந்துள்ள பாதை இது ஒன்றுதான். தேர்தலில் நாங்கள் என்றைக்கும் வெற்றி பெறப் போவதில்லை. எனது மக்களுக்காக, மரணத்தை ஏற்க நான் தயாராக இருக்கிறேன்'' என்பது அவன் கூற்று.

மத்திய, லத்தின் அமெரிக்க நாடுகளிலே புரட்சி இயக்கங்கள், மாக்சிய, மாவோத் தத்துவங்களால் எழுச்சி பெற்றதுபோல, சபதிஸ்தர்கள் எழுச்சி பெற்றனர் என்பதற்கில்லை. அவர்களின் பேச்சுக்கள் எளிமையாகவும், நேரடியானவையாகவும் உள்ளன. எங்களுக்கு, சமவுடைமை என்றால் என்ன என்று தெரியாது. அது என்ன என்று, இன்றுவரை நாங்கள் அறிந்ததில்லை'' என்கிறார் கப்டன் கிறிஸ்ரோபர். வானொலி மூலம் தமது தலைவர்களுடன் தொடர்பு வைத்திருக்கும் கெரில்லாக்கள், சில வினாக்களுக்கே அதிகார பூர்வமாக விடை அளிக்கக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள், வெளிநாட்டவரால் ஓரளவு வழிநடத்நப் படுகிறார்களா? என்ற கேள்வியை, அவர்கள் வன்மையாக மறுக்கிறார்கள். 'சன் கிறிஸ்ரோபல் லாஸ் காசாஸ்' ஐ ஆக்கிரமித்த நடவடிக்கைக்குத் தலைமை தாங்கியவரும், மென்மையான உடலும், பச்சை நிறக் கண்களும் வாய்ந்த வருமான மாக்கோஸ் என்பவரே, கெரில்லாப் போராளிகளில் லெப்டினன்ட் கொமான்டர் தரத்துக்கு இதுவரை உயர்ந்த ஒருவர். மெக்சிக்கோப் பத்திரிகைகளுக்கு அவர் கடந்த மாதம் வழங்கிய செய்திகளில், ஜனாதிபதித் தெரிவுக்குத் தடையாயிருக்கும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார். ''நாட்டை, பணயப் பொருளாக நாம் கொள்ள மாட்டோம். ஆயுதப்பலங் கொண்டு. குடிமக்கள் சமூகத்தின் மீது எமது கொள்கையைத் திணிக்கவும் மாட்டோம்'' என்கிறார் அவர்

அரசு நடவடிக்கையால், போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. இதனால், துப்பாக்கிச் சூடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. மெக்சிக்கன் அரசுப்படை, தலையிடும் சக்தியாக சியாப்பஸ் மாகாணத்தில் இன்னமும் நிலைகொண்டுள்ளது. தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களும், கடுமையாக நடத்துதலும் தம்மைப் பாதிப்பதாக, சில மக்கள் குழுக்கள் (படைகளின் செயற்பாடுகள் பற்றி) முறையிடுவதாகச் செய்திகள் வெளியாகின்றன. போர்நிறுத்தம் பற்றிய தயக்கம், கெரில்லாக்களிடையே நிலவுகிறது. 'படையினர் முதலில் தாக்குதலைத் தொடங்கினால், நாங்களும் திருப்பித்தாக்கவே நேரிடும்' என்று, அவர்கள் கூறுகிறார்கள். இப்பொழுதும், தங்கள் கைகளே ஓங்கியிருப்பதாக நம்புவதால், ''நாங்கள் படையினருக்கு அஞ்சவில்லை, நாங்கள் மக்களின் சக்தியாயிருப்பதால், தாக்கவும், பின் வாங்கவும் எங்களால் முடியும்'' என்கிறார் கிறிஸ்ரோபர்.

கெரில்லாக்கள் வேறு எதைத் தான் செய்தாலும், புத்தாண்டில் அவர்கள் மேற்கொண்ட போர் நடவடிக்கையால் அரசியற் சூழ்நிலையை மாற்றியுள்ளதோடு, ஊழல் நிறைந்த அதிகார வர்க்கத்தை ஈடாடவும் வைத்து விட்டார்கள் என்பது உண்மையே. இடதுசாரிகளின் புரட்சிக்குப் பொதுவாக எதிர்ப்புத் தெரிவிப்பவரும், நோபல் பரிசு பெற்றவருமான ஒக்டேவியோ பாஸ், கிளர்ச்சியாளரின் கோரிக்கைகளை ஆதரித்து, அண்மையிலே தமது அபிப்பிராயக் குறிப்பொன்றினைப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டுள்ளார். அது, உருக்கம் நிறைந்ததொரு குறிப்பாகும். 'நாங்கள், மெக்சிக்கோவின் (செவ்) இந்தியர்கள் அல்லர்; நிச்சயம் மன்னிப்பைக் கோருபவர்களாகவே உள்ளோம். மெக்சிக்கோ இந்தியர்களின் இரங்கத்தக்க இன்றைய நிலைக்கு, எங்களிற் பெரும்பாலானவர்களே குற்றவாளிகள்'' என்பது அவர் குறிப்பில் ஒரு பகுதி. மெக்சிக்கோவின்தலைவரான சலினாவே சபட்டாவைப் பாராட்டுகின்ற ஒருவராய் உள்ளார். சியாப்பாசில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் குழப்பநிலையை மாற்றி, அரசியல் தீர்வொன்றினை ஏற்படுத்தவென, பலவகை உதவிகளையும், நிபுணர்களையும் அவர் அங்கு அனுப்பியுள்ளார். கடந்த மாதம், உள்நாட்டுப் பிரதிநிதிகள் 280 பேரை அவர் தனிப்பட்ட முறையிலே சந்தித்து உரையாடி, மாற்றம் ஏற்படுத்துவதாக உறுதியுரையும் அளித்துள்ளார். குறிப்பிடத்தக்க சலுகையாக, நடந்து முடிந்த எழுச்சியின் போது தடுக்கப்பட்டுச் சிறைவைக்கப்பட்டிருந்த, சந்தேகத்திற்குரிய 70 கிளர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாளர்களில் 38 பேர் அவரால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவருடைய ஆறாம் கட்சியும் எட்டு எதிர்க்கட்சிகளும், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கையிலே ஒரு முகமாகக் கைச்சாத்திட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஒப்பந்த அறிக்கையின் பிரகாரம், சுதந்திரமான தேர்தல் அதிகாரங்களைப் பயன் படுத்தும் உரிமையும், அரசு நிதியினை கட்சித் தேவைகளுக்குப் பயன் படுத்தலைத் தவிர்க்கும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை, கெரில்லாக்களும், அரசு சார்பான சமாதானப் பேச்சாளரும் நேருக்கு நேர் சந்திக்கவில்லை. ஆனால், தொடர்புக்கான வடிகால்கள் இருபகுதியாராலும் உருவாகியுள்ளன. ''அரசு, தனது படைகளைச் சியப்பாசிலிருந்து மீட்டுக் கொள்வதோடு, பொருளாதாரச் சலுகைகளையும், நீதியையும் வழங்குவார்களாயின், கிளர்ச்சியாளர்கள் பேச்சுவார்த்தையை விரும்புவார்கள்'' என்று, மார்க்கோஸ் குறிப்பிட்டுள்ளார். காட்டுப் பகுதிக்கு, சபதிஸ்தர் சிலரோடு சென்று தங்கியுள்ள கிறிஸ்ரோபர், ''சமாதான நடவடிக்கைகள் எவ்வாறு செல்கின்றன? என்று நான் அறியேன். ஆனால், இவை சியாப்பாசிலும் மகத்தானவை என்பதை நான் அறிவேன். எங்களுடைய ஆற்றல், மெக்சிக்கோவைக் கைப்பற்றக்கூடிய அளவு உள்ளது என்கிறார். படைத்திறன் நோக்கில், இது சாத்தியமில்லாத கூற்றுத்தான். ஆனால், பொதுசன உறவைப் பொறுத்தவரையில் இதுவும் சாத்தியமானதே. (லௌறா லொப்பெஸ் - செல்வா லாகன்டோனா)

---

# மூடிய இடங்களில், தீயை அணைக்க.

92 இல், அமெரிக்காவின் எட்வோட்ஸ் விமானப்படைத் தளத்தில் வை எவ் — 22 ரக விமானம் ஒன்று தரையிறங்கும்போது, சக்கரங்கள் கீழிறங்க மறுத்ததால், வயிற்றினால் தரையிறங்கித் (Belly Landing) தீப்பற்றிக் கொண்டபோது, தீயணைப்புப் படையினரால் தீயை வெற்றிகொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம், தற்காலத்து ஸ்ரெல்த் விமானங்களின் (Stealt) கலப்பு உலோகத்தாற் செய்யப்பட்ட உடலைத் துளைத்து, உட்புறத் தீயை அணைக்கக்கூடிய ஒரு தீயணைப்புத் துளைப்பான் (Extinguisher drill) அவர்களிடம் இருக்காதது தான். இப்போது ''நெருப்புத் துளைப்பான் - 2 (Fire drill – 2) எனும் கருவி செய்யப்பட்டுள்ளதால் இக்குறை நீக்கப்பட்டுள்ளது, இந்துளைப்பானானது, அலுமினிய உடலுடைய விமானங்களைத் துளைத்து, அணைக்கும் ஊடகத்தை விசிறி விமானத்தின் அகத்தே ஏற்படும் தீயை அணைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவியை அடிப்படையாகக் கொண்டு, அதிற் பல முன்னேற்றங்களைச் செய்ததன் மூலம் தயாரிக்கப் பட்டது. இப்புதிய துளைப்பான் ரைற்ரேனியம், கலப்பு உலோகங்கள் மட்டுமல்லாது, கால் அங்குலத் தடிப்புடைய உருக்காலான கப்பற் பிரிசுவர்களைக் கூடத் துளைக்கக்கூடியது. இம் முன்னேற்றப்பட்ட கருவியைத் தயாரித்தது, 'சமுத்திரத் தொழில் நுட்பங்கள்'' Oceaneering Technologies) என்ற நிறுவனமாகும். உயர் இறுக்கமுடைய உருக்குப் போன்ற பதார்த்தங்களைத் துளைக்கும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், தொடக்கத்திற் சிறிய துளையொன்றைத் துளைத்து பின்னர் அதனைப் படிப்படியாகப் பெருப்பிக்க வேண்டும் என்பதாகும். இதற்காக, துளைப்பானின் வெட்டுந் துண்டு (Cutting bit) மாற்றியமைக்கப் பட்டுள்ளது. துளைப்பான், பதார்த்தத்தைத் துளைத்து உள்ளிடத்திற்குள் சென்றவுடன், வெட்டும் துண்டிற்குப் பின்னாலுள்ள துவாரங்களின் மூலம் நீர் அல்லது நுரை நெருப்புக்கு விசிறப்படும். இக்கருவி இருப்பதால் இனிமேல் தீயணைப்புப் படையினர், தீப்பிடித்த விமானத்தை உடைத்து உட்பிரவேசித்துத் தீயணைக்க வேண்டிய அவசரம் இருக்காது. பல விமானத் தளங்கள், கட்டடங்கள், கொள்கலங்கள் (Container) ஆகியவற்றினுள் ஏற்படும் தீயை அணைப்பதற்குப் பயன்படுத்துவதற்காக இத்துளைக் கருவியைப் பெற்றுள்ளன.

''பொப்பியூலர் மெக்கானிக்ஸ்''
செப்ரெம்பர், 93.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருஷ்யா :-

# பிசாசு எரிவாயுவை அம்பலப்படுத்தல்.

எழுதியவர்:

— மைக்கல் எஸ். செறில் —

அரசின் வழிச் சிந்தனைக்கு மறுப்பானவரைக் கைது செய்வதும், துன்புறுத்துவதும் பிரசுரமாகாத சட்டம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இரகசிய வழக்கு விசாரணை, இரசாயன உயிரியல் ஆயுதங்கள் பற்றிய இரகசிய ஆராய்ச்சி. அதனால் பல இலட்சம் உயிர்களைக் கணத்தில் அழிக்கலாம். விடுப்பு ஆர்வமுள்ள பத்திரிகைச் செய்தியாளரை அச்சுறுத்தல் இவை எல்லாம் சோவியத் ஒன்றியம் அழிந்தபோது பழங் கதையாய்ப் போய்விட்டன எனக் கருதப்பட்டது. ருஷ்யாவில் ஜனநாயகம் பிரகடனஞ் செய்யப்பட்டபின் இவற்றுக்கு இடம் ஏது? மொஸ்கோவின் வடகிழக்கு மூலையில் ஒரு பழைய நீதிமன்றத்தில் நிகழும் வழக்கு விசாரணையில் இவை அம்பலமாயின.

இவ்வழக்கிற் குற்றஞ் சுமத்தப்பட்ட வில் மிர்ஸயனோவ் (59 வயதினர்) முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் உயிரியல் இரசாயனப் போர் முறை ஆய்வுத் திட்டத்தில் பழுத்த பெரிய ஆய்வாளர். ''அவர் அரச இரகசியங்'' களை வெளியிட்டார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளார். 1992 ஒக்ரோபரில் ''மொஸ்கோ நியூஸ்'' என்ற வார சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதியபின் அவரைக் கைது செய்தனர். அதில் அவர் எழுதியது:- '' தாம் பதவியிலிருந்து அகற்றப்படும் வரை நொவிசொக் (புதிய ஆள்) என்ற இரசாயன ஆயுதம் கண்டு பிடிக்க ஆய்வுகளை நடத்தினார் என்றும், இது வரை அறியப்பட்ட எந்த வாயுவிலும் பார்க்க அது ஐந்து மடங்கு வலுமிக்கது என்றும், நரம்பு (நாச) வாயு என்றும்'' குறிப்பிட்டார்.



மொஸ்கோ நீதிமன்றத்துக்கு வெளியே மிர்ஸயனோவ் காணப்படுகிறார்.

இது மெய்யானால் மொஸ்கோ இடைவிடாது கூறிவரும் புதிய கொள்கை இரசாயன ஆயுதத் திட்டத்தை வெகுவாகக் குறைப்பது என்பது பொய்க் கதை என ஆகிவிடும். ஓராண்டுக்கு முன் பாரிஸ் இரசாயன ஆயுத (மகா நாட்டு) உடன்படிக்கையில் ருஷ்யா கையெழுத்திட்டது. அதன்படி யாரும் அவ்வகையான ஆயுதங்களை உற்பத்தி செய்தல், சேமித்துக் குவித்து வைத்தல், ஆய்வுகள் மூலம் விருத்தி செய்தல் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன. 1994 ஜனவரி மாதம் ஜனாதிபதி கிளின்ரனை போறிஸ் யெல்சின் சந்தித்தபோது இப்படியான இரசாயன உயிரியல் ஆயுதக் குவியல்களை அழித்து விடுவதாக எழுதப்பட்ட ஒப்பந்த வரிசையில் மற்றோர் உடன்பாட்டைக் கையெழுத்து இட்டார்.

மிர்ஸயனோவ் ருஷ்யா இன்னும் பழைய திட்டத்தைக் கைவிடவில்லை என்று எழுதிய குற்றத்துக்கு முன்னைநாள் பொதுவுடைமை ஆட்சியாளர் கொடுக்கும் கொடுந் தண்டனையைப் பெறுகிறார் போலத் தெரிகிறது. கைது செய்ததும் அவரை மொஸ்கோவின் லெ:பொற்றோவோ சிறைச்சாலைக்குக் கொண்டு சென்று 12 நாள்கள் பூட்டி வைத்தனர். பின்னர், தேசியப் பாதுகாப்பு விதிகள் ஐந்தை மீறிய குற்றத்திற்காக அவர் விசாரணை

**சோவியத் யுகத்தில் நிகழ்ந்த அதிகாரத் துஷ்பிரயோகங்களை நினைவூட்டும் ஒரு மொஸ்கோ வழக்கில், விஞ்ஞானி ஒருவர் குற்றக் கூண்டில் நிறுத்தப்படுகிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டார். அந்த விதிகளின் வாசகம் எப்பொழுதாயினும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இந்தச் சட்டங்கள் நீதி மன்றத்திற் பயன்படுத்தப்படுமானால் ருஷ்யப் புது அரசியல் யாப்பிலுள்ள ஒரு விதிக்கு மாறாகும். (அவ்விதி பிரசுரஞ் செய்யப்படாத எந்தச் சட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு விசாரணை நடைபெறக் கூடாது என்கிறது.) சென்ற ஜனவரி மாதத்தின் பிற் பகுதியில் விசாரணை ஆரம்பமானது. ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அவ்விசாரணை தொடங்கியிருக்க வேண்டும்; ஜனாதிபதி கிளின்ரனது வருகையுடன் முரண்படாதிருக்க அத் திகதி மாற்றப்பட்டது. மிர்ஸயனோவ், ''சோவியத் மரபின் வழித் தோன்றிய கங்காரு நீதி மன்றம்'' என்று வருணித்து அங்கு செல்ல மறுத்துவிட்டார். (கங்காரு மிருகம் தனது பைக்குள் குட்டியை மறைப்பது போல மறைவாக விசாரணை புரிந்து உலகின் கண்களிலிருந்து மறைந்து விடும் முயற்சி என்பது பொருள்).

இவ்விஞ்ஞானியை மிக அதிகப் பாதுகாப்புள்ள மற்றொஸ் கயாரிஷினா சிறையிற் பூட்டி வைத்தார்கள். அங்கு வேறு 50 பேருடன், 16 சதுர மீற்றர் அறையில் இருக்கும் அவல நிலை இருந்தது. உள்ளூர் எதிர்ப்பு உச்ச நிலை அடைந்த பின்னரே அவரை 2 பேர் இருக்கும் மற்றோர் அறைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்தே தமது விசாரணை மலர்ச்சியுறுவதை அவர் அவதானிக்கிறார். அதனைப் பத்திரிகையாளர் பார்க்க முடியாது. மிர்ஸயனோவ் வழக்கு விசாரணைக்குச் செல்லக் கூடாது என்ற நிலைப்பாட்டை மாற்றிவிட்டார். உதாரணம்:- நீதி மன்றத்தைத் தனது விவாத மேடையாக்கி, ''மனிதன் உண்மை பேச உரிமையுடையவன்'' என்ற கருத்தைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதே. குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர் எட்டு ஆண்டுகள் சிறையிற் கழிக்கவேண்டி வரும்.

மிர்ஸயனோவின் சுதந்திரத்தை வற்புறுத்தும் மிகப் பெரிய சக்தி மொஸ்கோவின் தாக்குதலில் வல்ல பத்திரிகையாளர் குழாமே. நிருபர்கள் அவ்விசாரணையை வெறுங் காட்சி, ''ஏமாற்று வித்தை'' என்று வருணித்தனர். ஒரு கட்டத்தில் 40 பத்திரிகை நிருபர்கள் நீதி மன்றத்துக்கு வெளியே ஆயுதந் தரித்த பொலிஸாரை எதிர்த்தனர். தாம் விசாரணையைப் பார்க்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ''இஸ்வெஸ்ரியா'' பத்திரிகை மிர்ஸயனோவ் வழக்குக்கு முதலிடம் கொடுத்து வருகிறது:-''மடைத்தனமான விதிகள் சட்ட அந்தஸ்துப் பெறும்போது சர்வாதிகாரம் தனது வலு அனைத்தையும் ஒன்று திரட்டும். (அது கோனாட்சியிலும் சரி; தனி நபர் சர்வாதிகாரத்திலும் சரி அபத்தமானதே.) என வருணித்தது. முன்னைநாள் கே. ஜீ. பி. என்ற பயங்கர ஒற்றர் படையின் இடத்தைப் பிடித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் முகவர்கள் பல செய்தி ஸ்தாபனங்களைச் சந்தித்து விசாரணைச் செய்திகளைப் பிரசுரிக்காது தடுக்க முற்பட்டனர். அமெரிக்கப் பத்திரிகையான ''பால்ரிமோர் சண்'' என்ற இதழின் நிருபர் வில்இங்கிலன்ட் என்பவர் லெ.:போற்ரோவோ விசாரணையின்போது இவ்வழக்கைப் பிரசுரித்தமை பற்றி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.



கடுகு வாயு 5,000 தொன். சறற்ரோவ் இராசயன நிலையத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன

ருஷ்யாவின் மனித உரிமை அமைப்பாகிய ''மெமோறியல்'' உட்பட ஒரு கூட்டம் உலக மனித உரிமைச் சங்கங்கள் மிர்ஸயனோவ் விடுதலை செய்யப்படவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன. பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் அரசாங்கம் சற்று வளைந்து கொடுப்பதாகத் தோன்றியது. வழக்கு நடத்துவோர் தரப்பில் குற்றஞ் சுமத்தப்பட்டவரின் குற்ற அட்டவணையை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மிர்ஸயனோவ் கட்சிக்கு வாதாடும் அந்தி றேமிறோனோவ் பின் ஒரு சந்தர்ப்பத்தில் வழக்கை அரசு கைவிடக்கூடும் என்ற நம்பிக்கையை இவ்வாதம் அளிப்பதாகக் கூறினார். வழக்கு இவ்வளவு தூரம் விசாரணையுற்றது என்பதே இராணுவக் கடுமையாளர்க்கு வெற்றி என்றுதான் செய்திப் பகுப்பாய்வாளர்கள் கணிக்கின்றனர். (ஜனாதிபதி யெல்சின் இதில் மௌனம் சாதிக்கிறார் என்றே பகிரங்கப்படுத்தப்பட்டது. எனினும் இராணுவத்தின் ஆய்வு நடவடிக்கைகளுக்கு அரசின் போக்குச் சாதகம் ஆனதே என்ற தொனிப் பொருளும் உண்டு.)

அனைத்துலக மேடையில் ருஷ்யாவுக்கு அவமானந் தருவது அந்நாடு இரசாயன ஆயுதங்கள் விடயத்தில் தான்தோன்றிப் போக்கைக் கடைப்பிடிக்கிறது என்ற கருத்தாகும். உதாரணமாக:-மிர்ஸயனோவ் செய்தியாளர் செவ்விகளில் மொஸ்கோவுக்கு அனுமதிக்கப்பட்ட 40,000 இரசாயன ஆயுதங்களுக்குப் பதிலாக 70,000 சேமித்து வைத்துள்ளது என்று கூறி வந்துள்ளார். வழக்கு விசாரணை ஆரம்பமாகியதும், யெல்சினின் இரசாயன ஆயுத விடயங்களில் ஆலோசகராகப் பணிபுரியும் அலெக்சான்டர் கோ(ர்)போவ்ஸ்கி ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், ''ருஷ்யா எந்த ஒரு சர்வதேச உடன்படிக்கையையும் மீறவில்லை; முக்கியமாக இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் விதிகளை'' என்று வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நுட்ப ரீதியில் இது உண்மையாயிருக்கலாம். ருஷ்யாவுக்கு வெளியேயுள்ள நிபுணர்களுக்கு 'நொவிசோக்' பற்றி அதிகம் தெரியாது; அது பரிசோதனையின் ஆரம்ப நிலையில் உள்ளது என்பதால் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு மாறானது அல்ல என்பது மெய்யாகலாம். ஆனால் சோவியத் ஒன்றியமும், அதற்கு வாரிசாக வந்துள்ள ருஷ்யா நாடும் கடந்த ஏழாண்டுகளாக இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வது நிறுத்தப்பட்டு விட்டது என்றே கூறி வந்துள்ளன. அதன் படி ஆராய்ச்சியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றே பொருள்; வோஷிங்ரனிலுள்ள தேசிய விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த ஜோ. ஹாஸ்பன்டஸ் என்பவர் கூற்று:-''ருஷ்யர் எங்களை ஏமாற்றி விட்டு ஓர் (நரம்பு வியாதி ஏற்படுத்தும்) இரசாயனப் பொருள் பற்றிய பயங்கரமான ஆய்வுத் திட்டத்தை மேற்கொண்டிருந்திருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். எப்படியாயினும் மிர்ஸயனோவை விசாரிக்க ஆதாரம் எதுவும் இல்லை.''

மிர்ஸயனோவ் தண்டிக்கப்பட்டால் அவர் பொதுவுடைமைக்குப் பிந்திய யுகத்தின் அன்ட்றே சக்ஹாறோவ் ஆகிவிடுவார். ( சக்ஹாறோவ் ஜலவாயுக் குண்டு கண்டுபிடித்து ஐம்பதுகளின் பின் பகுதியில் ருஷ்ய உயர் விஞ்ஞான மதிப்புப் பெற்றிருந்தும் அதை உபயோகிப்பது மனித குலத்துக்கு அழிவு என்று பேசியதற்காகக் கொடுமைப்படுத்தப்பட்டமை உலகறிந்ததே.) மிறோனோவ் கூறுகிறார்:– ''இவ்விசாரணை எம் சமுதாயத்தில் மாற்றமடைந்த பகுதிக்கும் பழைமையை விடாத பகுதிக்குமிடையில் நடக்கும் போராட்டம்.'' இரண்டுக்கும் வேறுபாடு, அரசாங்க அடக்கு முறைகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய இன்று வலுவாய்ந்த குரல்கள் உள்ளன என்பதே.

*ரைம், பெப்ரவரி 21, 1994.*

# பெரிய பொல்லாத கரடி துயில் எழுந்துவிட்டது?

— எழுதியவர் —
கெவின் பெடர்க்கோ

ஜோர்ஜியா சோவியத் ஒன்றியத்தில் முன்னர் இருந்தது. 1991 இல் சுதந்திரப் பிரகடனம் செய்தது. அப்காஸியர் முன்னர் ஜோர்ஜியாவில் ஒரு பகுதியாயிருந்தது. சென்ற ஆண்டு மொஸ்கோவின் முயற்சியால் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, ருஷ்ய படை அதிகாரிகள் கொடுத்த ஆயுதங்களைக் கொண்டு ஜோர்ஜியர்களை அடித்து நொறுக்கி, 180 மைல் பின்வாங்கச் செய்து தமது திபிலிசியில் புகழ்தேடச் செய்தது. தான் ஜோர்ஜியாவை விட்டுப் பிரிந்து தனிநாடானதாக அறிவித்து விட்டது. இன்னும் அனைத்துலக அங்கீகாரம் பெறவில்லை. ஜோர்ஜிய எல்லைக் காவலர் பெருங்கயிறு ஒன்றைக் கட்டியுள்ளனர். ருஷ்யா மீண்டும் மண்ணாசை கொண்டு அயலவர்களை அடிமைப்படுத்தக் கூடும் என்ற அச்சத்தையும், அவ் வல்லரசைத் தடுத்து நிறுத்தும் குறியீடுபோல் அக்கயிறு தோன்றுகிறது.

**மொஸ்கோவின் அயல்நாடுகள் சோவியத் ஆட்சிக்கும் பிந்திய வல்லரசு ஒன்றின் ஆளுகைக்கு உட்படலாம் என்று அஞ்சுகின்றன**

ஜோர்ஜிய அரசுத் தலைவர் இந்த அவமானத்தால் தலை குனிந்து நின்றபோது, ருஷ்யா அவருக்கு இராணுவ உதவியளித்தது. இந்த உதவி அப்காஸிய இனத்தவரை அடக்கி மீண்டும் தம் ஆட்சிக்குட்படுத்த அல்ல; ஏற்கனவே அப்காஸியா தனது நிலைமையை வலுப்படுத்திக் கொண்டு விட்டது. ஆனால், ஜோர்ஜியாவின் மற்றொரு புரட்சி முயற்சியை முறியடிக்கவே இந்த ஆயுத உதவி வழங்கப்பட்டது. எனவே, எல்லைக் கயிற்றுக்கு இருபுறம் உள்ளவர்களும் ருஷ்யாவிற்குக் கடமைப்பட்டுள்ளனர். சகலரும் தன்னை நம்பியே வாழவேண்டும் என்ற நிலையை ருஷ்யா ஆக்கியுள்ளது.

இவ்வாறு 14 குடியரசுகள் ருஷ்யாவின் விளிம்பில் உள்ளன. ருஷ்யர் அவற்றை ''அண்மையிலுள்ள அயல் நாடுகள்'' என்று குறிப்பிடுகின்றனர். பால்ரிக்கடல் முதல் மத்திய ஆசியாவரை மீண்டும் தன் மேலாண்மையை மென்மையாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகண்ட ருஷ்யாவைப் பாதுகாத்தல்: 1992 இல் மோல்டேவிய தாக்குதலிலிருந்து காப்பாற்றும் பொருட்டு விலகிச் சென்ற குடியரசான ட்னெஸ்ரரில் கருமபெரெற்ஸ் என்ற படையணிகள் போரிடுகின்றன.

போர்த்துவிட முயல்கின்றனர். முன்னாள் தம் கீழ் இருந்த சிறு நாடுகளிடையே இனப்பூசல் எரிமலையாய்க் குமுறிப் பூமி பிளக்கும் நிலை எங்கு, எங்கு உண்டோ என்று அவதானித்து அங்கெல்லாம் இரகசியமாகப் பூசல்களைக் கிளப்பி விடுவதையும், அதன் மூலம் தாம் அங்கு முக்கிய நடுவர்களாக இடம் பிடித்துக் கொள்வதையும் அரசியல் சாணக்கியமாகக் கைக்கொண்டு வருகின்றனர். பொஸ்னிய விவகாரத்தில் தலையிட்டு சேர்பியர் முற்றுகையிட்ட ருஸ்லா நகரின் விமான நிலையத்தைத் திறந்து விடச் செய்துள்ளனர்.

தமது நடுவர் முயற்சி வெற்றி பெறுவது பற்றி ருஷ்யர் பெருமை அடைகின்றனர். ஆனால், ருஷ்யக் கரடி மீண்டும் உறக்கத்திலிருந்து எழுந்துவிட்டது என்ற கருத்துப் பிற நாடுகளிடையே அச்சத்தைத் தூண்டுகிறது.

மொஸ்கோ தன் வலுவை நிலைநாட்ட மென்மையான இராஜதந்திர முயற்சிகளோடு நின்றுவிடாது, வன்மையான இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. 1992 டிசம்பரில் உஸ்பெகிஸ்தானிலிருந்து பறந்த (ருஷ்ய விமானிகளால் செலுத்தப்பட்ட) விமானங்கள் அயலிலுள்ள இஸ்லாமிய ஜனநாயகக் குடியரசு தஜிக்கிஸ்தானை அடக்கிப் பொதுவுடைமைச் சார்புடைய அரசு ஏற்படுத்த வழி செய்தன. இப்படிப் ''பச்சையான'' இராணுவத் தலையீடுகளுடன் நின்றுவிடாமல் பொருளாதார ''முற்றுகை'' யையும் மேற்கொள்ளுகின்றது மொஸ்கோ சென்ற மார்ச் முதல் வாரத்தில். பைலோரஷியா, மோல்டோவா உக்ரேன் பிரதேசங்களுக்கு எரிவாயு வழங்கலை நிறுத்தியது.

இருவிதமான, - இராணுவ பொருளாதார, தலையீட்டின் மூலம் ஒரே செய்தி தான் தரப்படுகிறது. 'அண்மைய அயல்நாடுகள் ருஷ்ய மேலாண்மைக்கு உட்பட்டே ஆக வேண்டும். வாழ விரும்பினால் முன்னைநாள் அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறை (சி. ஐ. ஏ.) அதிகாரி கூறுகிறார்: ''இது பெரிய ஏகாதிபத்திய வெறி என்று சொல்லாவிட்டாலும், ருஷ்யாவின் உதவிக்கு வாருங்கள் என்று அயலிலுள்ள வலிமை குறைந்த நாடுகளை அழைப்பதாகும்.''

ஜோர்ஜியத் தலைவர் போன்ற அண்மைய அயல் நாட்டு அதிபர்கள் பல நூற்றாண்டுகளாக ருஷ்ய சார் மன்னரும், பொதுவுடைமைச் சர்வாதிகாரிகளும் கடைப்பிடித்த அதே ஏகாதிபத்தியக் கொள்கையின் பாதிப்பு இன்றைய ருஷ்ய ஆட்சியாளரிடையேயும் காணப்படுகிறது என்றே கருதுகின்றனர். ஆனால், ருஷ்யரின் கருத்துப்படி இந்த நடைமுறை எந்த ஒரு பேரினமும் தன் அயலவர் குறித்துக் கடைப்பிடிக்கும் இராஜ தந்திரக் கொள்கையைப் போன்றதே. பணமும், பெருநிலப்பரப்பும் உள்ள வல்லரசு ஒன்று அயலிலுள்ள சிறு அரசுகளைத் தன் சிறகுக்குள் வைத்துப் பாதுகாக்க முயல்வது சகஜம் தானே.

அமெரிக்க கிளின்ரன் நிர்வாகம், மொஸ்கோவில் சீர்திருத்தம் நாடுவோரிடமிருந்து எவ்வளவுக்கு வலுவை வற்புறுத்தும் கொள்கை ஆதரவைப் பெறுகிறது என்பதையே கூர்ந்து நோக்குகிறது. விளாடிமிர் ஸிரினோவ்ஸ்கி போன்ற தேசியவாதிகளின் அழுத்தங் காரணமாக ருஷ்யா தன் அயல் நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு மீண்டும் தனது ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கக் கூடும்; அல்லது அது தன் செல்வாக்கை உபயோகித்து, அயற்புறங்களில் நிகழும் புரட்சிகளைச் சமாதான வழியில் தீர்த்து அதன் மூலம் தனது ஸ்திரமின்மையைச் சமநிலைக்குக் கொண்டுவருதல் மூலம் தனது நன்னிலைக்கு வழி கோலலாம்.

இவ்விரண்டு போக்கும் மொஸ்கோவின் வெளிநாட்டுக் கொள்கையில் காணக் கிடக்கிறது. அயல் நாட்டு மந்திரி அந்த்ரே கொஸிரேவ் இவ் விருபோக்கின் படிமமாகத் துலங்குகிறார். ஒரு காலத்தில் மேற்குலகத் தாராண்மை வாதச் சார்புடையவர், என்றும் ''துரோகி'' என்றும் கடினபோக்குடைய பழைய பொதுவுடைமைவாதிகளால் கண்டிக்கப்பட்டவர். இன்று கொழுத்த தேசியவாதச் சொற்பொழிவுகளைக் கொப்பளிக்கிறார். மீண்டும் ஐம்பதுகளில் நிகழ்ந்த ''பனிப்போர்'' யுகத்துக்குப் போகிறாரோ என்று ஐயங் கொள்ள வேண்டியிருக்கிறது. கடந்த பல மாதங்களாக, அவர் கிழக்கு ஐரோப்பா, வட அத்திலாந்திக் ஒப்பந்து நிறுவனத்துடன் (நேட்டோ) இணைய முயற்சிப்பதைக் கண்டித்து வருகிறார். பால்ரிக் கடல் பகுதியில் ருஷ்யப் படைகளை நிறுத்திவைக்க வேண்டிவரும் என்பதைக் குறிப்பால் உணர்த்தினார். குடியரசுகள் சிறுபான்மை ருஷ்யர்களைக் கொடுமைப்படுத்துவதைக் கடுமையாகக் கண்டித்தார். இவரது புதிய நிலைப்பாடு யெல்சினின் கிரெம்லின் குழுவினர் தேசியவாதிகளின் வசீகர சக்தியை உடைப்பதற்கு வழி, தாமே பழைமைவிரும்பிகளாகக் காட்டிக் கொள்ள வேண்டியதே என்று அவதானிகளை நம்பச் செய்கிறது.

ரைம், மார்ச் 14, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்பியரின் சூழ்ச்சி விளையாட்டு எப்படி?

சேர்பியர்கள், வரலாற்றிலிருந்து தப்பிக் கொள்ள முடியாது என்றே தோற்றுகிறது. ஆகவே, அவர்கள் அடுத்து மேற்கொள்ளக் கூடிய காரியம்- மிகச்சிறந்த காரியப் -வரலாற்றை மீள எழுதுவதே. தமது தலைமை வதிவிடத்திலே பெரும்பான்மையான போர்வீரர்கள், சேர்பிய இளவரசனான லஸாரை 1389 இல் துருக்கியர் வென்று, பால்க்கன் குடாநாட்டில் தொடர்ந்து 500 ஆண்டுகள் ஒற்ருமான் சக்கராதிபத்தியத்தை நிறுவியதை நினைவுகூரும் சின்னங்களை அணிந்து கொள்கிறார்கள். இவ்வாறு அணிவதென்பது, தமது தோல்வியைக் கொண்டாடுவதற்கல்ல; பொஸ்னிய முஸ்லிம்களுக்கு, தாம் முன்பு பெற்ற தோல்வியைத் திருப்பி வழங்குவதற்கே. இந்த நாள்களில், அவர்களிடையே கட்டுக்கதை உருவாக்கங்கள் பரவலாக இடம் பெறுகின்றன. ''சேர்பியர் வாபஸ் பெறுவார்கள் என்றும், அல்லது, ஐ. நா. சபையின் இறுதி எச்சரிக்கைக்குப் பணிந்து, தமது கனரக ஆயுதங்களைக் கைவிடுவார்கள் என்றும் தவறான எண்ணக்கரு ஒன்று நிலவுகிறது'' என்று, ஜோவான் ஸமெற்ரிக்கா கூறுகிறார். இவர், பொஸ்னியாவின் சேர்பியர் தலைவர் றடோவன் கறட்ஸிக்சின் ஆலோசகர். மேலும் அவர் கூறுவது:- ''சந்தைக் கொடுங்கொலைகளுக்கு முற்றுப்புள்ளியை முன்பே வைத்து விட்டு, சறஜீவோவைச் சர்வதேசக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும். சறஜீவோவை அமைதிப்படுத்தி, எஞ்சியுள்ள நாட்டிற்கு அதனை முன்னோடி மாதிரியாக ஆக்குவதே எமது நோக்கம்!''

**பொஸ்னியா:**

**சமாதானம் செய்வதா? போர் நிகழ்த்துவதாக, அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை'**



இந்தக் கூற்று, ஐ நா உயர் அதிகாரிகளுக்கு அதிர்ச்சியைக் கொடுப்பதாக உள்ளது. ஐ. நா. படையின் தளபதியாகப் பொஸ்னியாவிற் பணியாற்றும் லெப். ஜெனரல் சேர் மிக்கேல் றோஸ், அரசியல் ஆலோசகர் விக்ரர் ஆன்ட்றியேவ் ஆகியோர், கடந்த பெப்ரவரி மாதத்தில் இதே ஆலோசனையை முன்வைத்த பொழுது, நேட்டோவின் கடிகாரம் செயற்படத் தொடங்கியது. பொஸ்னியாவின் முற்றுகைப் பகுதிகளில், படையினரின் இயக்கத்திற்கு எதிராகக் கடுங்கூச்சல் எழுந்தது. எது எவ்வாறாயினும், போர்க்களத்தில் பொஸ்னிய சேர்பியர், தாம் பெற விரும்பிய அனைத்தையும் பெற்றுக் கொண்டார்கள். கடந்த மாதம், இவர்கள் ஆதிக்கம் பெறாதிருந்த மக்லஜ் என்ற முஸ்லிம் நிலப்பகுதியும் பணிந்தது.

போர் வெற்றிகளுக்கும் அப்பால், சமாதான வழிக்கு வர முடியாத ஏதோ ஒன்று சேர்பியரைத் தடைசெய்கின்றது. இதனை, அவர்களின் மனநிலையோடு தொடர்பானதாகக் கொள்ளலாம்,

ஐ. அமெரிக்கத் தூதுவர் சாள்ஸ் றெட்மன், குறோற்சியரும். முஸ்லிம்களும் தமது எல்லைப் பகுதியை வகுத்துக் கொள்ளும் ஒப்பந்தத்தில் நடுவராய் நின்று செயல் புரிந்தகாலத்தில், சேர்பியர் அந்த விடயத்திற் கலந்து கொள்ளாது விலகி நின்றனர். போரைப் பற்றிய கருத்தில் சீற்றம், சுயநேர்மை, துணிவு என்பவற்றைப் பெரிதும் போற்றிவரும் அவர்கள், பேச்சு வார்த்தைக்கு இறங்கிவராத கடுமையானவர்களாக, சமாதான மேசைக்கு வரும் போது தம்மை மாற்றிக் கொள்கிறார்கள்.

இப்பொழுது, தமது வெற்றிகளைச் சட்டபூர்வமானதாகக் கொள்வதற்கு, அவர்கள் எண்ணுவதாகத் தோற்றுகிறது. தொடர்புச் சாதனங்கள், இராஜதந்திரிகள், மனித உரிமைக்குழுக்கள் யாவும், தம்மைப் பலிக்கடாவாக்கிவிட்டதாகக் கருதுகிறார்கள், ''பொதுசன அபிப்பிராயப் போர், சூடுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது. முஸ்லிம்களும், மேற்கத்தியப் பத்திரிகையாளர்களுமே எம்மைக் குற்றஞ் சாட்டியவர்கள்'' என்று, சறஜீவோவின் புற நகர்ப் பகுதியாகிய கிறபவிக்காவிலுள்ள பட்டாளத் தலைவர் அலெக்சான்டர் பெற்றோவிக் குறைப்படுகின்றார். ''எனவே, கொலைக்குக் காரணர் யார்? மற்ற எல்லாரிலும், பத்திரிகையாளரே எனலாம்.'' சேர்பியத் தேசியவாதிகளே போரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி, அந்தப் போரினால் 200,000 பேர் பெரும்பாலும் குடிமக்கள் – இறந்தனர். 3 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தனர் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால், இது ஒரு பொருட்டல்ல: எமது செய்தி மிகவும் எளிமையானது. ஒரு நாட்டில், ஒரு கூரைக்குக் கீழ், சேர்பியராகிய நாங்கள் ஒன்றாக வாழ விரும்புகின்றோம். விரோதிகளின் நாட்டில், பலவந்தமாக இணைந்து வாழ்வதை நாம் விரும்பவில்லை'' என்று கூறும் ஸமெற்றிக்கா, லண்டன் பொருளாதாரக் கல்லூரியிலே பயின்றவர்.

இனவாரியாகப் பிளவுபட்ட பகுதிகளில் வாழும் குறோற்சியர், முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன? ''சேர்பிய நாட்டு எல்லைக்குள் வாழும் சிறுபான்மையரின் உரிமைகள் முழுமையாகக் கௌரவிக்கப்படும்'' என்று பதில் தருகிறார் ஸமெற்றிக்கா. ''பிஜெல்ஜினாவில், 20,000 முஸ்லிம்கள் சம உரிமைகளோடு வாழ்கிறார்கள்'' உண்மையில், பொஸ்னியாவின் வடகிழக்கு நகரிலே சில ஆயிரம் முஸ்லிம்களே வாழ்கிறார்கள். அவர்கள், நாளந்தம் தொல்லை கொடுக்கப்பட்டும், வெளியேற்றப்பட்டும் இடர்ப்படுகிறார்கள். பிறதேசங்களின் சேர்பிய அதிகாரிகள், சுழற்சி விளையாட்டை நடத்துவதாகவே தெரிகிறது. ஃபோக்கா நகர ஆணையாளர் அண்மையில் பத்திரிகையாளருக்குச் சொன்னது இது: எனது நகரிற் பெரும்பான்மை மக்களாக முஸ்லிம்கள் ஒரு காலத்தில் வாழ்ந்தது உண்மைதான். ஆனால், இங்கு ஒரு பள்ளிவாசலாவது இல்லை.'' (இது உண்மையல்ல. சேர்பியர், 13 பள்ளிவாசல்களை வெடிவைத்துத் தகர்த்தார்கள். இது நடந்தது, 1992 இல் முஸ்லிம்களை அங்கிருந்து வெளியேற்றிய பின்பாகும்.) தாம் சொன்னதை நிலைநிறுத்தும் வகையில், தமது நகரில் வாழும் கடிகாரம் திருத்தும் முஸ்லிம் ஒருவரை அவர் காட்டினார். அந்த முஸ்லிம் பேசுவதற்கே பயந்தார். ''இவர், சேர்பியப் பெண் ஒருத்தியை மணந்தவர். அவளோ மலடி. எனவே, முஸ்லிம் பரம்பரை அங்கு தோன்றவும் வாய்ப்பில்லை.''

## சிறுபான்மையை இழிவு செய்தல்

உலகம், நவீன ஹண்ஸ் (காட்டுமிராண்டித்தனமான கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டு, இந்தியா வரை வந்து கைப்பற்றிய கொடியோர்.) என்று தமக்கு முத்திரை குத்தியுள்ளதை, சேர்பியர் இன்னும் நம்புகிறார்கள் இல்லை. இந்த நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தும் இவர்களது திணறலே, இவர்களின் துணிச்சல் நிறைந்த சுய நியாயப்படுத்தலைக் காட்டுகிறது. தேசியச் சுய நிர்ணயம் என்பதே, தொடக்கத்திலிருந்து எமது குறிக்கோள்'' என்கிறார் ஸமெற்றிக்கா. 1991 இல் யூகோஸ்லாவியா சிதறிய பொழுது, ஸ்லோவேனியர், குறோற்சியர், மஸ்டோனியர், முஸ்லிம்கள் ஆகியோரின் உரிமைகள் மாஷல் ரிட்டோவால் அங்கீகரிக்கப்பட்டு, சிறப்புத் தகுதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. சேர்பியர் மட்டும் அத்தகுதி பெறக் கூடாதா? ''1992 இல் பொஸ்னியாவில் எடுக்கப்பட்ட சர்வசன வாக்கெடுப்பின் மூலம், யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்து செல்லும் உரிமையை நிர்ணயிக்க முயன்ற வேளையில், சேபியரின் எதிர்பார்ப்புக்களுக்கு முஸ்லிம்கள் சற்றும் மதிப்பளிக்கவில்லை. அவர்களை இழிவிற்குரிய, கவனத்திற்கே கொள்ள வேண்டாத சிறுபான்மையினராகக் கருதினார்கள்'' என்று கருத்துத் தெரிவிக்கும் பொஸ்னிய சேர்பியர் பிரதிநிதியான ஸ்றட்ஜன் ட்றிஃப்கோவிக், ''ஆயுத ரீதியிலான எதிர்ப்பொன்றே, எமது உரிமையைப் பெற ஒரே வழி'' என்று தொடர்ந்து கூறினார்.

எனவே, ஆயுதபலம் ஒன்றே பொஸ்னிய சேர்பியரைச் சமாதான மேசைக்குக் கொண்டுவர ஒரே வழி. நேட்டோவின் அண்மைக் காலக் கடும்போக்கு சிறப்பாக, சேர்பியருக்குரிமையான நாலு ஜெட் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியமை, கருத்துருவாக்கம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. ''விமானங்கள் வீழ்த்தப்பட்டதன் உளவியல் தாக்கம் மகத்தானது'' என்று பெல்கிறேட் சுயாதீனப் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்தவரும், வ்றெம் நகர்வாசியுமான பத்திரிகையாளர் மிலொஸ் வாசீக் கூறுகிறார். ஆனால் பொஸ்னியாவின் சேர்பியர் இன்னமும் மறுப்புத் தெரிவிக்கின்றனர்; நடந்ததைத் திசை திருப்பப் பார்க்கின்றனர். மக்லாஜ் மீது எறிகணை மழையைப் பொழிந்து கொண்டே, தாங்கள் சமாதானத்துக்கு முயல்பவர்கள் என்கிறார்கள். தாங்கள் ஏற்கனவே முஸ்லிம்களுக்கு நாட்டின் மூன்றில் ஒருபங்கை உரிமையாக்குவதாகிய சலுகைக்கு ஒப்புக்கொண்டதாகவும் கூறுகிறார்கள். (அவர்கள் மூன்றிலொரு பகுதி என்று கூறிய பிரதேசம், அவர்களின் பகைவர்களாற் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.) சமாதானத் தூதுவர்கள் சுலபமாக அணுக வாய்ப்பளிப்பதாகப் பறைசாற்றுகிறார்கள். ''சர்வதேசச் சமூகத்தின் எல்லாக் கோரிக்கைகளையும் சேர்பியர் ஏற்றுக் கொண்டனர். ஆனால் சடுதியில் முற்றிலும் புதியதொரு விளையாட்டு நகரத்தில் நடக்கிறது என்கிறார் ஸமெற்றிக்கா.

அவர் குறிப்பது, குறோற்சியர் முஸ்லிம்களின் நேச இணைவைத்தான். ''சேர்பியரின் புதைகுழியின் மீது சமாதானம் உருவாகும் என்பது போல இது தொனிக்கிறது. தொடர்ந்து இடம்பெறும் ஒவ்வொன்றும், எமது தீர்மானத்தில் எம்மை மேலும்உறுதியுடையவராக் குகிறது.'' யுத்த நிறுத்தத்துக்கான வாக்குறுதிகளை, சேர்பியர் எப்பொழுதும் காப்பாற்றுவார்கள் என்று சொல்லவியலாது. அவர்களின் தயக்கம், அவர்களின் சொற்களில் முற்றாகத் தங்கியிருக்க முடியாது என்பதையே உணர்த்துகிறது.

'பேல்' இலிருந்து:– றொம் போஸ்ற், றொட் நோட்லன்ட்.

*நியூஸ்வீக், மார்ச் 21, 1994.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு

# பேபி போட்டோ

மங்களகரமான காலங்களில் நீங்காத நினைவூட்டும்
தொடர் நிகழ்வுகளாகப் படம்பிடித்துத் தருபவர்கள்.

★ போஸ்றகாட் அளவு ★ ஸ்ராம்ப் அளவு
★ பாஸ்போட் அளவு ★ பெரிய அளவு
★ குறூப் படங்கள்

காரியாலய அடையாள அட்டைப் படங்களுக்கும்

அவசர தேவைகள் உடன்
பூர்த்தியாக்கப்படும்.

புளக்குகளுக்குத் தேவையான
அளவுகளில் படம்
பெற்றுக் கொள்ளலாம்.




பலாலி வீதி,
திருநெல்வேலி,
(வளாகச் சந்தி)
யாழ்ப்பாணம்.

**Palaly Road,**
**Thirunelvely,**
( *Cumpus Junction* )
**JAFFNA.**

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர் முதல் குழந்தைகள் வரை விரும்பிச் சுவைப்பது

# குணம் ஐஸ்கிறீம்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

★ ஐஸ்கிறீம் ★ ஐஸ்சொக் ★ ஐஸ்பழம்,
★ ஸ்பெசல் ஐஸ்கிறீம், ★ ஐஸ் சர்பத்

உங்கள் இல்லங்களில் வருபவர்களை
குளிர்மையூட்டி வரவேற்க எம்மிடம் ஐஸ்கட்டி விற்பனைக்கு உண்டு.

முன் ஓடர் கொடுத்து ஐஸ்கட்டியைப்
பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் நாடவேண்டிய இடம்:



# குணம் குளிர்களி அகம்

49, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

---

★ புழுதி மண்ணில் புரண்டெழுந்து வந்ததா ?
★ சேறு சகதியில் நீந்தி வந்ததா ?
★ உப்பு நீரில் அமிழ்ந்தி வந்ததா ?

உங்கள் வாகனம் பழுதடையப் போகின்றது
என நினைக்கின்றீர்களா?

கவலையை விடுங்கள்:

உங்கள் வாகனங்களைச் சுத்திகரிப்புச் செய்து
அழகுபடுத்துவதே எங்கள் வேலை.

இன்றே விரையுங்கள்:

# P.S. சேவிஸ் ஸ்ரேசன்

257/1 அருச்சுனா வீதி — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஒரு பகுதியினரைக் கொல்வதற்கு நடவடிக்கை

பகெறிலிருந்து:
— அன்ட்று பே(ர்)விஸ் —

> **கிளர்ச்சிப் படை ஒன்றினை வேட்டையாடுதலும் துணிவுமிக்க ஆள்வோனின் தாக்குதலும் சேர்ந்து, 4 மில்லியனுக்கு அதிகமான மக்களைப் பஞ்சத்துக்கு உள்ளாக்கி நாட்டை விட்டு ஓட வைக்கின்றன.**



தணிந்து விட்ட எரிமலை போல, இன்னமும் சாம்பல் பூத்த தணல் எரிந்து கொண்டிருக்கும் தனது குடிசையின் முன்பு நின்று கொண்டு, கபிறியேல் அன்யர் கசெட், உகண்டாவின் எல்லைக் கோட்டிலுள்ள பகெறி என்ற கிராமத்திற்கு நடந்து முடிந்த கொடுமை பற்றி, மீள் மதிப்பீடு செய்து கொண்டிருக்கிறார் சூடானின் உள்நாட்டுப் போரில், மிக அண்மைக்காலத்தில் ஏற்பட்ட பேரழிவின் சின்னந்தான் பகெறி. இந்த அழிவுக்கு முன்பு, அரசு விமானம் ஒன்று காலை நேரத்தின் அமைதியைக் குலைத்த வண்ணம் அந்தக் கிராமத்தின் மேலாக வட்டமிட்ட பொழுது, அன்யர் தம்முடைய 11 மக்களோடு, அழுக்கு நிறைந்த பதுங்கு குழிக்குள் சென்று மறைந்திருந்தபடி, விமானம் விரைவாக அகன்று போய்விடவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தார், ஆனால், விமானம் போகவில்லை. அது போய், மீண்டும் திரும்பி வந்து தாழப் பறந்தது; சிறிதுபொழுது அதன் இயந்திரங்களின் ஒலி அடங்கியது. ஆனால், அடுத்த கணம் பயங்கரத் தொடர்ச்சியாக மூன்று குண்டுகள் வீசப்பட்டன. அன்யரின் குடிசை நாசமானதோடு, குண்டுச் சிதறல்கள் எல்லாப் பக்கங்களிலும் விசிறி அடிக்கப்பட்டதனால் சூழவிருந்த நூறு மீற்றர் பிரதேசம் தீக்கு இரையாகி, சுவாலைகள் சீறி எழுந்தன. குழப்பமும், கலக்கமும் அடைந்த மக்கள் நாலா திசைகளிலும் சிதறி ஓடி, அருகிலுள்ள புல்வெளியொன்றிலே புகலடைந்தனர். கிளர்ச்சியாளர்கள் பெருமளவு நிறைந்துள்ளதும், சில கிலோ மீற்றர் தொலைவிலுள்ளதுமான படைத்தளத்திலிருந்து வந்த விமானமே இத் தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதலாற் கொல்லப்பட்ட எண்மரும், காயத்துக்குள்ளான பலரும் படை வீரர்கள் அல்லர். ''அரசாங்கம், மக்களை அழிவினின்றும் தவிர்க்கவே முயல்கின்றது. அதேவேளை, இந்த மண்ணில் நாம் வாழாதிருக்கச் செய்வதே, அதன் அடிப்படை நோக்கம்'' என்கிறார் 43 வயதான அன்யர்.

ஒரு வாரத்திற்கிடையில், அரசு விமானங்கள் குடிமக்களின் இலக்குகள் மீது மேற்கொண்ட நான்காவது தாக்குதல் இது. சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தினைத் (எஸ். பி. எல். ஏ.) தாக்குவதற்கு அது நிலைகொண்டுள்ள தெற்குப் பகுதியைக் குறி வைத்து அரசின் விமானப்படையும், தரைப்படையும் ஒன்றிணைந்து இத் தாக்குதலை நடத்துகின்றன. காட்டூமிலுள்ள இஸ்லாமிய அரசு, கடந்த 11 ஆண்டுகளாகக் கிறிஸ்தவக் கிளர்ச்சியாளர்களைப் பெருமளவு கொண்டுள்ள புரட்சி இயக்கத்தினை நசுக்குவதற்கான இறுதி முயற்சியாகவே, இந்த நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக இராஜதந்திரிகள் இதனை வருணிக்கிறார்கள்.

வெளிநாட்டு உதவியோடு பணியாற்றி வந்த ஊழியர்கள் இப்பிரதேசத்திலிருந்து வெளியேறி விட்டார்கள். 10,000 சூடானியர் வெளிநாட்டு நிவாரண உதவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்தவர்கள் – உகண்டாவின் எல்லைப் பகுதிக்குத் தப்பி ஓடி விட்டார்கள். நெருக்கடியான ஒரு வேளையில், மிக மோசமான வரட்சிக்கு உட்பட்டு, ஏற்கனவே பெரும் பாதிப்புக்கு உள்ளான நிலையில் மக்கள் வாடும் பொழுது, மீண்டும் இந்தச் சண்டை தொடங்கியிருக்கிறது. "மக்கள் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள இன்றைய நிலை தொடருமானால், 4 மில்லியன் மக்கள் பசி காரணமாகவே இறக்கக்கூடிய ஆபத்தும் ஏற்படலாம்" என்று, ஐ. நா. வின் புனர்வாழ்வு நடவடிக்கைப் பிரிவைச் சேர்ந்த சோலி பேண் ஹெய்ம் கூறுகின்றார்.

வரட்சிக் காலமான நவம்பர் மாதத்தில், ஆயிரக்கணக்கான படையினரும், பாரிய போர்க் கருவிகளும், காட்டுமிலிருந்து நைல்நதியூடாகத் தட்டைப் படகுகளில் ஜூபாவின் தெற்கு நகரத்திற்கு வந்து இறங்கியதிலிருந்தே, தாக்குதல் நடக்கப்போகிறது என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நகரம், சூடான் எல்லைக் கோட்டிலிருந்து சுமார் 150 கிலோ மீற்றர் தொலைவிலுள்ளது.

ஜனாதிபதி ஓமர்- அல்- பஷீர், தமது ஜனநாயக இஸ்லாமிய முன்னணியினது அதிருப்தியாளரின் அழுத்தத்தினால், ஒழுக்காற்றினைத் தூண்டவும், எதிர்க்கட்சியின் வாயை அடக்கவுமென்ற பெயரில், "ஜிகாத்" எனப்படும் "புனிதப் போரிற்" படையினரை ஈடுபடுத்தியுள்ளதாகத் தோற்றுகிறது. "கிளர்ச்சியாளரை வெற்றி கொள்வதிலேயே, பஷீர் தமது எதிர்காலத்தைப் பணயம் வைத்திருக்கிறார். அவரின் வாழ்வே, அதிலேதான் தங்கியுள்ளது. அவர் இவ் விடயத்தில் துணிவுடன் உள்ளார்" என்று, தெற்கில் கடந்த ஏழு ஆண்டுகளாக நிவாரணப் பணியில் ஈடுபட்டுவரும் ஒருவர் கூறினார்.

கிளர்ச்சியாளருக்குப் பொருள் விநியோகம் நடவாதபடி, அவற்றிற்கான வழிகளைத் தடுப்பதற்கு உகண்டாவினதும், சயரினதும் எல்லைக்கு அருகிலே அவர்கள் வசமுள்ள நகரங்களை வரட்சிக் காலத்துக்கு இரு மாதங்கள் முன்பாகவே வசப்படுத்துவது, அரசின் முதலாவது இலக்காகும். கடந்த மாதம் கனரகப் பீரங்கிப்படையும், எம்.ஐ.



இருமுனைப் போர்:- கிறிஸ்தவ கிளர்ச்சியாளர் முஸ்லீம் ஜிகாத் தினரைத் தடுத்து வைத்திருந்தால் சமீபிக்கும் "பசிப் பருவம்" வரட்சிக்காலத்தில் அவர்கள் உயிருக்காகப் போராட வேண்டிய நிலை ஏற்படும்.

ஜி. போர் விமானங்களும் பின்னணியில் நின்று உதவ, 100 கிலோ மீற்றருக்கும் குறைவான அண்மைப் பிரதேசத்தில், நான்கு வேறு இடங்களிலே படைகள் தாக்குதலை நடத்தின. எஸ். பி. எல். ஏ. தலைவர்கள், தாங்கள் எதிர்த்துப் போர் நடத்தினாலும், அரசு தரப்பிலுள்ள அதிக பட்சப் படை எண்ணிக்கைக்கும், பாரிய சூட்டுத் திறனுக்கும், தங்களால் ஈடுகொடுக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். "அவர்கள், நகரங்களைக் கைப்பற்றலாம். ஆனால், இது போரை முடிவுக்குக் கொண்டு வராது. நாங்கள் எமது மறைவிடங்களுக்குத் திரும்பி, அங்கிருந்து தாக்குவோம்; வெற்றியும் பெறுவோம்" என்று எஸ். பி. எல். ஏ. யின் பிரதான பேரணிக் கிளையின் தலைவர் சல்வா கீர் சொன்னார்.

தற்போது, எஸ்.பி.எல்.ஏ வசமுள்ள நகரங்களை அரசு கைப்பற்றிய போதும், அது எதனையும் சாதிக்கப் போவதில்லை என்று இராஜதந்திரிகளும், நிவாரண உதவிப் பணியாளர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள், வடக்கு, தெற்குப் பகுதிகளிடையேயும், அராபியர், ஆபிரிக்கர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களிடையேயும் நிலவும் ஆழமான பிரிவினைகளை, போரின் மூலமாக முடிவுக்குக் கொண்டுவர இயலாது. குலக்குழுக்கள் இடையே கிளர்ச்சியைத் தூண்டி, போரில் தீவிரமாகப் பங்கு கொள்ளவைத்து, அதனால் 1.3 மில்லியன் சூடானியரின் உயிர்கள் பலியானதால் ஏற்பட்டுள்ள சிக்கல் தீர்க்க முடியாதவாறு ஆழவேரூன்றி விட்டது.

புதுப்பிக்கப்பட்ட போரானது, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் அனைத்தையும் நிலைகொள்ளாது அழித்து விட்டது. உள்நாட்டுத் தலைவர்களும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் றேகனும், கன்ரபறி அதிமேற்றிராணியாரும் போர் நிறுத்தஞ் செய்யுமாறு பஷீரை அறிவுறுத்திய முயற்சிகள் அனைத்தும் தோற்றுவிட்டன. இருந்த போதிலும், நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள பன்னிரண்டு குழுக்கள், சூடானுக்கு உதவி வழங்கும் நாடுகளை பஷீரின் மனமாற்றத்துக்கான முயற்சியில் ஈடுபடுமாறு வேண்டுகின்றன, இன்றைய போரானது மற்றைய பகுதிகளுக்கும் பரவுமானால், ஏற்படக்கூடிய விளைவு நினைக்கவே முடியாததாயிருக்கும் என்பது, அவர்கள் கொண்ட முடிவு.

1988 இல் ஏற்பட்ட வரட்சிப் பஞ்சத்துக்கு 280,000 சூடானியர் பலியானார்கள். இவ்வாண்டும் வரட்சி, பயிர் விளைச்சலைப் பெரிதும் பாதித்திருப்பதால், ஏற்கனவே தெற்கில் நிலைமை படு பயங்கரமாகியுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்பு, "பசிப்பருவம்" எனப்படும் பஞ்சகாலம் உருவாகி, எல்லாக் கிராம மக்களும் உணவைத் தேடி வெளியேறி விட்டார்கள். எஞ்சிய தெற்குப் பகுதிகளில், நிவாரண உதவி வழங்குவதற்கும் முடியாதவாறு போர் தொடங்கி, படிப்படியாகப் பரவி வருகிறது. "பொருள் விநியோகத் தொடர்புப் பாதை எதுவும் இல்லை. மந்தைகளோ, தானியமோ இல்லை. அவசிய உணவு விநியோகம் ஏப்ரல் அளவில் மேற்கொள்ளப்படாவிட்டால், மக்களின் இறப்புத் தொடங்கிவிடும்" என்கிறார் நோர்வேயின் மக்கள் உதவிப்பிரிவு அதிகாரி ஹெல்ஜ் றோண். போரின் அழிபாடு ஒருபுறமாக ஏற்பட, திடீர் அழிவானது ஒரு மூலையில் தலையெடுக்கும் ஆபத்தும் நெருங்குகிறது.

"ரைம்," பெப்ரவரி 21, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆபிரிக்கா வெள்ளை இனவாதத்தின் இறுதி நாள்கள்:

## வெள்ளை நிறத் தீவிரவாதம் தோல்வி



தலைவர் மான்கோப்பேக்கு எதிராக நடந்த மக்களின் பேரணிகள் கடைகளை உடைத்துத் திருடுமளவுக்குச் சென்றுள்ளது.

சில வருடங்களுக்கு முன் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத நிகழ்ச்சிகள் இப்போது தென் ஆபிரிக்காவில் நடைபெறுகின்றன. புதிய அரசியல் யாப்பின்கீழ் நிறபேதமின்றி யாவருக்கும், ஆளுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் ஏப்ரல் மாதம் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. ஆட்சி அதிகாரம், கறுப்பின மக்களின் அபிலாசைகளை முன்னெடுக்கும் நெல்சன் மண்டேலாவைத் தலைவராகக் கொண்ட ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் (ANC) கைகளுக்கு மாறுவது நிச்சயமாகிவிட்டது. தேர்தல்களைக் குழப்ப வேண்டும், அல்லது ஆட்சி மாற்றத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற நோக்குடன் சில வெள்ளையர்களும், கறுப்பினத்தவர்களும் கூட்டாகவும், தனித்தனியாகவும் முயன்றுள்ளனர். பதவியை விட்டு இறங்கப்போகும் டிகிளார்க் அரசு மிகவும் நிதானமாக ஆபிரிக்கத் தேசிய காங்கிரசுடன் கலந்தாலோசித்தபடியே நிலைமையைச் சமாளித்து வருகின்றது. இது போன்ற ஆட்சி மாற்றம் வரலாறு காணாத நிகழ்வு என வர்ணிப்பது மிகப் பொருத்தம்.

1977 ஆம் ஆண்டளவில் தென் ஆபிரிக்காவில் ஆட்சிப் பீடத்தில் இருந்த வெள்ளை நிறவெறி அரசு, கறுப்பர்களின் கோரிக்கைகளை மழுங்கடிப்பதற்காகவும், உலகின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும் ஒருவரும் எதிர்பாராத அதிசய அரசியல் நடவடிக்கையொன்றை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கை தென் ஆபிரிக்கச் சரித்திரத்திற் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தென் ஆபிரிக்க நாட்டின் எல்லைக்குள் தமது ஆணைக்கு இணங்கும் கறுப்பின பாரம்பரியத் தலைவர்களின் ஆட்சியை மத்திய அரசு ஏற்படுத்தி உள்ளது. இப்படியான உள்நாட்டுச் சுயாதீனமுள்ள பத்து ஆட்சிகள் அப்போது நிறுவப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று போப்புதற்சுவானா (BophuthatSwana), வேறொன்று குவாசூலூ (Kwazulu). அப்போதைய அரசு இந்த அமைப்புக்களைக் கறுப்பின மக்களுக்காகத் தாம் நிறுவிய தாயகம் (Home Land) என்று வர்ணித்துள்ளது. சகல ஆட்சி அதிகாரங்களும் இந்தக் கறுப்பினத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தமது பதவியைக் காப்பாற்றவும், தம் மக்கள் மீது செலுத்தும் அதிகாரத்தை நிலைக்க வைக்கவும் இவர்கள் வெள்ளை அரசுக்கு மிகவும் விசுவாசமாக நடந்துள்ளனர்.

வெள்ளையர்களின் கையிலிருந்து கறுப்பவர்களுக்கு ஆட்சி மாற்றம் செய்வதற்காக நடந்த பேச்சுக்களிலெல்லாம் இவர்கள் கலக்க மறுத்ததோடு, தேர்தல்களிலும் பங்கேற்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளனர். போப்புதற்சுவானத் தலைவர் லூக்காஸ் மான்கோப்பே (Lucas Mangope) தனது நியமனத்தின் பின் மத்திய அரசு எடுத்த சகல இனவெறி நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்புக் கொடுத்து வந்துள்ளார். அண்மைக் காலத்தில் இவர் தனது நாடு தனித்தியங்கப் போவதாகவும், தென் ஆபிரிக்காவில் நடக்கும் அரசியல் மாற்றங்களை ஏற்கப்போவதில்லை என்றும் பிரகடனஞ் செய்துள்ளார். அத்துடன், தான் தேர்தல்களிற் பங்கேற்கப் போவதில்லை என்றும் தெரிவித்து உள்ளார். தேர்தலில் நின்றால் மக்களால் தாக்கி எறியப்படுவது நிச்சயம் என்று அவருக்கு நன்றாகத் தெரியும்.

இதே மாதிரி குவா சூலூவின் தலைவர் மங்கோசுத்து புத்தலேசியும் (Mongosuthu Buthelezi) மாற்றத்தை விரும்பாத தனது நிலைப்பாட்டை அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இவர் இன்காத்தா சுதந்திரக் கட்சி (Inkatha–Freedom Party) என்ற அரசியல் கட்சியை நிறுவி அதன் தலைவராகவும் இருக்கின்றார். கட்சித் தேர்தல் அறிக்கையை வெளியிட்டாலும், ஆங்காங்கு பிரச்சார மையங்களைத் திறந்தாலும் இவர் இறுதிவரை தேர்தல்களில் பங்கேற்கவே இல்லை. மான்கோப்பே போன்றில்லாது இவருக்கு இவருடைய இனத்தவர்கள் ஆகிய சூலூக்கள் மத்தியில் ஓரளவு ஆதரவு உண்டு. ஆனால், இரு தலைவர்களும் இவ்வளவு காலமும் அனுபவித்த சலுகைகளின் கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணமாக கறுப்பினத்தவர்கள், ஆட்சியைப் பிடிப்பதை வெறுத்தனர். தாம் கறுப்பர்களாக இருந்தும் விட்டுக் கொடுக்க மனமில்லாத வெள்ளை இனத் தீவிரவாதிகளுடன் நெருக்கமாக உறவாடியதோடு அவர்களுக்குப் புகலிடமும் கொடுக்கத் தலைப்பட்டுள்ளனர். பதவி ஆசையும், அரசியற் சுயநலமும் எவ்வளவு தூரம் செல்லும் என்பதற்கு இந்த இரு தலைவர்களின் செயற்பாடுகள் நல்ல உதாரணமாக அமைகின்றன. மான் கோப்பேக்கு மக்கள் கொடுத்த அரசியற் பாடமும் இவர்போன்ற சுயநலமிகளுக்கு தென் ஆபிரிக்காவில் எதிர்காலம் இல்லை என்பதைக் காட்டுகின்றது.

தேர்தல்கள் மூலம் தென் ஆபிரிக்கா ஒரு பல் இன மக்கள் ஆட்சி நாடாக மாறுவதற்கு முன் அதைத் தடுக்கும் நோக்குடன் பல்லாயிரக் கணக்கான பழைமை விரும்பி வெள்ளை இனத் தீவிரவாதிகள் ''விடுதலை முன்னணி'' என்ற அமைப்பை நிறுவியுள்ளனர். ஆயுதம் தாங்கிய இதன் அங்கத்தவர்கள் வாகனத் தொடர்களில் பவனி வருகையில் தெருவில் போகும் அப்பாவிக் கறுப்பின மக்களைச் சுட்டுக் கொல்லும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். தமது இறுதிக் காலம் நெருங்கிவிட்டதை இவர்கள் சற்றேனும் உணரவில்லை. டிகிளார்க் அரசு பொறுமையிழந்த நிலையில் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று இவர்கள் சிறிதளவேனும் உணரவில்லை.

அதே சமயத்தில் போப்புதற் சுவானாவில் அதன் தலைவர் மான் கோப்பே தேர்தல்களில் பங்கு பற்றப் போவதில்லை தென் ஆபிரிக்க ஆட்சியை ஏற்காமல் தனது நாடு தனித்து இயங்கும் என்று பிரகடனஞ் செய்தபின் மக்கள் கொதித்து எழுந்தனர். ஒரு வார காலமாக மக்கள் பேரணிகளும், கல்லெறிகளும், தீ வைப்புக்களும் பரவலாக நடைபெற்றன. மக்களைக் கட்டுப்படுத்த இயலாத மான்கோப்பே தனக்கு உதவ வரும்படி மேற்கூறிய வெள்ளை இனத்தீவிரவாத அமைப்புக்கு அழைப்பு விடுத்தார். இது இரு பகுதியினருக்கும் ஓர் ஆபத்தான அழைப்பு என்பது பின் நடந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தங்கள் உல்லாச ஊர்திகளிலும், ஜீப் வண்டிகளிலும் தெருவில் போவோரைச் சுட்டபடி போப்புவதற் சுவானாவுக்குள் வெள்ளையர்கள் நுழைந்தனர். நெல்சன் மண்டேலாவுடன் அவசர மாநாடொன்றை நடத்திவிட்டு ஜனாதிபதி டிகிளார்க் தென் ஆபிரிக்க இராணுவத்தின் 2,000 பேர் கொண்ட அணியையும், ஆயுத பாணிகளான காவல் துறையினரையும் நிலைமையைக் கட்டுப்படுத்த அனுப்பி வைத்தார். இந்நிடையில் போப்புதற் சுவானாவின் இராணுவ அணிகள், தலைவர் மான்கோப்பேயின் ஆணையை மீறி இங்கும் தேர்தல்களை நடத்தும்படி கூச்சலிடும் மக்களுடன் சேர்ந்து கொண்டனர். இவர்கள் அத்துமீறி நுழைந்த தீவிரவாதிகளை ஒரு நாள் வரை நடந்த போரில் அடக்கினர். ஆனால், மேலும் பல தீவிரவாத அணிகள் வந்தபடியே இருந்தனர். இவர்கள் வருகையும், டிகிளார்க் அனுப்பிய இராணுவத்தின் வருகையும் ஒரே சமயத்தில் நடந்த படியால் மேலும் அசம்பாவிதங்கள் நடக்க இடங் கிடைக்கவில்லை.

இனி ஒன்றும் செய்ய முடியாதென்ற நிலையில் மான்கோப்பே தேர்தல்களில் தான் பங்குபற்றப் போவதாக அறிவித்தார். ஆனால் மத்திய அரசு இவரைப் பதவி இறக்கி விட்டுத் தேர்தல்கள் முடியும்வரை போப்புதற் சுவானாவின் அலுவல்களைக் கவனிக்கத் தனது பிரதிநிதியை அனுப்பி வைத்துள்ளது. போப்புதற் சுவானாவில் நடந்தவை ஒரு திருப்பு முனை என வர்ணிக்கப்பட்டுள்ளது. தேர்தல்களை இதுவரை காலமும் பகிஷ்கரிக்கப் போவதாகத் தெரிவித்த தீவிரவாத வெள்ளையர் அமைப்புக்கள் இறுதி நேரத்தில் மனதை மாற்றிக் கொண்டன. அவசரமாகத் தம்மை அரசியல் கட்சியாகப் பதிவு செய்துகொண்ட இவர்கள், தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றனர். வெள்ளையர்களும், கறுப்பர்களும் இவர்களைத் தள்ளி வைப்பது நிச்சயம் என்று சொல்லலாம். இப்போது தேர்தல்களில் கலக்காமல் இருப்பது இன்காத்தா சுதந்திரக் கட்சி ஒன்றுதான். இதன் தலைவர் புத்தலேசிதான், தேர்தல்களைக் குழப்பும்



தெருவால் சென்ற கறுப்பு இனத்தவர் ஒருவரைக் கொன்ற காரில் வந்த மூவரில் ஒருவர் காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையிலும், மற்ற இருவர் உயிருக்கு மன்றாடுவதையும் இதிற் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று பகிரங்க வாக்குறுதி கொடுத்துள்ளார். வெள்ளை இன வெறியர்களின் நண்பனாக இவ்வளவு காலமும் செயற்பட்ட புத்தலேசி இனிக் காலப்போக்கில் இருந்த இடந் தெரியாமல் மறைவது தவிர்க்க முடியாததொன்றாகும். நெல்சன் மண்டேலா மீதும் அவருடைய ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் மீதுங் கொண்ட பொறாமையே பெரும்பாலும் புத்தலேசியை இயக்கி வந்துள்ளது. வெள்ளை இன வெறியர்களுக்கு போப்புதற் சுவானாவில் கிடைத்த பலத்த அடி, இனிமேல் அவர்கள் தலை தூக்க மாட்டார்கள் என்பதை நிச்சயப்படுத்தி விட்டது. செய்மதிப் படங்கள் மூலம் மூன்று வெள்ளை இனத் தீவிரவாதிகள் காவல் துறையினரால் சுடப்படும் காட்சிகள் உலகெலாம் பரப்பப்பட்டுள்ளன. இப்படங்களை வெளியரங்கப்படுத்தாத தொடர்புச் சாதனங்கள் இல்லையென்று சொல்லுமளவுக்கு இவை பிரபல்யமடைந்துள்ளன.

டைம், மார்ச், 21, 1994.
நியூஸ் வீக், மார்ச், 24, 1994.

# தென் ஆபிரிக்காவில் ஓர் அமைதிப்படை

பல் இன மக்களைக் கொண்ட தேசிய பாதுகாப்புப் படையை நிறுவுவதில் தென் ஆபிரிக்க இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் அமைப்பின் கெரில்லாப் போராளிகள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். தென் ஆபிரிக்காவில் நடக்கும் திடீர் மாற்றங்களின் சின்னம் என்று இதைச் சொல்லலாம். வெள்ளையர், கறுப்பர் என்று இன பேதமின்றி இந்த தேசிய பாதுகாப்புப் படைக்கு ஆட்சேர்ப்பு நடந்துள்ளது. இதன் பிரதான நோக்கு நாட்டில் அமைதி காப்பதே. இதன் உத்தியோக பூர்வப் பெயர் - தேசிய அமைதிகாக்கும் படை. ஆங்கிலத்தில் இதன் சுருங்குப் பெயர் என். பீ. கே. எப் (NPKF).



கறுப்பர்களைக் கூடுதலாகக் கொண்ட தென் ஆபிரிக்க அமைதிப்படை குழப்பங்களை அடக்கப் பயிற்சி பெறுகின்றது.

இப்படையின் தலைவர் ஒரு கறுப்பினத்தவர். இவர்தான் மேஜர்–ஜெனரல் கேபிரியல் றமுஸ்வானா. இவர் சொல்கிறார்: "1990 ஆம் ஆண்டுவரை எதிரும் புதிரும் ஆக கடும்போர் புரிந்த பலர் இந்தப் படையில் இருக்கிறோம். இப்போது எங்கள் பொதுக் குறிக்கோள் எமது நாட்டின் அமைதியை நிலை நாட்டுவதே" என. இவரது புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் மேஜர் திசிமேன் சோவியத் ருஷ்யாவிலும், கிழக்கு ஜேர்மனியிலும் பயிற்சி பெற்றவர். ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் படையின் மூத்த அதிகாரிகளில் இவர் ஒருவராவார், வெள்ளையர்கள் மீது கடுந் தாக்குதல்கள் நடத்தி முன்னணிக்கு வந்தவர் மேஜர் திசிமேன். அவர் சொல்கிறார்: "ஒரே அணியில் இரு இனத்தவர்களும் ஒன்றாக செயற்படுவது கஷ்டம் தான். மனமாற்றம் மிகவும் அவசியம்".

இந்த அணியை ஒரு காவல் துறைத் தொடர்புடையதென்று தான் விபரிக்க வேண்டும். தேர்தல்கள் நடந்தபின் எதிர்பார்க்கப்படும் குழப்பங்களைக் கூடியவரை அமைதியான முறையில் அடக்குவதுதான் இதன் நோக்கம். இப்படையில் மேஜர் திசிமேன் சுட்டிக்காட்டிய மனமாற்றம் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றது. வெள்ளை இனத்தவரான மேஜர் சாட்சிமித் "குழப்பங்களைக் கட்டுப்படுத்துவது தான் எங்கள் பிரதான வேலை. இதில் நிற அடிப்படையில் அபிப்பிராயபேதம் எமக்கிடையில் கிடையாது" என்று சொல்கிறார். பல பொதுநலவாய நாடுகளிலிருந்து பயிற்சி கொடுக்கும் அதிகாரிகள் வந்துள்ளனர். இந்த அமைதிப்படையில் தொடக்கத்தில் 5,000 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதை 10,000 ஆக விரிவுப் படுத்தத் திட்டமிடப்பட்டுளது. தேர்தல் காலத்திலும், தேர்தலுக்குப் பின்பும் தம்மால் சரிவரக் கடமைபுரிய முடியும் என்று மேஜர் ஜெனரல் கேபிரியல் றமுஸ்வானா தன்னம்பிக்கையுடன் கூறியுள்ளார்

டைம், பெப்ரவரி 28, 1994.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அமெரிக்க ஒற்றனின் துரோகமும், வீழ்ச்சியும்.



ஒற்றன் ஒருவனின் மனப் போராட்டம், தேசம், பணம் என்ற இரு முனைகளைச் சுற்றி இருக்கும். சில சமயம் தேசப்பற்று பின் தள்ளப்பட்டு, பணத்தாசை வெல்வதுண்டு. எதிரிகள் நீட்டும் பணத்தை ஏற்கும்போது, அவன் தனது நாட்டுக்குத் துரோகம் இழைப்பதோடு, தனது சகாக்களையும் காட்டிக் கொடுக்கின்றான். இதனால், நாட்டின் பாதுகாப்பு சீர் குலைவதுடன், இவனுடைய அமைப்பைச் சேர்ந்தவர்களின் உயிரும் பறிமுதலாகின்றது. இவ்வருட மார்ச் மாத முற்பகுதியில், அமெரிக்க சி. ஐ. ஏ உளவுத்துறையைச் சேர்ந்த அல்ட்றிச் அமிஸ் (ALDRICH AMES) என்பான் கைது செய்யப்பட்டுள்ளான். ருஷ்யாவிடமிருந்து பெற்றுக்கொண்ட பெருந்தொகைப் பணத்திற்காக, இவன் தனது நாட்டு இரகசியங்களைக் கொடுத்ததுடன், அமெரிக்காவுக்கு தகவல்கள் கொடுத்து வந்த ருஷ்யப் பிரஜைகளையும் காட்டிக் கொடுத்துள்ளான். இதன் காரணமாக, பத்துக்கு மேற்பட்டோரின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க உளவுத்துறைச் சரித்திரத்தில், இதுபோன்ற பாரதூரமான நிகழ்ச்சி நடந்ததில்லை என்று விபரிக்கப்பட்டுள்ளது.

**சி. ஐ. ஏயிலிருந்த இரட்டை முகவரான *அல்ட்றிச் அமிஸ்* அமெரிக்காவின் இரகசியங்களை ருஷ்யாவுக்கு விற்றதுடன், அமெரிக்காவுக்குத் தகவல் கொடுப்பவர்களையும் காட்டிக் கொடுத்தான்.**

1985 ஆம் ஆண்டிலிருந்து, இவன் தனது துரோக நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நடத்தி வந்துள்ளான் என்று சொல்லப்படுகின்றது. இத்தனை காலமும் இவன் இவ்வாறு நடப்பதற்கு, சி. ஐ. ஏ அமைப்பில் உள்ள நிர்வாகச் சீர்கேடுகளே காரணம் எனப் பத்திரிகைகள் குற்றஞ் சாட்டுகின்றன. அமிஸ் கூடுதலாக மதுபானம் பாவிப்பதையும், பல ஆடம்பரப் பொருள்களை வைத்திருப்பதையும், அவர்கள் புலனாய்வு செய்யாமல் விட்டுவிட்டனர். ஒவ்வொரு சீ. ஐ. ஏ அலுவலரும் எடுக்க வேண்டிய வாய்மைப் பரிசோதனையில், அமிஸ் 1986, 1991 ஆகிய வருடங்களிற் பொய்சொல்லியதாக முடிவாயிற்று. ஆனால், ஒருவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவனுடைய வருடாந்த ஊதியம் 69, 843 டொலர். அவனுடைய வாழ்க்கை முறையோ, மிகக்கூடுதலான வருமானம் பெறுபவரின் ஆடம்பர வாழ்க்கையாய் இருந்தது. வங்கிக் கடன் போன்ற ஓர் உதவியும் பெறாமல், 540,000 டொலர் பெறுமதியான குடியிருப்பு வீட்டை ரொக்கப்பணம் கொடுத்து இவன் வாங்கியுள்ளான். பின்பு, அதே வீட்டைத் தனது இஷ்டத்திற்கு மாற்றியமைப்பதற்காக, 100,000 டொலர் வரை செலவு செய்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளான். அதிவேகமும், உல்லாசத் திறனும் உள்ள, 65,000 டொலர் கொடுத்து வாங்கிய காரில் இவன் பவனி வருவது வழக்கம். இவற்றுக் கெல்லாம், பணம் எப்படிக் கிடைத்தது? என்ற கேள்விக்கு தென் — அமெரிக்காவில் உள்ள கொலம்பியாவிற் (COLOMBIA) பிறந்த தனது இரண்டாவது மனைவிக்கு ஒரு மரணசாசனம் மூலமாகக் கிடைத்த பணம் என்று பதில் கூறியுள்ளான். இந்தப் பதில், புலனாய்வு செய்யப்படவில்லை. சி. ஐ. ஏ அமைப்பு விதிகளின்படி, பிறநாட்டுப் பெண்ணை விவாகம் செய்வது, பெரும்பாலும் இயலாத காரியம். ஆனால், அமிஸ் ஒரு கஷ்டமுமில்லாமல் இதைச் செய்துள்ளான்.

மேலும், இவனுடைய இரண்டாவது மனைவி, தகவல்கள் கொடுத்த வகையில் சி. ஐ. ஏ யிடம் ஊதியம் பெற்றுள்ளாள். இப்படியான ஒருத்தியை மணம் செய்வதென்றால் மேலிட அநுமதி பெறல் வேண்டும். அமிஸ் விஷயத்தில், இப்படி அடுக்காகப் பல நிர்வாக ஒழுக்கக் கேடுகள் நிகழ்ந்துள்ளன. இவனைப் போன்று, இன்னும் எத்தனை நபர்கள் சி. ஐ. ஏ. நிர்வாகத்தில் இருக்கிறார்கள் என்பதுதான் இப்போதைய கேள்வி.

புலனாய்வுக்குப் பொறுப்பான செனற் சபையின் நிர்வாகக் குழு, சி. ஐ. ஏ. த் தலைவர் ஜேம்ஸ் வூல்சி (James Woolsey)) அவர்களைப் புலன் விசாரணை செய்ய ஆரம்பித்துள்ளது. கடந்த பத்து வருடங்களாக, சி. ஐ. ஏ வட்டாரத்தில் நிர்வாகச் சீர்கேடும், நாட்டுக்குத் துரோகமும் மலிந்துள்ளன என்ற ரீதியில், வூல்சி விசாரிக்கப் பட்டுள்ளார். இதுவரை காலமும், நிர்வாகத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், சி. ஐ. ஏ தான்தோன்றித் தனமாக நடந்துள்ளமை ஒத்துக்கொள்ளப் பட்ட ஓர் உண்மை. 1986 தொடக்கம் செனற் சபையின் இந்தக் குழு, பாதுகாப்பை பலப்படுத்தும்படியும், துரோகிகளைத் துரத்தும் நடவடிக்கை எடுக்கும் படியும், ஐந்து தடவைக்குமேல் கேட்டுள்ளது. ஆனால், சி. ஐ. ஏ செவி சாய்க்கவில்லை. அமிஸ் விவகாரத்தின் பயனாக, செனற் சபை நிர்வாகக் குழு, சி. ஐ. ஏ நிர்வாகத்தைத் தனது கட்டுப்பாட்டிற் கொண்டுவருவது நிச்சயம். அமிஸ் விவகாரம், ஒரு தனி நிகழ்ச்சி அல்ல. அது, ஒட்டுமொத்தமான நிர்வாகச் சீர்கேட்டின் சின்னம் என்பதை, வூல்சி அவர்கள் தயக்கமின்றி ஒத்துக் கொண்டுள்ளார். தான், மூன்று விதமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கப் போவதாகவும், வூல்சி செனற் சபைக்கு உறுதி கூறியுள்ளார். எவ்வாறு, இத்தனை நெடுங் காலமாக அகப்படாமல், தனது நாச வேலையை அமிஸ் செய்துள்ளான்? பாதுகாப்புச் சீர்கேடு என்பதை எவ்வாறு அமிஸ் பயன்படுத்தியுள்ளான்? எதிர்காலப் பாதுகாப்பையும், உலகளாவிய புலனாய்வையும் எவ்வாறு மறுசீரமைக்கலாம்? என்பனவே அந்த மூன்றுமாகும்.

அமைதியான குடும்பப் பின்னணி, புத்திக் கூர்மையற்றவன். சோம்பேறி, சொன்ன வேலை செய்யும் கிளிப்பிள்ளை இப்படியான இலட்சணங்கள் உள்ளவன் அல்ட்றிச் அமிஸ். இதுபோன்ற குறைந்த மதிப்பீடு அவனுக்குச் சாதகமான முறையில் அமைந்து அவனுடைய துரோக நடவடிக்கைகளுக்கு உதவியுள்ளது. அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாகாணத்தில் மிகவும் மதிப்புக்குரிய குடும்பத்திற் பிறந்தவன் அமிஸ். தந்தை ஒரு பேராசிரியராகக் கடமையாற்றிவிட்டு 1951 ஆம் ஆண்டு சி. ஐ. ஏ யிற் பகுப்பாய்வாளராகச் சேர்ந்துள்ளார். தாய் ஓர் ஆசிரியை. அமிஸ் இந்த உளவு நிறுவனத்திற் சேருவதற்குத் தந்தையின் உதாரணம் உதவியிருக்கலாம். 1962 இல் அமிஸ் பயிற்சியாளனாக சி. ஐ. ஏ யின் பயிற்சிப் பாசறையிற் காலடி எடுத்து வைத்தான். இவனுக்குப் பயிற்சி கொடுத்தவர்களின் கணிப்பில் இவன் ''சுறுசுறுப்பு இல்லாத வேலையில் ஆர்வமில்லாத தூங்கு மூஞ்சி.'' தனது சுயகுணத்தை மறைப்பதிற் கெட்டிக்காரன் என்பது இப்போதைய கணிப்பு. சி. ஐ. ஏ. யில் அலுவலக ஊழியராக இருந்த நான்சி என்ற பெண்ணைத் திருமணஞ் செய்து 1985 இல் விவாக இரத்துச் செய்து கொண்டான். இதே வருடம் தென்அமெரிக்க நாடான கொலம்பியாப் பெண்மணி மறியா டெல் றொசாறியோ கசாஸ் டூப்புயி என்பவளை இரண்டாவது மனைவியாக வரித்துக் கொண்டான்.

இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு வந்திருந்த விருந்தினர் எல்லோருக்கும், திராட்சை மது மாத்திரம் குடிப்பதற்குக் கொடுக்கப்பட்டது. ‘‘என்னிடம் பணம் இல்லை; சாப்பாடு கொடுக்க முடியவில்லை;'' என்று மாப்பிள்ளை கூறினான். ஆனால், இருவருடைய வங்கிக் கணக்குகளிலும், ருஷ்யாவின் உளவுப்படை கே. ஜீ. பி கொடுத்த பெருந்தொகைப் பணம் இருந்தமை, இப்போது தெரியவந்துள்ளது. இருவரும் கூட்டாக ருஷ்யாவுக்காக உளவு பார்த்து, அதற்குரிய பணத்தைப் பெற்று வந்துள்ளனர். யார், யாரை இயக்கினர் என்பது இதுவரை ஒரு புதிராகவே இருக்கின்றது. அமிஸ் தனது இரண்டாவது மனைவியை, ருஷ்யாவுக்காக உளவு பார்ப்பதற்குக்கூட்டுச்சேர்த்தானா? அல்லது, இவள் தான் அமிஸை இயக்கினாளா? என்பது சரிவரத் தெரியவில்லை. எப்போது, என்ன சூழலில், அமிஸ் ருஷ்யாவின் ‘கைக்கூலி' யாக மாறினான்? என்பது இன்னும் புலப்படவில்லை, ஆனால், ருஷ்யாவை அமெரிக்கா கண்காணித்து வந்தமையின் பெறுமதி வாய்ந்த விபரங்களை, இவன் தனது இரண்டாவது மனைவியின் அநுசரணையுடன் ருஷ்யாவுக்குக் கொடுத்துள்ளான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. சோவியத் ருஷ்யாவுக்கும், பின்பு ருஷ்யாவுக்கும், பணத்திற்காக அமெரிக்காவின் இரகசியங்களைக் கொடுத்த குற்றத்திற்காக, இவ்வருடம் மார்ச் மாதம் அல்ட்றிச் அமிஸ் கைது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படும்போது, அவனுடைய இரண்டாவது மனைவியும் அதே சமயம், அதே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டாள்.

முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், கொலம்பியா நாட்டுப் போதைவஸ்துக் கடத்தற்காரர்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்த காலத்தில், அமெரிக்க இரகசியங்கள் அமிஸ் மூலமாய்கடத்தற் காரர்களுக்குச் சென்றுள்ளனவா? என்ற கேள்வி இப்போது கேட்கப்படுகின்றது. அதே சமயம், கொலம்பியாவின் மேட்டுக் குடியிற் பிறந்த தனது இரண்டாவது மனைவியின் செல்வாக்கைப் பயன்படுத்தி, கொலம்பிய அரசின் இரகசியங்களை அமிஸ் பெற்று, கடத்தற் காரர்களுக்கு அவற்றைக்கொடுத்தானா? என்றும் விசாரணைகள் ஆரம்பித்துள்ளன. கொலம்பியா அரசும், இந்தப் பெண்ணின் பழைய நடவடிக்கைகளை ஆராயத் தொடங்கியுள்ளது. அத்துடன், கடத்தல் காரர்களுக்குச் சாதகமாக, அமெரிக்க நிர்வாகத்திற்குப் பொய்யான தகவல்களை அமிஸ் கொடுத்தான் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. இதே வேலையை, ருஷ்யா சம்பந்தமாகவும் அவன் செய்திருக்கலாமல்லவா? அதனால் தான், 'இரட்டை ஒற்றன்' (Double Agent) என்ற பெயர் அமிஸுக்குச் சூட்டப்பட்டுள்ளது 1985 அளவிலேயே, தம்மத்தியில் எதிரியின் கையாள் ஒருவன் புகுந்து விட்டான் என்று சி.ஐ.ஏ சந்தேகிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் ஒருவரேனும், மந்த புத்தியுள்ள இந்தச் சோம்பேறியைச் சந்தேகிக்கவில்லை.

சி. ஐ. ஏ யின் சரித்திரத்தில், 1985 ஒரு மறக்கமுடியாத வருடமாகும். அமிஸிலும் பார்க்க, மிகவும் மோசமான துரோகி கோவாட் என்பவன் கைது செய்யப்படுமுன், ருஷ்யாவுக்குத் தப்பிச் சென்று அடைக்கலம் புகுந்துள்ளான். இவனுக்குத் துப்புக் கொடுத்தது அமிஸ் என்று, இப்போது சந்தேகிக்கப்படுகின்றது. மிகவும் பெறுமதிவாய்ந்த ருஷ்ய இராஜதந்திரிகள் இருவர், சி.ஐ.ஏயுடன் ஒத்துழைத்து வந்துள்ளனர். இந்த இரகசிய உளவாளிகள் பற்றி, அமிஸ் ருஷ்யாவுக்கு அறிவித்துள்ளான். அதன் விளைவாக, அந்த இருவரும் ருஷ்யாவுக்கு அழைக்கப்பட்டு, தூக்கிலிடப்பட்டுள்ளனர். 1989 அளவிலேயே, அமிஸ் மீது சந்தேகம் கொள்வது தொடங்கிவிட்டது. ஆனால், அவனுடைய அதிர்ஷ்டமும், நிர்வாகத்தின் அசமந்தப் போக்கும், தொடர் நடவடிக்கை எடுப்பதைத் தடுத்துள்ளன. பெரும் நட்டம் விளைவிக்க இயலாத வண்ணம், சி.ஐ.ஏ யின் ஒரு ''மூலைக்கு'' 1991 இல் அமிஸ் மாற்றப்பட்டான். அதற்கிடையில், ருஷ்ய உளவுத்துறையிலிருந்து



இந்தத் தபாற் பெட்டி மூலம் இரகசியங்களும், அதற்குரிய பணமும் பரிமாறப் பட்டுள்ளன.

கொண்டு, அமெரிக்காவுக்குத் தகவல் அனுப்பிக்கொண்டிருந்த ருஷ்ய அதிகாரியை அமிஸ் காட்டிக் கொடுத்து விட்டான். இது அமெரிக்காவுக்குப் பலத்த அடி என்பதில் ஐயமில்லை. 1991 ஆம் ஆண்டு தொடக்கம், கணவனும், மனைவியும் மிகவும் கூர்மையாகக் கவனிக்கப்பட்டு வந்துள்ளனர். அவர்கள் அறியாமல், தூர இருந்து கண்காணிக்கும் கருவிகள், அவர்களுடைய தொலைபேசி, கணனிப் பொறி போன்றவற்றிற் பொருத்தப்பட்டுள்ளன. கைதாக முன்பாகவே, சகல ஆதாரங்களும் திரட்டப்பட்டுள்ளன. அவர்கள் இருவரின் வீட்டுச் சம்பாஷணைகள் கூட, பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நாசவேலையிலே, கணவனுக்குச் சரி நிகராக மனைவி உழைத்து உள்ளமை, இவ் உரையாடல்களிலிருந்து புலப்படுகின்றது.

அமிஸ் தம்பதியினரின் கைதின் பின்பு, ருஷ்யாவுக்குக் கொடுக்கப்படும் உதவிகள் யாவற்றையும் நிறுத்தும்படி, பல மட்டங்களிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதி கிளின்ரன், ருஷ்யாவுக்கு உதவுவதில் பிடிவாதமாக இருக்கின்றார். சி.ஐ.ஏ அமைப்பில், தலைகள் உருளும் காலம் வெகு தூரமில்லை. அத்துடன், இதன் மீதும், இதன் ஊழியர்கள் மீதும் அரசின் பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுகும் வாய்ப்பு நிச்சயம் உண்டு. பதினொரு வங்கிகளில், கணவன், மனைவி இருவரின் பெயர்களிலும் 2.7 மில்லியன் டொலர் பணம் வைப்பில் இடப்பட்டுள்ளது. இவர்களுடைய வீட்டைச் சோதனை போட்ட போது, பின்வரும் பொருள்கள் கைப்பற்றப்பட்டன:– பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட தங்க நகைகள், காப்புக்கள், பதினொரு வைரக்கற்கள் பதித்த மோதிரம், 119 ஃபிரஞ்சு நாட்டு வெள்ளிப் பாத்திரங்கள், ஓவியங்கள், ருஷ்யாவில் தங்குவதற்கான உல்லாச விடுதிகளின் உரிமைப் பத்திரங்கள், விலையுயர்ந்த வீட்டுத் தளபாடங்கள் இத்தியாதி. இவ்வளவுக்கும் நிகராக, என்னென்ன பெறுமதி வாய்ந்த தகவல்களை ருஷ்யாவிடம் நாம் கைநழுவ விட்டோமோ? என்று சி.ஐ.ஏ அமைப்பு மலைத்துப் போயிருக்கின்றது.

''ரைம்'', மார்ச் 7, 1994
ஜில் ஸ்மெலே',
புறூஸ் டபிள்யூ. நெலான்.

''ரைம்'', மார்ச் 2, 1994
ஜில் ஸ்மொலோ.

''நியூஸ் வீக்'', மார்ச் 14, 1994
டக்ளஸ் வோலெர், மெலின்டா லியு

தொகுப்பு: உலக உலா

இராஜ குடும்பத்தினர்:-

# கடைகளில் பொருள்கள் வாங்கித் திரிவது, அவருக்கு ஒரு சிகிச்சையாகிறது.

இளவரசி டயானா, பத்திரிகைகளில் தன்னைப்பற்றிய செய்திகள் வருவதனால் விரக்தியடைந்துள்ளார். அதனால் எழும் சங்கடங்களில் இருந்து தப்ப முடியாது தவிக்கிறார். சென்ற சில வாரங்களுக்கு முன்பு, அவர் தனது பொழுதை அமைதியாகக் கழிக்க எண்ணி வோஷிங்ரனுக்குச் சென்றார். ஆனால், பிரித்தானியச் செய்திப் படப்பிடிப்பாளர்கள் அவருக்கு முன்பே அங்கு தாவி, படம் பிடிப்பதற்காகப் புதர்களின் பின்னால் மறைந்து நின்று விட்டார்கள். சாமான்கள் வாங்குவதில் ஈடுபட்டு, சிறிது ஆறுதல் கொள்ள விழைந்தார் டயானா. உயர்தர விற்பனை நிலையத்திற்குச் சென்று, தனது அளவான 8-க்குப் பதிலாக 6 அளவில் ஜீன்ஸ் வாங்கியதும், அதுவும் ஒரு சங்கடச் செய்தியாக வெளிவந்து விட்டது. லண்டன் செய்திப் பத்திரிகைகள், இளவரசர் சார்ள்ஸ் உடனான தனது குழம்பிப்போன திருமண வாழ்வால், தானாகவே அவர் பட்டினி இருக்கிறார் என்று செய்தி வெளியிட்டன. அதன் பின்பு, மேலும் அமைதியான ஓர் இடம் நாடி, அவர் நியூயோர்க்குக்குச் சென்றார். அங்கேயும், அவர் கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்கிய பொழுது அதனைக் கொண்டும் செய்திகள் சோடிப்பது நின்றபாடாயில்லை. செய்திப்பத்திரிகைகள் விடாப்பிடியாகச் செய்திகள் வெளியிட்டன. ஆனால், 1994 இல் அவருடைய முகம் வெளிப்படாத ஒரு வெளியீடும் உள்ளது. அது, அரச குடும்பக் கலண்டராகும். அதனை வெளியிட்ட நிறுவனம், அவருடைய படம் அந்தக் கலண்டரில் வெளிவராத விதமாக அகற்றி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பக் கட்டுப்பாடு

# இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் அறிக்கை கிளப்பும் சர்ச்சை.



பாப்பரசரும், பிரச்சனையும்.

முக்கால் நூற்றாண்டு வயதை நெருங்கிக்கொண்டிருக்கும் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அண்மையிற் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக விடுத்த அறிக்கை பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. முழுவதும் இலத்தீன் மொழியில் தீட்டப்பட்ட கத்தோலிக்க ஆயர்களுக்கான 179 பக்கங்கள் கொண்ட பாப்பரசரின் இந்த அறிக்கை 'சத்தியத்தின் அழகுச் சொரூபம்' (Veritatis Splendor) என்று மகுடம் இடப்பட்டுள்ளது. காலப்போக்கில் கத்தோலிக்க மதச் சிந்தனையில் மென்போக்கொன்று புகுந்துள்ளதை இந்த அறிக்கை கண்டித்துள்ளது. மாத்திரைகள், உறைகள், பெண் உறுப்பில் வைக்கப்படும் வளையங்கள் போன்ற செயற்கைக் கருத்தடைச் சாதனங்கள் போன்றவற்றையும் இதே நோக்கத்துடன் செய்யப்படும் அறுவை வைத்தியமும் இந்த அறிக்கையால் தடை செய்யப்படுகின்றன. மாதா மாதம் இயற்கை பெண்களுக்குத் தரும் கருத்தரிக்கா நாள்களில் மாத்திரம் உடலுறவு வைக்கும்படி இது மேலும் வலியுறுத்துகின்றது. பொருளாதார, மற்றும் வேறு வசதிகளுக்காகப் பிறக்கும் குழந்தைகளின் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டாமென்பதே இதன் உட்பொருள்.

உலகளாவிய புத்திஜீவிகளுக்கும், சிந்திக்கத் தெரிந்த கத்தோலிக்க மத விசுவாசிகளுக்கும் இது ஒரு பலத்த அடியென்று சொல்லலாம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த மதக் கட்டுப்பாடுகளும், போதனைகளும் இருபதின் கடைக்கூறில் மீண்டும் அரங்கமேறியது வேதனைக்குரியதென்று பலர் கருதுகின்றனர்.

செயற்கைக் கருத்தடைக்கும், குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் பாப்பரசர் விடுத்த தடை உத்தரவு 16 ஆம் நூற்றாண்டில் மாட்டின் லூதர் கத்தோலிக்க மதத்தைப் பிளவு படுத்தியது போன்று இன்றும் செய்துவிடுமோ என்று அஞ்சப்படுகின்றது. பெரும்பாலான கத்தோலிக்க மதத்தினர் கருத்தடை செய்வதை இறையருளை இழக்கச்செய்யும் பாவமாக எண்ணாததே இதன் காரணம். ஆகவே தமது மனச்சாட்சியை மாத்திரம் நம்பி இம்மதத்தினர் பாப்பரசரின் கட்டளையை மீறும்போது மதத்தின் கட்டுக்கோப்புச் சீர்குலையும் பெருவாய்ப்புண்டு.

இன்று தென் அமெரிக்கா வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய ஐந்து கண்டங்களிற் கத்தோலிக்க மக்கள் வாழ்கின்றனர். தென் அமெரிக்கா வாழ் சனத்தொகையில் கத்தோலிக்க மதத்தினர் 39.6 வீதம் உள்ளனர். அதேபோன்று வட அமெரிக்காவில் 9.5 வீதமும், ஐரோப்பாவில் 25.6 வீதமும், ஆபிரிக்காவில் 12.00 வீதமும், ஆசியாவில் 12.1 வீதமும் உள்ளனர். இன்னும் 1.2 வீதத்தினர் இந்த ஐந்து கண்டங்கள் அல்லாத வேறு இடங்களிலும் வாழ்கின்றனர். ஆசியா கண்டத்தில் கத்தோலிக்க மத மக்களின் செறிவை இவ்விடத்தில் ஆய்வு செய்வது நலம்.

இதிலிருந்து ஆசியாவில் கத்தோலிக்க மதத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு பிலிப்பைன்ஸ் ஒன்றுதான் என்பது புலப்படும். 1993 ஆம் ஆண்டு இதன் சனத்தொகை 64.6 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் சனத்தொகை ஒவ்வொரு எட்டு மாதமும் ஒரு மில்லியனால் கூடுகின்றது என்பது பிறப்பு இறப்புப் புள்ளி விபரம். இது தடையின்றித் தொடருமாயிருந்தால் இன்னும் ஐந்து வருடங்களிலே இந்த நாட்டின் சனத்தொகை 72 மில்லியனாக உயர்ந்துவிடும். 1970 ஆம் ஆண்டளவில் பிலிப்பைன்சில் எடுக்கப்பட்ட திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாட்டால் சனத்தொகை இந்த அளவிலாவது நிற்கின்றது. அல்லாவிட்டால் இன்னும் பூதாகாரமாக வளர்ந்திருக்கும். எந்தவொரு நாடாயிருப்பினும் தனது பொருளாதாரத் திட்டமிடல் நடவடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைத் தொடங்கும் முன் நாட்டின் சனத்தொகையைக் கணக்கெடுப்பது மிகவும் அவசியம். இல்லையென்றால் இந்தியா போன்று சாண் ஏற முழம் சறுக்கும் கதையாகிவிடும். ''நாமிருவர் நமக்கிருவர்'' என்றதே அதிகம் என்று நமக்கு ஒருவர் போதும் என்ற இக்காலத்தில் பாப்பரசர் பதினாறைப் பெறச் சொல்வது நாட்டின் நிதியையும், வளத்தையும் பொறுத்த அளவில் மிகவும் அபாயகரமானதாகும்.

ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் தாய்லாந்து இன்று முன் உதாரணமாக உள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களில் இந்த நாடு தனது சனத்தொகை வளர்ச்சி விகிதாசாரத்தைக் குறைத்ததுடன் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கின்றது. கடந்த கால்நூற்றாண்டில் பொருளாதார மலர்ச்சியில் அபரிமித முன்னேற்றம் கண்ட உலக நாடுகளில் தாய்லாந்து ஏழாவதாக நிற்கின்றது. இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. சனத்தொகையானது கட்டுப்பாட்டில் இருக்கும் போது திட்டமிடல் எளிதாகிவிடும். பரலோக சாம்பிராஜ்யத்தில் இடம்பிடிப்பதற்காக இவ்வுலகிற் பெருஞ் சுமையைத் தூக்கும்படி பாப்பரசர் படு முட்டாள்தனமாக மக்களை ஏவுவதில் நியாயமில்லை.

கருத்தடைச் சாதனப் பாவிப்பும், குடும்பக் கட்டுப்பாடும், இன, மத, கலாசார வேறுபாடின்றி உலக மக்களால் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அரசுகளும் பொருளாதாரத் திட்டங்களையும், கல்வி, சுகாதாரம் போன்ற சமூக மேம்பாட்டு முயற்சிகளையும் திறம்பட நடத்த இதை ஊக்குவிக்கின்றன. தமது எதிர்ப்பால் மதங்கள் மக்களிடமிருந்து தம்மை அந்நியப் படுத்துகின்றன.

| நாட்டின் பெயர் | கத்தோலிக்க மதத்தினர் தொகை மில்லியன் | முழுச் சனத் தொகையில் எத்தனை வீதம்? |
|---|---|---|
| பிலிப்பைன்ஸ் | 53.5 | 84 |
| சீனா | 10.0 | 1 |
| இந்தியா | 9.8 | 1 |
| இந்தோனேஷியா | 5.8 | 3 |
| வியட்நாம் | 4.8 | 7 |
| தென் கொரியா | 2.3 | 5 |
| P. N. G | 1.3 | 34 |
| சிறீலங்கா | 1.2 | 7 |

## ஆசியாவின், நாலு மதங்களைச் சார்ந்த, நாலு பெரியார்களின் கருத்துக்கள்

### பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவின் உப ஆயர், தியடோறோ பக்கானி

பெரும்பாலான கத்தோலிக்க மக்கள் தடுமாறுகின்றனர். மதம் என்ன சொல்லுகிறது? என்பதை அவர்கள் அறிந்தும் தமக்குச் சரியெனப் பட்டதைச் செய்கிறார்கள். பெரும் பாலானமக்கள் கருத்தடைச் சாதனங்களைப் பாவிப்பதால், அது சரியாகி விடாது. கருத்தடைக்கு, இறைவனே தடைவிதித்துள்ளார். மனிதப் பிறப்பைக் கட்டுப்படுத்துவதற்கு, மனிதனுக்கு அநுமதி வழங்கப்படவில்லை. கருத்தடையில் ஈடுபடுவோர், இறைவனின் இடத்தைப் பிடிக்க முயல்கின்றனர். கருத்தடைப் பாவிப்பால், பாலுறவும் சீர்கேடுகளும், கள்ள உடலுறவுகளும் மலிந்துள்ளன. கருத்தடைப் பாவிப்பு, கருச்சிதைவுக்கும் வழி வகுத்துள்ளது. சனத்தொகைப் பெருக்கம் உண்மையான பிரச்சனை தான். ஆனால், இதற்காக நாம் கருத்தடையை அநுமதிக்க மாட்டோம். இயற்கை வழி ஒன்றைத் தான், நாம் எம்மதத்தினரைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்துகின்றோம்.

### பாகிஸ்தானிலுள்ள, இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகப் பேராசிரியர். மெஹ்மூத் காஸி

இது சம்பந்தமாக, இருவித அபிப்பிராயங்கள் நிலவினாலும், பெரும்பான்மையான இஸ்லாமிய அறிஞர்கள் கருத்தடையை எதிர்க்கின்றனர். இஸ்லாமுக்கு முந்திய அரேபியாவில், வறுமையின் காரணமாகச் சிசுக்கொலை நிகழ்ந்திருக்கின்றது. இதை, திருக்குர்ஆன் தடைசெய்கின்றது. இவ்வுலகிற் பிறக்கும் ஒவ்வோர் உயிருக்கும், தேவைப்பட்ட எல்லாவற்றையும் இறைவன் ஒழுங்கு செய்துள்ளான். இவ்வாறு, திருக்குர்ஆன் மொழிகின்றது. இஸ்லாமிய மதத்தினரின்

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையைப் பெருக்கும்படி, எமது மதத்தின் கட்டளை. மனைவியைத் தெரிவு செய்யும் போது, அவள் மகப்பேறுக்கு உகந்தவளா? என்று பார்க்கும்படி, அல்லாவின் கட்டளை. கள்ள உறவுகளை, இஸ்லாம் தடை செய்கின்றது. கருத்தடைச் சாதனங்கள், இதை ஊக்குவிக்கும். தனிப்பட்ட முக்கிய காரணங்களுக்காக, கருத்தடையை நபிகள் நாயகம் அநுமதித்துள்ளார். அதுவும், இயற்கை முறை ஒன்றையே. திட்டமிட்ட அரச நடவடிக்கையை, அவர் ஒரு போதும் அநுமதிக்கவில்லை. பொருளாதாரப் பிரச்சனைகள், சனப் பெருக்கத்தால் ஏற்படுகின்றன என்ற வாதத்தை, என் போன்ற அறிஞர்கள் ஏற்பதில்லை.

கட்டுரையை நிறைவு செய்வதற்கு, குழந்தைப்பேறு விகிதாசாரத்தையும், கருத்தடைச் சாதனப் பாவிப்பு வீதத்தையும் நோக்க வேண்டியுள்ளது.

| நாட்டின் பெயர் | மகப்பேறு விகிதம் | கருத்தடைச் சாதனப் பாவிப்பு வீதம் |
|---|---|---|
| பிலிப்பைன்ஸ் | 31 | 36 |
| இந்தியா | 30 | 43 |
| மலேசியா | 30 | 51 |
| இந்தோனேஷியா | 27 | 48 |
| சீனா | 21 | 72 |
| தாய்லாந்து | 21 | 66 |
| சிங்கப்பூர் | 16 | 74 |
| தென் கொரியா | 16 | 77 |
| ஹொங்கொங் | 13 | 81 |
| ஜப்பான் | 11 | 64 |

## ஸ்ரீலங்காவில், கொழும்புச் சர்வகலாசாலையிற் பேராசிரியராகவிருக்கும் பௌத்த மதகுரு, பெல்லன ஞானவிமலா

புத்தர் காலத்தில், கூடுதலான சனப் பெருக்கத்தால் வரும் பிரச்சனைகள் இருக்கவில்லை. அவர், நேரிடையாகத் தனது கருத்தைத் தெரிவிக்கும் சந்தர்ப்பம் வரவில்லை. ஆனால், அவருடைய சிந்தனை ஓட்டத்தை எம்மாற் கிரகிக்க முடிகிறது. ஆண் – பெண் உறவைத் தவிர்த்துக் கொள்வது தான், மிகச் சிறந்த குடும்பக் கட்டுப்பாட்டு வழி. தனது போதனைகளில், தூய வாழ்வின் உயர்வை, புத்தர் வலியுறுத்தியுள்ளார். ஆகையால், தேவையற்ற சனப் பெருக்கத்தை அவர் விரும்பவில்லை என்பது தெளிவு. ஆனால் உயிர்கள் யாவும் வாழும் உரிமை பெற்றன என்பதை, புத்தர் போதித்துள்ளார். கருத்தடை, இப்போதனைக்கு மாறானது. ஆனால், உயிரைக் கொல்லாது செய்யும் கருத்தடையை, பௌத்தம் மறுக்கவில்லை. துன்பத்தைக் குறைப்பது எமது மதத்தின் பிரதான குறிக்கோள். சனத்தொகை கூடக்கூட, துன்பமும் கூடுகின்றது. பூமியின் வளங்கள் போதாமல் வருமளவுக்கு, சனத்தொகை பெருகுவது விரும்பத் தகுந்தது அல்ல.

## இந்தியாவில், புதுடெல்கி சமூகவியல் முற்போக்குக் கல்லூரியை நிறுவி நிர்வகித்த, இந்தியாவின் மூத்த சமூகவியலாளர் எம். என். ஸ்ரீநிவாஸ்

(வயது 76)

இந்துசமயம், பல உபபிரிவுகளை உள்ளடக்கியது. ஆகவே, இது தான் இந்துசமயக் கோட்பாடு என்று சுட்டிக்காட்ட ஆதாரமில்லை. சுருத்தி, சிமிர்த்தி, சாஸ்திரங்களில், கருத்தடைக்கு மாறான கருத்தை நான் காணவில்லை. உடலுறவைப் போற்றி மகிழ்ந்தவன் இந்து. 4 ஆம் நூற்றாண்டுக் காமசூத்திரமும், வேறு கோயிற் சிற்பங்களும் இதற்குச் சான்று. இந்துக்களின் ஆயுர்வேதத்திலும், வேறு நூல்களிலும், கருத்தரிப்பதைத் தடுக்கும் வழிகள் தெரிவிக்கப்படுகின்றன. ஆண்–பெண் உறவு என்பதை, வாழ்வின் பிரதான பகுதியாக இந்துசமயம் ஏற்றுள்ளது. கர்மாவில் நம்பிக்கை, கருத்தடைக்கு முரணானது என்று எண்ணுவது தவறு. கல்வியும், வசதியும் பெருகப்பெருக, கிராமப் புறங்களிலும் கருத்தடை ஏற்றுக் கொள்ளப்படும். சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள், இந்தியாவில் 1920 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உலகின் முதலாவது மருத்துவக் கருத்தடை மையம், 1930 ஆம் ஆண்டு மைசூர் அரசால் நிறுவப்பட்டுள்ளது. 1935 ஆம் ஆண்டு, ஜவஹர்லால் நேரு தலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டையும், கருத்தடையையும், அனைந்து இந்தியக் காங்கிரஸ் உத்தியோகப் பூர்வமாக ஆதரித்துள்ளது.

ஏசியாவீக், ஒக்ரோபர் 27, 1993.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி மன்னன் அன்று!
இன்றோ அச்சுக்கலைக்கு உயிர் கொடுத்தது
முல்லை அச்சகம் !!

தரமான அச்சுப் பதிப்பிற்கும்,
பைண்டிங் செய்வதற்கும்
முன்னிலையில் நிற்கும்
ஒரே ஸ்தாபனம்

# முல்லை அச்சகம்

ஆடியபாதம் வீதி — நல்லூர் — யாழ்ப்பாணம்

சுவையான கேக் . . . தரமாகத் தயாரிக்க




மனையியல் ஆசிரியர்களின்
இன்றைய சிபாரிசு

## றோயல் பேக்கிங் பவுடர்

உற்பத்தியாளரும், விற்பனையாளரும்

# றோயல் இண்டஸ்றீஸ்

பொன்னையா லேன், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்மை... அதன் சுவையோ இனிமை! பனி உருகிடும் மென்மை!
அதனை விரும்பி அருந்துபவர்களுக்குத் தெரியும் உண்மை!

மென்மையான சுவையான

★ ஸ்பெசல் ஐஸ்கிறீம், ★ ஐஸ்கிறீம்
★ ஐஸ்பழம், ★ ஐஸ்சொக்

போன்றவற்றிற்கு நாடுங்கள்

# ரஜனி கிறீம் ஹவுஸ்

ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.

உங்களை வளம்படுத்துவதே எங்கள் நோக்கம்

# வாணி கல்வி நிலையம்

★ க. பொ. த உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்
★ ஆண்டு 9, 10, 11 வகுப்புகள்
★ 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
★ தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்துக்கான வகுப்புக்கள்

யாழ். முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன

*வளம் பெற்று நலமுடன் வாழ்க*

வாணி கல்வி நிலையம்

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வழக்கம், கலாசாரப் பாரம்பரியமா? அல்லது, சித்திரவதையா?

# ஒரு சூடான விவாதம்

கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே, எகிப்து நாகரிகம் கொடிகட்டிப் பறந்த காலத்திலேயே பெண் உறுப்பின் வெளிப்புறத்தை அகற்றி விட்டு, முள்ளாலும், நூலாலும் தையல் போடும் வழக்கம் இருந்திருக்கின்றது. இன்றும், ஆபிரிக்கக் கறுப்பின மக்களிடையே இது கடைப்பிடிக்கப்படுகின்றது. அண்மைக் காலக் கணக்கொன்றின்படி, வருடமொன்றுக்கு 2 மில்லியன் பெண்கள் இந்த அவஸ்தைக்கு உட்படுத்தப் படுகின்றார்கள். கையில் குழந்தையாக இருக்கும் போதே, சில ஆபிரிக்கக் குடும்பங்களில் இந்த அபாயகரமான இரண சிகிச்சை செய்யப்படுகின்றது. வேதனையைக்குறைக்க, மயக்க மருந்தொன்றும் கொடுக்கப்படுவதில்லை; இதைச் செய்பவர், ஒரு வைத்தியருமல்லர். பெண், வலிவேதனையால் உதறாமல் இருக்க, கெட்டியாகப் பிடித்துக் கொண்டால், இந்த வைத்தியர் தனது வேலையைச் செய்து முடித்துவிடுவார். இந்தச் சிகிச்சைச் சித்திரவதை செய்யப்படும் வயது, இடத்துக்கு இடம் வித்தியாசப்படுகின்றது. பெண், பூப்பெய்த முன்பே இது நடப்பதாக, இதன் நோக்கத்தைக் கொண்டு அறிய முடிகின்றது.

இதன் நோக்கம், திருமணம் ஆகும் வரை பெண்ணின் கற்பைக் காப்பதுவும், அவளுக்குக் காம உணர்ச்சி வராமல் தடுப்பதுமே யாகும். எகிப்து நாகரிகத்தின்



பழம்பெரும் எகிப்து நாகரிகத்துடன் தொடர்பு பட்ட வழக்கம் இது. செனகல் நாட்டில், இரணசிகிச்சை முடிந்தபின், ஒன்பது வயதுப் பெண்ணொருத்தி.

தொடக்கக் காலத்திலேயே, இவ் வழக்கம் இருந்து வந்திருக்கின்றது. இன்று, ஆபிரிக்கா முழுவதும் ஆங்காங்கே இப்பழக்கம் காணப்படுகின்றது. மத்திய கிழக்கிலும், தென் கிழக்காசியாவிலும் இது நடைபெறுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். 85 மில்லியன் தொடக்கம், 114 மில்லியன் வரையிலான பெண்கள், ஏதோ ஒரு விதத்தில் இந்த வைத்தியத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள். அநேகமாக இவ்வகையான பெண்கள் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று, பெரும்பான்மையான ஆபிரிக்கப் பெண்கள் இடம் பெயர்ந்து, ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா (USA) போன்ற நாடுகளில் இருப்பிடந் தேடியுள்ளனர். இதன் காரணமாக, இந்த வழக்கம், மேற்கு நாடுகளில் உள்ள பெண் உரிமைகள் பாதுகாப்புக் கழகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. எழுத்தைத் தமது தொழிலாகக் கொண்ட சில அமெரிக்கப் பெண் மணிகள், தாங்கள் எழுதும் நூல்களிலும், பத்திரிகைகளிலும், இப்பழக்கத்திற்கெதிராகப் பிரச்சாரஞ் செய்து வருகின்றனர். இவர்களுடைய எழுத்தின் கவர்ச்சியினால், இந்த விஷயம் இன்று சூடான வாதப் பிரதிவாதங்களுக்கு இலக்காகி விட்டது.

அமெரிக்காவின் முன்னணி நாவலாசிரியர் அலிஸ்வோக்கரும், நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை எழுத்தாளர் ஏ. எம். றோசன்தாலும் கூட்டாக, இந்த வழக்கத்திற்கெதிராகப் பிரச்சாரம் செய்கின்றனர். வாழ்க்கையின் எத்துறையிலும், பெண் ஆணுக்கு நிகரானவள். தாம்பத்திய உறவிலும் அப்படியே. இந்தக் காட்டுமிராண்டித்தனமான, பெண் இனத்தையே இழிவு படுத்திச் சிதைக்கும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற ரீதியில், அவர்களுடைய எழுத்தும், பேச்சும் இருக்கின்றன. இதன் பயனாக, சென்ற வருடம் ஒக்ரோபர் மாதம், காங்கிரஸ் பெண் பிரதிநிதிகள் இருவர், இதைத் தடை செய்யும் சட்டத்தைக் கொண்டுவரும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இன்று வரை, அமெரிக்காவில் இந்த வழக்கம் சட்டத்திற்குப் புறம்பானதல்ல. ஆனால் ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், சட்ட வல்லுநர்களும், அரசியல் வாதிகளும், மருத்துவ நிபுணர்களும் அண்மைக்காலமாக, இந்த வழக்கத்திற்கெதிரான தமது கருத்தை வெளியிட்டு வருகின்றனர். இது, பாரதூரமான உடல் நோய், மனநோய்களுக்கு வழி வகுக்கும் என்று வைத்தியர்கள் அடித்துக் கூறி விட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பெண்களை அடிமைப் படுத்தும் சித்திரவதை என்று, அலிஸ் வோக்கர் அண்மையில் வெளியிட்ட தனது பிரசித்தி பெற்ற நாவலில் தெரிவித்துள்ளார். அத்துடன் ஐ. நா இதில் தலையிட வேண்டுமென்றும், அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இன்னும் ஒரு சாரார், இந்த வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்று நினைத்தாலும், அலிஸ் போன்றோரின் தீவிரப் பிரச்சார யுக்திகளைத் தாம் வெறுப்பதாகத் தெரிவித்துள்ளனர். எதியோப்பியாவின் மனித உரிமைச் சட்ட வல்லுநர் செபிள் டாவிற் என்ற பெண்மணி, பின்வருமாறு அலிஸ் வோக்கரைச் சாடியுள்ளார் :- ''தனது, சரியும் புகழைத் தூக்கி நிறுத்தவே, இந்த விஷயத்தை அலிஸ் வோக்கர் பெரிதுபடுத்துகின்றார்.'' அவர் மேலும் சொல்கிறார்:- பத்திரிகை வாயிலாகப் பேரொலி கிளப்புவதிலும் பார்க்க, ஆபிரிக்கா முதலிய நாடுகளிற் சமுதாய ரீதியாக, அமைதியான பிரச்சாரம் செய்வதே சிறந்தது. இதுவே கூடுதலான பலனளிக்கும். இதற்குச் சான்றாக, கென்யா நாட்டில் 1990 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தடைச் சட்டத்தை அவர் சுட்டிக் காட்டுகின்றார். சட்ட பூர்வமாகத் தடைகொண்டுவரப்பட்டுங் கூட, அறியாமையால், கிராமப் புறங்களில் இன்னும் இது நடைமுறையில் இருக்கின்றது. வெளியார், எம்மை இடித்துக் கூறி, புத்தி சொல்வதிலும், நாமே உணர்ந்து கைவிடுவதே மேலானது என்றெல்லாம் செபிள் டாவிற் கூறுகின்றார்.

ஆகவே, இந்த இழி வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்று பெரும்பான்மையான புத்தி ஜீவிகளும், விழிப்புணர்ச்சி உள்ளோரும் விரும்புகின்றதை யாம் உணரலாம். ஆனால், மேலிருந்து விடுக்கப்படும் அழுத்தங்களும், சட்டங்களும் பலன் தராதென்பது வெளிப்படை. மனித குலத்தையே கூனிக் குறுகித் தலை குனிய வைக்கும், வெட்கங்கெட்ட, படுகீழ்த்தரமான இந்தச் செய்கையானது, இருபத்தியோராவது நூற்றாண்டின் நுழைவாயிலில் உள்ள நவீன விஞ்ஞான உலகத்தின் மீது படிந்திருக்கும் அவமானக் கறையெனலாம்.

''நியூஸ் வீக்,'' ஜனவரி 10, 1994.

## கலையும் சமுதாயமும்:-

# மின்டானோவில் இஸ்லாமிய மறுமலர்ச்சி.

உலகின் போராடும் இனங்களின் வரலாற்றில், மின்டானோ வாழ் மக்களுக்கும் இடமுண்டு. கத்தோலிக்க மதத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிலிப்பைன்சில், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக,கொண்ட தீவு மின்டானோ. பிலிப்பைன்சின் தீவுக்கூட்டத்தில்,மிகத் தெற்கில் உள்ளது மின்டானோ, இங்கு மோறோ (MORO) தௌசூக்(TAUSUG) மறானா(MARANAO), மகுயின்டானோ (MAGUINDANAO). ராவி ராவி (TAWI TAWI) ஆகிய இனங்கள்வாழ்கின்றன. இவர்களில், முதற் கூறிய மோறோக்கள், கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகப்பலரின் கவனத்தைக் கவர்ந்துள்ளனர். மோறோ என்ற இனமொன்று உண்டா? என ஐயுறவும் இடமுண்டு. பன்னெடுங் காலமாகப் பிலிப்பைன்சை ஆண்டு, இந்த நாட்டிற்குத் தமது கத்தோலிக்க மதத்தையும், தமது அரசனின் பெயரையும் (இரண்டாம் பிலிப் - PHILLIP II) கொடுத்த ஸ்பெயின் ஆட்சியாளர்கள். முஸ்லிம்களுக்கு வைத்த பொதுப் பெயரே இந்த மோறோ. ஆங்கிலத்தில், இது (MOORS) மூர்ஸ் என்ற கருத்துப்படும் என்றாலும், இன்று அது ஓர் இனத்தின் குறியீட்டுப் பெயராக மாறிவிட்டது. மின்டானோ வாழ் மக்களின் கலாசாரம் மலே (MALAY) இனத் தொடர்புபட்டதாகும்.சமயத் தொடர்பால், இவர்களின் பார்வை எப்போதும் மத்திய கிழக்கை நோக்கி இருக்கும். ஸ்பெயின் நாட்டிற்குப் பின், பிலிப்பைன்சை ஆண்ட ஐக்கிய அமெரிக்கா, இதற்குச் சுதந்திரம் கொடுத்தபின், மின்டானோ மக்களின் கலாசாரத் தனித்துவத்தையும், மதத்தையும் சிதைத்து, அவர்களைப் பெரும்பான்மை மக்களுடன் இரண்டறக் கலந்துவிடுவது, மத்திய அரசின் நெடுங்காலக் கொள்கையாக இருந்து வந்துள்ளது. 1966 தொடக்கம், 1986 வரை பதவியிலிருந்த பேர்டினண்ட் மார்க்கோஸ் இதில் மிகவுந் தீவிரமாக இருந்துள்ளார்.

1954 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கை யொன்றில், பிலிப்பைன்ஸ் நாட்டு முஸ்லிம்கள் பெயரளவில் முஸ்லிம்களென்றும், இவர்கள் குர் ஆனின் போதனைகளைப் பற்றி ஒன்றுமே அறியமாட்டார்களென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலவரத்தில், அநேக முஸ்லிம்கள் கிறிஸ்தவப் பெயர்களையும், அவர்களின் வாழ்க்கை முறைகளையும் ஏற்கத் தொடங்கியுள்ளனர். ஆனால், 1970 - 1974 இற்கு இடைப்பட்ட காலத்தில் மார்க்கோஸ் தனது இராணுவத்தை மின்டானோவுக்கு அனுப்பி மோறோக்கள் மீது போர் தொடுத்தார் என்பது சரித்திர உண்மை இதன் காரணங்கள் இரண்டு:- நாடளாவிய ரீதியில் இஸ்லாமிய மதத்தைச் செயலிழக்கச் செய்தாலும், மின்டானோத் தீவில் அதன் செயற்பாட்டை நிறுத்தமுடியவில்லை.மோறோக்கள், மத்தியஅரசின் பிடியிலிருந்து விலகித் தம்மைத் தாமே ஆளும் நோக்கத்துடன், மத்திய கிழக்கின் பல நாடுகளின் ஆதரவைப் பெற்று ஆயுதப் போராட்டத்தைத்தொடங்கினார்கள். மார்க்கோசின் மனைவி இமெல்டா லிபியாவுக்குச் சென்று அதன் தலைவர் கடாபியைச்சந்தித்து, மோறோக்களுக்கு ஆதரவு நல்க வேண்டாமென்று கோருமளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

உலக உலா, ஏப்ரல் 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளிக்கிழமைத் தொகையிற் கூடும் கூட்டம், தெற்குப் பிலிப்பைன்ஸில் இஸ்லாமிய மறுமலர்ச்சியைச் சுட்டிக் காட்டுகின்றது.

மேற்கூறிய ஐந்து வருடப் போரில், மின்டானோ வாழ் மக்கள் சொல்லொணாத் துயரமடைந்தனர். இராணுவ அட்டூழியத்தின் காரணமாக, குடியிருப்புக்களும், வணக்கத் தலங்களும் அழிக்கப்பட்டன. ஆனால் வெற்றி தோல்வி இல்லாத இரண்டுங்கெட்ட முடிவு தான் கிடைத்தது. மார்க்கோசுக்குப் பின் வந்த அக்கினோ அம்மையார், அமைதிப் பேச்சுக்களைத் தொடக்கி வைத்தார். இதன் முதற் கட்டமாக, மத்திய அரசு பெருந் தொகைப் பணத்தை மின்டானோத் தீவுக்கு நட்டஈடாகக் கொடுத்துள்ளது. இப் பணமும், மத்திய கிழக்கிலிருந்து வரும் பெருந் தொகை நன்கொடையும், மின்டானோத் தீவின் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ளன. மின்டானோத் தீவின் பொருளாதாரம் வளர்ச்சி பெறவில்லை: கிறிஸ்தவ மாகாணங்களுடன் ஒப்பிடும்போது, குன்றி வருகின்றது என்றுதான் சொல்லலாம், ஆனால், நூற்றுக்கணக்கான புதிய மசூதிகள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த பதினைந்து வருடங்களில் மத வளர்ச்சி அசுர வேகத்தில் நடைபெறுகின்றது.

அமெரிக்கர் ஒருவராற் செய்யப்பட்ட ஆய்வின்படி பிலிப்பைன்ஸ் நாடு முழுவதிலும் 1918 ஆம் ஆண்டில் 54 (ஐம்பத்திநாலு) மசூதிகளே இருந்திருக்கின்றன. 1970 ஆம் ஆண்டுவரை, இத்தொகை பெருமளவு மாற்றம் பெறவில்லை. ஆனால் 1983 இல் மின்டானோவிலும், அண்மித்த தீவுகளிலும் 1,500 மசூதிகள் கட்டப்பட்டு விட்டன.

இன்று மின்டானோவின்ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் ஒரு மசூதியைக் காணலாம். இமாம் அச்மத் மகரன் சொல்கிறார்:– "தொழுகை நேரங்களில் மசூதிகள் நிரம்புகின்றன. மக்கள் இஸ்லாமுக்குத் திரும்புகின்றனர்." மின்டானோவின் பெண்கள், கறுப்பு முகத்திரையை அணிகின்றனர். இளைஞர்கள், பாகிஸ்தானிய முஸ்லிம்களின் ஆடைகளை அணிகின்றனர், பெரும்பாலும் இளைஞர்கள் மதுவை விலக்கி, குர்ஆன் படிப்பை மேற்கொண்டு வருகின்றனர். கிராமம் கிராமமாகச் சென்று மதப் பிரச்சாரம், தமிழிக் செய்யும் இளைஞர்களையும் இத் தீவிற் காணலாம். மின்டானோவின் தலைநகர் மறாவியில், இஸ்லாமிய மையம் என்ற மாபெருங் கட்டடத் தொகுதி எழுந்துள்ளது இஸ்லாமிய மதத்தின் மறுமலர்ச்சி இங்கிருந்து இத்தீவின் பல கோணங்களுக்கும் பரந்து செல்கின்றது. மின்டானோத் தீவின் தேசியப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்ட அரேபிய மொழி, மற்றும் இஸ்லாமிய மதப் படிப்புக்கான பைசால் அரசர் பிரிவும், இப்பணியிற் பெரும் பங்கு வகிக்கின்றது. பிலிப்பைன்ஸ் பல்கலைக் கழகத்தில், இஸ்லாமியப் படிப்புக்கான பிரிவு, 1973 ஆம் ஆண்டிலேயே நிறுவப்பட்டுள்ளதை இவ்விடத்திற் குறிப்பிடுவது பொருத்தம். இஸ்லாமிய ஷரியாச் சட்டத்தின் படி ஒழுங்கும் பிலிப்பைன்சின் "அமனா வங்கி" (PHILLIPINE AMANAH BANK) ஒரு முன் மாதிரி முயற்சியென்றே சொல்ல வேண்டும். கேளிக்கை, உல்லாசம் என்ற பாதைகளிற் சென்று கொண்டிருக்கும் பிலிப்பைன்ஸ் வாழ்வை விலக்கி மின்டானா வாழ் மக்கள், தமது மதத்தில் ஊறிய கட்டுப்பாடான வாழ்க்கையை நடாத்துகின்றனர்.

1981 ஆம் ஆண்டு, மின்டானோவின் தலைநகர் மறாவி, இஸ்லாமியத் தலைநகர் மறாவி (Islamic-City of Marawi) என்று பெயர் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. இதற்கடுத்த வருடம், பிலிப்பைன்ஸ்சுக்கான இஸ்லாமிய டவாஹ் ஆமைப்பு (Islamic Dawah Council) நிறுவப்பட்டுள்ளது. மதப் பிரச்சாரமே, இதன் பிரதான நோக்கம். 1974-க்கும், 1989-க்குமிடைப்பட்ட காலத்தில், மெக்காவுக்கு ஹஜ் யாத்திரை செய்யும் முஸ்லிம்களின் தொகை, வருடமொன்றுக்குச் சராசரி 1,880 ஆக உயர்ந்துள்ளது. மாட்றாசா (Madrasah) எனப்படும் இஸ்லாமியப் பள்ளிகள் மின்டானோ முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மசூதியுடன், ஒரு மாட்றாசாவும் இருப்பது இன்றைய நடைமுறை. தேசியப் பாடசாலைகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்ப, பெற்றோர் தயங்குகின்றனர். தேசிய நீரோட்டத்திற் கலந்தால், தமது கலாசாரத்தையும், மதத்தையும் இழக்க நேரிடும் என்ற அச்சந்தான் காரணம்.

சிறு வயதிலிருந்தே மத போதனை மாட்றாசா மூலம் நடைபெறுகின்றது. ஐரோப்பாவிலிருந்து ஸ்பெயின் நாட்டு ஆட்சியாளர்கள் வருமுன்பு, பிலிப்பைன்ஸ் நாடு முழுவதும் இஸ்லாம் வியாபித்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்று, இஸ்லாமியர்கள் நம்புகின்றனர். இதை, தமது இளைஞர்களுக்குத் தவறாது தெரிவிக்கின்றனர். இமாம் அச்மத் மகரன் சொல்கிறார்:- ''என்றோ ஒரு நாள் பிலிப்பைன்ஸ் ஓர் இஸ்லாமிய நாடாக மாறிவிடும்.'' ஆனால், மின்டானோ வாழ் மக்கள் மத்தியிற் பெரும் பிளவுகளும், குரோத உணர்வுகளும் இருப்பதை மறைக்க முடியாது. தொடக்கத்தில் விபரிக்கப்பட்ட இனங்கள் யாவும் ஒரே மதத்தினராக இருப்பினும், பல மொழிகளைப் பேசியும், பயின்றும் வருகின்றனர். இந்தச் சிறுபான்மை இனங்கள் யாவற்றையும் ஒன்றுசேர்க்க, மதத்தால் இயலாதென்பது வெளிப்படை. இத்தீவின் ஒவ்வொரு பகுதியைப் பிடித்து வைத்துக்கொண்டு, மோறோ, தெளசுக், மறானோ, மகுயின்டானோ, ராவிராவி ஆகிய இனங்கள், ஒருவர் மேல் ஒருவர் வெறுப்பை உமிழ்கின்றனர். இந்தச் சூழலில், இரகசியமாக அரசுக்குத் தகவல் கொடுப்பதும்; இராணுவத்துடன் ஒத்துழைப்பதும் சாத்தியப்படுகின்றது. மசூதிகளிலெல்லாம் தொழுகை நடாத்தி, அல்லா மீது தன்து விசுவாசத்தை வெளிக்காட்டிய ஒரு ''முஸ்லிம்'' பிலிப்பைன்ஸ் இராணுவத்தில் மேஜர் பதவியுள்ள அதிகாரி என்பதை, மின்டானோ மக்கள் வெகு காலங் கடந்தே உணர்ந்துள்ளனர். எல்லோருக்கும் பொதுவான மதம்போல, மின்டானோ மக்கள் யாவரும் கலந்துறவாட ஒரு பொதுமொழி இல்லாதது பெருங்குறையே. ஆங்கிலத்தையோ, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தேசிய மொழிகளில் ஒன்றாகியதான தாகலொக் மொழியையோ பாவிக்க வேண்டியுள்ளது.

நிலைமையை மோசமடையச் செய்ய, சிறு தேச விரோதக் குழுமங்கள் மதத்தின் பேரால் கொள்ளைகள், தீவைப்புப் போன்ற செய்கைகளில் ஈடுபடுகின்றனர். பிளவுகளைப் பெரிதாக்குவதில் இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. சகல இனத்தவரையும் ஒன்று படுத்தி, ஒரு நிலையான தலைமைத்துவத்தை உண்டாக்குந் திறன் உள்ள ஒருவர், இத்தீவில் இன்று இல்லை. நூர் மசூரி என்பவர் இதைச் செய்திருக்கலாம், ஆனால், அவர் போராட்டத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டு லிபியாவிற் சுகவாழ்வு அனுபவிக்கின்றார். பேராசிரியர் அலிலயா சொல்கிறார்:- ''மோறோத் தேசிய விடுதலை இயக்கமும், மோறோ இஸ்லாமிய விடுதலை முன்னணியும், வெறும் பெயர்களே.'' தனது வெறுப்பைக் காட்ட அவர் மேலும் சொல்கிறார்:- ''உண்மையான இஸ்லாமியப் போராளிகள், அலுவலகங்களிலும். பணி செய்யும் இடங்களிலும் அநாமதேயர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கென்று, அமைப்பொன்றுங் கிடையாது.''

எழுதியவர்: றிச்சேட் மா(ர்)ற்றின்
(F)பார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ,
பெப்ரவரி 17, 1994.

# டச்சு அச்சுறுத்தல்

சீனாவில், அரைக்கடத்தி (Semi conductor) உற்பத்திச் சாலையில் தனது முதலீட்டைக் குறைக்க, மாபெரும் டச்சு மின்னியல்துறை நிறுவனமான ''பிலிப்ஸ் இலக்றோனிக்ஸ்'' தீர்மானித்துள்ளது. கனடாவின் தொலைத் தொடர்புச் சாதன உற்பத்தி நிறுவனமான ''நொதேன் ரெலிகொம்'' நிறுவனத்திற்கு, ''ஷாங்காய் பிலிப்ஸ்'' அரைக்கடத்தி உற்பத்தி நிறுவனத்தின் அரைவாசிப் பங்குகளை விற்க, பிலிப்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது. நொதேன் டெலிகொம் நிறுவனத்திற்கு, தனது வேலைத்திட்டங்களுக்காகச் சாதன உற்பத்தியைக் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அது, சீனாவில் உள்ள தொழிற்சாலையினைத் தரமுயர்த்தி, 1.2 மைகிறோன் ஷிப்ஸ் உற்பத்தியைப் பெருக்க உள்ளது. இந்தத் தொழிற்சாலை. சீனாவில் பாவனை செய்யப்படும். பிலிப்ஸ் மின்னியற் சாதனத் தேவைகளை நிறைவேற்றவென்றே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1991 இல் அது ஆரம்பிக்கப்பட்டது முதல், உள்நாட்டுச் சந்தையில் பிலிப்ஸ் மந்தமான விற்பனையையே சந்தித்தது. சீனா முழுவதும் 12-க்கு மேற்பட்ட மின்னியல் நுகர்ச்சிப் பொருள் உற்பத்திச்சாலைகளைப் பிலிப்ஸ் கொண்டிருந்தும் கூட, முன்னேற்றம் அடைவதற்கான சந்தை வாய்ப்பு இன்றித் தடுமாறுகிறது. பிலிப்ஸ் 100 முதல் 150 மில்லியன் டொலர் வரை சீனாவில் முதலீடு செய்துள்ளது என்று, உற்பத்தித் தொழிற்றுறை வட்டாரங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்புயர ..................................................... நாடுயரும்

முருகன் அரிசி ஆலயின் அரிசி வெளிவர
மக்களின் நிலையுயரும்

தரமான அரிசியினை மலிவான விலையில்
எப்போதும் தருவது

# முருகன் அரிசி ஆலை

முருகன் அரிசி ஆலை, வன்னியசிங்கம் வீதி, இணுவில்.

தரம், சுவை நிறைந்த பாண் உண்டிருக்கின்றீர்களா?
இனிமேலும் தாமதிக்க வேண்டாம்
அம்பாள் மணி பாணகத்தை அணுகுங்கள்.

உங்களின் மனநிறைவே எங்களின் சேவை!

சகலவிதமான பாண், பணிஸ், கேக் போன்ற
அனைத்துப் பொருள்களுக்கும்

# அம்பாள் மணி பாணகம்

பருத்தித்துறை வீதி, கல்வியன்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபவம், பற்றாக்குறையாகும் போது



முதலாவது வருட எம். பி. ஏ. பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த ஐ. ரி. ரி. ஷெறற்ரொன் ஆசிய-பசிபிக் கூட்டுத்தாபன நிர்வாக அதிகாரிகள் தங்களுக்குள் வாழ்த்துக்கூறிப் பருகுகிறார்கள்,

எழுதியவர்
— கிறிஸ் ஹன்றஹன் —

ஜோன் ஹெண்ட(ர்)சன் சிக்கலில் அகப்பட்டுக்கொண்டார். 21 ஆண்டுகள் உபசரணை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அவர், தனது 46 ஆவது வயதில் ஷெறற்ரொன் ஹொங்கொங் ஹொற்றெல் அன்ட் ரவே(ர்)ஸ் இன் பொது முகாமையாளரானார். அதனால், தரமுயர்ந்த சர்வதேச ஹொற்றெல் ஒன்றை நிர்வகிக்கத் தேவையான எல்லாம், தனக்குத் தெரியும் என்று நினைக்கும் உரிமை அவருக்கிருந்தது.

இங்கே, அவர் தன்னிலும் பார்க்க, தரங் குறைந்த 24 ஐ.ரீ.ரீ. ஷெறற்ரொன் ஆசிய - பசிபிக் கூட்டுத்தாபன ஊழியர்களுடன், எம். பி. ஏ. எனப்படும் வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப்பட்டப் படிப்புவகுப்பிற் பயின்றுவருகிறார். அவருக்கு எல்லா விடைகளும் தெரியாது என்று, எல்லோர் முன்னிலையிலும் ஒத்துக்கொள்ளுமாறு, பேராசிரியர் அவரைக் கேட்டுள்ளார்.

தன் இறுமாப்பை, அவர் விழுங்கிக் கொண்டார். ''பேராசிரியர் குறிப்பிட்டது சரியென்று, நான் சொல்ல வேண்டியிருந்தது. எனது கைத்தொழிலில் இருபது ஆண்டுகள் பணிபுரிந்த பின், புதிதாக வரும் ஒருவர் ஈடுகொடுக்க முடியாத விதத்தில், ஒரு ஹொற்றெலை நடத்த முடியும் என்ற உள்ளுணர்வு ஏற்படுகிறது. ஆனால், அதனிலும் பார்க்க, தேவையான வேறு விடயங்களும் இருக்கின்றன. 'எம்மில் ஒவ்வொருவருக்கும் தெரிந்துள்ள விடயங்கள், பத்தாண்டுக்கொருமுறை பழையனவாகி விடுகின்றன என்று, பேராசிரியர் எமக்குச் சொன்னார். நிர்வாகக் கல்வியை நீங்கள் தொடராது போனால், நீங்கள் பின் தள்ளப் படுவீர்கள். புதிய நிர்வாகத் தொழில் நுட்பங்களுடன் உங்களுக்குத் தொடர்பிருக்க வேண்டும்'' என்று மேலும் கூறினார் அவர்.

ஜோன் ஹெண்ட(ர்)சனுக்கும், அவருடைய சக ஊழியர்களுக்கும், அவர்களுடைய தொழில் வழங்குநரின் அனுசரணை இருந்து வருகிறது. சென்ற ஆண்டு, ஆசிய – பசிபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நிர்வாகிகள் அனைவருக்கும் எம். பி. ஏ. பட்டப் படிப்புத் திட்டமொன்றை ஐ. ரி. ரி. ஷெறற்ரொன் நடைமுறைப்படுத்தியது. ''ஹொற்றெல் கைத்தொழில், 2,000ஆவது ஆண்டளவிலும், அதன் பின்னரும் எதிர்கொள்ளவுள்ள சவால்களுக்கு முகங் கொடுக்கக்கூடிய, முகாமைத்துவ அணி

**தனது நிர்வாகப் பணியாளர்கள், வெற்றிபெறும் வர்த்தக முகாமையாளர்களாவதற்காக, அதற்கான கல்வியின் அவசியம் பற்றி ஐ. ரி. ரி. ஷெறற்ரொன் ஹொற்றெல் ஏன் தீர்மானித்தது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றை உருவாக்குவதே எமது நோக்கம்'' என்கிறார், அந்நிறுவனத்தின் உப-தலைவர் ஜோன் கமறொன். அவர், மேலும் சொல்கிறார்:- ''வரலாற்று ரீதியில், அடியிலிருந்து படிப்படியாக உயர்ந்து வந்தே, முகாமைத்துவத்தை எட்டிப்பிடிப்பது வழக்கம். ஆனால், இப்போது புதிய, புதிய சவால்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. ஹொற்றெல் சொந்தக்காரர்களுக்கு இலாபம் தேடவேண்டும். சேவையும், உற்பத்தியும், உயர் மட்டத்தில் தரமானதாக அமைய வேண்டும். சொந்தக்காரர்களின் சொத்துக்கள், மிக உயர்ந்த போட்டிச் சூழலிற் பராமரிக்கப்பட வேண்டும். அதனால், இந்தச் சவாலைச் சமாளிக்கக் கூடிய தன்மையை எமது நிர்வாகிகள் ஈட்டிக் கொள்ள வேண்டும், எம். பி. ஏ. திட்டத்தின்படி, இது சாத்தியமாகும்'' என்று.

''ஹொற்றெலின் வரலாற்றின் படி, உயர் பதவி வகிப்போர் அனைவரும் அடித்தளத்திலிருந்து, படிப்படியாக உயர்ந்து வந்தவர்கள் தான். ஆனால்,இன்று ஹொற்றெல் சொந்தக்காரர்களுக்கு இலாபம் சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். உற்பத்தியும், சேவையும் உயர்ந்த மட்டத்தில்அமைந்திருக்கவேண்டும். அதே வேளை சொந்தக்காரர்களின் சொத்துக்கள், போட்டிக்குரிய தரத்தில் ஸ்திரமாகப் பரிபாலிக்கப் படவேண்டும். ஆகவே, இந்தச் சவால்களைச் சமாளித்துக் கரையேறும் பாரிய பொறுப்பு, நிர்வாகிகளுக்கு உண்டு. எம். பி. ஏ. திட்டத்தின் மூலம் இதற்கான திறமைகளை அபிவிருத்தி செய்ய முடியும் என நாம் நம்புகிறோம்.

ஐ. ரி. ரி. ஷெறற்றொனின் ஆசிய-பசிபிக் பிரிவு, 44 அமைப்புக்களையும் 16,000 அறைகளையுங் கொண்டுள்ளது. பெயிஜிங்கிலிருந்து பம்பாய், ஹொங்கொங், சிங்கப்பூர், சிட்னி என்று வியாபித்துள்ளது. நிர்வாக அபிவிருத்தி இடைவெளிகள் நிரப்பப்பட வேண்டிய ஹொற்றெல், இது மட்டுமல்ல.

அடுத்த 20 ஆண்டுகளில், ஆசியாவிலுள்ள ஹொற்றெல்கள் அனைத்தும் போட்டியின் அழுத்தங்களைச் சந்தித்தேயாக வேண்டியிருக்கும். அதனால், ஹொற்றெல்களின் நிர்வாகிகளின் போட்டித் திறன் விரிவாக்கப்பட்டேயாக வேண்டும், சூழலின் தேவைக்கேற்ப அவர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் கட்டாயமுண்டு என்று கூறுகிறார் ஜோசெப் றடி.

இதுவே ஐ. ரி. ரி. ஷெறற்றொனின் இலக்காகும். ''முகாமையாளர்கள் அனைவருக்கும், அவர் தம் திறமைக்கேற்ற வகையிற் பயிற்சிகளை அளித்து, அவர்கள் பொது முகாமையாளர்களாகப் பதவியுயர்வு பெறவும், காலப்போக்கில் மிக உயர்ந்த நிர்வாகப் பதவிகளை எட்டிப் பிடிக்கவும் செய்வதே, எங்கள் குறிக்கோளாகும்'' என்கிறார் கமறொன்.

''எம். பி. ஏ. திட்டத்திற்கு, 60 இலட்சம் டொலர்களை மூலதனப் படுத்தியுள்ளோம். இதனால், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 250 மூத்த நிர்வாகிகள் எம். பி. ஏப்பட்டம்பெற்றவர்களாக இருப்பார்கள். எமது ஊழியர்களுக்கான கல்வி, பயிற்சி என்பனவற்றுக்கான மொத்த வருடாந்தச் செலவு, ஊழியர்களின் ஆண்டொன்றிற்கான சம்பளம், சேமநலன்கள் என்பனவற்றின் 2 விழுக்காட்டிற்குச் சமமாகும்'' என்பது, கமறொனின் கூற்று.

ஷெறற்றொனின் நிர்வாகம், அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லண்டிலுள்ள, பொண்ட் வர்த்தகப் பல்கலைக்கழகக் கல்லூரியின் பரம்பரையோடு, தமது சொந்த எம். பி. ஏக்குத் திட்டமொன்றை ஆரம்பித்து, அபிவிருத்தி செய்து வருகிறது. அந்தத் திட்டம், குழுவாக இயங்குவதை வலியுறுத்துகிறது. ஷெறற்றொனின் தேவைகளை நிரவும் விதத்தில், பொண்ட் தனது எம் பி. ஏத் திட்டத்தை மாற்றியமைத்துள்ளது. அந்தப் பிராந்தியத்திலுள்ள பல பல்கலைக்கழகங்களையும், வர்த்தகக் கல்லூரிகளையும் ஆராய்ந்த பின்னரே, பொண்ட் பல்கலைக்கழகத்தை ஷெறற்றொன் தனது முகாமைத்துவ அபிவிருத்திப்பங்காளியாகத் தெரிவு செய்தது. ''பொண்ட்'' பல்கலைக் கழகத்தின் வர்த்தகக் கல்லூரிப் பீடாதிபதி, கலாநிதி அஷ்லி கோல்ட் ஸ்வோதி, அவரது திறமைகளால் நல்ல வர்த்தகராக அங்கீகரிக்கப்பட வேண்டியவர் என்பதாலும், தனது பீடத்திற்கு அவர் ஒரு வியாபார உணர்வையூட்டியுள்ளார் என்பதாலுமே நாங்கள் பொண்ட் பல்கலைக் கழகத்தைத் தேர்ந்தெடுத்தோம். வர்த்தகத் தேவைக்கேற்ப, அவர்களின் கற்பித்தல் உள்ளது'' என்று, கமறொன் தெரிவிக்கிறார்.

வீடமைப்புக் கட்டுமான நிறுவனமான ஜெனிங்ஸ் குறூப்பின், முன்னாள் நிர்வாக இயக்குநரான கலாநிதி கோல்ட்ஸ்வோதி, தனியார் நிறுவனமொன்றுடன் தமது எம். பி. ஏத் திட்டத்தை இணைத்திருப்பது, இதுதான் முதல் தடவை என்று கூறியுள்ளார். ''மிக நன்றாக இந்தத் திட்டம் இயங்குவதால், இன்னும் பல இணைப்புக்களை மேற்கொள்ள விரும்புகிறோம். நாங்கள் வகுப்பில் கற்பவை செயலளவில் மிகவும் மகிழ்ச்சி தருவதாயுள்ளது.''

ஹெண்டர்சன் இதனை உறுதிப்படுத்துகிறார்:-''எம். பி. ஏக் கல்வியின் பலாபலன்கள், நீண்டகாலத்தின் பின்னரே உதவும் என எண்ணினேன், நான் கற்பவற்றை உடனேயே அமுல் செய்யக்கூடியதாயிருப்பது, ஆச்சரியம் அளிப்பதாயுள்ளது'' என்கிறார் அவர். உபசரணைக் கைத்தொழிலுக்கு மிக்க தொடர்புடையதாக, இந்தக் கல்வி அமைந்துள்ளது.

ஐ. ரி. ரி. ஷெறற்றொனின், ஆசியச் சந்தைப்படுத்தற் சேவையின் முகாமையாளரும், இன்னொரு ''மாணவருமான'' சுசானெ பாஸ்போட், இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்ளுகிறார். ''இந்தத் திட்டம், எனக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நான், முன்னர் நன்கறிந்திராத பலவற்றை, இப்போது கற்றுக் கொண்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர், நிதி விவகாரம் என்றால் அஞ்சுவேன். இப்போது நிதி நிர்வாகத்தின் அடிப்படைகள் எனக்குப் புரிகிறது. இதைப் பற்றிப் பேசுவது, இலகுவாக இருக்கிறது. மனித வள முகாமைத்துவம் பற்றிக் கற்பதில், மகிழ்ச்சியை அனுபவிக்கிறேன். அவற்றை, வர்த்தக மூலோபாயத்தோடு எப்படிப் பிணைப்பது எனவும் அறிந்து கொண்டுள்ளேன். குழுவாக இயங்குந் தன்மையே, என்னைக் கவர்ந்த அம்சமாகும். உங்கள் சகபாடிகளை, வேறு கண்ணோட்டத்திற் பார்க்கிறோம். அவர்களிடம், விதம் விதமான பலமிருப்பதையும் கவனிக்க முடிகிறது'' என்கிறார் சுசானே.

தொலைவிலிருந்தே கற்கக்கூடிய இந்த 2½ வருட எம்.பி.ஏ கல்வித் திட்டம் கற்கும் போதும், பணிசெய்யும் வசதியை நிர்வாகிகளுக்கு ஷெறற்ரொன் அளிக்கிறது. ''வகுப்பு விடயக் கல்விகள்'' பொண்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் நடாத்தப்படுகிறது. ஹொங்கொங்கிலும், பிறிஸ்பேணிலுமாக இரண்டு ''மையங்களில்'' நடத்தப்படும் இவ்வகுப்புக்களில் அமெரிக்கப் பேராசிரியர்களும் பங்கு கொள்கிறார்கள். பட்டப்படிப்பை முடிப்பதற்கு ஒவ்வொரு நிர்வாகியும் பொண்ட் வளாகத்தில் அரை ஆண்டைக் கழிக்க வேண்டும்.

''அடுத்த வகுப்பிற் கற்க வேண்டிய புத்தகங்களை 3 மாதங்கள் முன்கூட்டியே தந்து விடுகிறார்கள். அதற்குக் காரணம் 12 வார விரிவுரைகள் 12 நாள்களிலேயே முடிந்து விடுகிறது. பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இது அதிகவனத்துக்குரியதாகும். வாசிப்பதை முன்கூட்டியே உள்வாங்கிக் கொள்ளாது விட்டால் தொடர்வது சிரமமாகிவிடும். பணியாற்றும்போது படிக்க முடியாது. மாலைவேளைகளில், அல்லது வார இறுதியிலேயே அது முடியும். இதைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்துவிட்டால் மிகவும் இலகுவாயிருக்கும்.'' இது ஹெண்டர்சனின் கருத்து.

ஐ.ரி.ரி. ஷெறற்ரொனில் ஆசிய பசுபிக்கின் அதியுயர் மேலாளர்கள் எம்.பி.ஏ பட்டப்பின் படிப்பைக் கற்கும் அதே வேளை அதன் மேல்நிலை நடுத்தர முகாமையாளர்கள் வர்த்தக முகாமைத்துவத்தில் டிப்ளோமாப் பட்டப்படிப்பை மேற்கொள்ளுகிறார்கள். இந்தக் கற்கைநெறி சமீபத்தில் தான் பொண்டின் துணையோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த 2 ஆண்டுகளில் 500 நடுநிலை முகாமையாளர்கள் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களாக இருக்கப்போகும் இந்தத் திட்டத்துக்கான ஒதுக்கீடு 10 இலட்சம் டொலர்களாகும்.

உபசரணைக் கைத்தொழிலிற் கவனம் வைக்கும் இந்த டிப்ளோமாக் கல்வி சந்தைப்படுத்தல், மனித வளங்கள், செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதி என்பனவற்றில் நல்ல பலமான பின்னணியை நடுத்தர முகாமையாளர்களுக்கு வகுத்துக் கொடுக்கிறது. கமறொன் கூறுகின்றபடி, ''இக்கல்வி அதிக அதிகாரத்தையும், பொறுப்பையும் அவர்களுக்கு அளிக்கிறது. தமது புதிய பதவிகளில் மிளிரக்கூடிய அறிவாற்றலைக் கொடுக்கிறது. அவர்களை வர்த்தக முகாமையாளர்களாக மாற்ற உதவுகிறது. உதாரணமாக வெளிப்புற முகாமையாளர்களும், தாங்களும் அதே துறையைச் சேர்ந்தவர்களாகக் கருதிச் சிற்றுண்டிச் சாலைகளையும் நிர்வகிக்க முடியும்.''

இந்தோனேசியா, சீனா, மலேசியா போன்ற இடங்களிலுள்ள நடுத்தர முகாமையாளர்களைச் ''சர்வதேச மயப்படுத்துவதற்காகவும்'' அந்த நாடுகளிலுள்ள குடியேற்றவாசிகளில் தங்கியிருக்கும் நிலையை மாற்றுவதற்காகவும், ஷெறற்ரொன் தேர்ந்தெடுத்த நிர்வாகிகளை அவுஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலுமுள்ள ஷெறற்ரொன் ஹொற்றெல்களுக்கு டிப்ளோமா பெற்றுக்கொண்டு தனியான பயிற்சி நெறியிற் பயிலுங் காலமான இரண்டாண்டுகளுக்கு மாற்றிவிடும். பயிற்சி நெறி முடிந்ததும் முன்னர் குடியேற்றவாசிகள் வகித்த பதவிகளில் இவர்கள் அமர்த்தப்படுவார்கள். இந்த அணுகுமுறை ஷெறற்ரொனின் உள்ளூர்வாசிகளுக்குப் பதவி வழங்கும் மூலோபாயக் குறிக்கோளை நிரவல் செய்யும். ''ஆசியாவில் மிகவும் பலம் மிக்க உள்ளூர் முகாமையாளர்கள் உள்ளனர். அவர்கள் தமது பங்குப் பணியை நன்கு புரிந்து கொள்வதோடு பொறுப்புக்களையும் விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்கிறார் கமறொன்.

உள்ளூர் மயப்படுத்தல், நடுத்தர முகாமையாளர் நிலைகள் அதிகமாவதைக் குறைப்பதற்கு உதவும் என்று ஷெறற்ரொன் நம்புகிறது. பொதுவாக ஆசியாவிலும், குறிப்பாகச் சீனாவிலும், உபசரணைக் கைத்தொழிலுக்கு இது ஒரு பிரச்சினையாக உள்ளது. சீனாவில் தேவைக்கு அதிகமாகத் தொழிலாளர் இருப்பினும் வேற்று மொழியறிவு மிகவும் குறைந்த மட்டத்திலேயே இருப்பதால் வெளிநாடுகளிலிருந்து ஆட்களைக் கொண்டு வரவேண்டியது அவசியமாக இருக்கிறது என்று ஆசியாவுக்குத் தெரிவித்துள்ளார் சீனத் தேசிய உல்லாசப் பிரயாண நிர்வாகத்தைச் சேர்ந்த எக்ஸியாஒ கியூ இயன்-ஹீயுயி. ஹொற்றெல் நிறுவனங்கள் தமது முகாமையாளருக்குப் பட்ட மேற்படிப்பை அளிப்பதன் மூலம் கிடைக்கும் வருவாய்க்குக் குந்தகம் விளைவிக்கக்கூடும் என்று விவாதிப்போருமுளர். புதிய பட்டங்களையும், டிப்ளோமாக்களையும் பெற்றுக்கொள்ளும் நிர்வாகிகள் வேறு தொழில் வழங்குநர்களிடம் வசீகரமான வேதனங்களை நாடிப் போய்விட மாட்டார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆபத்தைக் கமறொன் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் உண்மையில் விலக்கிவிடவேண்டும் என்று முடிவு செய்பவர்களை யாரும் தடுத்து நிறுத்த முடியாது என்பது அவரது நிலைப்பாடு. ''பட்டங்கள், டிப்ளோமாக்களைப் பெற்ற பின்னர் விட்டு விலகி விடாமலிருப்பதற்காக முகாமையாளர் ஒப்பந்தங்களில் விதிகளைச் சேர்க்க வேண்டும் என்று ஷெறற்ரொனில் உள்ள சிலர் கருதினார்கள். அது மனிதரை அந்நியப்படுத்தவே உதவுவதோடு ஒப்பந்தம் எழுதப்படும் கடதாசியின் பெறுமானம் கூட அதற்கிருக்காது.

''ஆகவே அந்தக் கருத்தை நாம் எதிர்த்தோம். எமது முகாமையாளர்கள் எம்மோடு வைத்துக்கொள்ள ஒரு 'பிணைப்பு' அவசியமானால் நான் இந்தத் துறையையே துறந்து விடுவேன். சில உராய்வுகள் ஏற்படக்கூடும். ஆனால் பலரை இழந்து விடமாட்டோம் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. காரணம், அவர்கள் தொடர்ந்து எம்மோடிருக்கக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கி வருகிறோம்'' என்பதும் கமறொனின் கருத்தாகும்.

World Executive' s Digest
February *1994*

★

# வெடி வேட்டுக்களுக்கு இடையில்

1982 இல், உலகின் பிணக்குகள் நிறைந்த இடங்களில் புகைப்படம் பிடிக்கத் தொடங்கிய காலம் முதல், புகைப்படப் பிடிப்பாளர் அந்தோனி அஸ்பி, (50 வயது) பல சந்தர்ப்பங்களில் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். அதில் மிகவும் ஆபத்தான சம்பவம், இவர் குறோசியாவுக்குப் போனபோது, அவரை ஹெலிக்கொப்ரர் ஒன்று துரத்திச் சுட்டதாகும். அப்பொழுது அவருக்குக் கிடைத்த ஒரே பாதுகாப்பு, ஒரு குழியிற் பதுங்கக் கிடைத்தது மட்டுமே. அவுஸ்திரேலியரான அஸ்பி, யுத்தத்தில் அலைக்கழியும் குடியரசுகளின், நிகழ்வுகளைப் பதிவு செய்யச் சென்றார். ''கண்முடித்தனமான ஏவுகணை வீச்சும், குறிபார்த்துச் சுடுதலும், வீதிகளில் நடமாடுவதை எப்பொழுது ஆபத்தானதாக்கின'' எனக் கூறிய அவர், ''ஒவ்வோர் அடியையும் உன்னிப்பான கவனத்துடன் தான் முன்வைக்க வேண்டியிருந்தது'' என்கிறார்.

மொத்தமாக, அந்தப் பிராந்தியத்திற்கு 6 முறை அஸ்பி சென்று வந்துள்ளார். சரஜீவோவில் அவசரமாக அமைக்கப்பட்டுள்ள ஒரு சவக்காலையினை அவர் படம்பிடித்து வந்தபொழுது, அந்தப் படத்திற்கு அவுஸ்திரேலியாவின் மதிப்பு மிக்க சிறந்த செய்திப் புகைப்படத்திற்கான பரிசான வோக்லி (Walkley) புகைப்படப் பரிசு 1993 ஆம் ஆண்டு அவருக்குக் கிடைத்தது. அப்பரிசு கொடுக்கப்படுவது, அதற்கான புகைப்படத்தைப் பிடித்த பொழுது முகங் கொடுத்த ஆபத்துக்களையும், கஷ்டத்தையும் கணக்கிட்டு, அந்தச் செய்தியின் விளைவுப் பெறுமானத்தைச் சீர்தூக்கித் தீர்மானிப்பதாலாகும். ''நான் படம் பிடித்த வேளையில், பதுங்கியிருந்து குறிபார்த்துச் சுடப்படுவதற்கு மிகவும் அஞ்சினேன். ஏனெனில், அங்கே மரணச் சடங்குகளின்போது அநேகமாகத் தாக்குதல்கள் நடப்பதுண்டு'' என்கிறார் அவர். அஸ்பி தெற்கு ஆசியாவிலும் வேறு பல இடங்களிலும் நிகழ்வுகளைப் படம்பிடித்துள்ளார். 1980 களில், லெபனானிற் குழப்பங்கள் நிகழ்ந்த காலத்தில், அவர் அங்கு சென்று படம் பிடித்து வந்தார். அவருக்கு உந்துசக்தியாக அமைவது எது? பிரபலம் வாய்ந்த தனது நண்பரான காரல் மைடான்சின் வார்த்தைகளில் அவர் அதனைக் கூறுகிறார்:- ''நான், எங்கள் காலத்தின் வரலாற்றைப் பதிவு செய்கிறேன்'' என்று. அஸ்பி, சிலசமயம் தனது செயலைப் பற்றிக் கவலை தெரிவித்தபோதும், உலகம் எங்கும் உள்ள மக்கள் அவரை என்றும் மறவாது இருக்கத்தான், நமது காலத்தின் நிகழ்வுகளைப் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தில் நிறைய நம்பிக்கை வைத்துள்ளார்.

ஏசியாவீக், டிசம்பர் 22, 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண ஏவுகணைகளும், இரசாயன அணு ஆயுதங்களும்.



தேடிப் பின்தொடர்ந்து தாக்கும் அணுவாயுத ஏவுகணை:- முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து, தனிநாடாக மாறிய உக்றேயினில் இருந்து ருஷ்யாவுக்கு, ட்றக் ஒன்றிலே இது ஏற்றப்படும் காட்சி. ருஷ்யாவில் இது களஞ்சியப் படுத்தப்பட்டு, பாவிக்கப்படாமல் இருக்கும், அணுவாயுதப் பெருந்தலைகளான சோவியற் யூனியனும், அமெரிக்காவும் 1992 இல் அணுவாயுத ஏவுகணைகளைப் பாவனையிலிருந்து அகற்றுவதெனத் தீர்மானித்தவுடன், பரபரப்பான அணுவாயுதப் பயப்பீதி சற்றே தணிந்தது ஆனாலும் கூட, இன்றுவரை தத்தமது கைவசமுள்ள பல்லாயிரக்கணக்கான அணுவாயுத ஏவுகணைகளை, அவற்றின் வாரிசுகளான சோவியத் யூனியனும், அமெரிக்காவும் என்ன செய்யப்போகின்றன என்பதை உடன் தீர்மானிக்க வேண்டும்.

ஏவுகணைகள் சாதாரணமாக இரண்டு வகைப்படுகின்றன. (1) தரையில் இருந்து, தரைக்கு ஏவப்படுவன. (2) தரையிலிருந்து, வானுக்கு ஏவப்படுவன. தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும் வகை, கண்டம் விட்டுக் கண்டம் பாயக்கூடிய தன்மை வாய்ந்தவை. இவற்றில் நெடுந்தூரம், குறுந்தூரம், இடைத்தூரம் எனப் பாயும் தூரத்திற்கு ஏற்ப மூன்று வகைகள் உண்டு. வானுக்கு ஏவப்படுபவற்றிற் பல வகைகள் இருக்கின்றன. இவை, போர் விமானங்களைத் தாக்கவும், தரையில் இருந்து ஏவப்பட்ட எதிரியின் ஏவுகணை ஒன்றைத் தடுத்துத் தாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணைகள், தரையில் விழுந்து வெடித்துக் கட்டடங்களையும், இலக்குகளையும் தகர்க்க வல்லன.

இவற்றிற்கு மாறாக, வல்லரசுகளாற் பெருங்கோடி டொலர் செலவீனத்தில் தயாரித்து வைக்கப் பட்டுள்ள ஏவுகணைகள், அணுசக்தி ஏவுகணைகள் ஆகும். இவை, தரையில் வீழ்ந்து தாக்குவது மாத்திரம் அன்றி, அந்தப் பிராந்தியத்தின் உயிர் அணுக்கள் எல்லாவற்றையும் கதிர்வீச்சினால் அழிக்கக் கூடியன. பல ஆயிரக்கணக்கான மைல்கள் இக்கதிர்வீச்சுச் செறிந்து பல ஆண்டுகள் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன. இந்த அடிப்படையில் இவை பாவிக்கப்பட்டால், உலகம் அழிந்து விடும் என்பதைக் கருத்திற்கொண்டு, வல்லரசுகளான அமெரிக்கா, சோவியத் யூனியன் தத்தமது இரசாயன ஆயுதங்களைக் குறைக்க, ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன. இந் நாடுகளின் ஏவுகணை முகப்புக்களிற் பொருத்தப்பட்டு இருக்கும் யுரேனியம், புளுட்டோனியம் ஆகிய உயரக வெடிசக்தி இரசாயனங்களைக் களஞ்சியப்படுத்தலே, ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கமாகும்.

## அணுசக்தி (நியூக்கிளியர்) யுத்தத் தளபாடக் குறைப்பு

அடுத்து வரும் பத்து வருடங்களில், 50,000 (நியூக்கிளியர்) அணுசக்தி ஆயுதங்கள் குறைக்கப்படலாம். இதற்கு அரசியல், தொழில் நுட்பம் சம்பந்தமான புதிய செயற்பாடுகள் தேவைப்படுகின்றன.

அமெரிக்காவும், சோவியத் யூனியனும் தத் தமது ஆயுத இருப்பை விரைவாகக் குறைத்துக் கொள்கின்றன. ஒரு நீண்டகாலத்தில் 10 ஆயிரம் ( நியூக்கிளியர் ) அணுசக்தி ஆயு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக் குறைப்பு, நியூக்கிளியர் யுக்தம் ஒன்றிற்கான பயத்தைப் பெருமளவு குறைத்துள்ளது. குறுங்காலத்தில், முன்னைய சோவியத் யூனியனின் குழம்பல்நிலை, அப் பிரதேசங்களில் உள்ள ஆயுதங்கள், விற்பனைக் கட்டுப்பாட்டினை இழந்து, வேறு நாடுகளுக்கோ அல்லது, பயங்கரவாதக் குழுக்கள் கைக்கோ எட்டிவிடலாம் என்ற ஓர் அபாய நிலையை உருவாக்கியுள்ளது.

1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் பிளவுபட்டதனால், நான்கு நாட்டுப் பகுதிகளுக்குப் பரவலாக, ஏறக்குறைய 35,000 (நியூக்கிளியர்) அணுசக்தி ஆயுதங்கள் பரவிக் காணப்படுகின்றன. அவையாவன:— ருஷ்யா, உக்றேயின், கசாகஸ்தான், பெலாரஸ் ஆகியனவாகும். ருஷ்யாவிற்குள் அரசியற் போராட்டம் தொடங்கியதால், அது ஆயுதங்களின் பெரும்பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பின், உக்றேயின் பிளவுபடும்போது,அதுவும் தன்னகத்தே இரண்டாவது பெரும் பகுதியைப் பெற்றுக்கொண்டது.

எவ்வாறாயினும், குறிப்பிட்டளவு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், இவ்வாயுதங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே 14 ருஷ்யக் குடியரசுப் பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை ருஷ்யாவாபஸ் பெற்று, தனது பிரதான களஞ்சியத்திற்கு அனுப்பிவிட்டதாக உத்தரவாதம் வழங்கியது. இதன் மூலம், நியாயமான உத்தரவாதமற்ற ஆயுதப் பாவனைப் பயம் குறைக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ராட்-1, ஸ்ராட் 2 (இதில் முதலாவது 1991 ஜூலையிற் செய்யப்பட்டது. 2 ஆவது, 1953 ஜனவரியிற் செய்யப்பட்டது.) முன்னைய சோவியத் யூனியனும், ஐ.நாவும் செய்த ஒப்பந்தத்தின்படி, இன்றுமட்டும் ஏறத்தாழ 10,000 ஆயுதங்களைக் குறைத்து, பின் 2,003 ஆம் ஆண்டளவில் ஒவ்வொன்றும் தனித்தனியே 3,500 ஆகக் குறைக்கவேண்டும். ஸ்ராட் 1 ஒப்பந்தத்தின் கீழ் உக்றேயின், கசாகிஸ்தான், பெலாரஸ் ஆகிய நாடுகள் ஏறத்தாழ 3,000 ஆயுதங்களை ஒவ்வொரு வருடமும் குறைக்க ஒப்புக்கொண்டன. இவற்றை உதிரிகளாக ருஷ்யாவிடம் கொடுத்து, அணுசக்தி ஆயுதமற்ற நாடுகளின் அங்கத்துவத்தைப் பெற இருக்கின்றன. பெலாரஸ் இரண்டு ஒப்பந்தத்திற்கும் உட்படுகின்றது. ஆனால் கசாக்கஸ்தான் ஸ்ராட் 1 ஒன்றிற்கு மாத்திரமே, உட்பட்டதாக அமைகின்றது. அதே சமயம், ருஷ்யாவின் ஸ்ராட் 2 ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும்போது சில தடங்கல்கள் காணப்படுகின்றன. அதாவது, அந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் போது, நிலத்தில் இருந்து ஏவப்படும் பல ஏவுகணைகளை அகற்றவேண்டிவரும். இது; ருஷ்யாவின் இருதய ஆயுத இருப்பாகும், ஆனால், மறு புறத்தில், அமெரிக்க நீர்மூழ்கிகள், குண்டு வீச்சு விமானங்கள் அகற்றப்படத் தேவையில்லை.




இவை எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும், நடைமுறையிற் செயற்படுத்தற் பிரச்சினை ஒன்று தென்படும். அரசியற் சமூகநிலை தென்படாத ருஷ்யாகூட, தனது அணுசக்தித் தளபாடங்கள் தொடர்பாக ஒரு மேலதிகப்பளுவினை ஏற்படுத்துகின்றது. 25 தொன்களுக்கும் அதிகப்படியான புளுட்டோனியக் களஞ்சியம் அமைத்திருக்கும் செலியமின்ங்க் பகுதியிற் கூட, 2 மாதங்களுக்கு மேலாகத் தமது வேலையாள்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ருஷ்யாவின் அணுவாயுத ஆய்வு கூட விஞ்ஞானிகள், தங்களுக்கு அந்த வருடம் உணவு தேவையாயின், உருளைக்கிழங்கை பயிரிடல் பொருத்தமானது என அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தற்போதைய நாட்டுச் சூழலில், இவ்வாறான பத்தாயிரம் அணு ஆயுதங்களை ஓர் இடத்தில் இருந்து இன்னுமோர் இடத்திற்கு எடுததுச் செல்லுதல், அதைப் பகுதி பகுதி ஆக்குதல், பின்னர் அதன் உள்ளே இருக்கும் யுரேனியம், புளுட்டோனியம் போன்ற இரசாயனப் பொருள்களைப் படிப்படியாகப் பாதுகாப்பாக அழித்தல் என்பன சாதாரணச் செயல்களாகத் தென்படவில்லை. சோவியத் அணு ஆயுத வெடிமுனைகளில, அல்லது, பொருள்களில் எவ்வளவு செயலிழக்கப்பட்டன என்பது தொடர்பாகச் சட்ட ரீதியான அறிக்கைகள் எதுவும் இல்லை என்றாலும், அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவதானிக்க மேற்கிலிருந்து பிரதிநிதிகள் அநுமதிக்கப்படலாம்.

அமெரிக்காவின் அணு ஆயுத வெடிமுனைக் களைதல் தொடர்பான நிகழ்வைக் கட்டாயமாக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள், இன்றைய நிலையில் தேவையில்லை எனக் கருதப்படுகின்றது. ஆனாலும், அரசியல் அவதானிகள் கருத்துப்படி, இரண்டு பகுதியினரும் அவதானிப்புக் குழுவினரை அமைக்க வேண்டும் என்பதே சரியானதாகும். 1952 இல் அமெரிக்க மூதவை, ஸ்ராட் 1 அமுல் படுத்தும்போது ஜனாதிபதியிடம் அணு ஆயுதக் குறைப்புச் சம்பந்தமான நடவடிக்கையில் அவதானிப்புக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இது, இரண்டு பகுதியினருக்கும் பொருந்தும்.

இந்தத் திட்டம் மீள்பரிசீலனை செய்யப்படும், அமெரிக்கா இவ்வாறான அவதானிப்புக் குழுவை அமைக்க விரும்புகின்றது. ஆனாலும், 1991 இல் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும், ருஷ்யத் தலைவர் மிக்கையில் கோர்பச்சேவும் செய்து கொண்ட உடன்படிக்கையின் பின் ஏற்பட்ட முன்னேற்றம் எது என்பது முக்கியம்.

ஸ்ராட் 1, ஸ்ராட் 2 ஒப்பந்தங்கள் அணு ஆயுதக் குறைப்பு மட்டத்தை அதிகரிக்கும் என்ற போதும், ஏலவே ருஷ்யாவும், அமெரிக்காவும் ஒருவருடத்திற்குத் தனித் தனியாக 1,000 — 2,000 வரையிலான அணுசக்தி முனை ஆயுதங்களைக் குறைத்திருக்கின்றன. தேர்மோ அணுமுனை ஆயுதங்களைத் தனிமைப்படுத்தல் என்பது முக்கியமான இலக்கு. அநேகமான நவீன ஏவுகணை முனைகளில் முதன்மையான செயற்பாட்டுக் குரியவை, இரண்டாந்தரச் செயற்பாட்டுக்குரியவை என, இரு சக்திகளால் ஆக்கப்பட்டு இருக்கின்றன. முதன்மை நிலையில் ஃபிசன் (Fission) வெடிபொருளும், இராண்டாந்தரச் செயற்பாட்டில் தேர்மோ அணுவும் சேர்க்கப்பட்டு இருக்கும். ஃபிசன் வெடிப் பொருளே, பின்னர் இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிக்கப்பண்ணுகின்றது. முதற்றர எரிபொருட்கலத்தினுள் (இவை இரண்டும், ஓர் ஏவுகணையின் முனைப்புப் பகுதியிற் காணப்படுபவை.) புளூட்டோனியம் என்னும் இரசாயனப் பொருள் மூன்றுக்கு நான்கு ஏராசரி கிலோ கிராம் அளவிலே, சில வேளை யுரேனியத்தின் கூடிய பங்குடன் (Heu -என அழைக்கப்படும் -அதாவது 90 வீத தொடர் தாக்கத்தை ஏற்படுத்தும் யுரேனியம் – 235) இரண்டாந்தரக் கலத்தில் 15 கிலோ கிராமில் இதுவே மொத்தமாக இருக்கும். அநேகமாக எல்லா அமெரிக்க ஏவுகணை முகப்புக்களும், 50 தொன் புளூட்டோனியமாகவும், 400 தொன்வரை உயர்ரக யுரேனியமாகவும் காணப்படும். சோவியத் யூனியனில் ஏலவே உதிரிகள் ஆக்கப்பட்ட ஏவுகணை முகப்புக்களில் (ஏறத்தாழ 10,000) 100 தொன் புளூட்டோனியமும், 500 தொன்களுக்கு மேற்பட்ட Heu வும் (உயர்தர யுரேனியம்) காணப்பட்டன.

### அதிசக்தி வாய்ந்த களஞ்சியம்

ஜோர்ஜ் புஷ்சும், மிக்கையில் கோர்பச்சேவும் அணுசக்தி முனைப்புகள் களஞ்சியப்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை மற்றைய நாடுகளுக்கு விடும் போதே, 1991 இல் இருந்து, சக்திமிக்க களஞ்சியங்களில் இருந்து படிப்படியாகக் குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. இதன்படி நடைமுறையில், ஆயத்த நிலையில் உள்ள அணுசக்தி ஆயுதங்கள் 3,000 தில் இருந்தும், 3,500 இற்கு 2003 ஆம் ஆண்டளவிற் குறைக்கப்பட வேண்டும். ருஷ்யாவும், அமெரிக்காவும் மொத்தமாக 5,000 இற்கு மேற்பட்ட அணுசக்தி முனைகளை அகற்ற வேண்டும். இந்த ஒப்பந்தம் ஆயுதக் குறைப்பைக் கூறிய போதும், அது இவ்வகையில் வெளியேற்றப்படும் யுரேனியம், புளூட்டோனியம் என்ன வகையில் வைக்கப்படும் என்பதைக் கூறவில்லை.




### அணுசக்தி ஏவுகணை முனைப்பை உதிரிகளாக்கும் படிமுறை

ஏவுகணை முனைப்பை உதிரிகள் ஆக்குவதற்கு, முதலில் வேலையாட்கள் முதற்றர, இரண்டாந்தர வலுவறைகளைக் குண்டு அறையில் இருந்து பிரித்தெடுப்பார்கள். பின் அவற்றைச் சுற்றி இருக்கும் இரசாயனப் வெடிப்பொருள்களைப் பிரித்து எடுப்பார்கள். இறுதியாக, அவர்கள் புளூட்டோனியத்தையும், (Heu வையும்) உயர்ரக யுரேனியத்தையும் கண்டுபிடிப்பார்கள். அவற்றை, மறுபடியும் பாவிக்கக் கூடிய வகையிற் களஞ்சியப்படுத்தல், அவர்கள் பணியாக அமையும். அமெரிக்காவின், உதிரிகள் ஆக்கும் வேலை வலுத்திணைக்களம்,பன் ராக்ஸ்சில் இடம்பெறுகின்றது. இந்த இடம் ரெக்ஸாஸ் மாநிலத்தின் அமெறிலோவில் உள்ளது. துணை உதிரிப் பொருள்கள, வை - 12 திணைக்களத்தில், ஒக்றிட்ஜ் என்னும் இடத்தில் வைக்கப்படும். இதுவே, யுரேனியம் களஞ்சியப்படுத்தப்படும் இடமாகும்.

1989 வரை அமெரிக்காவில், இவை வலுத்திணைக்களத்தின் றொக்கி ஃபிளாற்ஸ்க்குக் புளூட்டோனியம் கொண்டு செல்லப்பட்டு, அவர்களது மீள்பாவிப்பிற்காக, துப்புரவு செய்யப்பட்டுக் களஞ்சியப் படுத்தப்படுகின்றது. இந்தப் பகுதியில் அமைந்திருந்த தொழிற்சாலை, சூழலியற் பாதுகாப்புக் காரணங்களுக்காக இப்போது பூட்டப்பட்டு இருக்கின்றது. ஆனாலும், வேறு இடத்தில் இது ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. அதே நேரம் பன்ரெக்ஸ் எனுமிடத்தில் இந்தக் கலங்கள் மிகப்பாதுகாப்பாக மூடப்பட்டு மிகப்பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள நிலவறையினுள் வைக்கப்படுகின்றன. இவ்வாறான ''இக்லூஸ்'' எனக்கூறப்படும் இடங்கள், ஏறக்குறைய 60 உண்டு. இவை ஒவ்வொன்றும், 400 கலங்களை வைக்கக்கூடிய இடவசதியைக் கொண்டிருக்கும். இப்பிரதேசம் அமெரிக்காவின் அட்டவணைப் படுத்தப்பட்ட முழு உதிரிகளையும் வைக்கப் போதுமானதாக இருக்கும். ருஷ்யாவின் அணுசக்தி முனைப்புக்கள், நான்கு இடங்களில் உதிரிகள் ஆக்கப்படுகின்றன. இவ்விடங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்திற்கு 6,000 முனைப்புக்களின் உதிரிகளை உள்ளடக்க முடியும். அதே நேரம், ருஷ்யா அணுசக்தி அமைச்சு, அமெரிக்காவிடம் ஏறத்தாழ 40,000 கலங்களைப் பாதுகாக்கக்கூடிய வசதி கொண்ட அமைவிடத்தைக் கட்டுவதற்கு, உதவியைக் கோரியிருக்கின்றது. இவ்வமைவிடம், சைபீரியன் நகருக்கு அண்மையில் இருக்கும் ரொம்ஸ்க்கில் உள்ளது. இங்குதான், ருஷ்யாவின் மூன்று பிரதான புளுட்டோனியம் உற்பத்தி நிலையங்களில் ஒன்று அமைந்திருக்கின்றது. ஆனால், இது தொடர்பாக ரொம்ஸ்க் நகர அரசு ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கின்றது. காரணம், புளுட்டோனியத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர்த்தல் ஆகும். சென்ற ஏப்ரலில் ''ரொம்ஸ்க்-7'' பதப்படுத்தும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்துக் காரணமாக, இந்தத் திட்டம் அதிகாரப் பூர்வமாகக் கைவிடப்பட்டது.

எவ்வாறாக இந்தக் கலங்கள் பாதுகாக்கப்பட்டாலும், இவை ஆபத்து இல்லாத நிலைக்கு மாற்றப்படும்வரை, இவற்றினால் ஆபத்து உண்டு என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இன்றுவரை களஞ்சியப்படுத்தப்படும் அணுசக்திகள் எல்லாம், மீளவும் ஆயுதங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையிலேயே வைக்கப்படுகின்றன. ஆனால், அணு ஆயுதம் அற்ற நாடுகளுக்கு, அல்லது, பயங்கரவாதிகளுக்கு மாற்றப்படுதல் தொடர்பான ஆபத்தும் உண்டு.

உயர்ரக யுரேனியத்தின் ஆபத்தைக் குறைப்பதற்கு, இதைப் பெருமளவு தொகையான தொடர் தாக்கமற்ற யுரேனியம் 238 உடன் கலக்குதல் வேண்டும். இவ்வாறு செய்யும் போது, 99.3 வீதம் இயற்கையான யுரேனியத்தை உருவாக்க முடியும். உயர்ரக இரசாயனத்தைப் பகுக்கும் தொழில் நுட்பம், சில நாடுகளினால் மட்டுமே செய்ய முடியும். (Heu) உயர்ரக யுரேனியத்தை, யுரேனியம் 235 உடன் கலக்கும் போது, குறைந்த வலுவுடைய யுரேனியம் கிடைத்தாலும், அதைக் கொண்டு திரவ அணுசக்திக் கனம் குறைந்த ஆயுதங்களுக்கு வலு ஏற்படுத்த முடியும். மசாசூசெற்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தைச் சார்ந்த தொமஸ் நெஃப் என்பவரின் ஆலோசனையின்படி, அமெரிக்க அரசு குறைந்த வலு யுரேனியத்திற்கு 10 பில்லியன் டொலர்களை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இவை, 500 தொன் ஆயுத பாவனைக்கு உகந்த யுரேனியத்தில் இருந்து பெறப்படுபவை ஆகும். இவை, சோவியத்தின் மேலதிக அணுசக்தி ஏவுகணை முனைப்புக்களில் இருந்து பெறப்படுபவை. இத்தொகை ஏறக்குறைய 20 வருடங்களுக்கு உலக அணுசக்திப் பாவனைக்குப் பயன்படக் கூடியனவாகும். தற்போதைய திட்டத்தின்படி, ருஷ்யர்கள் தமது உயர்ரக யுரேனியத்தை, ''எகாரெறின்பேக்'' என்னும் இடத்திற்கு அருகில் ஐதாக்கல் வேலையைச் செய்வார்கள். (முன்னைய செவேட்லொவ்ஸ்) பின்னர், இது அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

ஏறத்தாழ 400 எண்ணிக்கையான, 500 தொன்கள் ஆயுதங்களின் யுரேனியம் அமெரிக்காவில் மேலதிகமாகக் கணிக்கப்படும். இதிற் சில தொன்கள் யுத்தக் கப்பல்களுக்கும், நீர்மூழ்கிகளுக்கும் பாவிக்கப்படும். அத்துடன், மீள்சக்தி ஆய்வுக்கள வேலைகளுக்கும், வேறு மருத்துவக் கதிர் இயக்கத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. எஞ்சியவை, மிகக் குறைந்த சக்தியளவிற்கு மாற்றப்பட்டு, அடிப்படை வலுத்தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

150 தொன்கள் மேலதிக புளுட்டோனியம், யுரேனியத்தை மாதிரி மாற்றிக் களஞ்சியப்படுத்துவது இலகுவானது அல்ல. ஆனால் இவற்றை றேடியக் கதிர்ச்சக்தியுடன் கலக்க முடியும். இவ்வாறான வழிகளில் ஒன்று:- புளுட்டோனியத்தை ஒக்சைட்டுடன் கலந்து, வியாபார நோக்குடைய இலகு இயந்திரங்களுக்குப் பாவிக்க முடியும். இதன் பாவனையால். 40 வீதம் எரிபொருளை மீதிப்படுத்த முடியும். எஞ்சிய புளுட்டோனிய மிகுதிகள், ஆயுதப் பாவனைக்கு உகந்த தரத்தில் இல்லை. இவற்றை மீண்டும் பிரித்து எடுத்து, சாதாரண இலகுவான குண்டுகளைத் தயாரிக்க முடியும். இதன் மூலம், 1,000 தொன்கள் உயர் ரக வெடி பொருள்களை உற்பத்தியாக்க முடியும். ஜப்பானும், சில மேற்கு ஐரோப்பிய நாடுகளும், மீளப் பாவிக்கக் கூடிய புளுட்டோனியத்தை அறிமுகமாக்குவதால், ஆயுதங்களில் இருந்து பெறப்படும் புளுட்டோனியத்தின் பயன்பாடு அதிகமாகின்றது. இவற்றை, வலுவிற்காகப் பாவிக்க முடியும். ஆனால், மின் உபகரணங்கள் பாவனைக்கு இது உகந்ததாக இருக்கவில்லை. இவ்வாறு தயாராகும் கலப்பு ஒக்சைட், ஒப்பீட்டளவில் உற்பத்திச் செலவு அதிகமாகவும் காணப்படுகின்றது.

கலப்பு ஒக்சைட் எரிபொருளைப் பொறுத்தவரை, அதைப் பாதுகாத்து வைத்தல் என்பது பெரிய வேலையாகவிருக்கும். ஏனெனில், இதில் உள்ள புளுட்டோனியம், பிரிக்கக்கூடிய நிலையிலேயே இருக்கும். இதனாலேயே, அமெரிக்கா இந்த வர்த்தக புளுட்டோனிய உற்பத்தியை அதிகரிக்கவில்லை. இதனால், அங்கு கலப்பு ஒக்சைட் தயாரிப்புக்கான எந்த வசதிகளும் இல்லை.

ருஷ்யாவிடம் கூட, இவ்வாறான உற்பத்தி அமைப்பு இருக்கவில்லை. அவ்வாறு செய்தாலும், அதைப் பாவிக்கக்கூடிய சாதனங்களும் அங்கு இருக்கவில்லை. இவ்வாறு கலப்பு ஒக்சைட்டாக மாறும்போது, புளுட்டோனியத்தின் தன்மையால், வெடிக்கும் சக்தி வரையறுக்கப்பட்டு இருக்கும். இதனால், குறைந்த வலு யுரேனியம் பாவிக்கும் இயந்திரங்களுக்கு வலுவாக இதைப் பாவிக்க முடியும். மறுபுறத்தில், 1,000 மெகாவாட் மின் உற்பத்திக்குத் தேவையான யுரேனியத்தை, வருடத்திற்கு 300 கிலோகிராம் ஆயுத புளுட்டோனியத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான நான்கு உற்பத்தி நிலையங்கள் ருஷ்யாவிடம் இருக்கின்றன. இங்கு, வருடத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

ஏறத்தாழ 2.5 தொன் புளுட்டோனியம் பாவிக்கப்படுகின்றது. இந்த அளவின்படி கணிப்பிடும்போது, ருஷ்யாவின் 100 தொன்கள் புளுட்டோனியத்தையும் பாவித்து முடிப்பதற்கு, ஏறத்தாழ 40 வருடங்கள் எடுக்கும். மறுபுறத்தில், இவ்வாறான மீள்பிறப்பாக்கி அலகுகள் அமைக்கப்பட்டு வருவதால், கலப்பு ஒக்சைட்டினால் ஏற்படும் பாதிப்பும், ஆபத்தும் குறைக்கப்படுகின்றன. இந்த நோக்கத்திற்காக, பல மீள்பாவனை அலகுகள் சிபார்சு செய்யப்பட்டு இருக்கின்றன. இவ்வாறான வடிவமைப்புக்களில் ஒன்றான அதிவேக மீள்பிறப்பாக்கி, ஏ.பி.பி. பொறியியல் நிபுணர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது, புளுட்டோனியத்தின் பாவனைக்கு என்றே வடிவமைக்கப்பட்டது.

அதே நேரம், திரவ உலோக வேகக்குளிர் நியுற்றோன் மீள்பிறப்பாக்கி, உயர்வெப்பவாயு குளிர் பிறப்பாக்கி ஆகியன அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட இருக்கின்றன. வேக நியுற்றோன் பிறப்பாக்கி அதிக புளுட்டோனியத்தைப் பாவித்து, வலுவை வழங்கக் கூடியது. இந்த புளுட்டோனியம், உடன் ஆயுத பாவனைக்கு உகந்த தரத்திலேயே காணப்படுகின்றது.

திரவ உலோக வாயு குளிர் பிறப்பாக்கி போன்றவற்றைப் பூரணமாகப் பாவனைக்கு விடுமுன்னர், அது தொடர்பாகப் போதிய நேரடி விளக்கம் அவசியமாகின்றது. இதன் உற்பத்திச் செலவு பல பில்லியன் டொலர்களாகவும் இருக்கும். அத்துடன், காலதாமதமும் ஆகக்கூடும். வாயு குளிர் பிறப்பாக்கியின் பயன்பாட்டில் புளுட்டோனியம் பாவிக்கப்படும்போது, அநேகமான புளுட்டோனியம் பாவிக்கப்பட்டுவிடும். எஞ்சியவை, ஆயுதப் பாவனைக்கு உகந்ததாக இருக்காது. (அந்த புளுட்டோனியம், இராணுவத் தேவைக்குப் பயன்படக்கூடிய நிலையில் ''இராணுவ புளுட்டோனியம்'', என்றும், பொதுமக்களுக்குரியதாக வலுக் குறைக்கப்படும் நிலையில் ''மக்கள் புளுட்டோனியம்'' என்றும் அழைக்கப்படுகின்றது.) இந்த வகையான தொழில் நுட்பங்கள், அறிமுகமாகிய பின்னர், அது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படும். அதன் பின்னரே, நடைமுறைக்கு இந்தச் செயற்பாடுகள் அறிமுகஞ் செய்யப்படும். அப்படி அறிமுகஞ் செய்யப்பட்டாலும் அவற்றைக் கட்டி முடிப்பது மிகவும் செலவீனமாக இருப்பதால், மேலும் அது தாமதமாகலாம்.

இவ்வாறான காரணங்களால், அமெரிக்க, ருஷ்ய ஆய்வாளர்கள் நடை முறையிற் சாத்தியப்படக் கூடிய முறையிலும், செலவு குறைந்ததும், வேகமாக நடைமுறைப்படுத்தக் கூடியதுமான மாற்றுவழிகள் தொடர்பாக நாட்டங் காட்டி வருகின்றனர். இன்றைய காலத்தில் புளுட்டோனியத்தை, றேடியக் கதிர்க்கழிவுடன் சேர்த்து அழிக்கமுடியும். இவ்வகையான செயற்பாட்டிற்கு உரிய வசதிகள் இரண்டு நாடுகளிலும் அமைக்கப்பட்டிருப்பதுடன், பிரான்ஸ், பிரித்தானியா, பெல்ஜியம் போன்ற நாடுகளில் இவ்வாறான உயர்ரகச் செயற்பாட்டுக் கழிவுகள் கண்ணாடியுடன் சேர்க்கப்பட்டு, மிக ஆழமான பகுதிகளிற் சேகரிக்கப்படும். புளுட்டோனியத்தை றேடியக்கதிருடன் சேர்க்கும் போது, மின் உற்பத்தியாகின்றது. என்றாலும், பெருமளவு தொகையில் இது தேவையற்றதாகின்றது. தற்போதைய நிலையில், புளுட்டோனியம் போன்றவற்றின் விலைகளை ஒப்பிடும்போது, சாதாரண தேவைகளுக்காக அதைப் பல ஆண்டுகள் பயன்படுத்துவது சிக்கனமாக இருக்காது.

நேரடியாகப் புளுட்டோனியத்தை அழித்தல், அதை மாற்றிப் பயன்படுத்துவதிலும் பார்க்க இலகுவானது. ஒருவேளை, வருங்காலத்தில் இதன் பாவனை சாத்தியமாகலாம். ''சவன்னா'' ஆற்றுப் பிரதேசத்தில், ஓர் இராணுவ புளுட்டோனிய உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. இப்போது இது பயன்பாட்டில் இருக்கவில்லை. இதில், மக்கள் புளுட்டோனியத்தை உற்பத்தி செய்யமுடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1994 — 2009 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், ஏறக்குறைய 8,000 தொன்கள் றேடியக் கதிர்க் கண்ணாடிகள், குற்றி வடிவில் தயாரிக்கப்படும். ஒவ்வொரு குற்றிகளும் 3 மீற்றர் நீளமும், 0.6 மீற்றர் சுற்றளவும் கொண்டதாகவிருக்கும். ஒவ்வொன்றும், ஏறக்குறைய ½ தொன் நிறையுடைய உயர்ரகக் கழிவுக் கலவையைக் கொண்டிருக்கும் இதில், 1.2 தொன்கள் பொறோசொலிகேற் கண்ணாடி சேர்க்கப்பட்டிருக்கும். 70 தொன்கள் புளுட்டோனியத்தை, இவ்வாறு அடக்கப்பட்ட கழிவுப் பொருளாக்க முடியும்.

இந்தத் தொழிற்சாலையில், இந்தவகையான செயற்பாடுகளைத் தீவிரப் பாதுகாப்புடன் செயற்படுத்த ஆரம்பிக்க, 5 வருடங்களாயினும் செல்லும். இதில் உயர்ரக புளுட்டோனியம் றேடியக் கதிரியக்கக் கண்ணாடியாக மாற்றப்படும். அங்கு, புளுட்டோனியத்தைப் பாதுகாத்தல், அதைப் பதனிடுதல் ஆகியவற்றுக்கு மேலதிகச் செலவீனங்கள் உண்டு. ஆனாலும், வேறு மாற்று ஒப்பீட்டுச் செலவீனங்களை விட, இது குறைவானதாகவே இருக்கும்.

ஆயுத புளுட்டோனியத்தை, கண்ணாடிக் குற்றி புளுட்டோனியமாக மாற்றி அமைத்தாலும், அதுவும் ஆபத்தானது தான். அது, ஆயுத புளுட்டோனியத் தரத்தில் தான், குற்றிகளில் இருக்கும். ஆனால், உயர்ரக றேடியத்தாக்கச் செயற்பாட்டுப் பொருள்களுடன் கலந்திருப்பதால், அதைக் கண்ணாடிக் குற்றிகளில் இருந்து பிரித்தெடுப்பது கஷ்டம்.

இன்னுமொரு முறையில் புளுட்டோனியத்தை மாற்ற முடியும். அதாவது, புளுட்டோனியத்துடன் சில மூலகங்களான கடோலினியம் போன்றவற்றைச் சேர்ப்பதால், பிரித்தெடுப்பது இலகுவானதாகவிருக்காது. இந்தத் தரத்தில் இருக்கும் புளுட்டோனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தை, சிறிய நாடுகள் பிரித்தெடுக்க முடியாது. ஆனால் அணுசக்தித் தயாரிப்பு நாடுகள் இதனை இலகுவாகப் பிரித்தெடுக்க முடியும்.

ருஷ்யா, தனது உயர்ரகக் கழிவுகளைத் தயாரிக்கும் இடமாக ஸெல்யாபின்ஸ்க்கைத் தெரிவு செய்துள்ளது. இங்கு பாவனையில் உள்ள பொஸ்பேற் கண்ணாடி, மேற்கு ஐரோப்பா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் உற்பத்தியாகும் பொறோசிலிகேற் கண்ணாடிக்கு ஒப்பானது அல்ல. நியூற்றோன், உறிஞ்சப்படும் போறனுடன் சேர்ந்திருப்பது போன்று பாதுகாப்பானது. பொறொசிலிகேற் பிரிப்பு முறைத் தொழில்நுட்பமே, ருஷ்யாவுக்கு மாற்றப்பட்டு உள்ளது. இதனைக் களஞ்சியப்படுத்தி, பின்னர் பயன்படுத்தவே ருஷ்யா விரும்புகின்றது.

அமெரிக்காவும், முன்னைய சோவியத் யூனியனும் அணுசக்தி ஏவுகணை முனைப்புக்களைக் குறைப்பதில் ஒப்பந்தம் செய்து கொண்டபோதும், அந்த ஒப்பந்தத்திற் கேள்விக்குரிய விடயங்கள் இல்லாமல் இல்லை. சர்வதேச ரீதியிலான அணு ஆயுதக் குறைப்பு நடவடிக்கையினால் அந்தந்த நாடுகளின் சர்வதேச ஆயுதப்பலம் பரகசியமாகப் போய்விடும். இதனை அந்த நாடுகள் விரும்ப மாட்டா. அத்துடன், லொஸ் அறமோஸ் தேசிய ஆய்வுக்கூட நிபுணர்களும், பன்ரெக்ஸ் நிபுணர்களும், அணு வலுவை மாற்றும் நடவடிக்கைகளில் மிக நுணுக்கமான கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்துகின்றார்கள். அதே நேரம், தமது உற்பத்தித் தொழில்நுட்பம் வெளியிற் பரவுதல் கூடாது என்பதிற் கவனமாகவே இருக்கவேண்டும் என்றும் இரு நாடுகளும் கருதுகின்றன. இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள், இருபக்கத்தாரினதும் ஆரம்ப உதிரிகளாக்கும் நடவடிக்கையில் இருந்து, புளுட்டோனியம் களையப்பட்டு, பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தப்படும் வரை தொடர வேண்டும் எனக் கருதப்படுகின்றது. இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உதவுவதற்காக, சர்வதேச அணுசக்தி முகாமைத்துவ நிலையம் முன்வந்துள்ளது.

ருஷ்யாவின் தலைமைத்துவம், பரஸ்பர அடிப்படையில் இச் செயற்பாடுகள் நடைபெற்றால், ஒத்துழைப்பதற்கு இணங்கியுள்ளது. இந்த நடவடிக்கைகள் மிகத் துல்லியமாக இடம்பெறும்போது, அணுஆயுதக் குறைப்புப் பூரணமாக நடைபெற்று, வேறு சட்டவிரோதமான பாவனைக்கு இடம் அளிக்காது என்பதில், இரு நாடுகளும் நம்பிக்கை கொண்டுள்ளன.

சயன்ரிஃபிக் அமெரிக்கன்
ஒகஸ்ட், 1993

# செப்புப் பூசப்பட்ட முதலீடு

*ஜேர்மனியின் ''மெற்றல்லாஜெசெல்சாப்ட்'' என்ற மாபெரும் உலோக உருக்கு ஆலை நிறுவனம், பெரும் நிதிப் பற்றாக்குறையொன்றினுள் தற்சமயம் தவித்துக்கொண்டு உள்ளது. அதனால், இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவில் உள்ள அமெரிக்க நிறுவனமான பிறீபோட் மக்மோறனின் கிளையான ''பிறீபோட் இந்தோனேசியா'' ஜப்பானின் நிப்போன் சுரங்க நிறுவனம் ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து, நிர்மாணிக்கத் தீர்மானித்திருந்த 600 மில்லியன் டொலர் செலவிலான செப்பு உருக்கு ஆலையின் விதி அந்தரத்தில் உள்ளது. அந்தத் திட்டத்தில் ஜேர்மனிய நிறுவனத்திற்கு 55 வீத பங்கு இருப்பதுடன், அதற்கான நிதியைத் தனது பங்குதாரர்களாக இருப்பவர்கள் இரண்டுபேர் உட்பட, ஜேர்மன் வங்கிகளிடம் கடனாகப் பெற, அந்த ஜேர்மன் நிறுவனம் எதிர்பார்த்திருந்தமை கைகூடவில்லை. இருந்துங் கூட, அந்த நிறுவனம் உலகின் வேறு பல பாகங்களில் இருந்து தனது முதலீட்டுத் திட்டங்களை விலக்கிக் கொண்டிருந்தாலும், இந்தோனேசியாவில் கூட்டுச் சேர்ந்து செய்ய இருந்த முதலீட்டிலிருந்தும், மேலும் தாய்லாந்தில் 300 மில்லியன் டொலர் செலவில் திட்டமிட்டிருக்கும் வேறு ஒரு செப்பு உருக்கு ஆலைத் திட்டத்தில் இருந்தும் விலகிக் கொள்வதாக இன்னும் அறிவிக்கவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆய்வுகூடத்துள், அத்துமீற வேண்டாம்

— எழுதியவர் —
பிலிப் எல்மர் — டெவிற்

விஞ்ஞானம் என்பது மின்சூள் (டோர்ச் லைற்) போன்றது; எதனை நோக்கி அது பிடிக்கப்படுகிறதோ, அதனை அது வெளிப்படுத்தும். பாரம்பரியமாக அமெரிக்க விஞ்ஞானிகள் எதனைக் குறித்து ஆராய வேண்டும் என்பதற்குச் சுதந்திரம் உடையவராயுள்ளனர். இடையிடையே அரசியல் வாதிகளும், ஆர்வமுள்ளவர்களும் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பரிந்துரைப்பர். 2 ஆம் விண்வெளி ஆய்வு, அல்லது எயிட்ஸ், அல்லது மார்புப் புற்று நோய் (Breast Cancer) ஆயினும், பெரும்பாலும் விஞ்ஞானிகளே அமெரிக்க விஞ்ஞானத்தை நடத்துகின்றனர்.

இந்நிலை மாற்றமடையும் நிலையிலுள்ளது. கிளின்ரன் அரசாங்கம் தேசிய முன்னுரிமையைத் தீர்மானித்து சமஷ்டி (Federal) ஆய்வுத் திட்டத்தை இந்த நோக்கங்களுக்காகத் திசைதிருப்புவதற்கு அமைச்சரவை மட்டத்திலான முயற்சிகளை மேற்கொள்ளுகிறது. அதாவது அரசாங்கம் மின்சூளைக் கையில் எடுத்து விட்டது.

ஜனாதிபதி கிளின்ரன் எப்பொழுதும் கூறுவது போன்று உடனடி நோக்கங்கள் ஆவன:-பொருளாதாரத்தை மேம்படுத்துதல், கைத்தொழிலைப் பலப்படுத்தல், சூழலைப் பாதுகாத்தல், கல்வியை முன்னேற்றுதல், தொழில் வாய்ப்பு ஏற்படுத்துதல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தக்கூடிய விஞ்ஞான வளம் விசாலமானது. 700 ஆய்வகங்கள் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக ஆய்வு வசதிகள் 2½ மில்லியன் விஞ்ஞானிகளும், பொறியியலாளர்களும் இதில் ஈடுபட்டுள்ளனர். தேசிய ஆய்வு நிதி ஒதுக்கீடு 76 மில்லியன் ஆயினும், இதற்கான இடர்களும் விசாலமானது. அறிவுத் தேடலுக்குக் கடிவாளம் இடுவதால் நிர்வாகம் ஆய்வாளருக்கு விரக்தியை ஏற்படுத்தக்கூடும்.



அமெரிக்க நிர்வாகம் இக் கொள்கையை 1940 களிலேயே கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டது. 2 ஆம் உலகப் போரின் போது மிக இரகசியமாக அணுக்குண்டு தயாரித்த மன்கற்றன் செயற்றிட்டம் உட்பட பல ஆய்வுகளை மேற்கொள்ளும்படி விஞ்ஞானிகளைப் பணித்தது. ரூஸ்வெல்ற், ட்ருமன் ஆகிய ஜனாதிபதிகளுக்கு விஞ்ஞான ஆலோசகராயிருந்த வன்னெவர் புஷ் (Vannevar Bush) அவர்களின் திட்டப்படி நோய்களைக் குணமாக்குவதற்கும், பனிப்போருக்கும் பயன்படுத்தப்பட்ட பெருந்தொகையான பொதுப் பணம் பிரயோசனமானது எனக் காணப்பட்ட ஆய்வுகளுக்குச் செலவிடப்பட்டது. பெருந்தொகையான பணம் வீணாக்கப்பட்டாலும், சில நன்மையான காரியங்களும் நடைபெற்றன. இளம்பிள்ளை வாதத்திற்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது; டிரான்சிஸ்ரர் கண்டு பிடிக்கப்பட்டது.

1980 களில் பனிப்போர் முடிவுக்கு வந்தது. ஆயினும் வரவு செலவுத் திட்டம் (Budget) வியாபாரம் ஆகியவற்றில் துண்டு விழுந்ததால் (Deficit) பொருளாதாரம் வீழ்ந்தது. ஆகவே பணவீழ்ச்சி ஏற்பட்டது. அமெரிக்க விஞ்ஞான வளர்ச்சி புதிய பொருள்களை உற்பத்தி செய்தது. ஆனால் இவற்றுள் பெரும்பாலானவை ஜப்பானிலேயே உற்பத்தியாக்கப்பட்டன. காங்கிரஸ் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து அமெரிக்காவின் பொருளாதாரத்தை வளர்க்குமாறு நிர்ப்பந்தித்தது. எனவே அமெரிக்காவின் ஆய்வினை ஓர் ஒழுங்கு முறைக்குள் அமைக்குமாறு அழுத்தத்தை வழங்கியது. ரேகனும், புஷ்சும் இவ்வழுத்தத்திற்கு இடம் கொடுக்கவில்லை.

கிளின்ரனோ பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இக் கொள்கையைத் தழுவினார். கடந்த நவம்பர் மாதம் தேசியப் பாதுகாப்புச் சங்கம், தேசியப் பொருளாதாரச் சங்கம் ஆகியவற்றுக்குச் சமனான அமைச்சரவை மட்டத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான தேசிய விஞ்ஞானத் தொழில் நுட்பச் சங்கத்தை அமைத்தது. கடந்த மூன்று வாரங்களாக இச் சங்கத்தின் 9 உப-நிர்வாகச் சபைகள் கூடின. அடுத்த மாதம் நடைபெற உள்ள கூட்டத்திற்கு ஜனாதிபதியே தலைமை தாங்குவார்.

இவர்களது முதல் வேலை நாட்டின் ஆய்வகங்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாகும். இதில் ஒவ்வொன்றும் வருடத்திற்கு 1 மில்லியன் செலவிடும் அணு ஆயுதம் உற்பத்தி செய்யும் மூன்று திட்டங்களும் உள்ளடங்கும். தற்போது ஆய்வுக்குச் செலவிடும் ஒரு டொலரில் 60 சதம் பாதுகாப்புப் பிரயோசனங்களுக்குச் செலவாகிறது. ஜனாதிபதி இதனை 50 சதமாகக் குறைக்க விரும்புகிறார். பாதுகாப்பில் மட்டுமல்ல தேவையற்ற ஆய்வுகளையும் தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளக்கூடிய ஆய்வுகளையும் இனங்கண்டு நிறுத்த முயற்சிக்கும் ஜனாதிபதியின் விஞ்ஞான ஆலோசகர் ஜோன் கிப்பன்ஸ் (John Gibbons) இதனைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

புதிய காரியங்கள் எவை? கிப்பனி; தூயகாரை (Clean Car) க் காண்பிக்கிறார். சூழலை மாசுபடுத்தாத வாகனங்களை உற்பத்தி செய்ய ஆய்வு மேற்கொள்ளப்படும். புதிய 4.67 மில்லியன் திட்டப்படி பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. உதாரணமாக:- (1) போர் விமானப் பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட்ட மாய உலகம், பொருள்களின் உற்பத்தித் தொடர்களுக்குப் பயன்படுத்தப்படும். (2) கணனி மயப்படுத்தப்பட்ட முன்கூட்டுத் தொகுதி நோயாளியின் நோயைக் கண்டுபிடிக்கவும், அவரது நிலையையும், நோயுள்ள இடத்தை அறியவும் பயன்படுத்தப்படும். (3) மஸாசூசெற்ஸின் 4 பல்கலைக்கழகங்கள் கூட்டாகச் சேர்ந்து வேலை இழந்த பாதுகாப்புத் தொழிலில் ஈடுபட்ட பொறியியலாளரை உயிரியல் தொழில் நுட்பத்திலும், உயிரியல் மருத்துவத்திலும் தொழில் வாய்ப்புப் பெறும்படி மீளப் பயிற்சி அளிப்பர்.

கிளின்ரனின் கருத்து கைத் தொழில் துறையில் பெரும் வரவேற்பைப் பெற்றது. டானியல் பேற்றன் ஜூனியர் (Daniel Burton Jr.) 140 அமெரிக்கக் கைத்தொழில் நிலையங்களின் பிரதம நிர்வாகிகளின் பிரதிநிதி இதனை வரவேற்கிறார். ஆனாலும், எல்லோரும் பேற்றனைப்போன்று உற்சாகமுடையவரல்லர். கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் பொருளியலாளர் போல் றோமர் என்பார்: 'இது வித்தியாசத்தை ஏற்படுத்தாது. அங்கும் செலவு உண்டு. அரசியற் செல்வாக்குடையவர் அதனை அங்கே விரும்புகிறார்; அவ்வளவே' என்கிறார்.

விஞ்ஞானிகளோ ''ஆய்வு, ஆய்வின் பொருட்டே'' என வாதிடுகின்றனர். அமெரிக்க விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் முன்னாள் தலைவர் லியோன் லெடர்மான் (Leon Lederman) இந் நூற்றாண்டின் முக்கிய ஆய்வுகள் ஐன்ஸ்ரைனின் சார்புக் கொள்கை முதல் வொட்சன் கிறிக் ஆகியோரின் டி. என். ஏ (D. N. A) கண்டுபிடிப்பு வரை தூய ஆய்விலிருந்தே உருவாகின. பிறின்ஸ்ரனின் உயர் கல்விக்கான நிலையத்தின் இயக்குநர் பிலிப் கிறிபித் என்பவர் ஏற்கனவே விஞ்ஞானிகள் தமது ஆய்வுககு நிதி கண்டு பிடிப்பது கடினம். மாணவருக்கு இன்னும் கடினமாகும் என்றார்.

கிளின்ரன் நிர்வாகம் எதிர் நோக்கும் சவால் யாதெனில், அறிவின் முழுப் பாதையையும் இருட்டடிக்காமல் விஞ்ஞான மின்சூளை ஓரிடத்திற்குக் குவியச் செய்தலாகும்.

ரைம் ஜனவரி 24, 1994

★★★★★★★★★★

## ஏவுகணைப் பரிசோதனை

இந்தியாவின் ஆக்கமான ''அக்கினி'' இடைநிலைத் தூர வெடி ஏவுகணை, சென்ற ஜனவரி மாதத்தில் வங்காள விரிகுடாவில் உள்ள தளம் ஒன்றில் இருந்து ஏவி, சோதனை செய்யப்பட்டது, 2, 500 கிலோமீற்றர் வரை செல்லக்கூடிய அந்த ஏவுகணை பரீட்சிக்கப்படுவது, இது மூன்றாவது முறையாகும். இதுபற்றி அமெரிக்காவும், மேற்கத்தைய நாடுகள் சிலவும் கவலை தெரிவித்துள்ளன. புதுடெல்கி இதனை நேரடி ஆயுதப் பரிசோதனை என்று கூறாமல், ''தொழில் நுட்பத்திறன் வெளிக்காட்டல்'' என்று வர்ணித்துள்ளது.

★★★★★★★★★★

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவடைந்து வரும் கதிரியக்க வீழ்ச்சி

— ஜில் ஸ்மொலொவே —

புலொயிட் ஸ்ரான்பில்(Floyd stanfill) தம்மை ஒரு பரிசோதனைக்கருவி (Guinea pig) என ஒரு பொழுதும் கருதவில்லை. ஓய்வுபெற்ற சரக்கு வண்டிச் சாரதியான இவர், தற்போது அரசாங்கம் ஆராய்ந்து வரும், பரிசோதனைப் பலிக்கடாக்களில் ஒருவர் என அறிந்திருக்கவில்லை. இப்பலிக்கடாக்கள் பின்வருமாறு:- மஸாசூசெற்ஸின், வோல்தாம் என்ற இடத்திலுள்ள போனால்ட் அரசப் பாடசாலையிற் படித்த 62 மாணவர்களுக்கு, கதிர்த் தொழிற்பாட்டைக் கொண்டுள்ள உணவு கொடுக்கப்பட்டது. 131 எரிகோள்கள், வோஷிங்ரன் சிறைக்கைதிகள், கதிரியக்கம், பிள்ளை உற்பத்தியில் எவ்வகையான பாதிப்பை ஏற்படுத்தும் என ஆராய்வதற்காக, இவர்களது விதைகள் எக்ஸ் கதிரினாற் பாதிக்கப்பட்டன. எவ்வளவு விரைவாக உடல், கதிர்த் தொழிற்பாட்டை வெளியேற்றுகின்றது என ஆராய, 8 பேருக்குப் புளூட்டோனியம் உட்செலுத்தப்பட்டது. 1940 களிலிருந்து, 1970 கள் வரை மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வுகள், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியதால், இவர்களுக்கு முழுமையாக நஷ்டஈடு வழங்கப்படுமென, அமெரிக்க சக்திச் செயலாளர் ஹாஸல் ஓ'லியரி (Hazel O, Leary) கூறியுள்ளார்.

இளங் கடற்படை வீரனாக ஸ்ரான்பில் 1946 ஆம் ஆண்டு பசுபிக், கடலில் அணுக்குண்டு வெடிக்கப்பட்ட இடத்திற்குக் கப்பலிற் செல்லுமாறு பணிக்கப்பட்டார். தற்போது அவர், தாம் ஒரு பலிக்கடா எனக் கருதுகிறார். ஓலியரி வாக்களித்த நஷ்டஈடு காரணமாக, இவரும் ஆயிரக்கணக்கான பலரும் தமது நிலையை வெளிப்படுத்த ஊக்குவிக்கப் பட்டுள்ளனர்.

மே, 8, 1946ஆம் ஆண்டு, இவரும் வேறு 11 பேரும் நடவடிக்கை குறொஸ் றோட்ஸ் (Operation cross roads) என்ற பணியில், டீம் ஏபிள் என்ற குழுவிற் சேர்ந்தனர். சில எச்சரிப்புக்கள் கொடுக்கப்பட்டிருப்பினும், ஆபத்தில்லை என அறிவிக்கப்பட்டது. அவர்கள் ஏறவிருந்த கப்பல் யூ-எஸ் சரடோகர் கதிரியக்கம் கொண்டிருக்கவில்லை என ஆராயப்பட்ட பின்பே, அவர்கள் அநுமதிக்கப்படுவர் எனக் கூறப்பட்டது. எனவே, எவ்வித ஆபத்துமில்லை என அவர்கள் நினைத்தனர்.

1976ஆம் ஆண்டு, சிறுநீர்ப்பையிலுள்ள சுரப்பியிற் பிரச்சினை உருவானதால், ஸ்ரான்பில் தமது சாரதிப்பதவியைத் துறக்க வேண்டி ஏற்பட்டது. பின்பு, முதுகெலும்பில் ஏற்பட்ட கோளாறைச் சரிப்படுத்தப் பலமுறை சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. பல விதமான, மர்மமான நோய்கள் அடுத்த தலைமுறையைப் பாதித்தன. 1977இல், இவரது மகள் சானென் (Shannon)25 வயதில் அசாதாரண பிள்ளைப்பேறின்பின் இறந்தார். அவ



ரது மகன் சோன்,(Shawn)42ஆவது வயதில்வியட்நாமில் போர் புரிந்தார். தற்போது சருமப்புற்று நோயினாற் பாதிக்கப்பட்டு, பலவகையான வயிற்றுக் குழப்பங்களுக்கு ஆளாகியுள்ளார். சோனின், இரு வாலிப ஆண் பிள்ளைகள், முழங்கால் வியாதியினாலும், கபாலத் தலையிடியினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஸ்ரான்வில் குடும்பம், இதற்கெல்லாம் ஒப்பரேசன் குறொஸ் றோட்ஸ் ஏ, காரணம் என்கின்றது.

உலக உலா, ஏப்ரல் 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் 7 ஆம் திகதி ஓ'லியரி அரசாங்கத்திடம் 1940–1970 வரை கதிரியக்கப் பரிசோதனைகள் பற்றி ஆராயும்படி கேட்டார். பின், டிசம்பர் 28 இல் நஷ்ட ஈடு கொடுக்கும்படி கேட்டபோது, 800 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டனர் எனக் கருதினார். இவர்களில் அநேகமானவர்கள் நடமாட முடியாத, மனநோயினாற் பாதிக்கப்பட்ட, அல்லது, கடும் வியாதிக்குட் பட்டவர்களாகவே இருப்பர் என நினைத்தார். ஆனால், இலவசத் தொலைபேசி வசதி செய்து கொடுத்த பின், கடந்த வாரம் மட்டும் 10,000 அழைப்புக்கள் வந்தன. சக்தித் திணைக்களம், தொலைபேசிச் சேவையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையை 36 ஆக, அதாவது, 3 மடங்காக அதிகரித்து, சேவை நேரத்தையும் 14 மணித்தியாலங்களாகக் கூட்ட வேண்டி ஏற்பட்டது.

இச்செயற்பாடு அதிகரிக்கவே செய்யும். பல திணைக்களங்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். 1 மில்லியன் - 300 மில்லியன் வரை நட்ட ஈடு வழங்க வேண்டி ஏற்படலாம். கடந்த 3வருடங்களில் சக்தித் திணைக்களம், தொழிலாளர்கள் பொது மக்கள் கொடுத்த வழக்குகளில் 47 மில்லியன் செலவழித்துள்ளது. ஒருவருக்கு புளூட்டோனியம் உட்செலுத்துவதும், கதிரியக்கங் கொண்ட கிணற்றிலிருந்து நீர் குடிப்பதும் ஒன்றே. எனவே, அரசாங்கம் இவற்றையெல்லாம் பொறுப்பேற்க வேண்டும், என M.P.N இன் பொப் ஷேவர் (Bob Schaeffer) கூறுகிறார்.

1940 களில் நஷ்வில்ல என்ற இடத்திலுள்ள, வன்டமில்ற் பல்கலைக்கழகத்தின், மகப்பேற்றுக்கு முந்தின இலவச மருத்துவத்தில், சுமார் 800 பெண்களுக்குக் கதிரியக்க இரும்பு, அவர்களது குளிர்பானத்துடன் கலந்து கொடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டபோது, மக்கள் கிளர்ந்தெழுந்தனர். 1960 களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இத்தாய்மாருக்குப் பிறந்த பிள்ளைகளிற் பெருமளவு விகிதப்படி புற்றுநோய்க்கு ஆளாகியுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. இப்பரிசோதனை, தங்கள் மேல் மேற்கொள்ளப்பட்டது என, இவர்கள் அறிவார்களா? எம்மா கராப்ட், (72) தமக்கு இதுபற்றித் தெரியாது என்கிறார். வைத்தியர்கள் எப்பொழுதும் சிறந்ததையே செய்வர் என நம்பினோம் என்கிறார், இவரது மகள் கறோலின், கட்டு ஏற்பட்டு 11 வயதில் மரித்தாள்.

ஆனால் வைத்தியர்களும் விஞ்ஞானிகளும், பனிப்போர்க் காலங்களில் இருந்த நியமங்களின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். சிக்காக்கோ பல்கலைக்கழகத்தின் கலாநிதி மார்க் சீக்லர், ''தொடர்பற்ற ஆராய்ச்சிகளை ஒன்றுபடுத்தி, பெரிய கதையாக்குகின்றனர்'' என்கிறார். இவ்வாராய்ச்சிகள் மூலம், மருத்துவம் வளர்ந்தது. பத்திரிகைகள் கதிரியக்கம் என்றவுடன், மக்கள் பயப்படுகின்றனர் என்கிறார், கதிரியக்கத்தில் வல்லுநரான பேராசிரியர் ஹோர்மன் செம்பர். கதிரியக்கம், நம்மைச் சூழ ஏற்கனவே உள்ளது என்பதை, மக்கள் உணராதிருக்கின்றனர் என்கிறார் மேலும் அவர்.

சமுதாயத்திற்கு நன்மை பயக்குமெனில், சிலர் ஆபத்துக்களை தாங்கத்தான் வேண்டும். ஆனால், இது போரில் மனிதருக்கு அழிவைத் தரப் பயன்படுத்தப்பட மாட்டா எனக்கூற முடியாது. மெரிலன்டின் உகோமா பாக்கிலுள்ள, சூழல் ஆராய்ச்சி நிலையத்தின் ஆர்ஜின் மக்கிஜானி, சில பரிசோதனைகள் வாயிலாக ஐக்கிய அமெரிக்கா, போரில் இவற்றைப் பயன்படுத்த முடியுமா? என ஆராய முற்பட்டது என்பதற்கு ஆதாரம் உண்டு என்கிறார். அண்மையில் வெளியிடப்பட்ட பொதுக் கணக்கியல் அலுவலகத்தின் ஆவணங்கள், 1948–1952 வரை, அவ்வாறான 13 ஆய்வுகள் நடத்தப்பட்டன என நிரூபிக்கின்றன. 'அணு நகர்' என்று உருவாக்கப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், 1 சதுரமைல் சுற்றளவுக்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை, வானிலிருந்து போடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எதிரி அணிகள் மீது அழிவை ஏற்படுத்துவதற்காக, ஐக்கிய அமெரிக்க துருப்புக்கள் பலிக்கடாக்களாகப் பயன்படுத்தப்பட்டன என நிரூபிக்கப்படும் பட்சத்தில், அரசு பல கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

ரைம், ஜனவரி 17 1994

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சோர்வும் அதைப் போக்கும் வழிகளும்

எழுதியவர்: பிறயன் ஒறெயிலி

1, மனச்சோர்வுக்கு ஆளாகியிருக்கின்றீர்கள் என்பதை எப்படிக் கண்டு கொள்வீர்கள்? சாதாரணக் கவலை, அல்லது ஏமாற்றம் என்பனவற்றுடன் இப்பாரதூரமான வியாதி பற்றிக் குழப்பமடையாதீர்கள். உண்மையான மனச்சோர்வுக்கான பிரதான இரு அறிகுறிகளாவன:-

1. கவலை உணர்வு, எல்லாம் வெறிச்சோடியிருத்தல், குவியலுக்குள் அகப்பட்ட உணர்வு முதலியன.
2. அனைத்து விடயங்களிலும் அக்கறை அருகிப் போதல்-பாலியல் உட்பட.

இவ்வறிகுறிகளில் ஏதாவதுஒன்று தென்படுமாயின் கீழ்க்காணும் விடயங்களைக் கவனிக்கவும்.

1. குறிப்பிடத்தக்களவு உடல் நிறை வீழ்ச்சி அல்லது அதிகரிப்பு.
2. நித்திரையின்மை, அல்லது அதிக நித்திரை.
3. உடலியக்கத்திலும், எண்ணப்பாட்டிலும் குறைவு.
4. களைப்பு.
5. தற்பெறுமதி யிழப்பு, அல்லது குற்ற உணர்வு.
6. மனதை நிலைப்படுத்துவதில் தளர்ச்சி, தீர்மானமின்மை, அல்லது மறதி.
7. மரணம், தற்கொலை பற்றிய எண்ணம்.

முதலிற் கூறப்பட்ட இரண்டில் ஓர் அறிகுறியுடன், இறுதியிற் குறிப்பிட்ட ஏழு அறிகுறிகளில் நாலு அறிகுறிகளோடு இணைந்து நீங்கள் பீடிக்கப்பட்டிருந்தால், உங்களுக்குப் பாரிய அளவில் மனச் சோர்வு உண்டு என்பது வெளிப்படையாகும். சில வாரங்களுக்கு இந்நிலை நீடித்திருந்தால், அல்லது அவை தற்கொலை எண்ணத்தைத் தூண்டியிருந்தால் உடனே மருத்துவரை அணுகவும்.

> "இவ்வகைத் தாக்கம் அதிகரித்து வருகின்றது. முன்னேறும் ஆசைபடைத்தோரையே, இது மேலதிகமாகப் பாதிக்கின்றது. ஒரு நற்செய்தி! தக்க மருத்துவம் பலரைக் குணப்படுத்துகின்றது."



2, அண்மைக்காலப் போர்ச் சூழ்நிலையும், அசம்பாவிதங்களும், அவை தொடர்பான நெருக்கீடுகளும் பொதுமக்கள் மத்தியிற் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பது கண்கூடு. இன்றைய யுத்தச் சூழ்நிலையினால் தோன்றியுள்ள பாதுகாப்பற்ற நிலை, நிச்சயமற்ற உணர்வு, பயவுணர்வு, உயிர் உடைமை இழப்பு, தீவிரக் காயங்கள், அகதி வாழ்க்கை போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவல அநுபவங்கள் உளவியல் ரீதியாகப் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இதனால் மக்கள் மத்தியில் உடல், உள நோய்கள். ஞாபகசக்தி குறைதல், நடத்தைக் கோளாறுகள், உணர்ச்சிக் குழப்பங்கள், உறவுகளிற் குறைபாடுகள், மற்றும் கற்றலில் இடர்ப்பாடுகள், பாடசாலை செல்ல மறுத்தல், கருத்தூன்றிக் கற்க முடியாமை போன்ற பல பிரதிபலிப்புக் களைக் காணலாம்.

## 3, பாதிப்பினால் ஏற்படும் விளைவுகள்

அ, இயற்கையான, சாதாரண எதிர்த்தாக்கம்,

ஆ. அசாதாரணப் பாதிப்பின் அறிகுறிகள்.

(i) நெருக்கீடுகளால் இயற்கையாக உண்டாகும் உடல், உள விளைவுகளும், உணர்ச்சிகளும், ஆரோக்கியத்தின் துலக்கங்கள். ஏனெனில் இவை எம்மை அபாயகரமான சூழலிலிருந்து விலகிக் கொள்ளவும், தற்பாதுகாப்பு முயற்சி எடுக்கவும், மற்றும் மனச் சமநிலையைப் பேணவும், நெருக்கீட்டைக் கையாளவும் ஊக்குவித்து நம்மை இயைந்து வாழ்க்கையைத் தொடர வழி வகுக்கும்.

(ii) சில வேளைகளில் இப்படியான நெருக்கீடுகள் தீவிரமாக, அல்லது தொடர்ச்சியாக நீடித்தால் அவற்றின் தாக்கம் நம்மால் தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டுப் பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

## 4, மக்களைத் தாக்கக்கூடிய நெருக்கீடுகள்

அதிர்ச்சியையும், மனக்குழப்பத்தையும் உண்டாக்கும் அசாதாரண நிகழ்வுகளையே இங்கு ''நெருக்கீடுகள்'' எனக் குறிப்பிடுகின்றோம். நெருக்கீடு நிகழ்வானது உள இயக்க ரீதியாக ஒரு மனிதனின் மன எண்ணக் கருக்கள், உலக மாதிரிகள், எதிர்பார்ப்புக்கள், நெருங்கிய உறவுகள், தொடர்புகள் போன்றவற்றைச் சிதைத்து நிர்க்கதியான மூழ்கடிக்கப்பட்ட கையறு நிலையை உருவாக்கும். இவைபோன்ற அதிதீவிர அசம்பாவிதங்கள் மனதில் ஊடுருவி ஆழமாகப் பதிந்து மன வடுக்களை விட்டுச் செல்லும். பெரியோர்களிலும் பார்க்கச் சிறார்களில் இத்தாக்கங்கள் குறைவாகக் காணப்படுகின்றன. சிறார்களின் ஆர்வம் துருவி ஆராயும் ஆவல், கபடமற்ற அப்பாவித் தன்மை, நிகழ்வுகளின் அர்த்தங்களையும், விளைவுகளையும் முற்றாகப் புரிந்து கொள்ளாமை போன்ற குணாதிசயங்களால் நெருக்கீடுகளைச் சுலபமாகவும், விளையாட்டுத் தன்மையுடனும் எதிர் கொள்வர்.

4. i ஆயினும் பெற்றோரிடமிருந்து (முக்கியமாகத் தாய்) குழந்தைகள் பிரிந்திருப்பின் பாரதூரமான தாக்கங்கள் ஏற்படும்:

4. ii பெற்றோர் பாதிக்கப்பட்டிருப்பின் அவை பிள்ளைகளிற் பிரதிபலிக்கலாம். அவர்களின் பாதகமான கையாள்கை, பிள்ளைகளுக்குக் கடத்தப்படலாம்.

4. iii நீடிக்கும் நாட்பட்ட மாற்றங்கள்:-பழகிய சூழலில் பிரிந்திருத்தல், சொத்துக்களை இழந்து நண்பர்கள், உறவினர்களைப் பிரிந்து புதிய சூழலில் நிலையில்லா அகதி வாழ்க்கையைத் தொடர நேரிடல், சிறார்கள் மத்தியில் உணர்ச்சிகளிலும், நடத்தைகளிலும், அசாதாரண மாற்றங்களையும், மனோ, சமூக விருத்தியிற் பின்னடைவுகளையும் காணலாம். இதனால் பிள்ளைகளின் உடன் தாக்கங்களையும் விட நீண்டகால விளைவுகள் கூடுதலாக ஏற்படுகின்றன.

4. iv போர்க்காலச் சூழலினால் மக்கள் மத்தியில் நெருக்கீடுகளை ஏற்படுத்தக்கூடிய பொதுக் காரணங்கள்:-

அ. போஷாக்கின்மையையும், வறுமையையும், (வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதாரக் கஷ்டங்கள், வீடுகள், சொத்துக்கள், தோட்டம், வயல்கள் போன்றவற்றின் இழப்பும், அழிவும்.

ஆ. நோய்வாய்ப்படும் நிலை. (நோய் எதிர்க்கும் சக்தி குறைவு, தொற்றுநோய்கள் அதிகரிப்பு, சுற்றாடற் சுகாதாரம் பாதிப்பு, சுகாதாரச் சேவைகள் சரிவர அளிக்கப்படாமை முதலியன.)

இ. இழப்புக்கள் (பெற்றோர் இறப்பு, காணாமற் போதல், குடும்பங்களிலிருந்து பிரிந்து இருத்தல்.)

ஈ. வன்முறைகளைக் காணுதல். (கொடூரமான முறையில் உறவினரின் மரணங்களை நேரடியாகக் காணுதல், குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காதல், கத்தி, கோடரிகளால் வெட்டப்படுதல், குருதிப் பெருக்கம், வேதனை, நோ, மரண அவஸ்தைகளைக் காணுதல், அங்கவீனப்பட்ட, உருக்குலைந்த அழுகிய பிரேதங்களைக் காணுதல், தமது வீடு, முக்கிய நிறுவனங்களின் அழிப்புக்களை அவதானித்தல்.)

உ. வன்முறைகளைத் தாம் அநுபவித்தல். (விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல், இராணுவம் தேடி அளிக்கும் நடவடிக்கைகள், சுற்றிவளைப்பு, சித்திரவதை, உயிருக்கு அச்சுறுத்துதல், பலாத்காரம் முதலியன.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. வன்முறைகளில் ஈடுபடல். (கொலை, வன் செயல்.)

எ. கல்விப் பிரச்சனைகள்.

## 5, நெருக்கிடுகளால் மக்களிற் பிரதி பலிக்கும் அறிகுறிகள்

5. i போரினால் ஏற்படும் வெளிக்காயங்களை விட பாதிக்கப்பட்டோரின் உள்ளத்தில் ஏற்படும் ஊறுகள் கூடுதலாகக் காணப்படுகின்றன.

5. ii ஏற்படும் பாதிப்புக்கள்.-

அ. உணர்ச்சிப் பிரச்சினைகள்.
ஆ. நடத்தைக் கோளாறுகள்.
இ. அறிவாற்றற் குறைபாடுகள்.
ஈ. பொய்ப் படுத்தல்

5. ii அ. உணர்ச்சிப் பிரச்சனைகள்;-

கவலை, பயம், அங்கலாய்ப்பு, குழப்பம், சோர்வு, நாணம், அஞ்சி ஒதுங்கும் சுபாவம், இலகுவாக அழுதல், தொட்டாற் சுருங்கித் தன்மை, கலகலப்பற்ற நிலை, எல்லை மீறிய கோபம், சீறி எதிர்க்கும் தன்மை, நெருங்கிப் பழகுபவர்களுடன் உறவுகளிற் குறைபாடுகள், சந்தேகிக்குந் தன்மை முதலியன.

5. ii ஆ. நடத்தைக் கோளாறுகள்:-

அளவுக்கு மீறிய தொழிற்பாடு, அல்லது எதிர் மாறாகச் செயலாற்றல் குன்றுதல், ஈடுபாடு குறைதல், ஆர்வமின்மை, குறுகுறுப்பு, வலிந்து சண்டைக்குப் போதல், வன்முறையில் ஈடு படல். தொடர்ந்து தொல்லை கொடுத்தல், பொய் பேசுதல், களவு செய்தல், பெரியோரை எதிர்த்தல், மதியாமை, கீழ்ப்படியாமை, மது, போதைவஸ்து அல்லது மருந்துத் துர்ப்பாவனை, பாடசாலைக்குச் செல்லாமை, ஒழுங்கின்மை, பாடசாலையில் இடர் தரும் நடத்தை, நெறி பிறழ்தல், சமூகவிரோதச் செயற்பாடுகள் முதலியன.

5. ii இ. அறிவாற்றற் குறைபாடுகள்:—

கல்வி, பேச்சுத்திறன் பின்னடைவு. (உ.ம்) பேச முடியாமை, திக்குவாய்.
கிரகிக்குந் தன்மை குறைதல்.
சிந்திக்குந் தன்மையில் அமுக்கம், மறப்பு, சுருங்கல், தடைகள், கருத்தூன்ற முடியாமை.

5. ii ஈ. மெய்ப்பாடு அறிகுறிகள்: (உளம் சார்ந்த உடல்)

சில வேளைகளில், நெருக்கீட்டுத் தாக்கங்களின் மனப் பாதிப்பினால், உடல் ரீதியான முறையீடு களாக வெளிப்பட முடியும். அதாவது, உடலில் ஒரு நோய், தக்க காரணங்களின்றி உடல் சார் முறையீடுகள் தோன்றலாம்.

சில மெய்ப்பாடு அறிகுறிகளாவன:—

தலையிடி, தலை அம்மல், தலைச்சுற்று, மயக்கம், வலி, நடுக்கம், நெஞ்சு நோ, படபடப்பு, சுவாசிக்கக் கஷ்டம், மூச்சு வாங்கல், முட்டு, வயிற்றுக் குத்து, ஓங்காளம், வாந்தி, பசியின்மை, வயிற்றோட்டம், சிறு நீர் அடிக்கடி போகுதல். உளைவுகள், நோவுகள், விறைப்பு, களைப்பு. நித்திரைக் குழப்பங்கள். பயங்கரக் கனவுகள் முதலியன.

## 6. மனச் சோர்வு

இவை, சில சமயங்களில் ஒரு பயங்கர நோயாக, மரணத்தை வருவிக்கும் வியாதியாகவும் மாறலாம். ஒருவரின் தொழிலையும், திருமண வாழ்வையும் கூடக் குலைத்து விடலாம்.
நல்ல செய்தி யாதெனில், இலகுவாகச் சிகிச்சையளிக்கக் கூடிய மன விரக்தி தொடர்பான வியாதிகளுள், மனச் சோர்வும் ஒன்றாகும். மனச்சோர்வு நோயாளிகளுள், 80 விழுக்காட்டினர் சில வாரங்களிலேயே குணமடைந்து விடலாம். மனச் சோர்வை நீக்கும் பல்வகை மருந்துகள் இப்போது கிடைக்கின்றன. அவற்றின் பக்க விளைவுகள் மிக மிகக் குறைவு.

மனச்சோர்வு உள்ளவர்கள் அநுபவிக்கும் வியாதி, மூளையில் இரசாயனச் சமச் சீரின்மையால் தோன்றும், நீரிழிவு வியாதி போன்றதோர் உயிரியல் இரசாயனச் சிக்கலேயாகும் என்பது, விஞ்ஞானிகளின் முடிவு.

## 7. அணுகு முறைகள் (மனச் சோர்வு)

1. குடும்ப வைத்தியர்கள், அண்மையிலுள்ள வைத்தியசாலைகளை நாடுங்கள்.
2. யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை உள மருத்துவப்பிரிவு சிகிச்சை நிலையம் நடைபெறும் நாள்கள். (ஓ. பி. டி. மேல் மாடி) திங்கள், புதன், வெள்ளி- மு. ப. 8. 30 - 12.30 மணிவரை.
3. தெல்லிப்பளை வைத்தியசாலை. (மானிப்பாய்) செவ்வாய், வியாழன் மு.ப.830–12 30 மணிவரை.
4. மந்திகை வைத்தியசாலை (பருத்தித்துறை).

## 8. கையாள்கை (நெருக்கிடு)

1. அறிவு:—

ஆசிரியர், பெற்றோர், சமூக முன்னோடிகள், மக்களில் ஏற்படக்கூடிய நெருக்கீட்டுத் தாக்கங்களையும், அவற்றின் விளைவுகளையும் பற்றி அறிந்திருத்தல் நன்று. அவர்களை அவதானித்து உளச் செயற்பாடுகளை ஊகித்துக் கொள்ளும் ஆற்றல் தேவைப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இனங் காணல்:—

பாதிப்புக்குள்ளாகியவர்களுடன், சிநேகபூர்வமான நல்லுறவை ஏற்படுத்த வேண்டும். அன்பு, ஆதரவு, விசுவாசம், அரவணைப்பு, போன்றவற்றை நிலைநாட்டி, பேசப்படும் கருத்துக்கள் அந்தரங்கமாகப் பேணப்படும் என்ற நம்பிக்கையை உருவாக்குதல் வேண்டும். நெருங்கிய நல்லுறவின் பின், புரிந்துணர்வுடன், நடந்தவற்றையும், அதன் விளைவுகளையும் கேட்டு அறியலாம்.

3. சமூக முன்னோடிகள் செய்யக் கூடியவை:—

1. செவி மடுத்தல்:— அன்புடன் அணுகி, ஆதரவளித்து நடந்தவற்றைப் பகிர்ந்து வெளிப்படுத்த உதவுதல் பல சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர் குணமடைவதற்கு வழி வகுக்கும்.

2. வெளிப்படுத்தல்:— நெருக்கீடுகளுக்குப் பின் தோன்றும் விளைவுகளுக்கு, அவற்றைப்பற்றிய சிந்தனைகள், உணர்ச்சிகள், உணர்வுகள் முதலியவற்றை உள்ளே அடக்கி ஒடுக்குவது, அல்லது மறுப்பது ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. வெளிப்படுத்தாவிடின், மன வடுக்களை ஏற்படுத்த முடியும். இந் நிலைமை, பிற்காலத்திற் பாதிப்புக்களை ஏற்படுத்தும். சித்திரம், சிற்பம், களிமண் மாதிரிகள் அமைத்தல், உளமறி நாடகம், பங்கு ஏற்று நடித்தல், கதை சொல்லுதல், எழுதுதல், சங்கீதம், விளையாட்டு முதலியன மூலம் வெளிப்படுத்த உதவுதல் வேண்டும்.

3. உளவளத் துணை:— செவி மடுத்தலோடு, அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வை உண்டாக்கி, அவர்கள் சிந்தனையையும், கவலைகளையும் பகிர்ந்து கொள்ள, வாய்ப்பான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இதன் மூலம், சாதகமான கையாள்கைகளை மேற்கொள்ளவும், பாதகமான முறைகளைக் கைவிடவும் வழிகாட்டுதல், உளவளத் துணையாளர்களின் கடமையாகும். சாந்தியகம்- எனும் உளவளத்துணை நிலையம், 15, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்திருக்கின்றது. மு. ப. 9.00 - பி. ப. 4. 00 மணிவரை, இந் நிலையத்தில் உளவளத் துணையை நாடலாம். பயிற்றப்பட்ட பல உளவளத் துணையாளர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

4. சாந்தவழி முறைகள்:— இவை மெய்ப்பாடு (உளம் சார்ந்த உடல்) அறிகுறிகளுக்கும், பயம், பதற்றம், பதகளிப்பு, அச்சம் போன்றவற்றிற்குச் சிறந்த பயிற்சி முறையாகும். அவையாவன:— சுவாசப்பயிற்சி, சாந்தியாசனம், சுவாசனம், மந்திர உச்சாடனம், தியானம் முதலியன.

## 9. தொகுப்புரை

அண்மைக்காலப் போர்முனை, சமூகத்தில் மனச்சோர்வையும், உள நெருக்கீட்டையும் கூடுதலாக ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வசாதாரண நிலைமை பற்றி, மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

இதன் மூலம், மக்கள் இத்தன்மைகளை இனங்காணவும், அவற்றிற்கு முகங் கொடுக்கக்கூடிய வழி முறைகளையும், கையாள முடியும். உளச் சமநிலையைப் பேணுவதன் மூலந்தான், எமது ஆரோக்கியத்தைப் பேண முடியும்.

:போ(ர்)ச்சுன், நவம்பர் 29, 1993.

## தாய்வான் கப்பற் போக்குவரத்துத் தொடர்பு

தாய்வானின் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் சியாங், பெருநிலப்பரப்புடைய சீனாவுடன் நேரடிக் கப்பற் போக்குவரத்துத் தொடர்பு வைக்க வேண்டும் என்று கோரும், முதலாவது அமைச்சர் மட்ட அதிகாரியானார். அதனால் செலவுச் சுருக்கம் ஏற்படுவதுடன், தனது நாட்டின் கொள்கைத் திட்டமான, இருபகுதியாரும் காலகதியில் ஒன்று சேரவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் வளர்க்க உதவும் என்று கூறினார். இரு நாடுகளினதும் சில குறிப்பிட்ட துறைமுகங்களுக்கு இடையில், மட்டுப்படுத்தப்பட்டதாக நேரடிக் கப்பற் போக்குவரத்து மேற்கொண்டால், ஹொங்கொங் ஊடாகத் தற்சமயம் நடைபெறும் கப்பற் போக்குவரத்தை நம்பிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை என்று அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்காலம் அண்மிக்கிறதா?



— எழுதியவர் —

மைக்கல் டி. லெமொனிக்

கடந்த வாரத்தில் ஏற்பட்ட நில நடுக்கம், தெருக்கள், கட்டடங்கள், உயிர்கள் ஆகியவற்றிற்குத் தென் கலிபோர்னியாவிற் பல சேதங்களையும், அழிவுகளையும் விளைவித்தது. அதிலும், மோசமான இயற்கை அழிவு, கனடாவிலிருந்து தெற்கு நோக்கி, ஐக்கிய அமெரிக்காவினுள் மெதுவாக, ஆனால் நிச்சயமாக வருகிறது. வார மத்தியில் கடுங்குளிர்க் காற்றுப்பரவி, மத்தியமேற்கு, கிழக்குப் பகுதிகளை அப்படியே உறையச் செய்து விட்டது. பல நகரங்களின் வெப்பநிலை வீழ்ச்சியடைந்தது. பிற்ஸ்பேர்க்- 32 பாகை 'சி' ஆக்ரோன், ஏகையொ, கிளாக்ஸ்பேர்க், மேற்கு வேர்ஜீனியா- 32 பாகை 'சி', இந்தியானா போலிஸ் 33 பாகை 'சி', சிக்காக்கோவில், குளிர் காரணமாக, முதன் முதலிற் பாடசாலைகள் மூடப்பட்டன. வோஷிங்ரனில் பணிமனைகள் மூடப்பட்டன. கிழக்குக் கரையோர நகர்கள் மின் வெட்டிலிருந்து சற்றே தப்பின. நியுஜேர்ஸியில் பல வாகனச் சாரதிகள், பனியால் மூடப்பட்ட தெருக்களிலிருந்து காப்பாற்றப்பட வேண்டியிருந்தது. கடுங் குளிர்க் காற்றினால், 138 பேர் மாண்டனர். விஞ்ஞானிகள், வாகனங்களிலிருந்து வெளிவரும் வாயுக்களினால் புவியின் வெப்பநிலை உயரும் என்றனர். இன்னும் 75 வருடங்களில் ஆபத்தான உயர் வெப்பநிலையை அடையும் என்றனர். ஆனால், தற்போது அடுத்து வரவிருக்கும் பனிக்காலம் பற்றிக் கவலைப்பட வேண்டும். முந்திய பனிக்காலம் (Ice age) 10, 000 வருடங்களுக்கு முன் வந்தது. அடுத்தது, இன்னும் 10, 000 வருடங்களின் பின், அல்லது சில தசாப்தங்களுள் வரலாம்.

நாம், இதனைப்பற்றித் திட்டமாகக் கூறமுடியாது. ஒரு வாரமாக ஏற்பட்ட கடுங் குளிர்க்காலம், ஓர் அர்த்தமற்றதா யிருக்கலாம். கடந்த வாரம் ஏற்பட்ட குளிருக்குக் காரணம், வட அமெரிக்காவின் கால நிலையைக் கட்டுப்படுத்தும் காற்று, தற்காலிகமாகத் தன் திசையை மாற்றித் தெற்கே வீசியது ஆகும். இந் நிலை அடிக்கடி நடைபெற்றால், பாரதூரமான விளைவு ஏற்படும். கால நிலை ஆராய்ச்சியாளரின் கணிப்புப்படி, புவி பனிக்காலங்களில் உறைந்திருந்து ஒய்வு பெற்றது. வடகோளத்தின் வெப்பநிலை, ஐந்து பாகையினாற் குறைந்தது. புவியின் தரைப்பகுதியின் அநேக பகுதி, பனியினால் மூடப்பட்டிருந்தது. அதன் உயரம் $1\frac{1}{2}$ கிலோ மீற்றராகும். 100, 000 வருடங்களுக்கு இப்படியே இருந்து பின்பு தற்பொழுதிருக்கும் நிலைக்குப் பின் வாங்கியது. 10, 000 வருடங்களுக்கு அப்படியே இருந்து பின் வளரத் தொடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த பல வருடங்களாக, விஞ்ஞானிகள் அடலாண்டிக் கடலின் அடியிலிருந்தும், கிறீன்லாண்டின் பனி மலைகளிலிருந்தும், படிவுகளை ( Sediments ) ஆராய்ந்து ஆதிகாலச் சேறு, பனி என்பனவற்றின் இரசாயனத்தை ஆராய்ந்தனர். அதன்படி, கால நிலை மாற்றம் சீரான ஒன்று அல்ல. வெப்பமான கால நிலையிலிருந்து, உறை நிலைக்கு ஓரிரு தசாப்தங்களுள் நடைபெறலாம். கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின், லாமொன்ற் டொஹெற்றி கால நிலை ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த புவிப் பௌதிகவியலாளர் ( Physicist ) கெராட் பொண்ட் என்பவர், '' கிறீன்லாண்டிலிருந்து 10,000 வருடங்களாகத் தரவுகள் வருகின்றன. ஆனால், முதன் முதலில் தரவுகள் கிடைத்தபோது, ஒருவருமே நம்பவில்லை '' என்கிறார்.

பனிக் காலங்கள், சீராக உறை பனி உடையவை அல்ல எனவும், இவற்றிற்கு இடைப்பட்ட காலங்கள், மாறாகச் சூடான காலங்களாகவும். இருக்கவில்லை எனவும், தற்பொழுது அறிய வந்துள்ளன. உதாரணமாக:— 40,000 வருடங்களுக்கு முன், அதாவது கடைசியாக ஏற்பட்ட பனிக் காலத்தின் நடுப் பகுதியில், உலகம் சிறிது காலம் வெப்பம் ஆகியது. பனி மலைகள் உருகிப் பின்வாங்கின. தற்போதுள்ள உறைபனிக் காலங்களுக்கு இடைப்பட்ட காலம், நிலையான சீதோஷ்ணக் ( Temperates ) காலத்தை உடையதாயினும், இதற்கு முன்பிருந்த சீதோஷ்ணக் காலத்தில், 100 வருடங்களுக்கு நீடிக்கும் பனிக் காலங்களும் காணப்பட்டன. தற்போதுள்ள நிலைமையிலும், முன்பிருந்த நிலைகளே அடிக்கடி ஏற்படும் நிலைகளாயிருந்தால், மனிதனின் நாகரிகம், கமத்தொழில் என்பன தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்டவையாகும்.

150 வருடங்களுக்கு முன்பு, வடகோளம் முழுவதும் ஒரு காலத்திற் பனித் தட்டுக்களால் மூடப்பட்டிருந்தது எனக் கூறப்பட்ட கருத்துப் புதிதாகவும், பல முரண்பட்ட கருத்துக்களையும் கொண்டிருந்தது. ஆயினும், 1930 களில் யூகோஸ்லாவிய விண்வெளி ஆய்வாளர் மிலுரின் மிலன் கோவிற்ச் ( Milutin Milankovitch ), ஏற்கப்படக் கூடிய கொள்கையை முன் வைத்தார். இதன் படிக்கு, பல விண்வெளிச் சக்கரங்கள் ( Astronomical Cycles ) உண்டு. புவி, சூரியனைச் சுற்றி நீள் வட்டப் பாதையிற் சுழலுகிறது. இப் பாதையிலும், அதன் அச்சிலும் சிறிய வித்தியாசம் ஏற்படுவதால், பனிக் காலம் ஏற்படுகிறது என்கிறார். கால நிலை மாற்றத்தில் தங்கியுள்ள சமுத்திரத்தின் அடியிலுள்ள படிவங்களின் இரசாயன அமைப்பின் ஆராய்ச்சி முடிவுகள், இவரது கூற்றை நிரூபிக்கின்றன.

மிலன் கோவிற்சின் கருத்துப்படி அடுத்த பனிக் காலம், 1000 அல்லது, 2000 வருடங்களில் ஏற்படும். ஆனால், புவியியற் பௌதிகவியலாளர்கள், விண்வெளிச் சக்கரங்கள் மட்டும் பனிக் காலங்களை விளக்கப் போதுமானது அல்ல என்கின்றனர். கடைசிப் பனிக்காலம், 13,000 ஆண்டுகளுக்கு முன், வெப்பநிலை மாற்றம் திடீரென மாறி, குறைந்து செல்லும் போதும், பின் வாங்கிய நிலையிலேயே காணப்பட்டது. திடீர் திடீரென, இடையிடையே ஏற்பட்ட குளிர்க் கால நிலையையும், விண்வெளி ஆராய்ச்சியால் விளக்க முடியாது.

ஒழுங்கில்லாத திடீர்க் கால நிலை மாற்றங்களை விளக்க, பல கோட்பாடுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. லோமொன்ற் டொகெற்றியின் வலஸ் புறோக்கரும், ( Lamont Doherty's Wallace Broceker ) மெயின் பல்கலைக் கழகத்தின் ஜோர்ஜ் டென்ரனும் ( George Denton the University of Maine) சமுத்திர ஓட்டச் சக்கரத்தை உள்ளடக்கும், உயர் கோட்பாட்டை முன்வைத்துள்ளனர். இவர்களது



கோட்பாட்டின்படி, வெப்ப வலயத்திலுள்ள உப்பு நீர் ( உப்பு சாதாரணமாக அடர்த்தி கூடியது ), சமுத்திரத்தின் அடியில் வட அட்லாண்டிக் நோக்கிப் பாய்கிறது. அங்கு வீசும் காற்றினால், மேலுள்ள நீர் தூர வீசப்படுவதால், உப்பு நீர் மேலெழும்புகிறது. அங்கு தன் வெப்பத்தை வெளியிடுவதால், குளிர்வடைந்து கீழே விழுகிறது. மீண்டும், தன் சக்கரத்தைத் தொடங்குவதற்காக, வெப்ப வலயத்தை நோக்கி நகருகிறது.

இவ்வகையான நீரோட்டமே, ஆட்றிக் (Artic) பகுதிகளைச் சற்று வெப்பமாக வைத்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நீரோட்டம் தடைப்படும் போது, பனிக்காலம் தோன்றும். இத்தடைக்குக் காரணம் யாது? நன்னீர் கடலுடன் கலந்து, உப்பின் செறிவை ஐதாக்கி, அடர்த்தியைக் குறைத்து விடுகிறது. இதனால், உப்பு அடிக்குச் சென்று, ஓடுவது தடைப்படும். இளம் ட்றையாஸ் (Younger dryas) எனப்படும். காலம் ஏற்பட்டபோது, வட அமெரிக்க ஆறு (தற்போது இவ்வாறு இல்லை) பெருமளவு நன்னீரை அட்லாண்டிக் சமுத்திரத்தினுள் கொட்டியது. 1000 வருடங்களின் பின் இது நின்றுவிட்டது. அதே காலத்தில், இளம் ட்றையாஸ் உம் நின்று விட்டது. பென் மாநிலத்தின் றிச்சேட் அலே (Richard Alley) என்ற கிறீன்லாண்டின் பனிக்கட்டிகளில் நிபுணர், புறோக்கர், டென்றான் ஆகியோரின் மாதிரிகளே, திடீர் மாற்றங்களைத் தூண்டி விடுகின்றன என்கிறார்.

வேறு என்ன காரணிகள் கால நிலையைப் பாதிக்கின்றன? என்பது ஒருவருக்குந் தெரியாது. 'கடந்த 8,000, அல்லது 10,000 வருடங்களாக, காலநிலை மாறவில்லை என அறிவோம். இன்னும் எவ்வளவு காலம் இப்படி இருக்கும்? எனக் கூற முடியாது. நமக்கு இது பயத்தை ஏற்படுத்துகிறது' என்கிறார் அலே.

சுருக்கமாக, நமது காலத்தில் முழுமையான பனிக்காலம் ஆரம்பிப்பதற்குக் காரணங்கள் இல்லை என்றாலும், குறுகிய உறைகாலங்கள் ஏற்படலாம். பச்சை வீட்டு விளைவு, புவியை வெப்பப்படுத்தினாலும், குளிரைத் தூண்டும் காரணிகள் திடீர் உறை நிலையை ஏற்படுத்தலாம். கடந்த வாரக் குளிர் காலம், குட்டையான பனிக்காலம் எவ்வாறு இருக்கும் என்பதைக் காட்டியது.

நைம், ஜனவரி 31, 1994.

# ஒவ்வாமை நோயாளர்க்கான வளித் தூய்மையாக்கி.

நாசா பயன்படுத்தும் தொழில் நுட்பத்தின் மூலம், சக்தி வாய்ந்த "என்வறிக்கெயார்" என்ற வளித்தூய்மையாக்கி (Air purifier) செய்யப்பட்டுள்ளது. 20 × 22 அடி பரிமானமுள்ள இடத்தில், வளியிலுள்ள மாசுக்கள், துகள்கள் என்பவற்றில் 99·97 வீதமானவற்றை அகற்றக் கூடியது. இதன் மூலம், சாத்தியமான மிகத்தூய்மையான வளியை நீங்கள் சுவாசிக்கலாம். புகை, பிராணிகளின் உரோமங்கள், பக்ரீரியா, வைரசு, தூசி, ஆவிகள், மகரந்த மணிகள், பூஞ்சண வித்திகள் போன்ற எல்லாவற்றையுமே, இது வளியிலிருந்து அகற்றிவிடுகிறது. இதனால், ஒவ்வாமைத் தாக்கங்களையும், சுவாசத் தொந்தரவுகளையும் பெருமளவிற் குறைக்கலாம். ஏனெனில் ஒவ்வாமை ஏற்படுவதற்குக் காரணம், வளியிலுள்ள மகரந்த மணிகள், பிராணிகளின் உரோமங்கள் போன்றவையே. தொய்வு, ஒவ்வாமை, வாதனாளியழற்சி (Bronchitis) ஆகிய நோய்களை உடையவர்களுக்கு, பல வைத்தியர்கள் இக் கருவியைச் சிபாரிசு செய்கிறார்கள். இத்தூய்மையாக்கியில், மாசுக்களை அகற்ற "ஹெப்பா" (Hepa) எனப்படும் அதிகத்திறன் வாய்ந்த வடிப்பானும், (Filter) மணங்களையும், புகைகளையும் அகற்றக் காபன் வடிப்பானும் பயன்படுத்தப் படுகின்றன. 10 நிமிடத்துக்கொருமுறை, இது வளியைச் சுத்தமாக்கும். உற்பத்தியாளர்களால், 2 வருட மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. ஹெப்பா வடிப்பான், 5 வருடம் வரை நீடிக்கக்கூடியது. ஒரு வருடத்துக்கான கரிவடிப்பான், தூய்மையாக்கியுடனேயே வழங்கப்படுகிறது. விலை 299·95 டொலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம்:-

# மனிதத்தின் பரிணாம வளர்ச்சியும், அதன் அறிவியல் தொடக்கமும்.

ஒரு காலத்தில் நான்கு கால்களில் நடந்த மனிதன் பின்பு பரிணாம வளர்ச்சியில் இரண்டு கால்களில் நடக்கத் தொடங்கியுள்ளான். நாம் நான்கு கால்களால் நடந்து வந்த மூதாதையரிடமிருந்து தான் பரிணாம வளர்ச்சி பெற்றோம் என்பதற்குச் சான்றாக நாம் நடக்கும் போது எமது கைகள் முன்னும், பின்னும் அசைகின்றன. இதை மேலும் தெரிவிக்க, குழந்தையாக இருக்கும் போது நாம் தவழ்கிறோம். நிமிர்ந்த நடையைச் சமன் செய்யவே நாம் எமது கைகளை முன்னும் பின்னும் அசைக்கின்றோம். நாம் நிற்கும்பொழுதும், நடக்கும் பொழுதும் எமது உடலின் புவி ஈர்ப்பு மையம் பாதங்களை விட்டுச் செல்வதில்லை. ஒரு கையாற் பாரந் தூக்கும்போது புவி ஈர்ப்பு மையம் காற்பரப்பை விட்டு வெளியே செல்ல வாய்ப்பு உண்டு. ஆகையால் கீழே விழாமல் நின்றிட மறுகையைக் கிடைத் திசையில் நீட்டவேண்டி இருக்கின்றது. இச்செயல் நம் உடலின் புவிஈர்ப்பு மையத்தை மீண்டும் பாதப் பரப்புக்குள் கொண்டுவர உதவுகின்றது. சம அளவான பாரத்தை இரு கைகளிலும் தூக்கும்போது சமநிலை தவறாது நடப்பதின் விளக்கம் இதுவே.



மனிதனை மிருகங்களிடமிருந்து தனிமைப்படுத்துவது அவனுடைய சிந்தனா சக்தியும், பகுப்பாய்வுத் திறனுமே. இவ்விரண்டும் இல்லாவிட்டால் மனிதன் மிருகங்களுடன் வைக்கப்படவேண்டியவனாவான். நிமிர்ந்த நடையும், நிறைந்த அறிவும் கொண்ட மனிதன் இப்புவியில் எப்போது தோன்றினான் என்பதற்கு விஞ்ஞானிகளால் இன்றுவரை ஒன்றுபட்ட கருத்துக்கு வரமுடியவில்லை. நிலத்தைக் கிளறும்போது கிடைக்கும் மனித எலும்புகள் இக்கருத்து முரண்பாடுகளை வளர்க்க உதவுகின்றன. கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக எப்போது, எங்கு, எவ்வாறு மனிதன் தோன்றினான்? என்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன. மனித வரலாற்று விஞ்ஞானிகள் தரும் கருத்தைக் கேட்டு முடிவுகளைத் தர இயலாத நிலையில் இன்றுவரை இருக்கின்றனர். மனிதனின் மூதாதையர் ஆபிரிக்காக் கண்டத்தில் முதன் முறையாகத் தோன்றியிருக்கலாம் என்ற கருத்து பெரும்பாலான விஞ்ஞானிகளால் வேறுபாடின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான மனிதன் ஆபிரிக்காவை விட்டுக் கிளம்பிப் புவியின் பல்வேறு இடங்களில் குடியமர்ந்ததாகவும், இவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஒருமைக் கருத்தில் தற்போது சில மாற்றங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. விஞ்ஞானிகள் நினைத்ததிலும் பார்க்க வெகு காலத்திற்கு முன்பாகவே மனிதன் ஆபிரிக்காவை விட்டு வெளியேறியுள்ளான் என்பது அதில் முதன்மையானது. அத்துடன் மனிதன் ஆபிரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் வரலாறு

காவில் மாத்திரமல்ல; புவியின் வேறு பகுதிகளிலும் இன்றைய உருவ வளர்ச்சியைப் பெற்றிருக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனிதனின் பரிணாம வளர்ச்சியில் ஹோமோ சபியன்ஸ் நிலையை இறுதியானதாகக் கொள்ளலாம். இது இலத்தீன் மொழிக் கோவை. இதன் தமிழாக்கம் பின்வருமாறு:- Homo மனிதன்; Sapiens அறிவு, புத்தி, உணர்வு. இந்த அடைமொழி, தற்கால மனிதனைக் குறிக்கும்

ஹோமோ சபியன்ஸ் இப்புவியில் தோன்றிய காலத்தையும், வெகுவாகப் பின் தள்ளிப் போட வேண்டியுள்ளது. எமது வளர்ச்சியில், நிமிர்ந்த நடைக்காலமும், பட்டதாகவும், ஆய்வுகளின்பின் இதன் வயது 200, 000 வருடங்கள், எனக் கணக்கிடப்பட்டதாகவும் இச் செய்தி சொல்லுகின்றது. கிழக்காசியாவிலும், தெற்காசியாவிலும், இதுவரைகாலமும் எடுக்கப்பட்ட ஹோமோ சபியன்ஸ் எலும்புகளிலும் பார்க்க, இது இருமடங்கு பழைமை வாய்ந்ததாகும். இன்றைய மனிதன், ஆபிரிக்காவில் மாத்திரமல்ல; வேறு தூரப் பகுதிகளிலும் சமகாலத்தில் தோன்றியிருக்க வேண்டுமென்று, இந்தச் சினக் கண்டுபிடிப்புச் சிந்திக்கத் தூண்டுகிறது.

ஜாவாத் தீவில், இரண்டு இடங்களில் ஹோமோ சபியன்ஸ் அத்துடன் அவனுக்கு உண்டாக்கும் சக்தியும் உண்டு. ஜாவாத் தீவிற் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள், இதுவரைகாலமும் 1 மில்லியன் வயதுடையவை என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், அண்மையில் மிகவும் முற்போக்கான முறைகளின் படி, அதே எலும்புகளை ஆய்வு செய்தபோது, அதன் வயது 2 மில்லியன் வருடங்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகையால், இக்கால மனிதனுக்கு முற்பட்ட, நிமிர்ந்து நிற்கும் பிராணிகள் ஆபிரிக்காவை விட்டு, தற்போது தீர்மானிக்கப்பட்ட காலத்திற்கு மிகவும் முன்பாகவே, உலகை வலம் வரத் தொடங்கிவிட்டன என்று




மனிதத்தின் நெடிய பயணம். அடிகள்:– 1. ஒஸ்ற்றலோபிதேக்குஸ் அ:பறென்சிஸ், 2. ஒஸ்ற்றலோபிதேக்குஸ் ஆபிரிக்கானுஸ், 3. பறன்துறோப்புஸ் பொயிசரி, 4. பறன்துறோப்புஸ் றொபுஸ்ருஸ், 5. ஹோமோ கபிலிஸ், 6. ஹோமோ இறெக்ருஸ் 7. ஹோமோ நெயண்டர் லென்சிஸ், 8. ஹோமோ சபியன்ஸ்

புத்தி, அறிவு, உணர்வு பெற்ற காலமும், இருவேறுபட்ட நிலைகளாகும். இதன் கால அளவுகள் மாற்றப்படவேண்டிய அவசியம், இப்போது நிகழ்ந்துள்ளது.

மனித வரலாற்று விஞ்ஞானத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மாற்றியமைக்கக்கூடிய செய்தியொன்று, நீகாவிலிருந்து வந்துள்ளது. அகழ்வொன்றின்போது, இன்றைய மனிதனின் தலையோடு போன்றதொரு கபாலம் மீட்கப் இனத்தைச் சேராத, ஹோமோ இறெக்ருஸ் இனத்தைச் சேர்ந்த மனிதனின் எலும்புகள், சில காலத்திற்கு முன்பு எடுக்கப்பட்டுள்ளன. ஹோமோ இறெக்ருஸ் ( HOMO ERECTUS ) மனிதன், நிமிர்ந்து நிற்கும் தகைமை பெற்றவன். ஆனால், எம்மினத்தவனான ஹோமோ சபியன்ஸ் போன்ற வளர்ச்சி இல்லாதவன். ஆனால், இவன் கற்கால ஆயுதங்களைச் செய்து பாவிக்கும் தன்மையுள்ளவன்.

முடிவெடுக்கத் தோன்றுகிறது. இத்துடன், ஆபிரிக்காவை விட்டுக் கிளம்பிய இப்பிறவி ஆசியாவில் தங்கி, அங்கு ஆசியாவுக்கே உரிய தற்கால மனிதனை உருவாக்க, போதுமான கால அவகாசமுண்டு என்பதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இதுவரை காலமும், ஆபிரிக்காவில் தான் ஹோமோ சபியன்ஸ், அதாவது, இன்றைய மனிதன் உருவானான் என்று நம்பப்பட்டுள்ளது. ஆனால், எதிர்வரும் காலத்தில், ஆசியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலும் ஒரு ஹோமோ சபியன்ஸ் உண்டாகி இருக்கும் என்று தீர்மானிக்க இடமுண்டு. பழைய எலும்புகளைக் கால நிர்ணயம் செய்வது, மிகவும் நுண்ணியதோர் ஆய்வுக் கூடக்கலை. சீனாவின் இத்தகைய விஞ்ஞானம், எத்துணை முற்போக்கானது என்பதை யாம் அறிவோம். ஆனால், அமெரிக்காவின் பேர்க்லே (BERKELEY) பல்கலைக் கழகப் பேராசிரியர் கார்ள் சுவிஹர் (CARL SWISHER) அவர்கள், கால நிர்ணயக் கலையிற் கைதேர்ந்தவர் என்பதை, இவ்வுலகு மறுப்பின்றி ஏற்றுள்ளது. நிமிர்ந்து நடக்கும் ஹோமோ இறெக்ருஸ் மனிதன், ஆபிரிக்காவை விட்டு, முன்பு தீர்மானிக்கப்பட்டதிலும் பார்க்க 1 மில்லியன் வருடங்ளுக்கு முன்பே கிளம்பி விட்டான் என்பதே இவருடைய முடிவு.

பெருங் குரங்கிலிருந்து, மனிதன் நேர்வழிப் பாதையில் தோன்றவில்லை என்பதே, கற்றோரின் தீர்ப்பு. பலவும் தோன்றி மறைந்து, சேர்க்கையாற் புதியதும் தோன்றலாம் என்றெல்லாம், அவர்கள் அநுமானிக்கின்றனர். இதில் உயிர் தப்பியவனே இன்றைய மனிதனின் கரு. எது எப்படி இருப்பினும், இன்றைய மனிதனின் மூதாதையர், ஆபிரிக்காவில் 4 மில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றி இருத்தல் வேண்டும் என்பது, மனித வரலாற்று விஞ்ஞானிகள் ஆய்ந்துகண்ட முடிவு. ஆபிரிக்காவின் சீதோஷ்ணம் சாதகமானது; பல்வேறு பிராணிகளும் அங்கு காணப்படுகின்றன. மிகப் பழைமை வாய்ந்த எலும்புகளும் இதையே கூறுகின்றன என்று, அவர்கள் விரித்துக் கூறுகின்றனர். 1974 ஆம் ஆண்டு, எதியோப்பியாவில் டொனால்ட் ஜொகான்சன் என்பவர் கண்டெடுத்த 1.07 மீற்றர் உயரமுள்ள ஒரு ' மிருகத்தின் ' எலும்பு, இதற்குச் சான்று பகருகின்றது. இதன் முழு எலும்பில் 60 வீதம் மாத்திரம் கிடைத்திருந்தாலும், இது குரங்கிற்கும், மனிதனுக்கும் இடைப்பட்ட



ஜாவாத் தீவில், இரண்டு இடங்களில் ஹோமோ இறெக்ருஸ் இனத்தவர்களின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த எலும்புகளில் நடத்தப்படும் பரிசோதனைகள், எமது மூதாதையர் எப்போது ஆசியாவுக்கு வந்தனர்? அல்லது, ஆசியாவிலேயே உற்பத்தியானார்களா? என்பதை நிர்ணயிக்கும்.

பிராணி என்று கூற, போதுமானதாகும். மனிதன் என்று சொல்ல, இது மிகவும் உயரம் குறைவாக இருந்தாலும், மனிதனுக்குரிய நிமிர்ந்து நடக்கும் வலிமை இதனிடம் உள்ளதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தப் பிராணிக்கு, அபறென்சிஸ் என்ற சுருக்கப் பெயரும், ஒஸ்ற்றலோபிதேக்குஸ் அஃபறென்சிஸ் (AUSTRALOPITHECUS AFARENSIS) என்ற விரிவான பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது. இது, உண்மையில் நடந்து திரிந்ததென்பதற்குச் சான்று, 1970 இல் மதிப்பிற்குரிய மேரி லீக்கி (MARY LEAKEY) அவர்களால் டன்சானியாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நன்றாகப் பாதுகாக்கப்பட்ட பாதச் சுவடுகள், எரிமலைச் சாம்பரில் மேரி அவர்களால் தேடிப்பிடிக்கப்பட்டுள்ளன. அஃபறென்சிஸ், 5 அடிக்குக் குறைந்தவன்; நிமிர்ந்து நின்றாலும், கூடுதலாக அவர் குரங்கென்றே சொல்லவேண்டும், அவனுடைய மூளை இருப்பிடம், குரங்கின் அளவு உடையதாகும்.

ஆனால், உணவு சேகரிப்பதில் அவனுடைய இரண்டுகால் நடை பேருதவி செய்திருக்கும் என்பது உறுதி.

காலப்போக்கில், 3 மில்லியனுக்கும், 2 மில்லியனுக்குமிடைப்பட்ட காலத்தில் அஃபறென்சிஸ் இனத்திலிருந்து மூன்று விதப் பிராணிகள் தோன்றியிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது. உடலமைப்பில், மேற்பார்வைக்கு அஃபறென்சிஸ் இனத்தை ஒத்திருந்தாலும், தனித்தனி எலும்புகளின் அமைப்பில் இவை வித்தியாசப்பட்டவையாகும். அந்த மூன்றும்:- ஒஸ்ற்றலோபிதேக்குஸ் ஆபிரிக்கா-னுஸ், பறன்துறோப்புஸ் றொபுஸ்ருஸ், பறன்துறோப்புஸ் பொயிசயி - என்பனவாகும். (AUSTRALOPITHECUS AFRICANUS, PARATHROPUS ROBUSTUS, PARANTHROPUS BOISEI) என்பனவே. பின்கூறப்பட்ட இரண்டும் அழிந்து, சந்ததி இல்லாமற் போய்விட்டன. ஆனால், ஆபிரிக்கானுஸ் இனம் விருத்தி அடைந்து, அதிலிருந்து ஹோமோ கபிலிஸ் (HOMO HABILIS) என்ற இனம் தோன்றி உள்ளது. இப்பிராணி, 2.5 மில்லியன் வருடக் காலப்பகுதிக்குரியதாகும். உடலமைப்பில் முன்னோடிகளை ஒத்திருந்தாலும், இதன் மூளை பெரியதாகும். இவ்வினத்தின் விசேஷம் என்னவென்றால், இது முதன்முறையாக சிறிய கருவிகளைச் (TOOLS) செய்யத் தொடங்கியுள்ளது. முன்புள்ள இனங்கள், தடிகளையும், எலும்புத் துண்டுகளையும் கருவிகளாகப் பயன்படுத்தியுள்ளன.

ஆனால், கபிலிஸ் இனம் கற்றுண்டுகளை உடைத்து, தனது வசதிக்குக் கருவிகளை அமைத்துள்ளது. இதன் உயரம் 1.52 மீற்றர் என்றும், நிறை 45 கிலோ என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. சிங்கம் போன்ற மிருகங்களுடன், எவ்வாறு உணவுக்குப் போட்டியிட்டதோ தெரியவில்லை. ஆனால், இது செய்த கருவிகள், தனது மாமிச உணவைப் பிளக்க உபயோகப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கலாமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். தனது மட்டுப்படுத்தப்பட்ட அறிவைப் பயன்படுத்தித் தாக்கவரும் மிருகங்களிடமிருந்து உயிர் தப்பியிருக்கலாமென்றும் நம்பப்படுகின்றது.

கபிலிஸ் இனம் 500,000 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்திருக்கலாமென்பது, வரலாற்று விஞ்ஞானிகளின் முடிபு. இதிலொரு பிரிவு, 2 மில்லியன் வருடக் காலப் பகுதியில் உயரமான உடலமைப்பும், பலமும் உள்ள இனமாகத் தோற்றியதற்கு ஆதாரம் உண்டு. கழுத்திற்குக் கீழ், இவை இக்கால மனிதன் போன்ற உடலமைப்புள்ளவை. ஆனால், தலைகள் வித்தியாசமானவை. சப்பையான புருவமும், கண்ணுக்குமேல் எழும்பிய பகுதியும், நீண்ட தாடையும் இவ்வினத்தின் வித்தியாசங்களாகும். இதன் உயரம், கழுத்திற்குக் கீழ் 5½ அடி இருக்கலாம். காலப் போக்கில், இதன் மூளைப்பகுதி பெருக்கத் தொடங்கியுள்ளது. இன்றைய நாலு வயதினருடன் ஒப்பிடக்கூடிய புத்தி அதனிடம் இருந்ததாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இப்போதைய நாலு வயதினர் குறைந்த அறிவுள்ளவர்கள் அல்லர் என்று, அதே விஞ்ஞானி மேலும் கூறியுள்ளார்.

இதன் பின், ஹோமோ இறெக்ருஸ் இனம் உலகின் பல பாகங்களிற் காணப்பட்டுள்ளது. இந்த நிமிர்ந்த நடையுள்ள இறெக்ருஸ் இனம், தற்காப்பிலும், உலக சஞ்சாரம் செய்வதிலும் வல்லமை உள்ளது. அது உற்பத்தியான ஆபிரிக்காவிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால், அதன் எலும்புகள் காணப்பட்டுள்ளன. கபிலிஸ் உள்ளடங்கிய, நிமிர்ந்த நடையுள்ள அதன் பிற்சந்ததியினர் யாவும், ஹோமோ இறெக்ருஸ் என்று அழைக்கப்படுவர். ஜாவாத்தீவில் இது கண்டெடுக்கப்பட்டபோது, அதற்கு அன்துறொப் போபித்தேக்குஸ் இறெக்ருஸ் என, பெயர் சூட்டப்பட்டுள்ளது. நாளடைவில், பொதுப்பெயராகிய ஹோமோ இறெக்ருஸ் பாவிப்பில் இருக்கின்றது. இதையொத்த எலும்புகள் நீகாவிலும் காணப்பட்டுள்ளன. இவை யாவற்றிலும், ஆபிரிக்காவிலுள்ள எலும்புகள் மிகத்தொன்மை வாய்ந்தவை. ஆனபடியால், விஞ்ஞானிகள் பின்வரும் முடிபுக்கு வந்துள்ளனர்:- ஆபிரிக்காவில் உதித்த இந்தப் பிராணியே, பல்வேறு நாடுகளிற் காணப்படுகின்றது.

இந்த ஹோமோ இறெக்ருஸ், எப்போது ஆபிரிக்காவை விட்டுக் கிளம்பினான்? ஏன் அப்படிக் கிளம்பினான்? போன்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன. அக்காலத் தேவைக்கு, மிகவும் முற்போக்கான தொழில் நுட்பம் அவன் கைகளுக்கு வந்து விட்டது. இப்போதைய



இப்படியான கருவிகளைக் கையில் கொண்டு, மனிதன் ஆபிரிக்காவை விட்டுக் கிளம்பினானா? 1.8 மில்லியன் வருடங்களுக்குமுன், ஆபிரிக்காவை விட்டு வெளியேறிவிட்டான் என்பதை ஏற்றால், இது சாத்தியமில்லை. ஏனென்றால், இக்கருவிகள் அப்போது தயாரிப்பில் இல்லை.

தொழில் நுட்பம் விண்வெளி ஆய்வுக்கு வழி கோலுவது போல, பல விதமான கல்லால் வடித்த கருவிகளையும், ஆயுதங்களையும் பெற்ற அவன், உலகத்தை வலம் வரக் கிளம்பிவிட்டான் என்று சொல்லத் தோன்றுகிறது.

கைக்கோடரிகளையும், பிளக்கும் கருவிகளையும் அவன் வடிவமைத்துள்ளான். பிரான்சில், அச்சூல் நகர அகழ்வொன்றில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆபிரிக்காவை விட்டு, முதலில் மத்திய கிழக்கிற்கும், பின்பு ஐரோப்பாவிற்கும், இறுதியில் பசுபிக் கரையோர நாடுகளுக்கும் அவன் சென்று வாழ்ந்ததற்கு, தக்க ஆதாரங்கள் உண்டு. கையில் நல்ல ஆயுதமும், கருவியும் கிடைத்தவுடன், இடத்தை விட்டுக் கிளம்பத் தூண்டும் விளக்கம் ஏற்புடையதாய் இல்லை. ஆசியாவின் இறெக்ருஸ் பாவித்த ஆயுதங்கள் இன்னும் எடுக்கப்படவில்லை. இவன், மூங்கிலாற் செய்த கருவிகளையும், ஆயுதங்களையும் பிரயோகித்திருக்கலாம். அவை இப்போது அழிந்திருக்கலாம் என்று, அவுஸ்திரேலியாவின் கன்பெறாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அலன் தோர்ன் தெரிவித்துள்ளார். ஆபிரிக்காவின் யானைகள் உலகெலாம் பரவியுள்ளன. அவை, என்ன கருவிகளையும், ஆயுதங்களையும் கொண்டு கிளம்பியுள்ளன? என்று பேராசிரியர் சுவிஷர் கேட்கிறார். அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகப் பேராசிரியை எலிசபெத் விர்பா, முற்றும் புதியதொரு விளக்கம் கூறுகின்றார்; ''ஆபிரிக்காவில் நடந்த சீதோஷ்ண மாற்றங்களே, மனிதனும், மிருகமும் இருப்பிடம் விட்டுக் கிளம்பக் காரணமாயின'' என்பதாக.

இந்தச் சீதோஷ்ண மாற்றங்களே, நாலுகால் மனிதன் இரண்டு கால்களில் நடக்கத் தொடங்குவதற்கும் காரணம் என்று விர்பா தொடர்கிறார். தாவரங்களின் அடர்த்தி குறைந்து, புல்வெளிகள் உண்டாகும் போது, மனிதன் எழுந்து நின்று தான் முன்னேற முடியும். கொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வாக்கர், மாமிச உணவைத் தின்னும் வேட்டைக்காரனாக மனிதன் மாறியவுடன், இடம் பெயர்வது நாளடைவில் சகஜமாகிவிடும் என்று கூறுகின்றார். மெதுவாக, வேட்டை நிலத்தை விரிவுபடுத்திக் கொண்டு போகப்போக, பல வருடங்களின் பின் ஆயிரம் மைல்களுக்கப்பால் சென்றுவிடலாம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கர் விளக்கம் கொடுக்கின்றார். வேட்டைக்காரனுக்கு, நிரந்தரமாக ஓர் இடத்தில் தங்க வேண்டிய அவசியமில்லை என்பது அவருடைய வாதம்.

மனிதன் ஆபிரிக்காவில் தவழ்ந்து, பின்பு நடந்து, இறுதியில் உலகெல்லாம் பரவியுள்ளானா? இல்லை உலகின் குறிப்பிட்ட பாகங்களில் மனிதன் தனித் தனியாக ஆபிரிக்காவுடன் தொடர்புபடாமல் உருப்பெற்றுள்ளானா? என்ற கேள்விகளே இன்று மனித வரலாற்று விஞ்ஞானிகளுக்கிடையிலான கருத்து மோதல்களுக்குப் பிரதான காரணம் எனலாம். இன்னுமொரு சாரார் விளையாட்டாகக் கூறினாலும் அதிலும் உண்மை இருக்கலாம்-நிமிர்ந்து நடக்கும் மனிதன் வேறு இடத்தில் உண்டாகி ஆபிரிக்காவில் நுழைந்திருக்கலாம். அவன் உதித்த இடம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை ஏற்றால் இக்கருத்தில் உண்மை இருக்கலாம். இந்த வாதப் பிரதிவாதங்களில் பின் வரும் வல்லுநர்கள் உரைத்த கருத்துக்களை இங்கு ஆராயலாம்.

முன்பு குறிப்பிட்ட பேராசிரியர் கார்ள் சுவிஷர் அவர்கள் மனிதன் ஆபிரிக்காவில் உதித்து உலகெல்லாம் பரவியவன் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார். இதற்கு அவருடைய முன்பு குறிப்பிட்ட கண்டுபிடிப்பு துணைபோகின்றது. சீனாவிற் கண்டுபிடிக்கப்பட்ட எலும்பின் வயதை அவர் சந்தேகிக்கிறார். அவர்கள் வயதை நிர்ணயம் செய்வதற்காக விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்தார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்கிறார் சுவிஷர்.

அவர் முக்கியமான இன்னுமொரு கருத்தை முன்வைக்கிறார். ஆசியாவின் இறெக்ருஸ் மனிதன் காலப்போக்கில் அழிந்து விட்டான். இன்றைய மனிதன் ஆசியாவின் இறெக்ருஸ் இனத்திலிருந்து பிறக்கவில்லை. எமது இனம், அதாவது ஹோமோ சபியன்ஸ் ஆபிரிக்காவில் தோன்றி ஆசியாவரை பரவியுள்ளது என்பது சுவிஷரின் வாதம். ஆனால் அவுஸ்திரேலியாவின் தோர்ன் எதிரணியைச் சேர்ந்தவர். இவர் சொல்கிறார்:- ''அன்றும் சரி, இன்றும் சரி மனிதன் தனிமையில் இயங்க முடியாது. உலகின் பற்பல இடங்களிற் சமகாலத்தில் தோன்றிய மனிதன் காலத்துக்குக் காலம் கலந்து புதிய இனங்களை விருத்தி செய்துள்ளான். இது தவிர்க்க முடியாத மனித நீதி'' என்பதாக. ஆனால் இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல இங்கிலாந்தின் பேராசிரியர் கிறிஸ்ரோபர் ஸ்ரிறிங்கர் சொல்கிறார்:- ''புராதனக் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியைக் காட்டும் தடயங்கள் ஆபிரிக்கா ஒன்றில்தான் காணப்படுகின்றன'' என. ''இன்றைய மனிதனின் மிகப் பழைமை வாய்ந்த எலும்புகள் ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் காணப்படுகின்றன'' என்கிறார் சுவிஷர் அவர்கள்.

ஆனால் பிரபஞ்ச இரகசியம் போன்று மனித சிருஷ்டியும் ஒரு தொடரும் மர்மமாகவே இருக்கின்றது. அடுத்த அகழ்வு மர்மத்தைத் துலக்கும்; அல்லது அதிகரிக்க வைக்கும். இனி வெளிவரும் எலும்புக்கூடு மனித ஆரம்பத்திற்குப் புதிய விளக்கம் கொடுக்கலாம். அதிசயங்களும், ஆச்சரியங்களும் நிறைந்த மனித வரலாற்று விஞ்ஞானம் ஒரு வளரும் கலை என்பதில் ஐயமில்லை. அத்துடன் சகல ஜீவராசிகளிலும் மனிதன் ஒருவனே தான் யார்? எங்கிருந்து வந்தேன்? போன்ற உள்நோக்குக் கேள்விகளைக் கேட்டுக் காலம் போக்குந் திறமை உள்ளவன் என்பது தெளிவு.

டைம் மார்ச் 14, 1994

நியூயோக்கிலிருந்து அன்ட்றியா டொ(ர்).:ப்மான் அனுப்பிய செய்திகளிலிருந்து தொகுத்தெழுதி கட்டுரை வடிவம் தந்தவர்:

மைக்கெல்டி லெமொறிக்.

PUBLIC LIBRARY, JAFFNA. CHUNDIKULI BRANCH LIBRARY

## இந்தோனேசியா அவதானமாக முன்னேறல்

எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்ற அச்சத்தைப் போக்கும் விதமாக, இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்ட்டோ 1994 இல் திறந்த அரசியல் மாற்றங்கள் செய்வது தொடரப்படும் என்று கூறியுள்ளார். மேலும் அவர் நாட்டுக்கு விடுத்த புத்தாண்டுச் செய்தியில், ஜனநாயக வழிமுறைகள், ''மிகுந்த அக்கறை கொண்ட, பொறுப்பு வாய்ந்த உணர்வுடனும், கவனத்துடனும்'' வளர்க்கப்படும் என்றும் கூறினார். இது, 1993 இல் பின் அரைப் பகுதியில், சீர்திருத்தச் செயல்கள் அடைந்த வேகத்தைப் பற்றி அவர் கவலை கொண்டு இருப்பதைக் காட்டுவதாக உள்ளது. சென்ற டிசெம்பர் மாதத்தில் அங்கு நிகழ்ந்த சில அரசியல் எதிர்ப்புக்களை, 1960 இல் கொம்யூனிஸ்ற் கட்சி கையாண்ட உத்திகளுடன் ஒப்பிட்டுப் பேசினார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய மேற்கு ஜேர்மனியின், நெயண்டர் பள்ளத்தாக்கிற் கிடைத்த மனிதனின் மர்மம்

சா(ர்)ள்ஸ் டா(ர்)வின் தனது, ''உயிரினத் தோற்றம் வளர்ச்சி'' பற்றிய நூலை வெளியிடுவதற்கு, (1859) மூன்று வருடங்களுக்கு முன்பு, மேற்கு ஜேர்மனியின் நெயண்டர் பள்ளத்தாக்கிற் சில மனித எலும்புகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்த எலும்புகளுக்கு உரிய மனித இனத்திற்கு, எடுக்கப் பட்ட இடத்தின் பெயரே சூட்டப் பட்டுள்ளது:- நெயண்டர் பள்ளத் தாக்கு மனிதன். இதையொத்த எலும்புகள், சில வருடங்களில் இங்கிலாந்திலும், உஸ்பெஸ்கிஸ்தானிலும், இத்தாலியிலும், இஸ்ரேலிலும், பிரான்சிலும் கிடைத்துள்ளன. பரிணாம வளர்ச்சியை அடிப் படையாகக் கொண்டு, தனது பிரசித்தி பெற்ற நூலை டா(ர்)வின் எழுதியுள்ளார். 1856 நெயண்டர் பள்ளத்தாக்கில் இந்த எலும்புகள் கிடைத்த போது, அக்கால மனித வரலாற்று விஞ்ஞானிகளுக்கு இதைப்பற்றித் தெரிய நியாயமில்லை. மனித உருவம் ஒருபோதும் மாறவில்லை. எப்போதும், ஒரே மாதிரியே மனிதன் இருந்து உள்ளான் என்பதே, அக்கால நம்பிக்கை. இந்த எலும்புகளை ஆராய்ந்த விஞ்ஞானிகள், இது நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதனின் எலும்புகள் என்று தீர்ப்புக் கூறியுள்ளனர். ஆனால், இன்றைய விஞ்ஞானிகளோ, இது எமது மூதாதையர்களிலொருவன் என்று திடமாகக் கூறினாலும், பரிணாம வளர்ச்சியில் எந்தக் கட்டத்தைச் சேர்ந்தவன்? என்பதைச் சரியாகச் சொல்ல முடியாதிருக்கின்றனர்.

நெயண்டர் எலும்புகள், 200,000 த்திலிருந்து, 27,000 வருடங்களுக்கிடைப்பட்ட காலத்திற்குரியவை என்று, ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவன் நிமிர்ந்த நடையுள்ள ஹோமோ இறெக்ருஸ் இனத்தைச் சேர்ந்தவன் என்பதும், இவனுடைய எலும்புகளிலிருந்து தெரிய வருகின்றன. 1957 ஆம் ஆண்டு பிரிட்டிஷ், அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வுகளின்படி, இந்த இன மனிதனின் மூளையின் வைப்பிடம், இறெக்ருஸ் இனத்தவனின் தொடக்கக் காலத்தை ஒத்ததாக உள்ளதென்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும், ஐரோப்பாவில் பற்பல இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, இந்த மனிதன் தொடக்க காலக் கருவிகளைப் பாவித்தானென்றும், தன் உடலில் தனது புத்திக் கெட்டிய ஆபரணங்களை அணிந்திருந்தானென்றும், சில மதச் சடங்குகளில் ஈடுபட்டானென்றும் தெரிய வருகின்றது. மேலும், தனது இறந்தோரைப் புதைத்தானென்றும் அச் சமயத்திற் சில சம்பிரதாயச் சடங்குகளை நடத்தினானென்றும், ஆய்வுகள் கண்டுபிடித்துள்ளன. இவர்கள், ஹோமோ இறெக்ருஸ் இன எல்லைக்குள் நின்றவாறு முன்னேற்றங் கண்டுள்ளனர் என்பதே, வரலாற்று விஞ்ஞானிகளின் முடிவு. இங்கிலாந்தின் பேராசிரியர் கிறிஸ்ரோபர் ஸ்ரிறிங்கரின் கூற்றுப்படி, 35,000, அல்லது 30,000 வருடங்களுக்கு முன், ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு வந்த புத்திக் கூர்மையுள்ள ஹோமோ சபியன்ஸ் மனிதனுடன் போட்டியிட முடியாமல், இவன் மடிந்துவிட்டான்; இவர்களுக்குச் சந்ததியில்லை; முற்றாக அழிந்து விட்டனர் என்று அறியக் கிடக்கிறது. இஸ்ரேல் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் போல் இறாக், இதற்கு ஒப்புதல் அளித்துள்ளார். ஹோமோ சபியனஸ் ஐரோப்பாவுக்கு வந்தபின், இந்த இனத்தவர்களுடன் இரத்தக் கலப்புச் செய்திருக்கலாமென்றும், ஆகையால் நெயண்டர் இனம் முற்றாக அழியவில்லையென்றும், மிச்சிகன் பல்கலைக்கழகப் பேராசிரியர் மில்போட்வொல்போப் தெரிவிக்கின்றார். சில ஐரோப்பியர்களுக்காவது, நெயண்டர் முதாதையர் இருக்கவேண்டுமென்பதை விஞ்ஞான உலகம் ஏற்பதில் தவறில்லை.

''ரைம்'' மார்ச் 14, 1994.

நியூயோர்க்கிலிருந்து அலைஸ் பாக் அனுப்பிய செய்திகளிலிருந்து தொகுத்துக் கட்டுரை வடிவம் தந்தவர்:— லியோன் ஜறொஃப்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை ! நல்ல தரம் !! நிறைவான சேவை !!!

எமது தேசத்தில் விளையும்
முத்தான நெல்மணிகளை
பட்டுப்போல மென்மையாக
அரிசியாக்கித் தருபவர்கள்



# ஞானேஸ்வரன் அரிசி ஆலை

உங்கள் நிறைவான வாழ்க்கையே
எங்கள் சேவை எனக்கொண்டு இயங்கும்
தனிப்பெரும் அரிசி ஆலை

## ஞானேஸ்வரன் அரிசி ஆலை

இணுவில் தெற்கு,
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாந்தி பேதியைத் தடுப்பதற்கு

1. கண்ட இடங்களிலும் மலம் கழிக்கா தீர்கள்
2. மலம் கழித்த பின் சவர்க்காரம் கொண்டு கைகளைக் கழுவுங்கள்
3. சாப்பாட்டிற்கு முன் சவர்க்காரம் கொண்டு கைகளைக் கழுவுங்கள்.
4. கொதித்து ஆறிய நீரைப் பருகுங்கள்.




PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

# வண். மேற்கு வைத்தியசாலை

## வண்ணார்பண்ணை.

**வண். மேற்கு வைத்தியசாலை**
18, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org